கலை இலக்கிய மாத சஞ்சிகை

120/-

# ஜீவநதி

92

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்

வைகாசி 2016

## செங்கை ஆழியான் சிறப்பிதழ்



க. சட்டநாதன். தெணியான். யோகேஸ்வரி சிவப்பிரகாசம். க.நவம்.
இரா.சிவச்சந்திரன். த.கலாமணி. ஏ.எச்.எம்.நவாஸ். இ.சு.முரளிதரன்.
கி.கிருபானந்தா. சீனா.உதயகுமார். த.அஜந்தகுமார். கானா.பிரபா. அ.பௌநந்தி.
கிண்ணியா சபருள்ளா. கமலாம்பிகை செங்கை ஆழியான்.

ஜீவநதி

கட்டுரைகள்

**இன்னொருவரால் இட்டு நிரப்ப இயலாத ஆளுமை செங்கை ஆழியான்**
தெணியான்/03

**செங்கை ஆழியான்: எழுதிக் குவித்தலும் பிரளயம் நாவலும்**
ஏ.எச்.எம்.நவாஸ்/07

**செங்கை ஆழியானின் புனைவும் வாழ்வும்**
க. சட்டநாதன்/17

**"வாடைக்காற்று" நாவல் திரைமொழி பேசிய போது**
கானா பிரபா/ 22

**செங்கை ஆழியான் நாவல்களில் யாழ்ப்பாண சமூக மரபு -சில நாவல்களை மட்டும் முன்வைத்து-**
சமரபாகு சீனா. உதயகுமார்/ 25

**பெருவாரிப் பிரதியாளி செங்கை ஆழியானின் "ருத்திர தாண்டவம்"**
இ.சு. முரளிதரன்/ 35

**"விடியலைத் தேடி" ஊடாக, செங்கை ஆழியானை நினைவுகூர்தல்**
க.நவம்/ 51

**செங்கை ஆழியானின் பிரளயத்தின் வாடைக்காற்றில் பிரயாணம் செய்யும் காட்டாறு**
கிண்ணியா சபருள்ளா/55


**வரலாறு பேசும் செங்கை ஆழியான்**
யோகேஸ்வரி சிவப்பிரகாசம்/ 60

**செங்கை ஆழியானின் காட்டாறு**
தருமராசா அஜந்தகுமார்/62

**செங்கை ஆழியான் படைத்த "கிடுகுவேலி"**
கானா பிரபா/ 66

**சூழலியலியல் தத்துவம் உணர்த்தும் நாவல் செங்கை ஆழியானின் "ஓ அந்த அழகிய பழைய உலகம் நாவல் குறித்த சில மனப்பதிவுகள்**
த.கலாமணி/ 68


**செங்கை ஆழியானின் குந்தியிருக்க ஒரு குடிநிலம் - வாசகநிலை நோக்கு**
அ.பௌநந்தி/70



**குறுநாவல்**
செங்கை ஆழியான்



**நேர்காணல்**
கமலாம்பிகை குணராசா



# ஜீவநதி

**2016 வைகாசி இதழ் - 92**

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி



**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.



**ஆலோசகர் குழு:**
திரு.தெணியான்
திரு.கி.நடராஜா



**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.



## ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி - 100/= ஆண்டுச்சந்தா - 1500/=
வெளிநாடு - $ 60U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY


# ஜீவநதி

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
- பாரதிதாசன்-

## வரலாற்றில் வாழ்தல்

எழுத்தாளர் சாகித்திய ரத்னா செங்கை ஆழியான் அவர்களின் படைப்புலகம் குறித்து சிறப்பிதழ் ஒன்றை வெளியிடுவதென 'ஜீவநதி' ஏங்கெனவே தீர்மானித்து, இதற்கான பூர்வாங்க வேலைகளையும் ஆரம்பித்திருந்தது. செங்கை ஆழியான் அவர்கள் அமரத்துவம் எய்துவதற்கு இரண்டு நாள் முன்பாக இம்மலர் வெளியீடு குறித்து அவருடன் அவர் வீட்டில் உரையாடிக்கொண்டிருந்தேன். இதற்குச் சம்மதம் தெரிவித்து, தனது உடற்சுகயீனத்துக்கு மத்தியிலும் சிலவற்றை எனக்குத் தெரிவித்துக் கொண்டிருந்தார்.

செங்கை ஆழியான் எனும் எழுத்தாளர் எழுதிய நூல்கள் இருநூறுக்கும் அதிகமானவை. சிறுகதை, கவிதை, குறுநாவல், நாவல், வரலாற்று நாவல், புவியியல் பாடநூல் என பல்துறைகளிலும் அவர் நிறைய எழுதினார். பல இளம் எழுத்தாளர்கள் செங்கை ஆழியான் அவர்களையே ஆதர்ஷ புருஷராகக் கொண்டிருந்தனர். அவரின் சமூகப்பார்வைக்காக அவரின் நாவல்கள் பலராலும் விரும்பிப் படிக்கப்பட்டன. அவரின் எழுத்துக்கள் எளிமையாகவும் மக்களை ஈர்க்கும் சக்தி வாய்ந்தவையாகவும் விளங்கின.

செங்கை ஆழியான் அவர்களின் இலக்கியத்தொகுப்பு முயற்சிகளும் அரிய பல நூல்களின் பதிப்பு வேலைகளும் ஈழத்து இலக்கிய உலகால் மறக்கப்பட முடியாதவை. அவர் நாமம் வாழும். 'ஜீவநதி'யின் வருகையை அறிந்தபோது, தொடர்ந்து உற்சாகமூட்டி வந்தவர் அவர். 'ஜீவநதி' வெளியிடும் இச்சிறப்பு மலரை அமரர் அவர்களுக்கே சமர்ப்பணம் செய்கிறோம்.

– க.பரணீதரன்



### ஜீவநதியின் பிரதி கிடைக்கும் இடங்கள்

யாழ்- பூபாலசிங்கம் புத்தகசாலை, புக்லப் - திருநெல்வேலி,
கொழும்பு வெள்ளவத்தை - பூபாலசிங்கம் புத்தகசாலை,
படிப்பகம் - ஆரியகுளம்,
பரணி புத்தகக் கூடம் - நெல்லியடி



# இன்னொருவரால் இட்டு நிரப்ப இயலாத ஆளுமை செங்கை ஆழியான்

■ தெணியான்



இந்த நாட்டு வரலாற்றின் மையப்புள்ளியான அறுபதாம் ஆண்டு மிக முக்கியமான ஒரு காலப்பகுதி. ஐம்பத்தாறில் ஏற்பட்ட அரசியல் மாற்றம் சமூகத்தின் பல்வேறு கூறுகளையும் பாதிக்கவே செய்தது. அந்தப் பாதிப்புக்குத் தமிழ்இலக்கியம் விதிவிலக்காணதாகிவிடவில்லை. அக்கால கட்டத் தமிழ் இலக்கியத்தில் வர்க்க சிந்தனை, தேசியசிந்தனை என்பன மேலோங்கியிருந்தன. குறிப்பிட்ட அச்சிந்தனைப் போக்குகளின் வெளிப்பாடும், அதனோடிணைந்த முற்போக்கு இலக்கியத்தின் பேரெழுச்சியும் இலங்கைத் தமிழ் இலக்கியத்தில் பெருந்தாக்கத்தை உருவாக்கின. இந்தத் தாக்கமானது அறுபதுகளின் ஆரம்பகாலப் பகுதியில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களாக இருந்தவர்கள் மத்தில் பாதிப்பையும் தமிழ் இலக்கியம் படைக்கும் ஆர்வத்தினைத் தோற்றுவித்தது.

தமிழ்மொழி மூலம் கல்வி கற்று பல்கலைக்கழகம் புகுந்த முதற்தொகுதியினரான அந்த மாணவர்கள் சிலர், மிகுந்த ஈடுபாட்டுடன் இலக்கியம் படைக்க ஆரம்பித்தார்கள். தாய்மொழி மூலக் கல்வியானது சிந்தனையை வளப்படுத்தவும், கற்பனையை உருவாக்கவும், உணர்வு வெளிப்பாட்டுக்கும் வாய்ப்பாக அமைந்தது. தினகரன் பத்திரிகை ஆசிரியராக இருந்து வந்த க.கைலாசபதி அறுபத் தொன்றில் பேராதனைப்பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இணைந்து கொண்டார்.

காட்டாறு போல பெருகிக்கொண்டிருந்த அவரது இலக்கியப்பிரவாகம் 28.02.2016 இல் அடங்கிப் போய்விட்டது. இன்று எம்மிடையே இல்லை நண்பர் செங்கை ஆழியான். ஆனால் அவரின் காட்டாற்றின் பெருக்கு வற்றிடப் போவதில்லை. அவரது படைப்புக்களால் அவர் வாழ்ந்து கொண்டே இருப்பார். தனித்துவமான ஓர் எழுத் தாளனுக்கு இன்னொரு மாற்று இருக்க முடியாது. அவனுடைய இடத்தினை வேறொருவரால் நிரப்ப முடியாது. செங்கை ஆழியானின் இடம் வெற்றிடமாக என்றென்றும் இருந்து வரப்போகிறது. இன்னொருவரினால் இட்டு நிரப்புவதற்கு இயலாத தனித்துவமான ஆளுமை செங்கை ஆழியான்.

எழுத்தாளரும், சிறந்த விமர்சகருமாக விளங்கிய க.கைலாசபதியுடன் இலக்கிய ஆர்வமும், ஈடுபாடு முள்ளமாணவர்கள் நெருக்கமான உறவினைக் கொண்டிருந்தனர். அவருடன் கொண்டிருந்த உறவும் ஊடாட்டமும், அவர்பின்பற்றிய வர்க்கம், தேசியம் சார்ந்த முற்போக்கு நெறியை உள்வாங்கி இலக்கியம் படைப்பதற்கு வழிசமைத்தது.

அந்த மாணவர்களுள்ளே செங்கை ஆழியான் (க. குணராசா) கைலாசபதியின் தேசிய சிந்தனை வழி செல்லாது தமிழினச் சார்புநிலைப்பாட்டை எடுத்தார்கள். அவ்வாறு இனச்சார் நிலையைச் செங்கை ஆழியான் எடுப்பதற்குரிய குடும்பம் பின்னனி ஒன்று அவருக்கு இருந்திருக்கிறது. அவரது தமையனார் எழுத்தாளர் புதுமைலோலன்(க.கந்தசாமி) இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தீவிர செயற்பாட்டாளராக விளங்கினார். அவர் அக்கட்சியில் இருந்து வந்த மிகமுக்கியமான மேடைப்பேச்சாளர். கட்சி முன்னெடுத்த சாத்வீகப் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர். சிறையில் இருந்து மீண்ட பின்னர் சிறை வாழ்வு பற்றி ஒரு நூலை எழுதி வெளியிட்டவர். அவரதும், அந்தக்குடும்பத்தினதும் பின்னணியில் வளர்ந்த செங்கை ஆழியான்தமிழினச் சார்பு நிலையை எடுத்தமை ஆச்சரியமான ஒன்றல்ல.





செங்கை ஆழியானும் இன்னும் சிலரும் மாணவநிலையிலேயே எழுதுவதற்கு ஆரம்பித்தார்கள். பல்கலைக்கழக மாணவர்களாக இளமைத்துடிப்புடன் வாழுங்காலத்தில் இலட்சியவாதிகளாக, கொள்கையாளர்களாக, எழுத்தாளர்களாகத் தங்களை இனங்காட்டிக் கொள்ளுகிறவர்கள் பலர், பின்னர் தொடர்ந்து அத்தகைய போக்குடையவர்களாக இருப்பதில்லை. பதவி, குடும்பப் பொறுப்புகளெனச் சுமைகள் வந்து சேர்ந்த பின்னர் முற்றாக மாறிப்போய் விடுகின்றனர். சிலர் எழுத்துலகத்தில் இருந்து விலகிக்கொண்டு விடுகிறார்கள். வேறு சிலர் தமது இருப்பை வெளிக்காட்டும் வகையில் இடையிடையே எழுதிக்கொண்டிருக்கிறார்கள். செங்கை ஆழியான் அவ்வாறின்றி தொடர்ந்து எழுதிக்கொண்டே இருந்தார். ஆரம்ப காலம் முதல் இறுதிக்காலம் வரை ஓயாது தொடர்ந்து எழுதி வந்தார். பொறுப்புமிக்க பல உயர் பதவிகளை வகித்த காலத்திலும் அவர் தனது எழுதும் பணிவிட்டு விலகிவிடவில்லை. அவரது உயிர்மூச்சாக இருந்து வந்தது எழுதும் பணியேதான். இலங்கையில் அவரைப்போல எழுதிக்குவித்த எழுத்தாளர் வேறொருரில்லை. அசுர வேகத்தில் அவர் எழுதிக்குவித்த ஆக்கங்கள் பிரமிப்பை ஊட்டுகின்றன. அவரது அன்றாட வாழ்க்கை நடைமுறைகளில் எழுதுவதும் ஒரு செயற்பாடாக இருந்து வந்திருக்கிறது. தினமும் ஒன்றை எழுதும் வாழ்க்கை முறையை அவர் பயின்று கொண்டதனால், எழுதாது இருக்க இயலாத ஒரு நிலைக்கு ஆளாகிப் போனார் போலத் தோன்றுகிறது. நாற்பத்தைத்துக்கு மேற்பட்ட நாவல்கள், ஏராளமான சிறுகதைகள், கட்டுரைகள் என அயராது எழுதிக் கொண்டிருந்தார். அவர் எழுதிக் கொண்டிருந்தது மாத்திரமின்றி, அந்தக் ஆக்கங்களை உடனுக்குடன் நூல்களாகவும் வெளியீடு செய்து கொண்டிருக்கவும் அவருக்கு முடிந்திருக்கிறது.

எமது நாட்டைப் பொறுத்தவரை இலக்கியம் சோறு போடாதென்பது மறுப்பதற்கு முடியாத பெரும் உண்மை. இலக்கியவாதிகளாக வாழ்ந்து அதனால் பொருளாதார ரீதியில் நட்டப்பட்டவர்களே நமது நாட்டு எழுத்தாளர்கள். இவர்களுக்கு மத்தியில் மிக வித்தியாச மானவராக விளங்கியவர் செங்கை ஆழியான். எழுதிச் சம்பாதிக்க இயலும் என்பதனைச் சாதனை ஆக்கிக் காட்டிய சாதனையாளன் அவர்.

எந்தவொரு பண்டம் பணத்துக்குக் கொடுக்கப்படுகிறதோ, அங்கு வியாபாரம் செய்யப்படுகிறது என்பதனை நிராகரிக்க இயலாது. வியாபாரத்தை முதன்மைப்படுத்தி இலக்கியப் படைப்பாளிகள் தமது ஆக்கங்களை படைப்பதில்லை. வியாபாரம் ஒன்றையே பிரதான நோக்கமாகக் கொண்டு எழுதப்படும் எழுத்துக் கள் இலக்கியங்களாக் கொள்ளப்படுவதில்லை. வாசகனின் ஆபாசமான உணர்வுக்குத் தீனி போடும் எழுத்துக்களாகவே அவைகள் வெளிவருகின்றன. அத்தகைய கீழ்த்தரமான ஜனரஞ்சகத் தன்னை செங்கை ஆழியான் படைப்புக்களில்

இருப்பதில்லை. ஆனால் அனைவரும் விரும்பிப்படிக்கத் தகுந்த ஓர் எளிமையை அவர் தனது எழுத்துகளில் இழையோட விட்டார்.




அதனால் சாதாரண வாசகர்கள் பெரும்பாலானோர் அவர் அவர் எழுத்துக்களை விரும்பிப் படித்தார்கள். ஏராளமான நூல்கள் தொடர்ந்து வெளி வந்து வாசகர்கள் பார்வைக்குக் கிடைத்தமையும் அவர்களை ஈர்த்துக் கொண்டமைக்கான ஒரு காரணமெனலாம். அவரது படைப்புக்களை மக்கள் விருப்புடன் படித்த அளவுக்கு, இந்த நாட்டு எழுத்தாளர்கள் வேறெவருடைய படைப்புக்களையும் படிக்கவில்லை என்னும் உண்மையை மறுப்பதற்கு இயலாது. எழுத்தினால் அவர் பணம் சம்பாதிப்பதற்குப் பிறிதொரு காரணமாக இருந்தது, அவரது புவியியல் பாடநூல்கள். சாதாரணதர மாணவர்கள், உயர்தரமாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோருக்குத் தகுந்த புவியற் பாடநூல்களை அவர் எழுதி வெளியிட்டார். புவியற்பட்டதாரியான அவர் நல்ல பாடநூல்களை எழுதுவதற்கு அவரது எழுத்து வல்லமை அவருக்குரிய பலமாக இருந்தது.அவர் தமது படைப்புக்கள் மூலம் தமிழ் இலக்கியத்துக்குச் செய்த பங்களிப்பு மிகப் பெரிது. அதே சமயம் தமிழுக்குத் தான் ஆற்றும் பெருந் தொண்டாக அவர் பல பணிகளை செய்திருக்கின்றார். ஈழகேசரி, மறுமலர்ச்சி, சுதந்திரன், ஈழநாடு, மல்லிகை (இரண்டு பாகம்) ஆகிய பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளிவந்த சிறுகதைத் தேர்ந்தெடுத்துப் பாரிய தொகுப்புநூல்களாக வெளியிட்டிருக்கின்றார். ஈழத்துச் சிறுகதை இலக்கிய வரலாற்றினை எழுதி பெரும் ஆவணமாக பதிவு செய்து நூலாக்கம் செய்து தந்திருக்கின்றார். இவைகள் யாவும் ஓயாது தன் உழைப்பதன் மூலம் தமிழுக்குச் செய்த மிகப்பெரிய பணி. அவரால் மாத்திரம் செய்துமுடிக்கக்கூடியதாக இருந்த சாதனை. ஈழத்தமிழர்களின் வரலாற்றினை எழுத்தில் வடித்திருக்கிறார். தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் சிலவற்றை, அவை நடந்து முடிந்த சூடாறு முன்னர் எழுத்துருவில் பதிவு செய்து நூலாக வழங்கி இருக்கிறார். அந்த நூல்களின் தேவைப்பாடும், முக்கியத்துவமும் பிற்காலத்தில் ஈழத்தமிழர் வரலாற்றை ஆய்வு செய்யப்போகின்றவர்களால் உணரப்படும் என்பது நிச்சயம்.

பொதுவாக எழுத்தாளர்கள் எல்லோரும் தமது ஆக்கங்களை படைத்து, பின்னர் பார்வையிட்டுச் செம்மைப்படுத்திய பின்னரே, அவைகளை அச்சிற் பதிவு செய்து நூலாக வெளிக்கொண்டு வருவார்கள். ஒரு படைப்பினைத் திரும்ப திரும்பப் படித்து, செம்மைப்படுத்துவதன் மூலம் அந்தப் படைப்பு வெகு நேர்த்தியானதாக உருவாகும். செங்கை ஆழியான் தனது ஆக்கங்களைப் பேனா கொண்டு கையினால் எழுதாது தட்டச்சிலும் பின்னர் கணணியிலும் பதிவு செய்து முதற் தடவையிலேயே நிறைவு செய்துவிடுவது அவர் வழக்கமெனக் கூறப்படுகின்றது. அனுபவமும் முதிர்ச்சியும் உள்ள எழுத்தாளனால் அவ்வாறு ஆக்கங்களை உருவாக்க முடியும் என்பது உண்மை. செங்கை ஆழியான் போல கே.டானியல் தனது நாவல்களைத் திருத்தங்கள் ஏதும் செய்யாது ஒரே தடவையில் எழுதி நிறைவு செய்தார் என்பதை நான் அறிவேன். கே.டானியல் "தண்ணீர்" நாவலை எழுதியெழுதி திருத்தங்கள் ஏதும் செய்யாது கையெழுத்துப் பிரதியாக என்னிடம் தந்து கொண்டிருந்தார். முழுமையான அந்தப் பிரதியே பின்னர் நூலாக்கம் செய்வதற்கு என்னடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டது. செங்கை ஆழியானோ அல்லது கே.டானியலோ தமது பிரதிகளை மீளப்பார்வையிட்டுச் செம்மைப்படுத்தி இருப்பார்களேயானால் அவர்கள் ஆக்கங்கள் இன்றிருப்பதை விட மேலும் சிறந்த கலை நேர்த்தியுள்ளவைகளாக நிச்சயம் உருவாகி இருக்கும்.

செங்கை ஆழியான் ஏராளமாகத் தொடர்ந்து எழுதிக் கொண்டிருந்தமையால் பத்திரிகைகள், சஞ்சிகைகள் பலவற்றிலும் அவரது ஆக்கங்கள் வெளிவந்து கொண்டிருந்தன. டொமினிக் ஜீவாவின் மல்லிகையிலும் அவர் நிறைய எழுதினார். எனது ஆக்கங்கள் பல மல்லிகையில் பிரசுரமாகிப் கொண்டிருந்தன. செங்கை ஆழியானும் நானும் சமகாலத்தில் எழுதத் தொடங்கியவர்கள். அதனால் இருவரும் ஒருவரையொருவர் அறிந்து வைத்திருந்தோம். எழுத்தாளர்கள் என்ற



முறையில் எங்களுக் கிடையே உறவும் இருந்து வந்தது. "மல்லிகை" வழி வந்த எங்கள் நட்பினை மிக நெருக்கமாக இணைத்தது. அவருடன் நெருங்கிப் பழகுவதற்கு ஆரம்பித்த பின்னரே அவரிடத்தில் காணப்பெறும் நல்ல பண்புகள் பலவற்றை நான் உணர்ந்து கொள்ளும் சந்தர்ப்பங்கள் எனக்குக் கிட்டின. சகஎழுத்தாளர்களை மதிப்பது, நட்புடன் பழகுவது, கௌரவிப்பது, பாராட்டுவது, உறவைப் பேணுவது எனப்பல குணவியல்புகள் அவரிடத்தில் காணப்பெற்ற உயர்ந்த பண்புகள். "மல்லிகை" வரலாற்றில் குறிப்பிட்டுக் கூறத்தகுந்த இலக்கிய விவாதங்கள் இரண்டினை நான் ஆரம்பித்து வைத்தேன். அந்த விவாதங்களில் ஆர்வத்துடன் பலர் பங்கு பற்றி எழுதினார்கள். குறித்த விவாதங்கள் பல மாதங்கள் தொடர்ந்து நடைபெற்று ஓராண்டு காலத் துக்கு மேலும் வளர்ந்து சென்றது. இறுதியில் விவாதத்தை ஆரம்பித்து வைத்தவன் என்றவன் என்ற நிலையில் அதனை முடித்துவைத்தேன். ஒரு தினம் செங்கை ஆழியான் என்னுடன் பேசிக்கொண்டிருந்த போது "மல்லிகை பலரது கவனத்துக்குள்ளானதற்கு உங்களுடைய விவாதக்கட்டுரைகள் காரணமாக இருந்தன" என மனந்திறந்து பாராட்டினார். செங்கை ஆழியானின் நல்ல உள்ளத்தினை வெளிப்படுத்துவ தற்கே, இந்த விவகாரத்தை இங்கு தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறேன்.




Reflective Prose அந்த Reflective mood அந்த எழுத்திலே இருக்க வேண்டும். இங்கு Reflect என்பது பிரதிபலிப்பு அல்ல. அதனைப் பட்டறிவு என்றும் சொல்லலாம். ஈழத்து நாவலாசிரியர்களிலே இந்த விடயம் பற்றிப் பேசுகிறபோது செங்கை ஆழியான் முக்கியமானவராகப்படுகிறார். ஏனென்றால் அவரை முற்றிலும் தெரியாத ஒரு வாசகன் - வாசிப்பதற்கு ஒரு நூல் இருக்கிறது. ஒரு கதையொன்று இருக்கிறது என்பதற்காக வாசிக்கின்ற ஒரு வாசகன், இலக்கியப் பிரக்ஞை இல்லாமலேயே வாசகனைக் கவருகின்ற ஒரு பொதுநிலை வாசகவட்டத்தை செங்கை ஆழியான் ஏற்படுத்தியுள்ளார்.

- பேராசிரியர் கா. சிவத்தம்பி -

எனது மணிவிழாக்காலம். அதனைச் செங்கை ஆழியான் எவ்வாறோ அறிந்து கொண்டார். நான் எனது பிறந்த தினத்தைக் கொண்டாடும் வழக்கமில்லாத ஒருவன். செங்கை ஆழியான் தானே முன்வந்து பல படைப்பாளிகள், ஆர்வலர்கள், நண்பர்களுக்கு எனது மணிவிழாப் பிறந்த தினத்துக்குரிய அழைப்பினை அனுப்பி வைத்தார். அன்றைய தினம் பேராசிரியர் நந்தி, மயிலங்கூடல் நடராஜன் எனது இல்லத்திற்கு வருகை தந்து, சமூகந்தந்த அனைவருடனும் சேர்ந்து எனது பிறந்ததின நிகழ்வினை நடத்தினார். பின்னர் தேவரையாளி இந்துக்கல்லூரியில் நடைபெற்ற எனது பங்கு கொண்டு, "தெணியான் மணிவிழா மலர்"ஐ அவர் வெளியிட்டு வைத்தார். எனது பிள்ளைகளின் திருமண வைபவங்களுக்கும் மனைவியுடன் வருகை தந்து நட்பினைப் பேணி வளர்த்த பெருமைக் குரியவர்.

இலங்கை இலக்கியப் பேரவையின் (யாழ். இலக்கிய வட்டம்) தலைவராக அவர் இருந்து வருடந்தோறும் புதிய நூல்களுக்கு விருதுகள் வழங்கி, விழாக்கள் நடத்தி எழுத்தாளர்களைக் கௌரவித்துப் பெருமைப்படுத்தினார். எனது நூல்களுக்கு பேரவையினால் விருதுகள் வழங்கப்பட்டதுடன், அரச விருதுகள் எனக்குக் கிடைத்த சமயங்களில் பாராட்டு விழாக்களையும் நடத்தி வைத்தார். எனது "இன்னொரு புதிய கோணம்" சிறுகதைத் தொகுதிக்கு, நாவேந்தன் விருது வழங்கி என்னைக் கௌரவப்படுத்தினார்.


இலங்கையிலும், இலங்கைக்கு வெளியிலும் வாசகர்களால் நன்கு அறியப்பெற்ற ஓர் எழுத்தாளர் செங்கை ஆழியான். அவரது "வாடைக்காற்று" நாவல் சினிமாப்படமாக தயாரித்து வெளிவந்தது. "யானை" எனும் நாவல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு நூலாக வெளியிடப்பட்டிருக்கிறது. அவரது நூல்கள் சில சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அரச சாகித்த விருதுகள் உட்பட வேறு உயர் விருதுகள் பலவற்றைப் பெற்றுக் கொண்டார். எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல இலங்கை தேசிய அரசினால் ஓர் எழுத்தாளனுக்கு வழங்கிக் கௌரவிக்கப்பெறும் "சாகித்திய ரத்னா" எனப்படும் மிகஉயர் விருதினைப் பெற்றுக் கொண்ட பெருமைக் குரியவர். அவர் படைப்புக்களில் சிறந்ததென விமர்சகளாற் குறிப்பிட்டுக் கூறப்படுவது "காட்டாறு" நாவல். காட்டாறு போல பெருகிக்கொண்டிருந்த அவரது இலக்கியப்பிரவாகம் 28.02.2016 இல் அடங்கிப் போய் விட்டது. இன்று எம்மிடையே இல்லை நண்பர் செங்கை ஆழியான். ஆனால் அவரின் காட்டாற்றின் பெருக்கு வற்றிடப் போவதில்லை. அவரது படைப்புக்களால் அவர் வாழ்ந்து கொண்டே இருப்பார். தனித்துவமான ஓர் எழுத்தாளனுக்கு இன்னொரு மாற்று இருக்க முடியாது. அவனுடைய இடத்தினை வேறொருவரால் நிரப்ப முடியாது. செங்கை ஆழியானின் இடம் வெற்றிடமாக என்றென்றும் இருந்து வரப்போகிறது. இன்னொருவரினால் இட்டு நிரப்புவதற்கு இயலாத தனித்துவமான ஆளுமை செங்கை ஆழியான்.



# செங்கை ஆழியான் : எழுதிக் குவித்தலும்

# பிரளயம் நாவலும்

■ ஏ.எச்.எம்.நவாஸ் ■




> செஆ தமிழ் மொழியை லாவகமாக கையாளும் திறன் பெற்றவர். யாழ்ப்பாண பிரதேச மொழியை உயிரோட்டத்துடன் கையாளத் தெரிந்தவர். எல்லோரும் வாசிக்கும் லேசான மொழியை கையாளுபவர். வாசிப்பவர்களுடன் ஊடாடி, தன்னுள் ஈர்த்துக் கொள்ளும் ஒரு மொழியை செஆ தன்னுடைய ஆக்கங்களில் பயன்படுத்தியிருக்கிறார். இதனை பிரளயம் நாவலிலும் அவதானிக்க முடிகின்றது.

*1*

**நேர்காணல் ஒன்று :**

**அ. அகில்:** *ஒரு நாவல் ஆசிரியர் என்ற வகையில் சுந்தரராமசாமி, ஜெயமோகன், கோணங்கி ஆகியோரின் பரீட்சார்த்த நாவல்கள் பற்றி என்ன கருதுகிறீர்கள்?*

**செங்கை ஆழியான்:** *நாவல்கள் என்ற பெயரில் சுந்தரராமசாமி, ஜெயமோகன். கோணங்கி என்போர் பரிசோதனைப்படைப்புக்களை எழுதியுள்ளனர். சுந்தரராமசாமியின் ஜே.ஜே. சில குறிப்புகள், ஜெயமோகனின் விஷ்ணுபுரம், கோணங்கியின் எழுத்துக்கள் ஆகிய பரிசோதனைப் படைப்புகளை நாவல் என்ற பெயரில் எழுதித் தந்துள்ளனர். உண்மையில் கூறுவதாயின் இவை நாவல்களே யல்ல. இவர்களது நாவல்களில் யதார்த்தப் பண்பு இருக்காது. "மனம்போன போக்கில் கிறுக்கி வைத்ததை வாசகர்கள் மீது சுமத்துகின்ற மனப்பாங்கு இருக்கின்றது. தமிழில் இதுவரை வெளிவந்திருக்காத நாவல் இலக்கியத்துடன், இலக்கணரீதியாக ஒப்பிட்டுக் கூற முடியாத தான்தோன்றித்தனமாய் தன்னை வடிவமைத்துக் கொண்டு வெளிவந்திருக்கிறது" என த. ராசு போன்றோர் சுந்தர ராமசாமியின் ஜே.ஜே.சில குறிப்புகள் பற்றிக் குறிப்பிடுவர். சுந்தர ராமசாமி துதி பாடுவோர் தமக்கு விளங்கிய தாகக் கூறிப்போற்றிக் கொள்வர். நிர்வாணமாக நிற்கும் அரசன் தான் கண்களுக்குத் தெரியாத ஆடை அணிந்திருப்பதாகச் சொல்வது போலவும் அதனை நம்பிக்கொள்வது போலவும் நடிக்க வேண்டும். விஷ்ணுபுரமும் இந்தக் கருத்துக்குச் சோடை போன தல்ல. இப்படைப்புகளைப் புரிந்து கொள்வதற்கு ஆசிரியர் கூடவே இருந்து விளக்கம் தந்தால் தான் முடியும். இவை தமிழ் நாவல்*

துறையில் வந்திருக்கும் பரிசோதனைகளாயின், நாவல் என்ற சம்பிரதாய அமைப்புக்கு அப்பாற்பட்டவையாயின் அதில் எமக்கு உடன்பாடே. ஆனால் நாம் நல்ல இலக்கிய நாவல்கள் என்று கருதுவனவற்றிற்கு அப்பால் சிறப்புடையனவாக வற்புறுத்துவார்களாயின், தமிழிலக்கியத்தில் நாவலுக்கு அடுத்ததாக ஒரு புதிய இலக்கியத் துறை வரும்போது (அறிமுகமாகும் போது), அத்துறையின் ஆரம்ப முயற்சிகளாக இந்நாவல்கள் நிச்சயம் இடம் பெறும்.

நேர்காணல் இரண்டு:

**தேவகாந்தன்:** சுந்தரராமசாமியின் எழுத்துக்கள்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**செங்கைஆழியான்:** சுந்தர ராமசாமியின் எழுத்துகள் நிறைய வாசித்திருக்கிறேன். "ஒரு புளியமரத்தின் கதை" அக்காலகட்டத்து தமிழிலக்கியத்தை கொஞ்சமேனும் முன்னகர்த்திய நாவல். பின்னால் "ஜே. ஜே. சில குறிப்புகள்" வேறுவகையான எழுத்தில் வந்தது. ஆனாலும் அதன் பின் வந்த "குழந்தைகள்-பெண்கள்-ஆண்கள்" நாவல் அவரது நடையின் படி முறையான வளர்ச்சியின் சிகரம்.

**தேவகாந்தன்:** யதார்த்த வகை படைப்புகளுக்கான மாதிரி நடையென்று இந்த நடையைச் சொல்லலாம். ஆனால் ஒரு தர்க்கத்தைப் புரியவும், தத்துவத் தளத்தில் விசாரிப்புக்களை மேற்கொள்ளவும்கூட இந்த நடையால் முடியும். ஒவ்வொரு சொல்லும் செதுக்கி வைத்த மாதிரி அவரது நாவல்களில் அமைவு பெற்றிருக்கும், இல்லையா?

**செங்கைஆழியான்:** நிச்சயமாக. புதியவகை எழுத்துக்கள் பரவலாக உருவாகி வருகின்றன. அவற்றுள் இது ஒன்று. வாசிப்புக்கும், சிரமமற்ற புரிதலுக்கும் இந்த நடை மிக்க வசதியானது. ஈழத்தில் பரவலான படைப்பாக்க முயற்சிகள் இலக்கியத்துக்காகத் தெரிந்தெடுத்த ஒரு இடைநிலை நடையிலேயே நடைபெற்று வருகின்றன என்று சொல்லவேண்டும். என் நிலைப்பாடும் இதுதான். மக்களை இலக்கியம் சென்றடைவது மிக முக்கியமானது. வாசிக்கப்படாவிட்டால் எழுதுவதில் அர்த்தமில்லை. அதேவேளை இன்னொன்றையும் நான் தவறாது சொல்ல வேண்டும். எழுத்துகளால் பெரிய சமூக, அரசியல் மாற்றங்களேதும் இதுவரை காலத்தில் நிகழ்ந்ததாகச் சொல்ல முடியாது. அதாவது எழுத்தினால் புரட்சியென்று எதுவும் ஏற்பட்டதில்லை. ரசிப்பும், புரிதல் திறனுமுள்ள ஒரு தளத்தினருக்கானதே எழுத்து. (இணையம்)

மேற்காட்டப்பட்ட இரு நேர்காணல்களிலும் செங்கை ஆழியான் சொல்லியுள்ள பதில்களில் தர்க்க முரண் தெரிந்தாலும், அவரது படைப்புலக கருத்தியல் பற்றியும், இலக்கிய கோட்பாடு பற்றியும், அவர் எழுதுவதின் நோக்கம் பற்றியும் துல்லியமாக அறிய முடிகின்றது. நவீன பரீட்சார்த்த படைப்புக்களில் அவருக்கு ஈர்ப்பு இருக்கவில்லை. புதியவகை மாதிரியான எழுத்துக்களிலும் அவருக்கு பிடிப்பு இருக்கவில்லை. எல்லோரும் வாசித்தல் வேண்டும் என்ற உணர்வுடன் ஒரு இடைநிலை நடையையே அவர் பின்பற்றினார். புரிதலுக்கும் ரசித்தலுக்கும் உரிய ஒருவகை யதார்த்த எழுத்தே செங்கை ஆழியான் உடையது என்பதை அவரது நேர்காணல் பதில்கள் தெரியப்படுத்துகின்றன.

இத்தகைய அணுகுமுறைகளோடு அவர் எழுதிக்குவித்தார் எனலாம். ஆங்கிலத்தில் 'Proligic Writters' என்று ஒரு தொடர் இருக்கின்றது. "எழுதிக் குவிப்போர்" என்பது இதன் தமிழ் பெயர்ப்பு. "செங்கை ஆழியானுக்கு இது பொருந்துவது போல வேறு யாருக்கும் பொருந்தாது. கலாநிதி நா.சுப்பிரமணியன் கணிப்பின்படி ஈழத்தில் வெளிவந்த நாவல்கள் 407 (1980). அவற்றுள் செங்கை ஆழியானுடையவை 26. நூலுருப் பெறாதவை 7. இவை தவிர சிறுகதைகள், குறு நாவல்கள், சமகால நிகழ்வுகள் பற்றிய விபரணங்கள் என இந்த மனிதர் நிரம்ப எழுதியிருக்கிறார்.

"இதையெல்லாம் எப்படிச் சாதித்தீர்கள்?" எனக் கேட்டால் "உன்னுடைய வாழ்நாளில் அரைவாசியும் நீ என்ன செய்தாய்?; என்ற கேள்விக்கு நான் பதில் அளிக்க வேண்டாமா?" என்று பாரசீகக் கவிஞர் சா அதியை நினைவூட்டுகிறார் இந்த சாதனையாளர்" என்று சோ.பத்மநாதன் குறிப்பிடுகின்றார் (முரசொலி; 25.01.1991).

செங்கை ஆழியானின் பின்வரும் கருத்தினை இவ்விடத்தில் எடுத்துக்காட்டுவது பொருத்தமானது. "என்னைப்போல சமகால எரியும் பிரச்சினைகளைத் தம் படைப்புகளில் பதித்தவர்கள் மிகக் குறைவு என்பேன். ஒரு சமூகவியல் ஆவணங்களாகவும், வரலாற்று ஆவணங்களாகவும் என் புனைகதைகள் அமைந்துள்ளன. புனைகதை சார்ந்த தொகுப்புக்களாக 40 உம், அவை சாராத தொகுப்புக்களாக 8 உம் வெளிவந்துள்ளன. இந்த எண்ணிக்கையைக் கொண்டு செங்கை ஆழியான் நிறைய எழுதுகிறார் எனக் கூறுகிறார்கள். தமிழக எழுத்தாளர்களுடன் ஒப்பிடும் போது நான் ஒன்றும் பெரிதாக எழுதிக் குவித்து விடவில்லை. என்னால் எழுதாமலோ படிக்காமலோ இருக்க முடியாது. கிணறு இறைக்க இறைக்கத் தான் ஊறும். கற்பனை வறட்சியும் கால பயமும் பல எழுத்தாளர்களது பேனாக்களை மூடி வைத்துள்ளன. அதற்கு நான் என்ன செய்வது?"

2

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மாணவனாகப் படிக்கிற காலத்தில் சொந்தப் பெயரைப் பாவித்து ஆக்கங்களை எழுதுவதில் இடர்ப்பாடுகள் இருந்தமையினாலும், படிக்கும்போது இடதுசாரிச் சிந்தனைகளால் பெரிதும் ஈர்க்கப்பட்டதாலும் "செங்கை ஆழியான்"



(செஆ) என்ற பெயரைச் சூட்டிக்கொண்ட குணராசா, புனைப்பெயர் வைத்துக்கொண்டது பற்றி இப்படி குறிப்பிடுகிறார்: "பல்கலைக்கழகக் காலத்தில் புனை பெயரை வைத்துக் கொண்டேன். சிவப்பு நிறத்தில் பிடிப்பும் அக்கொள்கையில் வாஞ்சையும் இருந்தன. அதனால் சிவப்பு நிறத்துடன் புனை பெயரை அமைத்துக் கொண்டேன். மற்றைய காரணம் விஸ்னு மீது எனக்குப் பக்தி இருந்தது. அவர் சிவந்த கைகளை உடையவர். ஆழியில் சமுத்திரத்தில் உறைபவர் செங்கை ஆழியான்." குணராசா யாழ். வண்ணார் பண்ணையில் உள்ள கலட்டியில் 1941 ஜனவரி 25இல் பிறந்தவர். தந்தை கந்தையா வணிக முயற்சிகளில் ஈடுபட்டவர். தாய் அன்னம்மா. குடும்பத்தில் செஆ எட்டாவது பிள்ளை. பாடசாலைக் கல்வியை யாழ். இந்துக் கல்லூரியிலும் புவியியல் துறைசார்ந்த முதற்பட்டக் கல்வியைப் பேராதனைப் பல்கலைக் கழகத்திலும் பெற்றார். 1984 இல் முதுகலைமாணிப் பட்டத்தையும் 1991 இல் கலாநிதிப் பட்டத்தையும் யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக் கொண்டார். இலக்கிய உலகு, கல்வி உலகு, நிர்வாக உலகு என இவரது ஆற்றலை வகுத்து ஆராய முடியும். சிறுகதை (185), நாவல் (50), இலக்கியம், கட்டுரை, விமர்சனம், திறனாய்வு, நூற்றுக்கும் மேற்பட்ட பாடநூல்கள், திரைப்படம் என பல பரிமாணங்களில் இவருடைய படைப்பாளுமை கடலென விரிகின்றது. 2016 ஜனவரி 25 ஆம் நாள் "யாழ்ப்பாணம் பாரீர்" என்ற மகுடத்தில் விவரண நூல் ஒன்றினை தன்னுடைய 75 ஆவது பிறந்த நாள் நினைவாக வெளிக்கொணர்ந்த செஆ, 2016 பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி தனது 75 வது வயதில் இயற்கையெய்தினார்.

"இங்குள்ளவர்கள், தங்கள் வாழ்வியலின் நெருக்கடிகளைச் சிறுகதை, நாவல்களில் பதிவு செய்தனர். இத்தகைய எழுத்தாளர்களுள் தாமரைச் செல்வி, செங்கை ஆழியான் முக்கியமாக எடுத்துப் பேசப்பட வேண்டியவர்கள்" (ஈழத்து தமிழிலக்கியத் தடம்; 2000: 74) என்பதும், "செங்கை அழியான் குணராசா, 1960களின் பிற்பகுதியில் முன்னணிக்கு வந்த எழுத்தாளர், ஈழத்தில் இன்றைய படைப்பாளிகளுள் மிக வெற்றிகரமானவர் செங்கை ஆழியானே எனலாம். செங்கை ஆழியான் தனது இலக்கியப் பயணத்தை வெறுமனே வாசக ரஞ்சகம், வெகுசனக் கவர்ச்சி என்பவற்றுடன் நிறுத்திக் கொள்ளாமல் தனது முயற்சியில் தானே ஒரு முற்போக்கான வளர்ச்சியைக் கண்டுள்ளார்" (2007: 36) என்பதும் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களின் கணிப்பாகும்.

செஆவின் இலக்கியப் பிரவேசம் 1957 ஆம் ஆண்டில் "கல்கண்டு" என்ற தமிழக இதழில் எழுதிய ஒருபக்கக் கதை மூலம் ஆரம்பித்தது. இவர் 1963இல் "ஆச்சி பயணம் போகிறாள்", "நந்திக் கடல்" ஆகிய முதலிருநாவல்களை எழுதினார். "நான் முல்லைத்தீவில் வேலை பார்த்த காலத்தில் அங்குள்ள இயற்கை அழகு என்னைக் கவர்ந்தது. இதனால் நான் நந்திக் கடலைக் களமாகக் கொண்டு நாவல் எழுதினேன்;என அவரே குறிப்பிடுகின்றார்.

இவரது 50 நாவல்களையும் வரலாற்று நாவல்கள், நகைச்சுவை நாவல்கள், சமூக நாவல்கள் என்ற அடிப்படையில் ஆய்வுக்கு உட்படுத்தலாம். நந்திக்கடல், கந்தவேள் கோட்டம், கடற்கோட்டை, குவேனி முதலியன வரலாற்று நாவல்களாகக கொள்ளத்தக்கன. ஆச்சி பயணம் போகிறாள், முற்றத்து ஒற்றைப் பனை, கொத்தியின் காதல், நடந்தாய் வாழி, வழுக்கியாறு போன்றவை நகைச்சுவை நாவல்களாகும். வாடைக் காற்று, இரவின் முடிவு, பிரளயம், காட்டாறு, கனவுகள் கற்பனைகள், ஆசைகள், கங்கைக்கரையோரம், அலைகடல் தான் ஓயாதோ, முற்றத்து ஒற்றைப் பனை, யானை, மழையில் நனைந்து; வெயிலில் காய்ந்து,

மழைக்காலம், மண்ணின் தாகம், ஜன்மபூமி, யாக குண்டம், ஆறுகால் மடம், கிடுகுவேலி, ஓ அந்த அழகிய பழைய உலகம், காற்றில் கலக்கும் பெரு மூச்சு, ஒரு மைய வட்டங்கள், மரணங்கள் மலிந்த பூமி, வானும் கனல் சொரியும், போரே நீ போ போன்றன சமூக நாவல்களாகும். இவையனைத்தும் குடா நாட்டு மற்றும் வன்னிப் பிராந்திய மக்களின் சமூக பொருளாதார, அரசியல் பிரச்சினைகள், ஏக்கங்கள், அபிலாஷைகள், கனவுகள், கற்பனைகள் அனைத்தையும் இவருக்கே யான தனித்துவத்துடன் வெளிப்படுத்த முயற்சித் துள்ளன.

"இலங்கையில் அதிகமான தமிழ் நாவல்களை எழுதி, தம் எழுத்தாற்றலைக் காலந்தோறும் வலுப் படுத்தி வந்திருப்பவர், செங்கை ஆழியான் ஆவர். பிரளயம் என்ற நாவல் முதலாகத் தமது சமூகப் பார்வையை விரிவுபடுத்தத் தொடங்கிய அவர், தமது காட்டாறு என்ற நாவல் வாயிலாகத் தாம் சிறந்த நாவலாசிரியர்களுள் ஒருவர் என்று இனங் காட்டியுள்ளார்" என்று பேராசிரியர் துரை மனோகரன் (இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சி; 1997: 153) குறிப்பிடுகின்றார்.



3

"நந்திக்கடல்" என்ற வரலாற்று நாவலை செஆ "நான் எழுதிய முதல் நாவல்" ("நானும் எனது நாவல்களும்" 2000: 12) எனக் குறிப்பிடுகின்றார். யாழ்ப்பாண இராச்சியத்தின் ஒரு பொற்சரட்டினை இந் நவீனம் விளக்க முயல்கிறது. கடல்கோட்டை, கந்தவேள் கோட்டம் என்று தொடர்ந்த இவரது வரலாற்று நூவல்கள் வரிசையில் "குவேனி" முக்கியமான வரலாற்றுப் படைப்பாக சொல்லப்பட்டது. இலங்கையின் மூத்த தலைவியான குவேனி பின்னர் இந்தியாவில் இருந்து நாடுகடத்தப்பட்ட விஜயனை மணம் முடித்து உருவாகிய இனமே சிங்கள இனம் என்பதை அந்தக் கதையில் வரலாற்று ஆதாரங் களுடன் நிரூபித்திருக்கிறார். அடிப்படையில் இவர் ஒரு புவியியலாளன் என்பதால் பெரும்பாலும் இவரது கதைகளின் களங்கள் பலராலும் உணரக்கூடிய வகையில் விபரிக்கக்கூடிய ஆற்றல் படைத்தவர். குவேனியில் இத்தன்மையை தரிசிக்க முடிகின்றது. இந்நாவல் எழுதப்பட்டதன் காரணத்தை செஆ "நானும் எனது நாவல்களும்" 2000: 95) நூலில் விபரித்திருக்கிறார். அதிலிருந்து ஒரு பகுதி,

"ஈழப்போராட்டம் உச்சம் பெற்றிருந்த ஒரு காலகட்டத்தில் குவேனி எழுதப்பட்டதற்கு இரண்டு காரணங்களுள்ளன. ஒன்று, இலங்கைக்குச் சிங்களவர்கள் வருவதற்கு முன்னரே இலங்கையில் நாகரிகமான மக்கள் கூட்டங்களாக நாகர்களும் இயக்கர்களும் இருந்துள்ளனர். அவர்கள் திராவிட இனத்தவர்கள். இந்த நிலத்தின் ஆதி மக்கள் என்பதை நிறுவுவதற்காகும். மற்றையது எமது மூதாதைகள் விட்ட தவறுகள் எவ்வாறு இன்று எம் தலைகளில் விடிந்திருக் கின்றன என்பதைச் சுட்டிக் காட்டுவதற் காகும். இவற்றினை நிறுவுவதற்கு சிங்கள வரலாற்று மனுவாகக் கொள்ளப்பட்டுவரும் மகாவம்சத்தினையே மூலமாக எடுத்துக் கொண்டேன். அதில் கூறப்பட்டி ருக்கும் குவேனியின் வரலாறு வெறும் கட்டுக்கதை யென்பதை நானறிவேன். எனினும் சிங்களக் குடி யேற்றத்தை விஜயன் என்ற கற்பனைப் பாத்திரத்துடன் ஆரம்பிக்கும் போது, அவன் இங்கு வந்தபோது இலங்கையிலிருந்த மக்கட் கூட்டத்தின் தலைவியாகக் குவேனியை கொள் வதில் எவ்வித தவறுமிருப்பதாக எனக்குத் தெரிய வில்லை."

பேராசிரியர் கா.சிவத்தம்பி, "குவேனி கதை ஒரு மீத்...." எனக் குறிப்பிட்டுள்ளமை அவதானிக்கத்தக்கது.

"ஆச்சி பயணம் போகின்றாள்" (1963) என்ற அங்கத நாவல் யாழ்ப்பாணத்தில் கிணற்றுத்தவளை யாக இருந்த பொன்னம்மா ஆச்சி கதிர்காமம் முருகன் கோவிலுக்கு கண்டி ஊடாக செல்லும் பயணக் கதையையே விவரணமாக்குகின்றது. முக்கியமான மூன்றே மூன்று பாத்திரங்களை வைத்துக் கொண்டு இவர் ஆச்சி சென்ற பாதையூடாக வாசகர்களையும் கதிர்காமத்திற்கு அழைத்துச் செல்கிறார். "உண்மையை கற்பனையாக்கி யிருக்கிறேன்" என்று இந்நாவல் பற்றி செஆ குறிக்கிறார். இன்னொரு நகைச் சுவை நாவலான "கொத்தியின் காதல்" ஒரு பேயின் காதல் கதையைச் சொல்கின்றது. "ஆச்சி பயணம் போகின்றாள்", "முற்றத்து ஒற்றைப் பனை" போல "கொத்தியின் காதல்" ஏனோ அதிகம் பேசப்பட வில்லை. யாழ்ப்பாணத்தில் மழை நேரம் மட்டும் ஓடுகின்ற ஆறான வழுக்கியாறை கதைக்களமாக வைத்து இவர் எழுதிய "நடந்தாய் வாழி, வழுக்கியாறு" என்ற குறுநாவல் நகைச்சுவையாக பல சமூக அவலங்களை விபரிக்கின்றது.

செஆவின் சமூக நாவல்கள் பெரும்பாலும் சாதிக்கொடுமைகளுக்கும் சமூக அடக்குமுறை களுக்கும் எதிரானதாகவே அமைந்துள்ளன. "வாடைக் காற்று" மீனவர் சமுதாயத்தின் பிரச்சினை களை அலசி ஆராய்ந்த நாவலாகும். இது பின்னர் ஈழத்து சினிமாவாக வும் பரிணமித்தது. கதையின் களம் நெடுந்தீவு என்ற யாழ்ப்பாணத்தின் ஒரு தீவுக் கிராமம் ஆகும். நெடுந்தீவுக் கடற்கரையின் மீனவ சமூகத்தினரையும் அங்கு மீன் பிடிக்க வரும் மீனவ சமூகத்தினரையும் கதை மாந்தர் களாகக் கொண்டு, அப்பிரதேசத்தின் இயற்கைச் சூழலின் பின்னணியில் புனையப் பட்ட காதல் கதையாக வாடைக் காற்று செஆவின் எழுத்தாற்றலை எடுத்தியம் பிற்று. மீன் பிடிப்பதில் சம்மாட்டிமாரிடையில் நிலவும் போட்டியும், உள்ளூர்ப் பெண்கள் மீது அவர்கள் கொள்ளும் காதலுமே கதையை வளர்த்துச்


செல்கின்றன. இந்நாவலின் சம்வங்கள் இயற்கையுடன் இயைந்து அல்லது பொருந்திச் செல்லவில்லை. அந்த நெய்தல் நிலத்து வாழ்வின் சுவாசத்தை உணர்வு பூர்வமாய் உள்வாங்கியிருக்கவில்லை. ஒரு வெளிப் புறக்காட்சிப் படப்பிடிப்பாகவே இப்பிரதி அமைந் துள்ளது. இந்நாவலில் செயற்கைத்தனமே மேலோங்கி யுள்ளது. வாடைக்காற்று சினிமாவும் இதை நிதர்சனப் படுத்திற்று. வாடைக்காற்று, காட்டாறு என்பன சிங்களத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன.

“எனது எழுத்துக்களை நானே சுயமதிப்பீடு செய்ய முற்பட்ட காலம் வீரகேசரியின் பரிசு நாவலான காட்டாறு வெளிவந்த காலமாகும். நான் எழுதிய நாவல்களில் அற்புதமாகவும் தனித்துவமானதாகவும் அது அமைந்ததை உணர்ந்தேன். என் மனதில் ஆழப்பதிந்த காயங்களை அந்த நாவல் இறக்கி வைத்தது. இது யதார்த்தப் பண்புடன் படைக்கப்பட்டது. யதார்த்தப் படைப்பு ஒன்று கண்டது - கேட்டது உணர்ந்தது என்ற வகையில் சமூகப் பயன் பாட்டை வழங்குமாறு படைக்கப் பட வேண்டும். யதார்த்தமாகப் படைக்கப்படும் நாவல்களே என்னை மிகவும் கவருவன” என்று காட்டாறு நாவல் பற்றி செஆ குறிப்பிடுகின்றார். இவரது 50 நாவல்களில் அதிகம் கவனிக்கப்பட்ட நாவல் காட்டாறு ஆகும். காட்டாறு காடு சார்ந்த கதையை யதார்த்தம் மேவிய உயிர்ப்புடன் உணர்த்தியுள்ளது.

வன்னிப் பிரதேச விவசாயிகளது அடிப்படைப் பிரச்சினைகளைச் சற்று ஆழமாக அலசும் இந்நாவலில் அதற்கேற்ப சமூக வர்க்கங்களை இனங்காட்டும் பண்பு துல்லியமாய் படம் பிடிக்கப்பட்டுள்ளது. வன்னிப்பிரதேச நாவல் வரலாற்றிலும் செங்கை ஆழியானின் நாவல் வரலாற்றிலும் ஒரு திருப்புமுனை என கணிக்கப் பட்டுள்ளது. விளைந்து வரும் பயிருக்குத் தண்ணீர் பெறமுடியாமல் ஏழை விவசாயிகள் வாடி வருந்தும் பொழுது, பணம்படைத்தவர்களும் கிராமத்தின் தலைமைப் பொறுப்பில் உள்ளவர்களும், மக்கள் நலன் கருதிப் பணியாற்ற வேண்டிய அரசாங்க அலுவலர்களும் சகல வசதிகளையும் வாய்ப்புக்களை யும் தமக்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஏழைகளைப் பல வகையிலும் சுரண்டுகிறார்கள். இச் சுரண்டல்களால் பாதிக்கப்பட்ட கிராம விவசாயிகளின் இளைய தலைமுறை வர்க்க உணர்வுபெறத் தொடங்கு கின்றது. சுரண்டுவோருக்கு எதிராக வன்முறை தலை தூக்குகிறது. காட்டாறு என்ற கனமான நாவலை படைத்த செஆ ஏன் “வெறும்” நாவல்களை எழுதிக் குவித்தார் என்று எண்ணத் தோன்றுகின்றது?

“யானை” என்ற இவரது நாவல் The Beast என ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. ஒரு காட்டை கண்முன்னே நிறுத்துகின்ற கதை அது. கங்கைக்கரையோரம் என்ற நாவலில் பல்கலைக்கழக வாழ்க்கையை அழகாகச் சொல்லியிருக்கிறார். அங்கே ஏற்படும் காதல்கள், ராகிங் பிரச்சனைகள் என சகலதையும் பேராதனைப் பல்கலைக்கழகச் சூழலில் விபரித்திருக்கிறார். இந்த நாவலை வாசிக்கையில் பேராதனை பல்கலைக்கழக கட்டிடங்கள், காதலர்கள் சந்திக்கும் பூங்கா, சிறிய குளம், புல்வெளி, ஆலயங்கள் என அனைத்தும் நினைவில் காட்சியாக விரிகின்றன. சமகால விடங்களை வைத்து எழுதிய கொழும்பு லொட்ஜ், மரணங்கள் மலிந்த பூமி, போரே நீ போ, வானும் கனல் சொரியும், ஒரு மைய வட்டங்கள், தீம் தரிகிட தித்தோம், ஓ அந்த அழகிய பழைய உலகம், இந்த நாடு உருப்படாது போன்றவற்றைக் குறிப்பிடலாம். அதே நேரம் இவர் 76 ஆம் ஆண்டு இனக்கலவரத்தை மையப்படுத்தி எழுதிய 24 மணி நேரம் முதலியன குறித்துக்காட்டப்பட வேண்டிய நாவல் பிரதிகளாகும். அவசியமும் அவசரமும் இப்பிரதிகளின் கலையாக்க தன்மையை சிதைவடையச் செய்துள்ளன. காட்டாறு நாவலில் காணப்படும் செஆவின் கலையாக்க எழுத்தாற்றலை ஏனைய பிரதிகளில் காணமுடிய வில்லை.

கிடுகுவேலி, பிரளயம் போன்றவை சாதி ஒடுக்கு முறைக்கு எதிரான கதை களாகும்.




பிரளயம் நாவல் “சிரித்திரன்” (1971) இதழில் “மயான பூமி” என்ற தலைப்புடன் தொடர் கதையாக வெளிவந்தது. இது 1975ஆம் ஆண்டு வீரகேசரி வெளியீடாக “பிரளயம்” என்ற மகுடத்தில் பிரசுரமானது. “ஒரு சமூகத்தின் விழிப்பையும் மாற்றத்தையும் பேசுகின்றது” என்ற குறிப்புடன் வெளிவந்த, இந் நாவலின் களம் யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணை கிராமம். அங்கு சலவைத் தொழிலாளியாகவுள்ள ஒருவரின் குடும்பத்தில் நிகழும் மாற்றங்களை இந் நாவல் விபரிக்கின்றது. தாழ்வு மனப்பான்மையுடன் கூடிய சமூகக் கட்டுப் பாடுகளின் பிடியிலிருந்து விடுபட்டு முன்னேறத் துடிக்கும் ஒரு இளைய பரம்பரையின் கதை இது. கல்வியும் பிறதொழில் முயற்சிகளும் இதற்குப் பயன்படுகின்றன. உயர் சாதியினர் இம்முயற்சிகளுக்கு எதிராக அடிக்கடி இடையூறு செய்கின்ற போதிலும், உயர்சாதியை சார்ந்த ஒருவனே அக்குடும்பம் உயர உறுதுணையாகின்றான். இப்பிரதியின் கதைச்சாரத்தினை இப்படிச் சொல்லலாம். சலவைத் தொழிலாளியான வேலுப்பிள்ளையின் குடும்பம் கல்வி கற்று முன்னேற்ற பாதையில் பயணிக்கின்றது. இந்நிலையில் உயர் சாதியை சேர்ந்த வாமதேவன் என்ற இளைஞன், வேலுப்பிள்ளையின் மகள் சுபத்திராவைக் காதலித்து ஏமாற்றுகிறான். வாமதேவனுக்கு அவனது சாதிக்குள் திருமண ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. வயிற்றிலே குழந்தை யுடன் தவிக்கும் சுபத்திராவை வாமதேவனும் அவனது

பெற்றோரும் உதாசீனப்படுத்துகின்றனர். வாமதேவனின் தம்பியான மகாலிங்கம் ஏற்றுக்கொள்ள முன்வருகிறான். மகாலிங்கத்தின் செயல் இளைய தலைமுறையினரிடையே உருவாகியுள்ள மாற்றத்தை காட்டுகின்றது. இதனை பேராசிரியர் சு.வித்தியானந்தன் பின்வருமாறு எடுத்துத்துரைக்கின்றார்:

"சாதி ஏற்றத்தாழ்வு என்ற சமூகக் குறைப் பாட்டைப் பொருளாகக் கொண்டு இவராற் படைக்கப் பட்ட பிரளயம் நாவல் யாழ்ப்பாணக் கிராமமொன்றிலே நிகழ்ந்து வரும் சமுதாயத்தின் மாற்றத்தை அதன் இயல்பான நடப்பியல்புடன் காட்டுவது. நீண்ட காலமாக உயர்சாதிக்கும் குடிமை செய்து வந்த சலவைத் தொழிலாளர் குடும்பம் ஒன்று கல்வி, பிறதொழில் முயற்சிகள் என்பவற்றால் அக்குடிமை நிலையினின்று விலகிப் புதிய வாழ்க்கை முறைக்கு அடியெடுத்து வைக்க முயல்வதே இந்நாவலின் கதைப்பொருள். இம்மாற்றத்திற்கு இளைய தலைமுறை முனைந்து நிற்கிறது. ஆனால் முதிய தலைமுறை பாரம்பரியச் சிந்தனையோட்டத்திலிருந்து விடுபட முடியாமல் திணறுகிறது. இதனை பிரளயம் சுவைபட எடுத்துக் காட்டுகிறது" (செங்கை ஆழியான் வாழ்வும் படைப்புகளும்; 2007:16).

தனிமனித தியாகங்கள் சமூக மாற்றத்தை - பிரளயத்தை - ஏற்படுத்தவல்லன. எனினும் சமூகமாற்ற உணர்வின் ஒரு பொறியாக மின்னும் இப்பண்புகள் அலட்சியப் படுத்தப்படக் கூடியனவல்ல. இந்நாவலில் "பிரதேச" மண் வாசனையும் ஓரளவு காணப்படுகின்ற தெனினும் சலவைத் தொழிலாளியின் குடும்பம், இயல்பான தன்மைகளுடன் சித்திரிக்கப்படாமல் ஒரு "தூரப்பார்வை"யாகவே காட்டப்படுகின்றதெனலாம் என்று பேராசிரியர் நா.சுப்பிரமணியம் குறிப்பிடுகின்றார். இந்நாவலுக்கு 1975ம் ஆண்டுக்கான சாகித்திய மண்டலப் பரிசு வழங்கப்பட்டது.

4

சமூகப் பிரச்சினைகளிலிருந்து கதையம்சத்தைத் தேர்ந்து கொள்வதிற் சிலரைப் போலக் கோட்பாடு ரீதியான அணுகுமுறைகளை அவர் கடைப் பிடிப்பதில்லை. சமூக மாந்தரின் சராசரி உணர்வு களினடியாகவே அதனைத் தேர்ந்தெடுப்பார் இந்தப் பண்பை அறுபதுகளின் தொடக்க ஆண்டுகளிலிருந்து இன்று வரை தொடர்ந்து அவதானிக்க முடிகிறது. குறிப்பாக அறுபதுகளிற் காலத்தின் குரல்கள் என்ற சிறுகதைத் தொகுதியில் இவர் எழுதிய "சாதி" என்ற கதையும், எழுபதுகளில் எழுதிய பிரளயம் என்ற நாவலும் சாதி ஏற்றத்தாழ்வு என்ற சமூகக் குறைப் பாட்டைப் பொருளாகக் கொண்டவை. பொதுவாகக் கோட்பாடு ரீதியில் இப்பிரச்சினையை அணுகுவோர் தாழ்த்துவோர் தாழ்த்தப்பட்டோர் ஆகிய இரு சாராருக்குமிடையிலான போராட்டமாக மட்டுமே இதனை நோக்குவர். ஆயின் செங்கை ஆழியான் அவர்கள் கோட்பாடு அடிப்படைக்கு அப்பாற் சென்று தாழ்த்தப்படுவோரின் உள்ளேயே காணப்படும் தீண்டாமையையும் புதிய தலைமுறை எழுச்சிகளையும் உயர் சாதியினரிடமும் நிகழ்ந்துவரும் மாற்றத்தையும் கதையம்சமாகக் கொண்டார். பிரளயம் நாவலிற் சமுதாயத்தின் இயல்பாக மாறிவரும் நிலை கதையம்ச மாகிறது. உயர்சாதியினரின் கொடுமைகட்கு ஆளாகும் சலவைத் தொழிலாளி குடும்பம் முன்னேறு வதற்கு இவ்வுயர் சாதியினருளொருவனே கை கொடுக்கும் வரலாற்றுப் போக்கு கதையில் அமைகிறது (பேராசிரியர் சு.வித்தியானந்தன்; 2007: 17).

சாதியம் சார்ந்த ஈழத்து நாவல்கள் பற்றிய செ.ஆவின் அவதானிப்பு பின்வருமாறு அமைந்துள்ளது. "1850 தொட்டு 1973 வரை வெளிவந்த நாவல்களில் பெரும்பாலானவை சமூகப்பிரச்சினைகளைத் தம் கருத்தியல்பாகக் கொண்டன. பேராசிரியர் கா.சிவத்தம்பி சொல்வது போல இவை தத்துவார்த்த நிலையில் நெறிப்படுத்தப்பட்ட இலக்கியமாக அமைந்தன. சாதிய ஏற்றத்தாழ்வு, வர்க்கவேறுபாடு, சீதனக் கொடுமை, வறுமை என்பன நாவல்களின் கருப்பொருளாகின. இவை கதைவளம் மிக்கனவாயும் கலையழகு குன்றியனவாவும் பொதுவாக அமைந்தன. தத்துவார்த்த ரீதியில் நெறிப் படுத்தப்பட்ட நாவல்களின் வருகையை இளங்கீரன் தொடக்கி வைத்தார். இளங்கீரனின் வருகையோடு ஈழத்துத் தமிழ் நாவல் மனை கலையழகு பெறத் தொடங்கியது. 1950 களில் இளங்கீரன் நாவலிலக்கியத் தில் காலடி வைத்தார். அவரால் இந்த மண்ணையும் மக்களையும் களமாகக் கொண்டு நாவல்களை ஆக்க முடிந்தது. அவர் பதினைந்துக்கும் மேற்பட்ட நாவல் களை எழுதியுள்ளபோதிலும் அவரது தென்றலும் புயலும், நீதியே நீ கேள் ஆகிய இரண்டும் அவருக்கு மட்டுமன்றி, ஈழத்து நாவல் துறைக்கும் வலுச்சேர்த்தன. முதல் குறித்த நாவலில் சாதியத்தையும் இரண்டாவது நாவலில் வர்க்கியத்தையும் இடம் பெறவைத்தார். பிற்காலத்தில் செ.கணேசலிங்கன், கே.டானியல் ஆகியோரின் நாவல் களில் வர்க்கியமும் சாதியமும் வீறுடன் அவர்களது நாவல் இலக்கியக் கருப்பொருளாக அமைந்தமைக்கு இளங்கீரனின் நாவல்கள் முன்னோடிகளாகின. இளங் கீரனின் நாவல்களை மிகைப்படுத்தி பேராசிரியர் கைலாசபதி இலக்கிய உலகில் உயர்த்தி வைத்தார்.

சாதியத்தின் அடக்கு முறைகளையும் அதற்கெதிரான போராட்டங்களையும் நாவல்களில் பொருளாகக் கொண்டவர்களில் சொக்கன் (1963), செ.கணேசலிங்கன் (1965), செங்கைஆழியான் (1971) கே.டானியல் (1972), தெணியான் (1973), செ.யோக நாதன் (1976), சோமகாந்தன் (1989) ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். காலவரன் முறையில் நாவலிலக்கியத்தின் நவீனவடிவத்தில் சாதியப்பிரச்சினையை கருவாகக் கொண்டு எழுதப்பட்ட முதல் நாவல் விவேகியில் தொடராக வெளிவந்த சொக்கனின் "சீதா"வாகும். உயர்சாதியாளரான செல்வரெத்தினம் தனது சாதியிலும் தாழ்வாகக் கருதப்படும் பெண் ஒருத்தியை புரட்சி மனப்பான்மையோடு திருமணம் செய்துகொள்கிறார்.

பின்னர் அவரால் அவளோடு சகாயமாக வாழ முடிய வில்லை. இவருடைய மகள் சீதாவைப் பிராமணப்பையன் ஆத்மநாதன் நேசிக்கிறான். சமூகத்தை எதிர்த்து அவனால் அவளைக் கரம் பற்ற முடியவில்லை. இதனால் தான் பிரமச்சாரிணியாக இருந்து விடுவது மேல் என சீதா முடிவு செய்கிறாள். இந்த நாவல் மூலம் சொக்கன் பெரிதாக எதையும் சாதிக்க முடியவில்லை. பாரம்பரியமாகச் சமூகத்தினைக் கட்டிவைத்திருக்கிற சாதியத் தளைகளை அறுக்கின்ற அல்லது குறைந்தது தளர்த்துகின்ற முயற்சியைக் கூட அவரால் செய்ய முடிய வில்லை. அவரையடுத்து செ.கணேசலிங்கன் சாதியத்தின் எரியும் பிரச்சினைகளை நீண்டபயணம், போர்க் கோலம், செவ்வானம் முதலான நாவல்களில் காட்டி யுள்ளார். சாதியத்துக்கு மிக்க அழுத்தம் கொடுத்து பல நாவல்களைப் படைத்துத் தந்தவர் டானியலாவார். கணேசலிங்கனும் டானியலும் மார்க்சியக் கருத்துக் களுக்கு தம் நாவல்களில் முக்கியத்துவம் கொடுத்தி ருப்பதோடு சாதியத்தின் அழிவுக்கும் அடக்கியொடுக் கப்பட்ட மக்களினது விடிவுக்கும் சமூகப்புரட்சி ஒன்றின் மூலமே விடை காணலாமென நம்பினர். இவர்களது நாவல்களில் யாழ்ப்பாண சமூகத்தின் சாதிப்பிரச் சினைக் களங்கள் பொதுவாக ஒத்த பண்பினடியாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. கோயில்கள், பொதுக்கிணறு கள், பொது விடங்கள், பாடசாலைகள், தொழில் தாபனங்கள் என்பனவற்றில் பஞ்சமர்கள் அனுபவிக் கின்ற ஏற்றத் தாழ்வுகளையும், அவமானங்களையும், மனக்காயங்களையும், சமூக அநீதிகளையும் இருவரும் தமது நாவல்களில் காட்டியுள்ளனர். கணேசலிங்கன் தனது நாவல்களில் யாழ்ப்பாணச் சமூகத்தின் பல்திற மக்களை ஆக்கவிலக்கிய கர்த்தாவின் சமநிலை தளும்பாநிலையில் சித்திரிக்க, டானியல் பஞ்சமர்களுக் கெதிராகத் தொழிற்பட்ட பாத்திரங்களை மட்டுமன்றி, அப்பாத்திரங்கள் சம்பந்தப்பட்ட சமூகம் முழுவதையும் காறி உமிழ்கிறார். இங்கு ஆக்கவிலக்கிய கர்த்தாவுக்கு இருக்க வேண்டிய சமநிலைப் பார்வை அற்றுப்போய், அந்த சமூகத்தையே அழித்துவிடவேண்டும் என்ற போராட்டக் குணம் காணப்படுகின்றது. தலித் இலக்கியத்தின் பிதாமகர் என்று டானியல் கொள்ளப் படுவதற்கு அவர் தலித் சமூகத்தைச் சார்ந்தவர் என்பது மட்டுமன்றி தலித் பக்க நியாயங்களுக்கு அவர் கொடுத்திருக்கும் அழுத்தங்களும் காரணமாகின்றன. சாதியத்தினால் பஞ்சமர்கள் மட்டுமன்றிப் பிராமணர் களும் பாதிப்படைந்துள்ளமையை சோமகாந்தனின் விடிவெள்ளி பூத்தது என்ற நாவலும் தெணியானின் பொற்சிறையில் வாடும் புனிதர்கள் என்ற நாவலும் நன்கு சித்திரித்துள்ளன.

கணேசலிங்கன், டானியல் சார்ந்தோர் சாதியத்தின் அழிவுக்கு அல்லது சமூக மாற்றத்துக்குத் தமது நாவல்களில் சுட்டிக்காட்டிய வழிமுறை ஒரு சமூகப் புரட்சியாகும். எனது சாதிய நாவல்களான பிரளயம், அக்கினி முதலியன யாழ்ப்பாணச் சமூகத்தின் பல்வேறு கொடுமைகளின் பல்வேறு வடிவங்களை சித்திரிக்கின்ற அதேவேளை சமூக மாற்றமானது கல்வி, தொழில் மாற்றம், செல்வந்தேடல் என்பன மூலம் ஏற்படுமெனச் சித்திரிக்கிறது. நடைமுறையில் இன்றைய யாழ்ப்பாணச் சமூகத்தின் சாதிய மாற்றம் நான் சுட்டியது போல கல்வி உயர்வாலும் தொழில் மாற்றத்தாலும் ஏற்பட்டிருப்பதைக் காணலாம். ஆங்காங்கே சாதியத்தின் அடக்கியொடுக்கப்பட்ட முறைகள் இருக்கத்தான் செய்கின்ற போதிலும் தங்கியிருக்கா நிலை மெல்லென உருவாகி வருகின்ற நிலையில் இந்தச் சமூகக் கட்டு உடைந்துவிடும். ஈழப்போராட்டத்தின் விளைவாக இது துரிதப்பட்டுள்ளது. எனது பிரளயம் என்ற நாவல் உருவத்தில் சிறியதாயினும் நாவலுக்கான கதைப் பரப்பைத் தன்னகத்தே கொண்டுள்ளதுடன் சாதிய நாவல்களில் வித்தியாசமான செல்நெறியையும் கொண்டுள்ளது."

சாதிப்பிரச்சினைக்கு தன்னளவில் ஒரு தீர்வினை முன்மொழியும் உத்தியுடனே செஆ சாதிப் பிரச்சினைகளை மையமாகக் கொண்ட நாவல்களை (பிரளயம், அக்கினி, அக்கினிக் குஞ்சு, நிலமகளைத் தேடி) படைத்துள்ளார். இதற்கு பிரளயம் நாவல் உதாரணமாகின்றது. "பிரளயம்" என்பது ஒரு சமூக மாற்றத்திற்கான குறியீடாகின்றது. சாதிப்பிரச்சினை யாழ் நிலத்திற்குள் தீப்பிழம்பாக கொதித்துக் கொண்டிருந்த காலத்திலேயே பிரளயம் என்ற பிரதி எழுத்துருவம் பெற்றது. வண்ணான் சமூகம் தன்னுடைய அடிமை குடிமை நிலையை உடைத்தெறிய துடிக்கும் உணர்வுகளே கதைக்கான பாடுபொருள். கல்வி அவர்களது முன்னேற்றத்திற்கு கால்கோளாகின்றது. இதன் மறுபக்கத்தில் உயர்சாதி எனப்படும் இளைய தலைமுறையினரின் ஒருசாராரில் உருவான உணர்வு மாற்றமும் மனிதத்தன்மையும் பொதுமை நோக்கமும் அச்சமூகம் (வண்ணான்) உயர்ந்துநிற்க ஊக்கியா கின்றது. இதனால் சமூகத்திற்குள் மாற்றம் (பிரளயம்) பிரவகிக்கின்றது. "இந்த வரலாற்றுப் போக்கு வண்ணார் பண்ணைக் கிராமத்தின் ஒரு சலவைத் தொழிலாளி குடும்பத்தின் கதையாக விரிகிறது (2007: 40).

சாதிப்பாகுபாட்டினை நீக்குவதற்கு உடனடி மார்க்கமாக மூன்று சமூக செய்திகளை செஆ முன் வைத்துள்ளார். சாதி ஏற்றத்தாழ்வினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கல்வி வசதி, செல்வ வசதி, தொழில் மாற்ற வசதி ஆகிய மூன்றும் கிடைக்கில் சமூக அந்தஸ்து தாமே கிடைப்பதாக இந்த நாவல்களில் அனுபவபூர்வ மாகச் சித்திரித்துள்ளேன் என்று அவரே கூறியிருக்கிறார். மேலும் செஆவின் வார்த்தைகளிலேயே கூறினால், "பிரளயம் நாவலில் கல்வியாலும் சாதியடிப்படை யல்லாத தொழில் மாற்றத்தாலும் சமூகத்தில் ஏற்படும் மாற்றத்தைக் காட்டியுள்ளேன். அதனால்தான் பிரளயம் நாவலின் முன்னுரையில் ஒரு சமூகத்தின் விழிப்பையும், மாற்றத்தையும் இந்த நவீனம் பேசுகின்றது எனக் குறிப்பிட்டுள்ளேன்" (2000 : 40, 41). செஆ கனவு காண் கின்ற சமூக விழிப்பையும், மாற்றத்தையும் பிரளயம் நாவலின் பாத்திரங்கள் நிகழ்த்திக் காட்டுகின்றன.

5

"கதைமாந்தர்களின் குணநல உருவாக்கம் என்ற வகையிலும் மேற்படி பிரளயம் நாவல் செங்கை ஆழியானின் தனித் தன்மையைப் புலப்படுத்து கின்றது" என்கிறார் பேராசிரியர் வித்தியானந்தன் (2007: 17). வண்ணான் குடும்பம், விதானையார் குடும்பம் என்ற முரண் கொண்ட இரு அடிப்படை யில் பாத்திரங்களின் உரு வாக்கம் அமைந்துள்ளது. பரம்பரைதொழிலாகிய சலவைத் தொழிலைச் செய்கின்ற வேலுப்பிள்ளை, அவனுடைய மனைவியான பொன்னாச்சி, அவர்களது பிள்ளைகள் ராணி, சுபத்திரா, கண்மணி, கனக சிங்கம் என்பவர்கள் கீழ்சாதி என்ற அடையாளத்திற்குரிய பாத்திரங்கள். விதானையார், மகாலிங்கம், வாமதேவன் முதலானவர்கள் உயர்சாதி என்ற அடையாளத்திற் குரிய பாத்திரங்கள். சின்னத்தம்பி போன்ற பாத்திரங் களும் பிரதியில் முகம் காட்டுகின்றன.

செஆவின் கனவுப் பாத்திரம் அல்லது பிரளயம் நாவலில் வெளிச்சமாக்கப்பட்டுள்ள மையப்பாத்திரம் ராணி. அவள் கல்வியால் உயர்நிலையை அடையத் துடிப்பவள். வேலுப்பிள்ளை தம்பதியினரின் மூத்த பிள்ளை. பாரம்பரிய அடிமை குடிமை நிலையிலிருந்து விலகிச்செல்ல கல்வியை ஒரு வலுவான கருவியாக பயன்படுத்த முயற்சிக்கின்ற பாத்திரமே ராணி. ஆரம்பத் தில் அவளது உணர்வோட்டத்தை ஏற்க மறுத்த குடும்பம் அவளது உணர்வுகளைப்புரிந்து வரவேற் கின்றது. ராணி செஆவின் பின்வரும் கூற்றுக்கு செயல் வடிவம் கொடுப்பவளாக ஆக்கப் பட்டிருக் கிறாள்.

"சாதிப் பாகுபாட்டால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுக்கப்பட்ட உரிமைகள் மற்றவர்களால் வழங்கப்படு வனவல்ல. அவர்களால் எடுக்கப்படுபவை. தொழில், செல்வம், கல்வி ஆகியவற்றால் வஞ்சிக்கப்பட்டவர்கள் அவற்றினை எவ்வாறு பெற்றுக்கொள்ளலாம் என்பது என் நாவல்களின் செய்திகள். என் இவ்வகை நாவல் களின் பாத்திரங்கள், சமூகத்தில் தம்மை உயர்த்திக் கொள்ளும் மார்க்கத்தை யதார்த்தப் பூர்வமாகக் காண்பிப்பார்கள். கல்வி, செல்வம் என்பவற்றி னால் சமூகத்தில் உயர்ந்துள்ளவர்களைப் பார்த்து அசூசைப் பட்டு, அவர்களைத் தம் மட்டத்திற்கு வீழ்த்தி மகிழ்வு காண விழைபவர் களல்லர். கல்வி, செல்வம், தொழில் என்பனவற்றினைப் பெற வழிகண்டு, அவர்கள் மட்டத் திற்குத் தம்மை உயர்த்த நினைப்பவர்கள்" (2000: 41).

பிரளயத்திற்குள் நிகழ் கின்ற கீழ்காணும் சம்பவம் இதற்கு எடுத்துக்காட்டா கின்றது. பல்கலைக்கழகம் செல்லும் துடிப்புடன் படிக் கின்ற ராணியை, அவளது வகுப்பு சகமாணவி மனோன் மணி உயர்சாதிக்கே உரிய வீராப்புடன் மட்டம் தட்டு கிறாள். "உவ எங்கடை கட்டாடியின்ரை மோள் தான்... அவவுக்கு பெரிய எண்ணம்..." இத்தகு உதாசீன வார்த்தைகளால் ராணி நிலைக்குலைந்துப் போக வில்லை. அதற்கான எதிர்மொழி இவ்வாறு வெளிப்படு கின்றது: "ஒரு வண்ணாத்தி கல்வியிலே உன்னிலும் உயர்ந்தவள் என்பதை நிரூபிக்கிறேன் பார்"

வேலுப்பிள்ளை தன்னுடைய பிள்ளைகள் கல்வி யின் மூலமாக சமூக அந்தஸ்து பெறவேண்டும் என்ற நிலைப்பட்டில் இயங்குபவர். இதற்கு உயர் சாதியினரின் இழிவு படுத்தல்கள் காரணமாகின்றன. உடையார் குடும்பத்தினருக்கு மட்டுமே துணிதுவைத்து வந்த காலத்தில், உடையாரைக்கண்டு தோள் சால்வையை எடுத்து மரியாதை செய்யவில்லை என்பதற்காக, உடையார் வேலுப்பிள்ளையின் மார்பில் பிடித்து தள்ளி அதிகாரத்தோடு திட்டுகிறார். இந்த அடிமை சங்கிலியை உடைத்தெறிவதற்கு ஒரே வழி தன்னுடைய பிள்ளைகள் படிப்பதுதான் என்ற முடிவோடு, தன் பிள்ளைகள் படித்து முன்னேற ஊக்கப்படுத்து கின்றார் வேலுப்பிள்ளை.


உயர்சாதியை சேர்ந்த வாமதேவன் ராணியின் தங்கை சுபத்திராவை காதலித்து ஏமாற்றுகிறான். ஆனால் தமையன் (வாமதேவன்) செய்த துரோகத் திற்குப் பிராயச்சித்தமாகத் தன்னையே கொடுக்க முன் வரும் தம்பி மகாலிங்கம் வாசகர் நெஞ்சை விட்டகலாத பாத்திரமாகிறான். "ஆரிடையும் இல்லை அம்மா... என்னிடம் தான்... சுபத்திரா என்னிடம் தான் பிள்ளை வாங்கினாள்" என்று மகா லிங்கம் கூறுவதன் மூலம் செஆவின் இலட்சியக் கனவை பிரதிபலிக்கிறான். ஆசிரியத் தொழில் செய்கின்ற மகாலிங்கம் நேர்மை யானவன். மனிதர்கள் அனைவரும் சமம் என்ற கோட்பாட்டின் படி இயங்கு பவன். நியாயத்தின் பக்கமாக சார்ந்து நிற்பவன். இப்பாத்தி ரம் பற்றிய நா.சுப்பிரமணி யத்தின் அவதானம் இது: "உயர் சாதியினர் எனப்படுவோ ரால் தாழ்த்தப்பட்டோருக்கு இழைக்கப்படும் கொடுமை களுக்குப் பிராயச்சித்தமாகத் தன்னையே தியாகம் செய்துகொள்ள முன்வரும் மகாலிங்கம் என்ற பாத்திரம் உயர் சாதி இளைய தலைமுறையின் ஒரு சாரார் மத்தியில் நிலவிய மனிதாபி மானம், பொதுமை நோக்கு என்பனவற்றைப் பிரதிநிதித் துவப்படுத்தி அமைகிறது. கதை முடிவில் நெஞ்சத்தை விட்டகலாமல் நிலைத்து விடுகின்றது (2007: 40).

ராணி, மகாலிங்கம் போன்ற பாத்திரங்களே சாதி என்ற மகாபாதக வறண்ட நிலத்திற்குள் பிரளயத்தை அல்லது மாற்றத்தை உண்டாக்குகின்ற கோடைமழை!

"கதை மாந்தர்களின் குணநல உருவாக்கத்தில் ஆக்கவிலக்கிய கர்த்தாக்கள் கூடியளவு கவனம் செலுத்த வேண்டுமென்பது எனக்குத் தெரிந்ததே. எனது பாத்திரங்கள் தம் இயல்புடன் வருவனவாகவும் தமக் குரிய பலத்துடனும் பலவீனத்துடனும் நடமாடுபவர் களாகவும் இருப்பர். எனது நாவல்களில் முரண் நிலைப்பாத்திரங்களை அறிமுகம் செய்வதில் எனக்குப் பிடித்தம் அதிகம்" என்ற செஆவின் எண்ணங்களுக்கு உயிர் கொடுக்கின்றன பிரளயத்தின் பாத்திரங்கள். ஆயினும் இப்பாத்திரங்களின் உருவாக்கலில் செயற்கைத்தனம் மிகைத்து தெரிகிறது. அப்பாத்திரங்கள் பேசுகின்ற மொழியில் கூட கிழிசல்கள் காணப்படுகின்றன. இதனை தான் பேராசிரியர் நா.சுப்பிர மணியம் "தூரப்பார்வை" என சுட்டுகின்றார்.

6

செங்கை ஆழியானுடைய கதை கூறும் முறைமையில் இருவகைச் சிறப்புக்களை அவதானிக்கலாம் எனக்கூறுகின்ற பேராசிரியர் வித்தியானந்தன் அதனை விரிவாக எடுத்துக் காட்டுகின்றார் ஒன்று அவரது நுணுக்க விவரண முறை. இன்னொன்று சமூகத்தைப் படம் பிடித்து முன்னிறுத்தும் அவரது மொழிநடை. புனை கதைத் துறையில் நுணுக்க விவரணம் என்பது சமுதாயத்தின் பண்பாட்டம்சங்களைப் பதியும் முயற்சியாகும். பழக்க வழக்கங்கள், சூழ்நிலைகள் முதலியவற்றை அவற்றின் மண்ணின் மணத்துடன் காட்டுந்திறனே நுணுக்க விவரணத்திற்கு அடிப்படையாகும். இத்திறன் செங்கை ஆழியான் அவர்களிடம் நிறையவே காணப்படுகின்றது. இத்தகைய விவரணங்களுக்கு அவர் கையாளும் மொழிநடையும் மிகத்துணை செய்வதாகவுள்ளது. நகைச்சுவையும் இரசனையுணர் வும் இழையோடும் இவரது கதை சொல்லும் முறைமை யிலே யாழ்ப்பாணத்துப் பிரதேச மொழி வழக்கின் வளத்தை நன்கு அவதானிக்க முடிகிறது (2007: 18).



குறுநாவல்கள், நாவல்கள், சிறுகதைகள், நாடகங்கள் என்பனவற்றோடு அவருடைய ஆற்றல்கள் நின்று விடவில்லை. இலக்கிய உலகில் செங்கை ஆழியான் என்ற பெயர் எவ்வளவு தூரம் பரவலாகப் பேசப்படுகின்றதோ, அவ்வளவுக்கு கல்லூரி மாணவர்கள் மத்தியில் பூமி சாத்திரப் பாடநூல்களுக்காக குணராசா என்ற பெயர் புகழோங்கி யிருக்கின்றது. தமிழில் பூமி சாத்திரத்தை இலகுவாக்கியவர் குணராசா என்பது மறுக்க முடியாத உண்மை.

- கனக. செந்திநாதன் -

செ.ஆ தமிழ் மொழியை லாவகமாக கையாளும் திறன் பெற்றவர். யாழ்ப்பாண பிரதேச மொழியை உயிரோட்டத்துடன் கையாளத் தெரிந்தவர். எல்லோரும் வாசிக்கும் லேசான மொழியை கையாளுபவர். வாசிப்பவர்களுடன் ஊடாடி, தன்னுள் ஈர்த்துக் கொள்ளும் ஒரு மொழியை செ.ஆ தன்னுடைய ஆக்கங்களில் பயன்படுத்தியிருக்கிறார். இதனை பிரளயம் நாவலிலும் அவதானிக்க முடிகின்றது.

பின்வரும் விமர்சனக்கருத்து இவ்விடத்தில் சுட்டிக்காட்டப்பட வேண்டியது. "வாசகரைப் பிரதியுள் உள்வாங்குவதற்கு பெரும்பாலான ஈழத்து நாவல்கள் பின்னிற்கின்றன. தமது கதைகளைச் சொல்லி முடித்துவிட வேண்டுமென்ற அவாவில் சொல்லப் படுவது போன்று அமைந்திருப்பதை அவதானிக்கலாம். அவற்றால் வாசகருடன் ஊடாடவோ அல்லது வாசகரைத் தம்முள் உள்வாங்கவோ முடிவதில்லை என்பது அவற்றின் மிகப் பெரும் குறையாகும். தீவிர இலக்கியகர்த்தாக்களால் வெகுஜன எழுத்தாளர் என்று கூறப்படும் செங்கை ஆழி யான் இத்தடையைக் கடந்து தனது நாவல்களைப் படைத்துள்ள போதிலும், தீவிர எழுத்தாளர்கள் இவ்விடயத்தில் திண்டாடுவதைத் தொடர்ச்சியாக அவதானிக்க முடிகின்றது" (இணையம்).

"செங்கை ஆழியானின் எழுத்து நடையில் ஒரு வசீகரமுண்டு. ஆனால் அவர் எழுதியவற்றை ஒரு முறையாவது திருத்தி எழுதுவதில்லை. அது ஒரு தேவையாகவும் அவருக்குத் தெரிவதில்லை. பிறந்த மேனியுடனும் பெற்றவரின் – First Dtatt – ஆக இருக்கும் ஆக்கங்களையே நமக்குத் தருகிறார். இதை அறியும் போது ஆச்சரியமாக இருக்கின்றது. அழகு செய்யாமலேயே "காட்டாறு" போன்ற நாவலை அவர் தர முடியுமானால் மேல் நாட்டு இலக்கிய மேதைகள் 10–15 தரம் திருத்தியமைப்பதுபோல இவர் ஓரிரு தடைவை யாவது திருப்பி எழுதினால், இவருடைய படைப்புகளின் ஐசுவரியம் எத்தகையதாக இருக்கும் என எண்ணி அங்கலாய்க்க வேண்டியுள்ளது" என்பது செ.சிவஞான சுந்தரத்தின் (நந்தி; 2007: 89) கணிப்பாகும்.

"இந்நாவல் (பிரளயம்) பற்றிய முன்னைய கணிப்பில் இதில் வரும் சலவைத் தொழிலாளியின் குடும்பம் அதற்கான இயல்பான தன்மைகளுடன் சித்தரிக்கப்படவில்லை என்றும், ஒரு தூரத்துப் பார்வையே தெரிகிறது என்றும் காட்டியிருந்தேன். ஆசிரியர் இவ்விரண்டாம் பதிப்புக்காக திருத்தி எழுதிய வேளையில் அக்குறைகளைக் களைய முயன் றுள்ளமை தெரிகிறது. முக்கியமாகப் பாத்திரங்களின் உரையாடலில் பிரதேசப் பேச்சு வழக்கினைப் பயன்படுத்துவதில் தனிக்கவனம் செலுத்தியுள்ளார். இது வரவேற்கத் தக்கது" என்கிறார் நா.சுப்பிரமணியம் (2007: 42).

திருத்தி எழுதா படைப்புக்களில் குறை காணப்படுகின்றமையை இவ்விரு கருத்துக்களும் நிரூபிக்கின்றன. அ.யேசுராசா "குறிப்பேட்டிலிருந்து" (2007: 100, 101) நூலில் பின்வருமாறு சொல்கிறார்: "ஒரு சீரியஸ் எழுத்தாளராகப் "பாவனை" பண்ணுகிற போதும், வெறும் "ஜனரஞ்சக எழுத்தாளராகவே" இருக்கிற செங்கை ஆழியான்... "நான் எழுதியவற்றை ஒரு முறையாவது திருத்தி எழுதுவதில்லை" என்று பொறுப்பில்லாமல் சொல்கிறார்."

அ.யேசுராசாவின் கருத்தினை, ராஜ மார்த்

தாண்டன் (காலச்சுவடு; 2008 பிப்ரவரி) இவ்வாறு விமர்சிக்கின்றார். "நான் எழுதியவற்றை ஒரு முறை யாவது திருத்தி எழுதுவதில்லை என்று பொறுப்பில் லாமல்" செங்கை ஆழியான் சொல்வதாகக் குறை கூறு கிறார் யேசுராசா. ஒரு படைப்பாளி அவ்வாறு கூறுவதை அவனது படைப்பின் மீதான தன்னம்பிக்கை சார்ந்த நிலைப்பாடாகவே கொள்ள வேண்டும். புதுமைப் பித்தனும் இதுபோல் கூறியுள்ளார். அதற்குத்தக, புதுமைப்பித்தனின் சிறுகதைகள் பலவும் அவரது தன்னம்பிக்கைக்குச் சாட்சியங்களாகவும் நிற்கின்றன. ஆனால், செங்கை ஆழியானின் நாவலுக்கு யேசுராசா எழுதியுள்ள மதிப்புரையைப் படிக்கும்போது அவரது விமர்சனத்தின் நியாயத்தையும் புரிந்துகொள்ள முடிகிறது."

7

செங்கை ஆழியானை நான் வினைத்திறன் மிக்க கலைஞனாகவே கணிக்கிறேன். அவருடைய ஆக்கங்களை முன்னர் நான் படித்த போது, அவரைப் பற்றிய ஒரு படிமம் என்மனதில் படிந்தது. வாசகர்களைக் கவரவல்ல கதைசொல்லும் பாணி - ஆங்கிலத்தில் இத்தன்மையை Readability என்பார்கள். அவருக்குக் கணிசமான வாசகர் வட்டத்தை உரு வாக்கிக் கொடுத்திருக்கின்றன (ஏ.ஜே.கனகரத்தினா; 2007: 64).

செங்கை ஆழியானின் (2012) இன்னுமொரு நேர்காணலுடன் இதனை முடித்துக் கொள்கிறேன்.

கேள்வி : நீங்கள் பல நாவல்களையும் சிறுகதை களையும் எழுதிக் குவித்துள்ளீர்கள். இது இறைவனின் கொடை எனக் கருதுகிறீர்களா?

பதில்: ஆம். அப்படியும் கொள்ளலாம். உண்மையில் நிறைய வாசிப்பவன் நான். மற்றவர் என்ன சொல்கிறார் எனப் புரிந்து கொள்வதற்கு வாசிப்புப் பழக்கம் பெரிதும் உதவுகிறது. அத்துடன் முயற்சியும் வேண்டும். ●

தெய்வமாகிய என் குருவிற்கு!

"வணக்கம்"

தாங்கள் சென்ற சொர்க்கலோகத்தின் சரியான முகவரி தெரியாததால் காலம் தாழ்த்தி வருகின்ற இப்பக்தனின் கடிதத்தினை ஏற்பீராக!

உங்கள் மீது எனக்கு பாசமில்லை-பக்தியில்லை உங்கள் மீது ஒரு மதிப்பு- உங்கள் அறிவின் மீது ஒரு வியப்பு. இரண்டும் தவிர வேறில்லை. நீங்கள் நிகழ்த்தியிருப்பது எத்தனை பெரிய சாதனை. நீங்கள் அங்கும் எழுதாமல் இருக்கமாட்டீர்கள் என்று என் மனம் சொல்கின்றது. இது வரை எத்தனை சிறுகதைகள், நாவல்கள், புவியியல் நூல்கள்- பொதுக்கட்டுரைகள் என எழுதிக் குவித்திருப்பீர்கள். பிரதிகள் எனக்கு கிடைக்காது என்பது எனக்குத் தெரியும் இருந்தும் உங்கள் எழுத்தைப்படிக்கத் துடிக்கின்றது என் மனம். உங்களுக்குத் தன்னம்பிக்கை மிகுதி- தைரியம் மிகுதி. எத்தனை அறிவு, எத்தனை விரைவு, எத்தனை தாகம், எத்தனை தேடல். இன்னொரு முறை இப்படியொரு சாதனையை எவரேனும் நிகழ்த்த முடியாது என்று நிமிர வைத்ததே உங்கள் சாதனை. நீங்கள் பழைமையின் ஜாதகமா - புதுமையின் கம்யூட்டரா என்ற குழப்பங்கள் எனக்குள் கொடிகட்டுவதுண்டு. இலக்கியத்தில் உங்களோடு என்னால் ஓடி வரமுடியாது தான் ஆயினும் சமுர்த்திரமாய்ப் பொங்கும் உங்கள் அறிவைப் பார்த்துக் கரையில் நின்று கைதட்டிக் கொள்கின்றேன். சுழித்துக் கொண்டோடிய இலக்கிய நதியில் குதித்துக் கொண்டோடியவர் நீங்கள். தத்துவம் போட்டுக் கொடுத்த பாதையில் வாழ்க்கைத் தேரை ஓட விடாமல் வாழ்க்கை போட்டுக் கொடுத்த பாதையில் தத்துவத் தேரை ஓடவிட்டவரல்லவா. பலரது வெற்றிகளுக்குக் கூட விலாசம் இல்லை. ஆனால் உங்களின் தோல்விக்குக் கூடச்சரித்திரம் இருக்கிறது. "நீர்க்குமிழி" யை தாஜ்மகால் ஆக்கிய சிற்பி. இது தான் உங்கள் விழாத புகழுக்கு வேலியாயிருக்கிறது. இலக்கியப் பசி உள்ளவர்களுக்கு மட்டுமே வைக்கப்படும் பந்தியாக இருந்து விடக்கூடாது. பாமரனுக்கும் அதில் அந்நியம் இருக்க வேண்டும் என்று எழுதினீர்கள். இலைகள் ஆடலாம், அசையலாம், சலசலக்கலாம். நான் வேராக இருக்கவே விருப்பம் என்று இருந்தீர்கள். அந்த மனம் என் வாக்கிய வலைகளுக்கு வசப்படாது. ஒவ்வொரு விருட்சமும் ஒரு விதைக்குள்ளிலிருந்து தான் வந்திருக்கின்றது. பாதை போட்டுக்கொண்டே பயணம் செய்யவும். பயணம் செய்து கொண்டே பாதை போடவும் உங்களால் முடிந்திருக்கின்றது. எப்படி வந்தது இந்தத் தெம்பு? உங்களிடம் நான் கற்றுக் கொண்டது உங்கள் நிதானம்.

பூகம்பம் வந்தால் கூட வீட்டைப் பூட்டிவிட்டு வெளியேறும் நிதானம். உங்கள் நிதானம். உங்களை பலரும் பலவாறு உயர்வாகப் பேசுவார்கள், நீங்கள் அதிகம் பேசமாட்டீர்கள். அலைகள் அடித்துவிட்டுப் போகட்டுமே! பாறை பதிலா சொல்லப் போகிறது!


நீங்கள் பாறை.

ஞானப்பாறை.

நயினை-கி.கிருபானந்தா


செயலாளர்

யாழ் இலக்கிய வட்டம்



# செங்கை ஆழியானின் புனைவும் வாழ்வும்

■ க.சட்டநாதன்



Handsome என்ற ஆங்கிலப் பதத்தின் அர்த்த முழுமையையும் விகசிப்பையும் அவரது உருவப் பொலிவு எப்பொழுதும் நமக்குக் காட்டி நின்றது. அவர் இளமையில் மிகவும் வசீகரம் மிக்கவராக இருந்தார் முதுமையிலும் அந்த அழகு அவரை விட்டு விலகவில்லை.

வண்ணை - கலட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட செங்கை ஆழியான், நல்ல குடும்பத்தில் உதித்த நல்ல மனிதர். இவரது இளைய தமையனாரான புதுமைலோலன் அவர்கள் இலக்கிய ஆர்வலரும் சிருஷ்டியாளருமாய் இருந்தமையால் ஆழியானுக்கு வளமான இலக்கியச் சூழலும் வாழ்வும் இயல்பாக அமைந்தது. இளமையில் அவரது சின்னண்ணரின் வழிகாட்டல், பாடசாலைக் கல்விக்கு அப்பாற் சென்று, இலக்கியம் பயில அவருக்குப் பெரிதும் உதவியது.

பாடசாலையில் பயின்றபோது, யாழ் இந்துவின் புகழ்பூத்த தமிழ் ஆசிரியர்களான க.சிவராமலிங்கம், வி.ஏரம்பமூர்த்தி, கே.எஸ்.சுப்பிரமணியம் ஆகியோரின் கற்பித்தல் தமிழ் மீதான இவரது தீராக்காதலை தீவிரப்படுத்தியது. பெரும்பான்மையான சிருஷ்டியாளர்கள் போல வாசிப்பின் மூலம் தனது தேட்டத்தையும் வல்லபத்தையும் பெற்றுக் கொண்ட இவர் பதின்ம வயதிலேயே எழுதத் தொடங்கினார்.

இவரது வாசிப்புத்தரம் பற்றி நிரம்பிய சந்தேகங்கள் எனக்கு உண்டு; அது பற்றிப் பின்னர் பார்ப்போம்.

இந்துக் கல்லூரியின் நன்மாணாக்கர்களில் ஒருவராகத் திகழ்ந்த இவர், எழுத்துப் பணிக்குப் புறம்பாக யாழ் மண்ணின் சிறப்பான கல்வியாளராகவும் நிர்வாகியாகவும் திகழ்ந்துள்ளார்.

இவருடைய பல்கலைக்கழக வாழ்வும் அரிதிலும் அரிதாய் அமைந்ததை நாம் சொல்லித் தெரிய வேண்டுமென்பதில்லை பேராதனைப் பல்கலைக்கழகத்தின்

தமிழ் ஆசான்களான, வி.செல்வ நாயகம், சு.வித்தியானந்தன், ஆகியோர் இவருக்குத் தமிழ் கற்பித்தார்கள். அதுமட்டுமல்ல, கலாநிதிகளான கா.சிவத்தம்பி, க.கைலாசபதி ஆகியோரும் இவரது தமிழார்வத்தையும் சிருஷ்டி வல்லபத்தையும் துலங்க வைப்பதில் தம்பங்கை நல்கியுள்ளனர்.

புவியியல் பாடத்தை கற்கை நெறியாகக் கைக்கொண்ட போதும் – தமிழ் மீதான இவரது பற்றுதலும் பிரியமும் அவர் உயிர் பிரியும் வரை நிலைத்து நின்றது.

பல்கலைக்கழகத்தில் பட்டதாரி மாணவனாக இருந்த காலத்திலேயே இவர் சிறுகதை எழுதுவதைத் தொடர்ச்சியறாது கைக்கொண்டார்.

தான் எழுதுவதோடு நில்லாது, தனது நண்பர்களையும் எழுதுவதற்கு ஊக்குவித்தார். அத்துடன் அங்கிருந்த காலத்தில் தான் செம்பியன் செல்வன், க.நவசோதி ஆகிய நண்பர்களுடன் இணைந்து, பல்கலைக்கழக வெளியீடு எனும் பெயரில் ஓர் அமைப்பை உருவாக்கினார். அந்த நிறுவகத்தின் மூலம் கதைப்பூங்கா, விண்ணும் மண்ணும், காலத்தின் குரல் எனும் சிறுகதைத் தொகுதிகளை வெளிக் கொணர்ந்தார். பின் நாட்களில் மிகப் பிரபலங்களாக முகிழ்த்தெழுந்த எழுத்தாளர்கள் பலர் இச்சிறுகதைத் தொகுதிகளில் தமது ஆக்கங்களைத் தந்தவர்கள் தான்!

பேராதனைப் பல்கலைக் கழகத்திலிருந்து 1964 இல் புவியியல் சிறப்புப்பட்டதாரியாக வெளியேறிய இவர், முதுகலைமாணிப் பட்டத்தையும்(1984) கலாநிதிப் பட்டத்தையும்(1991) யாழ் பல்கலைக் கழகத்தில் பெற்றார்.

இவர் வாழ்வின் ஆரம்ப நாட்களில், பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பயிற்சியாசிரியராகவும் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் இரண்டாண்டு காலம் உதவி விரிவுரையாளராகவும் இருந்தார். ஆறு ஆண்டுகள் கொக்குவில் இந்துக்கல்லூரியில் பட்டதாரி உதவியாசிரியராகக் கடமையாற்றினார். சம காலத்தில் கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலையில் வருகைதரு விரிவுரையாளராகப் பணி செய்தார். பின் நாட்களில் வெளிவாரிப்பட்டப் படிப்பு மாணவர்களுக்கு விரிவுரையாளராகவும் இருந்து உதவியுள்ளார்.

இவர் இக்காலத்திலும், பின்னரும் எழுதி வெளியிட்ட ஐம்பதுக்கு மேற்பட்ட புவியியல் நூல்கள் இற்றைவரை உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு துணை நூலாக பயன்படுத்தப்படுகின்றன. புவியியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் இந்நூல்கள் உசாத்துணை நூல்களாகப் பயன்தருகின்றன. இவ்வகையில் அவர் அவ்வாசிரியர்களுக்கு தோன்றாத்துணையாக இருந்து வருகிறார். அத்தோடு, நமது நாட்டில் ஆரோக்கியமான ஒரு புவியியல் சமூகத்தைக் கட்டி எழுப்புவதற்கு ஏதுவாயும் அவரது முயற்சி இருந்திருக்கிறது.

இவர் உயர்தர வகுப்புப் பரீட்சைகளுக்கும் நிர்வாகசேவைப் பரீட்சைகளுக்கும்(S.L.A.S, S.L.E.S) உகந்த பொது அறிவு, பொது உளச்சார்பு சார்ந்த நூல்களையும் எழுதியளித்துள்ளார்.

*1971* ஆம் ஆண்டு இலங்கை நிர்வாகசேவைப் பரீட்சையில் சித்திபெற்று, பல்வேறு இடங்களில் – குறிப்பாக வன்னிப்பிரதேசத்திலும் பின்னர் யாழ்ப்பாணத்திலும் நிர்வாக சேவையில் – பலதரப்பட்ட நிலைகளில் உத்தியோகத்தராகப் பணியாற்றியுள்ளார்.

இவர் வன்னி மாவட்டத்திலும், யாழ் மாவட்டத்திலும் கிழக்கில் கிண்ணியாவிலும் காரியாதிகாரியாக, உதவி அரசாங்க அதிபராக, பிராந்திய ஆணையாளராக, யாழ்.பல்கலைக்கழகப் பதிவாளராக, யாழ் மாநகர ஆணையாளராக, பல்வேறுபட்ட பணிகளில் தனது அடையாளத்தைப் பொறித்துள்ளார்.

Handsome என்ற ஆங்கிலப் பதத்தின் அர்த்த முழுமையையும் விகசிப்பையும் அவரது உருவப் பொலிவு எப்பொழுதும் நமக்குக் காட்டி நின்றது. அவர் இளமையில் மிகவும் வசீகரம் மிக்கவராக இருந்தார் முதுமையிலும் அந்த அழகு அவரை விட்டு விலக வில்லை.

Fair sex என்று கூறப்படும் பெண்களிடத்து இவர் காண்பித்த ரசனை மிக்க பிரீதியும்; அதே சமயத்தில் இவர்பாலான அவர்களது இனிமை ததும்பும்இசைவும் இவரிடம் ஓரளவு பட்டும் படாமலுமிருந்த உண்மைகளாகும்.

என்னதான் இது விஷயத்தில் இவரைப்பற்றிக் கொட்டிச் சிந்தப்பட்டபோதும் – நான் அறிந்த அளவில், அருமருந்த கணவராகவும் குடும்பத்தலைவராகவும் – மரணபரியந்தம் இருந்தார் என்பதே உண்மையானதாகும்.

காதலித்துக் கைப்பிடித்த தமது அருமை மனைவி கமலாம்பிகையுடன் நிறை வாழ்வு வாழ்ந்த இவர், மூன்று பெண் பிள்ளைகளின் தந்தையுமாவார். அப்பிள்ளைகளுக்கு உரிய வயதில், சிறப்பான முறையில் வதுவை செய்து வைத்துள்ளார். இவரது மகள்மாரும் மருமக்களும் கல்வி கேள்விகளில் சிறந்தவர்களாக நல்வாழ்வு வாழ்கிறார்கள்.

பேரப்பிள்ளைகள், உற்றம் சுற்றம் என்று யாவரிடத்தும் தளரா அன்பு பேணி வாழந்த இவர், நண்பர்களென்று வரும்போது மனைக் கெழீஇ மன்றில் பழிக்கும் இயல்பினரல்ல. அதுவும் குறிப்பாக இலக்கிய நண்பர்களென்றால் அவர்களைப் பேணுவதிலும் கனம் பண்ணுவதிலும் இவர் எப்பொழுதும் பின்நின்றவரல்லர்.

என்னிடத்திலும் எனது எழுத்திலும் மிகந்த ஈடுபாடும் அக்கறையும் உடையவரிவ ரென்பது எனக்குத் தெரியும். இத்தகைய உயர்வான மனப்பதிவே இவரது ஏனைய நண்பர்களிடமும் இலக்கிய நேசர்களிடமும் இவர் பற்றி இருந்திருக்கும் என முழுமையாக நம்பலாம்.

சமூகப்பணிகள் என்று வரும் போது, குறிப்பிடும்படியான பல சேவைகளை இவர் ஆற்றியுள்ளார்.

யாழ் இலக்கிய வட்டம், இலங்கை இலக்கியப் பேரவை ஆகியவற்றின் தலைவராக இருந்து

இவர் ஆற்றிய பணிகள் மகத்தானவை. வருடம் வருடந்தோறும் நல்ல நூல்களைத் தேர்வு செய்து, அவைகளுக்கு விருது வழங்குவதற்கான அவரது முயற்சிகள் குறிப்பிடத்தக்கனவாகும். அத்துடன் அரியாலையூர் கவிஞர் வே. ஐயாத்துரை விருது, நாவேந்தன் விருது ஆகியவற்றிற்கும் இவரது உசாவுகையும் உதவியும் மெச்சத்தக்கன. இவை தவிர இலக்கிய ஆய்வாளர்களுக்கு வழங்கப்படும் இலக்கிய முன்னோடிகளில் ஒருவரான - சம்பந்தன் விருது, கனகசெந்திகதா விருது ஆகியவற்றின் இணைப்பாளராகவும் இவர் இருந்து வந்துள்ளார். இவற்றுடன் இவர் பெரிதும் விரும்பி வழிபடும் கலட்டி எச்சாட்டி மகாமாரி அம்மன் திருத்தலத்தின் தலைவராகவும் இருந்து ஆற்றிய பணிகள் அவரது ஆன்மீகச் செழுமையைப் பறைகொட்டுவன!

அவர் இல்லாத இன்றைய நிலையில் இம்முயற்சிகளை முன்னெடுப்பதற்கு யார் உள்ளார்கள்? இக்கேள்விக்கு விடை காண்பதென்பது சிரமமான காரியந்தான்.

சமூக மனிதனாக இவரது நடத்தை ஒரு சிலரால் விமர்சிக்கப்பட்டபோதும் இவரது வாழ்விலும் சில ஏற்ற இறக்கங்கள் இருந்தபோதும் - பலவீனங்களை மீறிய பலம் இவரை வாழ்நாள் முழுவதும் வழிநடத்தி வந்துள்ளமையை நாம் கவனம் கொள்ளலாம்.

இனி அவரது இலக்கியப் பணிபற்றிச் சிறிது பதிவிடலாம் என நினைக்கின்றேன்.

நான் ஏலவே கூறியது போல இவரது சின்னண்ணரான புதுமைலோலனும் இந்துவின் தமிழ் ஆசிரியர்களும் பேராதனைப் பல்கலைக்கழக பேராசான்களுமே இவரது இலக்கிய வாழ்க்கைக்கு வழி சமைத்துக் கொடுத்தவர்களில் முதன்மையானவர்கள்என்பதுதெளிவு.

இவரை - இவரது எழுத்தைத் துல்லியமாகப் படித்த வாசகனாக என்னை நான் பார்க்கவில்லை. எனது பார்வைக்குக் கிட்டிய இவரது படைப்புகளை மட்டுமே நான் வாசித்திருக்கிறேன். இதனை அடிப்படையாகக் கொண்டே எனது கருத்துக்கள் அமையும்.

அதற்கு முன்பாக இன்னொன்றையும் நான் கூற வேண்டும். நவீன புனைகதையொன்று வரும்போது அதில் அதிக பரிச்சையம் கொண்டவராகத் தன்னை இவர் இனங்காட்டிக் கொள்ளவில்லை. உலக, இந்திய, தமிழ் இலக்கியம் என்ற அளவில், உன்னதப் படைப்பாளிகள், அவர் தம் படைப்புக்கள் பற்றி அவர் பேசி நான் கேட்டதில்லை. தொட்டம் தொட்டமான வாசக அனுபவம் இவ்வகையில் அவருக்கு இருந்திருக்கக் கூடும்.

ஒரு சமயம், ஜெயமோகனது "விஷ்ணுபுரம்" நாவலைப்பற்றிக் கூறியபோது "படிப்பதற்கு சிரமமாக இருக்கிறது. இலகுதன்மையற்றது. சில இடங்கள் இருண்மையாகவும் இருக்கிறது. ஏன் இப்படியெல்லாம் எழுதுகிறார்?" என்று குறைப்பட்டுக் கொண்டார். அவரது இக்கருத்து எனக்கு ஏமாற்றம் தருவதாகவே இருந்தது. பல்லுக்கு நோகாது பழம் சாப்பிடும் பேர்வழி எனமட்டும் அப்பொழுது நினைத்துக் கொண்டேன். இவரது வாசிப்பும் ரசனையும் இந்தத் தரத்தில் அமைந்தவைதானா? வாசிப்பு மட்டுமல்ல, எழுத்தென்று வரும்போது இவர் எதுவித மனத் தயக்கமும் இல்லாமல் ஜனரசிப்புக்குரிய எழுத்தாளராகவே தன்னைத் தகவமைத்துக் கொண்டுள்ளமை தெரிகிறது. இது ஒரு வகையில் சுய பிரக்ஞையுடன் முன்னெடுக்கப்பட்ட செயல்தான்! இருப்பினும் இவருடைய எழுத்தில் உள்ள சிறப்பம்சங்கள் தொட்டுக்காட்டப்படவேண்டியவை.

குறிப்பாக, இவரது எழுத்து நடை தெளிந்த நீரோடை போன்றது. எளிமையானது. சரளமானது. இது வாசகனுக்கு எதுவித சிரமத்தையும் தருவதில்லை. புது வகையான இலக்கிய உத்திகளைக் கைக்கொண்டு அவர் தடுமாறியதை நான் எச்சந்தர்ப்பத்திலும் கண்டதில்லை. நான் இப்படிக் கூறுவதால், அவர் புதிய முறை எழுத்துக்களையும் போக்குகளையும் அறிந்து வைத்திருக்கவில்லை என்று ஆகி விடாது. அத்தகைய எழுத்துக் களின் போதியவு பிரக்ஞை அவரிடம் இருந்திருக்கிறது. அதனை நிரூபிப்பது போல அவரது பிந்தைய படைப்புகள் - குறிப்பாக சில சிறுகதைகள் - வெளிவந்துள்ளன. இக்கதைகள் பரவலாக அறியப்படவில்லை என்பது தான் உண்மை.

இவரது படைப்புக்களில் சரித்திர நாவல்களும் நகைச்சுவை நாவல்களும் (ஆச்சி பயணம் போகிறாள், முற்றத்து ஒற்றைப் பனை, கொத்தியின் காதல்) ஓரளவு நன்றாக வந்துள்ள போதிலும் என்னை இவை பெரிதும் கவரவில்லை. இதற்கு இவ்வகையில் நாவல்களில் எனது நாட்டம் அதிகம் இல்லாமல் இருப்பதும் ஒரு வகையில் காரணமாய் இருக்கக் கூடும்.

சிறுகதை கவிதைக்கு மிக அண்மித்த வடிவம் எனும் அபிப்பிராயம் உண்டு. கடின உழைப்பும் சொற்சடைவில்லாத மொழியும் இதற்கு வேண்டும். அத்துடன் குறுகிய கால நிர்ணயம் மௌன இடைவெளிகளும் வேண்டும்! இவையாவும் ஆழியானின் கதைகளில் மிக அருந்தலாகவே காணப்படுகின்றன. இவரது பெரும்பான்மையான கதைகள் நேர் கோட்டுப் பாங்கில் அமைந்தவை. கதைகளில் ஓரளவு வளமும் வடிவும் அமைந்துள்ள போதும் வேறுதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. மிக எளிமையான கதைக்கருவை உள்வாங்கியும் வாங்காமலும் அலட்சியமாகக் காட்சிப்படுத்துவதுதான் இவரது கதை சொல்லும் கலை. இருந்தபோதும் இவரது கஞ்சிப் பொழுது, யாழ்ப்பாணத்து இராத்திரிகள், வல்லூறுகள், மண்ணில் சரியும் விழுமியங்கள், யானைக்காடு ஆகியவை நல்ல கதைகள். இக்கதைகள் அனுபவ அடிச்சரட்டை கொண்டவையாகவும் நவீனத் தன்மை உடையனவாயும் உள்ளன.

இவரது சாதனை குறுநாவல்களில் தான் நிகழ்த்தப்பட்டுள்ளது. இவரது அற்புதமான குறுநாவல்களில் முதன்மை இடத்தைப் பெறுவது "யோகாறா". இக்கதை தமிழ்மொழியில் வந்து

மிகச் சிறப்பான கதைகளில் ஒன்றெனத் தயக்கம் ஏதுமில்லாமல் கூறமுடியும்.

இக்கதையை ஆழியான் வெட்டியும் ஒட்டியும் சொல்லியும் சொல்லாமலும் நகர்த்தும் அழகு அற்புதமாக லிபித்துள்ளது. கதை வாழ்வின் அவலங்களையும் போதாமைகளையும் பற்றியுமே பேசுகிறது. சொல்லும் முறையில் கதையில் உள் இழையும் துக்கம் மனதை அழுத்தமாகவே தொடுகிறது.

யொகாறா, அவளது வாத்சல்யம் மிக்க காதலனும் கணவனுமான இஸ்மாயில், மகள் வல்கிசு, ஊரை எளியதுகளைச் சுரண்டிப் பிழைக்கும் ஹாஜியார் அபுதாலிப், வக்கிர உண்வு கொண்டு சங்கக்கடை மனேஜர் ஹமீத், மீன் காரரான சலீக்கின் காக்கா, நல்லிதயம் படைத்தவர்களான மரைக்காயர் காசீம் ஹாஜியார், இமாம்தீன் மாஸ்ரர் என்று அரிய பாத்திரங்கள் உலாவரும் அக்குறுநாவலை ஆசிரியர்தளர்ச்சி ஏதுமில்லாமல் இறுக்கமான பிரதியாகத் தந்துள்ளார்.

இக்குறுநாவல் காதல், காமம், தவிப்பு, ஒழுக்கக்கேடு, விழுமியங்களின் சிதைவு எனப் பலதையும் பற்றிப் பேசுகிறது. அதனை ஒரு Near Masterpiece எனக் கூறலாமா? கூறலாம்.

இவருடைய இன்னொரு நல்ல குறுநாவல் "யானை". இந் நாவலை கவிஞர் சோ. பத்மநாதன் அவர்கள் ஹெமிங்வேயின் "கடலும் கிழவனும்" நாவலுக்கு இணையாகப் பார்க்கிறார். இந்நாவல் அன்புக் காதலி வந்தனாவை மிதித்து, துவைத்து ஏற்றித் தள்ளிய நொண்டி யானையைப் பற்றியது. அத்துடன் அதனைப் பழிதீர்க்கத் துடிக்கும் இளைஞனான செங்காரனைப் பற்றியதுமாகும்.

வர்க்க முரணும் அந்தஸ்து பேதமும் இருந்த போதும் இவ்விரு காதலர்களும் இணையவே செய்கிறார்கள். ஆனால் அவர்களது இனிய பிணைப்பை நொண்டி யானை சிதைத்து விடுவது கொடுமை.

வந்தனா, செங்காரனுடைய காதற் கதை தான் இங்கு, இக்குறு நாவலில் முதன்மை பெற்று விரிவு கொள்கிறது என நான் கூற மாட்டேன். இது உண்மையில் நூற்றுக்கணக்கான மைல்கள் அலைந்து திரியும் யானைக் கூட்டத்தைப் பற்றியதும் அந்தக் கூட்டத்து யானைகளின் நடத்தை பற்றியதும் அவை உலா வரும் யானைத் தடம் பற்றியதுமான கதை தான்! அத்துடன், இக்கதை வன்னி நிலப்பரப்பை அதாவது அதன் Fauna and Flora வை உயிர்த்துடிப்புடன் சித்திரமாக்குவதுடன்; அதன் நில வளம் நீர்வளம் என்பன பற்றியும் படைப்பாளியின் உச்சபட்ச கவனிப்பு ஆற்றலுடன் பதிவு செய்கிறது. நல்ல குறுநாவல். படிக்க வேண்டியதும் கூட.

இவற்றுடன், இவருடைய ஏனைய குறுநாவல்களான அக்கினிக் குஞ்சு, சாம்பவி, யாழ்ப்பாணக் கிராமம் ஒன்று என்பனவும் படித்துப் பார்க்கக்கூடிய படைப்புக்களாகும்.

இக்குறுநாவல்கள் பற்றி எஸ்.பொ. அவர்கள் இவ்வாறு கூறுகிறார்:

"இவை கற்பனை செறிந்த புனைவுகளல்ல, யாழ் மண்ணின் போர்க்காலக் கோலங்களை அன்றேல் அலங்கோலங்களை அச்சாவாகச் சித்திரிப்பன."

இதனை நான் உயர்வு நவிற்சி சார்ந்த கூற்றாகக் கருதவில்லை. ஓரளவு உண்மை சார்ந்த கூற்றாகவே பார்க்கிறேன்.

குறிப்பாக இக்குறுநாவல்களில் "அக்கினிக்குஞ்சு" போர்ச் சூழலை மட்டுமல்ல வர்க்கமுரண், சாதி ஒடுக்கு முறை, சீதனக் கொடுமை பற்றியும் அக்கறை கொள்கிறது.

இவருடைய அனைத்துக் குறுநாவல்களையும் படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைக்க வில்லை. பொருத்தம் கருதி இதனை இங்கு குறிப்பிடுவது எனது கடமை என நினைக்கிறேன்.

இவருடைய நாவல்களின் பக்கம் நமது பார்வையைச் செலுத்தினால்; பிரளயம் ஓரளவு நல்ல நாவல், இந்நாவல் மிகவும் இலகுதன்மையுடன், நல்ல மொழி நடையில் சொல்லப்பட்டுள்ளது. சாதி வெள்ளாளருக்கும் சலவைத் தொழிலாளர்களுக்கும் உள்ள முரண்பாடுகளைக் காட்டும் இந்நாவல் - சாதிப்பாகுபாட்டால் ஏற்படும் பலாபலன்களையும் கூறுகிறது. அத்துடன், வக்கிரமான நடத்தையுள்ள மனிதர்களையும் நல்லியல்புடையவர் களையும் படம் பிடிக்கிறது.

கல்வி அறிவு சாதி முறையை அதன் இழிநிலையை ஒழித்து விடும் என்பதில்லை. சமூக நிலையில் ஒரு நெகிழ்ச்சியை, மெலிதான அந்தஸ்தை அடிநிலை மக்களுக்கு தரவல்லது. ஆனால் அதனையே ஒரு சமூக மாற்றத்துக்கான கருவியாக முன்மொழியும் போக்குச் செங்கைஆழியானிடம் இருப்பது போல் தெரிகிறது. இந்த மயக்கங்களோடு எழுதப்பட்ட நாவல் இது. இந்த நாவல் மட்டுமல்ல, சாதி உணர்வு இவரது பல கதைகளில் இவ்வாறுதான் தர்க்கவலு ஏதுமில்லாமல் சர்ச்சிக்கப் படுகிறது.

இவரது படைப்புக்களில் காட்டாறு நாவல் மிகவும் தரமானதும் உச்சமானதும் எனப் பலர் கூறக் கேட்டிருக்கிறேன். என்னைப் பொறுத்தவரையில் - இந்நாவல் நல்ல மொழிநடையில் எழுதப் பட்டிருந்த போதும் பல சிறுகதைகளையும் சில குறுநாவல்களையும் தொகுத்து உருவாக்கப்பட்ட கம்ப மலர் மாலை போலவே தோற்றமளிக்கிறது. இதனை உருவ ஒழுங்கு சிதைந்த நாவலாகவும் காணலாம். "இல்லை, நீங்கள் கூறுவது தவறு என்று கூறுபவர் களது மன ஆறு தலுக்கு இன்னுமொரு விஷயத்தையும் இணைத்துக் கூறலாம் என நினைக்கிறேன்.

இந்நாவல் நேர்கோட்டுப் பாங்கில்தான் எழுதப்பட்டுள்ளது. நாவலின் மையம் அழிந்த நிலையை, அல்லது அற்ற நிலையை நாம் அவதானம் கொள்ளலாம். இது ஆசிரியருக்குத் தற்செயலாக லபித்ததா அல்லது இந்நவீன உத்தியை அவர் பிரக்ஞை பூர்வமாகப் பயன்படுத்தியுள்ளாரா? தெரியவில்லை. எது

வாயிருப்பினும் நாவல் படிக்கப்பட வேண்டிய ஒன்றுதான்.

இந்நாவலும் அவரது ஏனைய படைப்புக்களைப்போல நிலம் சார்ந்த அழகையும் நிலம் நீச்சு என்பதன் முழுத்தாற்பரியத்தையும் விகாசம் கொள்ள வைக்கின்றது. நம்மை வியப்பில் ஆழ்த்தவும் செய்கிறது.

வன்னிப் பிராந்தியத்தில் உயர்நிலை அதிகாரியாக ஆழியான் இருந்தமையே இத்தகைய வாய்ப்பினை அவருக்கு நல்கி உள்ளது. இது அவருக்குக் கிடைத்த அரிய வரப்பிரசாதமாகும்.

இந்நவால்களுடன் சுருட்டுத் தொழிலாளர்களது இன்னல்களையும் வாழ்நிலையையும் பதிவு செய்யும் இரவின் முடிவு நாவலும் நெடுந்தீவைப் பகைப் புலமாகக் கொண்டு, இடம்பெயர்ந்து மீன் பிடிக்கும் வலைஞர்கள் பற்றிய சித்திரமான வாடைக்காற்று நாவுலம் சரித்திரப் புனைவான குவேனி நாவலும் படித்துப் பார்க்கக் கூடியன.

செங்கை ஆழியானின் எழுத்துப்பணி புனைவு இலக்கியங்களுடன் மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றல்ல; பயன்மிகு புனைவு சாரா நூல்கள் பலவற்றையும் இவர் எழுதியுள்ளார். அவைகளில் சில: இருபத்து நான்கு மணிநேரம், மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது, பன்னிரெண்டு மணிநேரம், களம் பல கண்ட கோட்டை, சுனாமி, யாழ்ப்பாணம் பாரீர்; இன்னும் சில இருக்கக் கூடும்.


இவருடைய ஆய்வு நூல்கள் ஆனித்தரம் மிக்கவையல்ல எனினும் பயனுள்ளவை. சில: ஈழத்தவர் வரலாறு, நல்லை நகர், யாழ்ப்பாண அரச பரம்பரை, சுருட்டுத் தொழில், யாழ்ப்பாண தேசம், பூதத்தம்பி, ஈழத்துச் சிறுகதை வரலாறு; இவற்றுள் பின்னைய நூல் குறித்துச் சொல்லக்கூடிய ஆக்கமாகும்.


இப்பணிகளுடன் வெளியீட்டுத்துறையிலும் கணிசமான அளவு பங்கினை இவர் வகித்துள்ளார். இப்பணி சுய லாப நோக்குடன் முன்னெடுக்கப்பட்ட ஒன்றல்ல. இது தமிழுக்கும் தமிழர்களுக்கும் சக எழுத்தாள நண்பர்களுக்கும் அவர் செய்த அருஞ் சேவையாகும். அவ்வகையில், இவரது முயற்சியால் வெளிவந்த தொகுதிகள்: மறுமலர்ச்சிக் கதைகள், ஈழ கேசரிக்கதைகள், ஈழத்து முன்னோடிச் சிறுகதைகள், சுதந்திரன் சிறுகதைகள் (இத்தொகுதிகளில் சில வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சால் வெளியிடப்பட்டவை) மல்லிகைச் சிறுகதைகள், மல்லிகைச் சிங்களச் சிறுகதைகள்(மொழி பெயர்ப்பு) முனியப்பதாசன் கதைகள் என்பனவும் இவரது அனுசரணையுடன் மல்லிகைப்பந்தல் வெளியீடாக வந்துள்ளன. இவற்றுடன் பல படைப்பாளுமைகளின் சிறுகதைத் தொகுதிகளை யாழ் இலக்கிய வட்டம் சார்பாக வெளியிட்டுள்ளார். இவைகளில் சில: சம்பந்தன் சிறுகதைகள், சு.வே சிறுகதைகள், தேவன் யாழ்ப்பாணம் சிறுகதை கள், கோபதி சிறுகதைகள், சிரித்திரன் அசிரியர் சுந்தரின் காட்டூன் உலகில் நான். இன்னும் சில தொகுதிகள் இப்பட்டியலில் இடம் பெறாது விடுபட்டிருக்கக்கூடும்.

பரிசில்கள், கௌரப் பட்டங்கள் பெறுவதிலும் இவர் மிகு ஆர்வமுடையவராக இருந்திருக்கிறார். இவரது படைப்புக்களுக்கு இலங்கை சாகித்திய மண்டலப்பரிசு, வடமாகாண, வடகீழ் மாகாண சாகித்திய விருது ஆகியவற்றைப் பலமுறை பெற்றுள்ளன. இவர் மாகாண ஆளுநர் விருதினையும் பெற்றுள்ளார். தமிழ் நாட்டின் லில்லி தேவசகாயம் அறக்கட்டளை, கம்பன் கழகம், கொழும்பு தமிழ்ச்சங்கம், தமிழியல் என்பனவும் இவரைக் கௌரவம் செய்தள்ளன. இவற்றுடன் அரசு வழங்கும் உயர் இலக்கிய விருதான சாகித்திய ரத்னா, மற்றும் கலா பூஷணம் ஆகியவற்றையும் இவர் பெற்றுள்ளார்.

இவரது சில நாவல்களும் பல சிறுகதைகளும் ஆங்கிலத்திலும் சிங்கள மொழியிலும் மொழி மாற்றம் செய்யப்பட்டு, பரவலான செல் வாக்கை இவருக்கு கொண்டு வந்து குவித்துள்ளன.


குறைகளோடும் நிறைகளோடும் வாழ்ந்து தன்னாலான சகலதையும் செய்து மறைந்த இந்த எழுத்துச் சிற்பியை மனப் பிசங்கல் ஏதும் இல்லாது மனங்கொள்வதில் தவறு ஏதுமில்லை என்றே நினைக்கிறேன். ●





# "வாடைக்காற்று" நாவல் திரை மொழி பேசிய போது

▪ கானா பிரபா



வாடைக்காற்று இலங்கையின் அனைத்து மாகாணங்களிலும் பரவலாகத் தமிழர் அதிகம் வாழும் பகுதிகளில் திரையிடப்பட்டது. அதிக நாட்கள் ஓடிய தியேட்டர் யாழ் ராணி தியேட்டர். 41 நாட்கள் ஓடியது. முதற்தடவையாக சிறந்த படத்துக்கான ஜனாதிபதி விருது (1978) கிடைத்த தமிழ்த் திரைப்படம் இது.

ஈழத்து நாவல் உலகில் "வாடைக் காற்று" நாவல் வாசகப் பரப்பில் பெரும் ஈர்ப்பை ஏற்படுத்திய ஒரு படைப்பு. அந்த நாவல் பின்னர் படமான போது ஈழத்துத் தமிழ் திரைப்பட வரலாற்றில் முத்திரை பதித்த படமாகவும் போற்றப்படுகிறது.

ஆதர்ச எழுத்தாளர் செங்கை ஆழியான் குறித்த நினைவலைகளில் அவர் படைத்த "வாடைக் காற்று" என் வாசிப்பனுபவத்தையும், அவரிடம் நான் வானொலிப் பேட்டி கண்ட போது இந்தப் படைப்புக் குறித்து மேலதிகமாக அவரிடம் சம்பாஷித்ததையும் திரட்டிப் பகிர்கிறேன்.

செங்கை ஆழியானைத் தெரியுமா என்று ஈழத்து வாசகர்களிடம் கேட்டால் பலர் "வாடைக்காற்று எழுதினாரே, அவரா?" என்று கேட்குமளவுக்கு வாடைக் காற்று என்ற நாவலின் மூலம் ஒரு முகவரி தேடிக் கொண்டவர் எழுத்தாளர் செங்கை ஆழியான். வாடைக் காற்று நவீனம், நாவல் உலகில் ஒரு மைல்கல் என்றார் இரசிகமணி கனக செந்திநாதன். ஈழத்து நாவல் உலகே கண்டிராத அதிசயமாக, செட்டிக்குளம் வாழ் மக்கள் 1974 ஆம் ஆண்டு மாசி 22 ஆம் திகதி விழா எடுத்ததும் இந்த நாவலுக்குத் தான். இந்த நாவலை மீண்டும் வாசித்து முடித்தபோது எனக்குள் இப்படி நினைத்துக் கொண்டேன் நான் "இந்த நாவல் இவ்வளவு கௌரவங்களையும் பெற உண்மையில் தகுதியானதே என்று".

நெடுந்தீவுப் பிரதேச மீனவர் வாழ்வு, வாடை பெயர்ந்ததும் பேசாலை, கரையூர் முதலான பகுதிகளில் இருந்து நெடுந்தீவுக்கு வரும் மீனவர்களுக்கும் உள்ளூர்வாசிகளுக்கும் ஏற்படும் தொழிற்போட்டி, காதல், குழிபறிப்பு, மீனவர் போராட்டங்கள் இவை தான் இந்நாவலின் மூலக்கரு. சொல்லப்போனால் இந்தக் கதையில் தனியே ஒருவனோ ஒருத்தியோ மையப்படுத்தப்படாமல், பயணிக்கும் பெரும்பாலான கதை மாந்தர்களே நாயகர்கள். ஒவ்வொருவர் பக்கம் தமக்குரிய நியாயம் என்ற வரையறைக்குள் இவர்கள் நன்றாகச் செதுக்கப்பட்டிருக்கிறார்கள். சொல்லப்போனால் "இயக்குநர் படம்" என்று சொல்வது போல இது செங்கை ஆழியான் இதன் பிரம்மாவாக இருந்து பாத்திரங்களை தனித்துவமானவர்களாகக் காட்டியிருக்கின்றார்.

இவர் அடிப்படையில் ஒரு புவியியல் ஆசிரியர்/ஆய்வாளன் என்பதால் இந்த நாவல் வெறும் கதைக்கோர்வையாக மட்டுமில்லாது மீன்பிடிப்பிரதேச வாழ்வியலையும், அவர்கள் மீன்பிடிக்கும் முறையையும் விளக்கும் விபரணப் படைப்பாகவும் திகழ்கின்றது. மற்றைய படைப்பாளிகளிடம் இருந்து தனக்கென ஒரு பாணியை ஏற்படுத்துகையில் களம் பற்றிய புவியியல் ஆதாரங்களை அவரின் மற்றைய படைப்புக்களிலும் அவதானிக்கலாம். இது வாசகர்களுக்கு சுவாரஸ்யத்தையும் புவியியல் அறிவையும் தரும் என்பது மறுக்கமுடியாத உண்மை. தீவிற்கு குறிப்பிட்ட பருவ காலத்தில் வந்துபோகும் பெலிகன் எனப்படும் கூழக்கடா பற்றிய குறிப்பும் இந்நாவலில் வருகின்றது. நெடுந்தீவின் சிறப்பாக இருக்கும் போனிக்குதிரைகள், அவற்றின் சவாரி பற்றிய குறிப்பும் உள்ளது.

இக்கதையில் பல சுவாரஸ்யமான பாத்திரங்கள் இருந்தாலும் அனுதாபத்தை அள்ளிப்போவது நாகம்மாவின் முறைமாமன் விருத்தாசலம் பாத்திரம். கூழக்கடாவை வேட்டையாடிக் கொண்டுபோய் நாகம்மாவைக் கவர அவன் போடும் திட்டமும், கதையின் இறுதியை முடித்துவக்கின்ற அனுதாபத்துக்குரிய பாத்திரமாகவும் அவன் படைக்கப்பட்டிருக்கின்றான்.

படிக்கும் போது அவதானித்த இன்னோர் விடயம், இந்த நாவலை சில இடங்களில் பாத்திரங்களுக்கு இடையில் வரும் உரையாடல் மூலம் கதை நகர்த்தல், இது படிக்கும் போது சுவையாக இருக்கிறதே என்று நினைக்கும் போது, அடுத்த அத்தியாயம் ஏனோ தானோவென்று கடமைக்காக எழுதப்பட்டது போல சிலபக்கங்களில் நிரப்பப்பட்டிருக்கின்றது.

மரியதாஸ் பாத்திரம், மீன்பிடிக்க நெடுந்தீவை நாடி வந்து தொடர்ந்து ஒன்றும் கிடைக்காமல் நொந்து போவது, பின் தன் புதிய யுக்தியைக் கொண்டு மீன்களை அள்ளுவது இந்தச் சம்பவக்கோர்வைகள் ஒரு தேர்ச்சிபெற்ற மீனவனின் யுக்தியோடு அழகாகக் காட்டப்பட்டிருக்கின்றன.

செமியோன் - பிலோமினா காதல், மரியதாஸ் நாகம்மா காதல் இன்னொரு திசையில் பயணப்படும் சுவையான பக்கங்கள்.

இக்கதையில் வரும் பாத்திரங்களின் சம்பாஷணைகளை முழுமையாகப் பேச்சுவழக்கில் எழுதுவதா அல்லது இலக்கணத்தமிழில் எழுதுவதா என்று எழுத்தாளர் திணறியிருக்கிறார் போலும். சில இடங்களில் பாத்திரங்கள் இலக்கணத் தமிழ் பேசுவதன் மூலம் அன்னியப்பட்டிருக்கின்றன.

இந்தக் கதை 1974 ஆம் ஆண்டில் செங்கை ஆழியானின் ஆரம்ப கால எழுத்தாக வந்திருக்கிறது. இதை மீண்டும் விரிவாக எழுதும் போது "செம்மீன்" போன்ற கனகாத்திரமான இன்னும் உயர்ந்த இலக்கியப்படைப்பாக இருக்கும் என நினைக்கிறேன். என் இந்த ஆதங்கத்தை அண்மையில் வானொலிக்காக இவரை நேர்காணல் கண்டபோது கேட்டிருந்தேன்.

"எனக்கும் அந்த உணர்வு இருக்கின்றது, ஆனால் அது எப்பவோ எழுதி முடித்த கதை அதை அப்படியே விட்டுவிடுவோம்" என்றார் செங்கை ஆழியான் என்னிடம்.

நாவலைப் படித்து முடிக்கும் போது, கதையின் அவலமுடிவு மனதைப் பிசைகின்றது. இறுதி அத்தியாயம் படு விறுவிறுப்பாகவும் எழுதப்பட்டிருக்கிறது.

வாடைக் காற்று நாவல் ஒரு காட்டாறு போன்றது. இந்நாவலின் ஆழ அகலத்தை ஒரு குறுகிய விமர்சனப் பார்வையில் அடக்கிவிடமுடியாது. ஈழத்து நாவலை நுகரும் ஒவ்வொரு வாசகனும் கட்டாயம் வாசிக்க வேண்டிய நவீனம் இது. வாடைக்காற்று நாவலைப் படித்து முடிக்கும் போது என் உள்ளுணர்வு சொன்ன விடயம் இதுதான். "ஆஹா என்னதொரு அழகான திரைக்கதை பொருந்திய நவீனம் இது. எமக்கென ஒரு நல்ல திரைப்படத் தொழில்நுட்பக்குழுவும், நல்லதொரு நடிகர் பட்டாளமும் வரும் போது இந்நாவல் மீண்டும் திரைப்படமாக உருவானால் சர்வதேசப் படங்களுக்கு மத்தியில் துலங்கும் எம் தனித்துவமான படைப்பாக இது திகழும்.

இந்த நாவலின் முக்கியபகுதிகளை எடுத்து இன்னொரு களத்தை மையப்படுத்தி இயக்குனஉ பாரதிராஜா தன் கல்லுக்குள் ஈரம் திரைப்படத்தில் பயன்படுத்திவிட்டார் என்ற குற்றச்சாட்டு உண்டு. இது பற்றியும் நான் அவரின் நேர்காணலில் கேட்டபோது" படப்பிடிப்புக்காக இலங்கை வந்த மேஜர் சுந்தரராஜன் வாடைக்காற்று படத்தைப் பார்த்ததாகவும், பின் தன்னிடம் இந்த நாவல் பிரதியைப் பெற்றதாகவும், பின் அந்தப் பாத்திரப் படைப்புக்களோடு கல்லுக்குள் ஈரம் படம் சில வருடங்களில் வந்ததாகவும் செங்கை ஆழியான் குறிப்பிட்டார். பின் இது பற்றி சுந்தரராஜனிடம் இவர் கேட்டப்போது இந்த நாவலைப் படமாகவில்லையே சம்பவங்களையும் முக்கிய பாத்திரப்படைப்புக்களைத் தானே எடுத்து " கல்லுக்குள் ஈரம்" வந்தது என்றாராம். 83 கலவரத்தில் ஈழத்துத்திரைப்படங்கள் அழிந்தபோது,



ஒரு ரீல் மட்டும் தீக்கிரையாகி ஆனால் முக்கிய காட்சிகள் தப்பிவிட்ட வாடைக்காற்று திரைப்படம் தன்னிடம் இருப்பதாக செங்கை ஆழியான் குறிப்பிட்டார்.

வாடைக்காற்று திரைப்படமான போது

கமலாலயம் மூவிஸ் சார்பில் ஏ.சிவதாசன், பா.சிவசுப்பிரமணியம் ஆகியோர் இந்தக் கதையைத் திரைப்படமாக்கினர். இவர்கள் தெரிவு செய்த இன்னொரு நாவல் பாலமனோகரன் எழுதிய நிலக்கிளி . ஒளிப்பதிவாளரும் இயக்குனருமான பாலுமகேந்திரா இவ்விரு நாவல்களையும் ஒப்பிட்டு பின் , "நிலக்கிளியில் வரும் பதஞ்சலி பாத்திரத்தில் நடிக்கக் கூடிய நடிகையைத் தென்னிந்தியாவிலேயே தேடமுடியாது , வாடைக்காற்று நாவலை இலங்கையின் சூழலுக்கு ஏற்ப படமாக்கலாம்" என்றாராம்.

நடிகர்கள்:

ஏ.ஈ.மனோகரன் (செமியோன்) , டொக்டர் இந்திரகுமார் (மரியதாஸ்), சந்திரகலா (பிலோமினா) , ஆனந்த ராணி (நாகம்மா), எஸ்.ஜேசுரட்ணம் (பொன்னுக்கிழவர்), ஜவாகர் (சுடலைச்சண்முகம்), பிரான்சிஸ்( சவரிமுத்து), கே.எஸ். பாலச்சந்திரன் (விருத்தாசலம்) , கந்தசாமி (தூசை).




ஒளிப்பதிவு: ஏ.வி.எம்.வாசகர்

திரைக்கதை, வசனம்: செம்பியன் செல்வன், செங்கை ஆழியான்

இசை: ரீ.எவ்.லத்தீப்

உதவி இயக்கம்: கே.எஸ்.பாலச்சந்திரன்

இயக்கம்: பிறேம்நாத். மொறாயஸ்

படப்பிடிப்பு ஆரம்பம்: 10.02.77

(கதைக்களம் நெடுந்தீவு என்றாலும் பேசாலையில் 43 நாட்களில் படமாக்கப்பட்டது)

திரையிட்ட தேதி: 30.03.1978

இலங்கையின் அனைத்து மாகாணங்களிலும் பரவலாகத் தமிழர் அதிகம் வாழும் பகுதிகளில் திரையிடப்பட்டது.


அதிக நாட்கள் ஓடிய தியேட்டர் யாழ் ராணி தியேட்டர். 41 நாட்கள் ஓடியது.

முதற்தடவையாக சிறந்த படத்துக்கான ஜனாதிபதி விருது (1978) கிடைத்த தமிழ்த் திரைப்படம் இது.

யேசுரட்ணம் சிறந்த துணை நடிகராகத் தேர்வு (ஆதாரம்: இலங்கைத் தமிழ் சினிமாவின் கதை)

"வாடைக்காற்று வீசுகின்ற காலத்திலே"

ஒரு காலத்திலே இலங்கை வானொலியில் தென்னிந்தியப் பாடல்களுக்கு நிகராக வலம் வந்த பாடல். மறக்கமுடியுமா இதை.



■ சமரபாகு சீனா. உதயகுமார்


# செங்கை ஆழியான் நாவல்களில் யாழ்ப்பாண சமூக மரபு

## - சில நாவல்களை மட்டும் முன்வைத்து -

செங்கை ஆழியான், ஆரம்பத்தில் சிறுகதைகள் பல எழுதியிருந்தபோதும், நாவல்களே அவரை ஈழத்தின் முதன்மை எழுத்தாளர்கள் பட்டியலில் சேர்த்திருக்கிறது என்று சொன்னால் அதில் ஏதும் பொய்யில்லை. இதுவரையான காலத்தில் 200 இற்கு மேற்றபட்ட சிறுகதைகளை அவர் எழுதியுள்ளார். 50 இற்கு மேற்பட்ட நாவல்களை புனைத்திருக்கிறார். அவற்றினை, சமூக நாவல்கள்; வரலாற்று நாவல்கள்; நகைச்சுவை நாவல்கள்; ஈழப்போர் சொல்லும் நாவல்கள் என வகை செய்து நோக்கலாம்.

வன்னி நிலப்பரப்பின் விழுமியங்களையும், பழக்கவழக்கங்களையும் தனது நாவல்களிலே தரிசனமாகக் காட்டியிருப்பது போலவே வேறு சில நாவல்கள் யாழ்ப்பாண சமூக மரபுகளை அச்சொட்டாகப் படம் பிடித்துக் காட்டிய விதம் படிப்போர் நெஞ்சத்திற்கு விருந்தளிப்பவை ஆகும். அவ்வாறான சில கதைகளை மாத்திரம் எடுத்து நோக்கி அக்கதைகளிலே வருகின்ற பாத்திரப் படைப்புகளின் ஊடாகவும்; காட்சிப்படுத்தலின் மூலமாகவும்; பயன்படுத்திய மொழிகள் சார்பாகவும் ஆராய்கிறது இச்சிறு கட்டுரை.

அதாவது, அக்கால யாழ்ப்பாணம் எனும் பிரதேசத்தில் போரினால் மக்கள் பட்ட கடும்துயர்கள்; படித்தவர் சிலர் செய்த மிகக் கேவலமான நிதி, சொத்து மோசடிகள்; அவ்வாறான மோசடிகள் பலவற்றிலிருந்து அத்தகைய அதிகாரிகள் எப்படித் தப்பிக் கொண்டனர்; சீதனம், சாதியம் போன்ற விடயங்கள் எப்படித் தலைதூக்கி ஆடியிருந்தன போன்றவற்றை பட்டவர்த்தனமாகத் தோலுரித்துக் காட்டும் நாவல்கள் சிலவற்றை மாத்திரம் குவியப்படுத்தி சிறு உசாவலாய் ஆராய்ந்து செல்கின்றது, இக்கட்டுரை.




### யாழ்ப்பாணக்கிராமம் ஒன்று

இது 2003 ஆம் ஆண்டு வெளிவந்த ஒரு குறுநாவலாகும். இந்திய இராணுவம் யாழ்ப்பாண மண்ணை விட்டு வெளியேறிச் சென்ற பின்னர் யாழ்ப்பாணக் கோட்டைக்குள் இலங்கை இராணுவத்தினர் வந்திருந்து நிலைகொண்டனர். அக்காலத்திலே கோட்டையில் இருக்கின்ற இலங்கை இராணுவத்தினரை வெளியேற்றும் பொருட்டு, இலங்கை இராணுவத்திற்கு எதிராக விடுதலைப் புலிகள் கடுமையான தாக்குதல்களை அடிக்கடி நிகழ்த்திக் கொண்டிருந்தனர். இப்படியான ஒரு சூழ்நிலையில் யாழ்ப்பாணக் கோட்டை விடுதலைப் புலிகளால் முற்றுகையிடப்பட்டபோது கோட்டையிலிருந்த இராணுவத்தினர் கோட்டையை விட்டுவிட்டு தப்பியோடினர். அங்கிருந்து தப்பிய இராணுவத்தினர் தீவுப்பகுதியிற்குச் சென்று நிலைகொண்டிருந்தனர். விடுதலைப்புலிகளிடம் தோல்வியடைந்த

இராணுவத்தினர் தீவுப் பகுதியிலிருந்து, யாழ்ப்பாணப் பகுதியின் குடியிருப்புகள் நோக்கி எறிகணைகளைத் தள்ளிக் குவித்தனர்; விமானங்களிலிருந்து குண்டுகளைச் சரமாரியாகப் பொழிந்து தள்ளினர். இவை மட்டுமல்லாமல், கடல் கப்பலிலிருந்து பீரங்கிக் குண்டுகளைத் தள்ளிவிட்டு யாழ்ப்பாணத்திற்கு மக்களிற்குப் பல இன்னல்களைச் செய்து வந்தனர்.

இவ்வாறான இலங்கை இராணுவத்தினரின் காட்டுமிராண்டிச் செயல்களால் யாழ்ப்பாண மக்களின் இறப்புவீதம் கூடிக்கொண்டு செல்லத் தொடங்கியது. மக்களின் அன்றாட வாழ்வியலின் நாளாந்தச் செயற்பாடுகளும் ஒடுக்கப்பட்டுக்கொண்டே இருந்தன. அதில் முக்கியமாக கெலிகொப்டரில் இருந்துகொண்டு கடைத்தெரு, சந்தை, பாடசாலை, கோயில், மற்றும் மக்கள்கூடும் இடங்களை நோக்கி பிப்ரிக்கெலிபர்க் குண்டுத் தாக்குதல்கள் செய்தனர். அவை படுமோசமாகவே இருந்தன. அத்தாக்குதலிலிருந்து தப்புவதற்கு மக்கள் கடுமையாகப் போராடினர்.

கடை, சந்தை, பாடசாலை, கோயில் என்று எந்தவொரு தேவைக்கும் மக்கள் செல்லமுடியாத இறுக்கமான சூழலுக்குள் அகப்பட்டனர். இவற்றிலிருந்து தப்புவதற்காக பொது இடங்கள், பிரதான வீதிகளின் மருங்குகள் என்று மக்கள் நடமாடும் இடங்களில் பங்கர்கள் தோற்றம்பெற்றன. இதனால், யாழ்ப்பாணத்து மக்கள் பெரும்பாலானோர் வீடுகளுக்குள் வாழ்வதைக் காட்டிலும் பங்கருக்குள் வாழும் நிலைமைகளே அதிகமாக இருந்துள்ளன.



இப்படியாக, எறிகணைத் தாக்குதல்கள்; விமானக் குண்டு வீச்சுகள்; கடல் பீரங்கிக் குண்டுகள் போன்ற தாக்குதல்களுக்குள் அகப்பட்டு கடும் பாதிப்புக்குள்ளான கிராமங்களில் கொட்டடிக் கிராமமும் ஒன்றாகும். அந்தக் கொட்டடிக்கிராம மக்கள் பட்ட அவலங்களைச் சித்திரிப்பதாகவே இந்த நாவல் அமைகின்றது. இக்கதையினை கொட்டடிக் கிராமமே சொல்லிச்செல்கிறது.

கொட்டடிக்கிராமம் என்பது கரையோரக் கிராமம் ஆகும். கொட்டடிக்கிராமத்தில் சின்னப்பு என்பவன் தன் குடும்பத்தோடு வாழ்ந்து வருகின்றான். இவனின் பிரதான தொழில் மீன்பிடித்தலாகும். தன் கடும் உழைப்பால் சேர்த்த பணத்திலே கல்வீடு ஒன்று கட்டுகிறான். ஒரு நாள் கோட்டை முகாமிலிருந்து ஏவப்பட்ட எறிகணை ஒன்று இவனின் புது வீட்டின் மீது வந்து விழுகிறது. வீடு தரைமட்டத்தோடு சிதைந்து போகிறது. இதனால் மனம் விரக்தியடைந்த நிலைக்கு சின்னப்புத் தள்ளப்படுகிறான். அவனிடம் இருந்த ஓரளவு வசதியும் தொலைந்து போக வறுமை நிலைக்குத் தள்ளப்படுகிறான். அன்றிலிருந்து பல துன்பங்களை அனுபவிக்கத் தொடங்கினான். வீடில்லாமல் தவித்த சின்னப்புக் குடும்பத்திற்கு ஜெர்மன் நாடு வழங்கிய உதவியால் ஓலைக்குடிசை போட்டு அதில் வாழ்ந்து வருகிறான். சில நாட்களில் கடல் வலயச் சட்டம் அமுலுக்கு வருகிறது. இதனால் கடலில் மீன்பிடித்து வாழும் மீனவர் வாழ்க்கை கேள்விகுறி ஆகிறது. அவர்களில் ஒருவனாக இருந்த சின்னப்பு இன்னும் வறுமையான நிலைக்குத் தள்ளப்பட்டான். இதனால், தன் குடும்பத்தைப் பாதுகாக்கும் பொருட்டு பல கஸ்ரங்களை அனுபவித்து வரத்தொடங்கினான்.

வறுமையின் சுமை உச்சத்திற்குப் போகவே, ஒருநாள் மீன் பிடிக்கவென்று கடலுக்குச் செல்கிறான். கடலுக்குப் போகும் தன் கணவரை மனைவி தடுத்து நிறுத்துகிறாள். அவள் சொல்லையும் மீறி சின்னப்பு கடலுக்குப் போகிறான். கடலிலே வலை வீசி மீன் பிடித்துக் கொண்டிருக்கும் பொழுது, தீவுப்பகுதியிலிருந்து இராணுவத்தினர் வீசிய எறிகணையில் சிக்கிய சின்னப்பு, உடல் சிதறிப் பலியாகிறான். சின்னப்புவின் மரணத்திற்குப் பிறகு சின்னப்புவின் மனைவி செல்லம்மா தன் பிள்ளைகளோடு வறுமையில் சொல்ல முடியாத துன்பங்களில் துவளத் தொடங்கினாள். ஒரு நேரக் கஞ்சியுடன் தம் சீவியத்தைப் போக்கும் பொருட்டு அயலவர்களிடம் சென்று, உதவி கோர முடியாமல் மனம் துடிக்கிறாள். பிள்ளைகளுக்கு உணவு கொடுக்க வழி தெரியாமல் தவிக்கிறாள். இந்த நிலையில், சின்னப்புவின் மகன் தவம் குடும்பப் பாரத்தைச் சுமந்து சிறப்பாக நடத்த எண்ணி தானே பொறுப்பேற்கிறான். தவம், பாடசாலை செல்லும் நேரம் தவிர மாலை நேரங்களில் தேநீர்க் கடையில் வேலை செய்து வருகிறான். இதனால் சிறுவருமானம் அவனுக்குக் கிடைக்கிறது. அந்த நாளின் வியாபார முடிவிலே, அக்கடையில் மிஞ்சுகிற பலகாரங்களே அவனுக்குக் கூலியாகக் கிடைக்கின்றன. அப்பலகாரங்களைக் கொண்டு வந்து தன் சகோதரர்களுக்குக் கொடுத்துத் தானும் உண்டு பசியினைப் போக்குகிறான்.

ஒரு நாள் தாய் செல்லம்மா ஆசீர்வாதம் எனும் பரோபகாரியின் உதவி மூலமாக சைக்கிள் ஒன்றைப் பெற்று தவத்திடம் கொடுக்கிறாள். கல்வியை இழந்த மனக்கவலை அவன் மனம் முழுவதையும் அப்பிக் கொள்கின்றது. தாய் சகோதர்களிற்காக அவன், விறகு வெட்டவென்று தென்மராட்சிப் பக்கமாகச் செல்கிறான். வெட்டிய விறகுகளை அந்தச் சைக்கிள் கரியரில் கட்டி வந்து விற்றுக் காசாக்கிக் குடும்பத்தைக் காப்பாற்றுகிறான். தன் இத்தகைய கஸ்ரங்கள் மத்தியிலும் தனது சகோதரர்களுக்குத் தன்னால் உதவ முடிந்திருக்கிறது என்பதை நினைத்து மன நிறைவு கொள்கிறான், தவம்.

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினர் மேற்கொள்ளும் எறிகணைகள், விமானக் குண்டுத் தாக்குதல்கள், கடல் பீரங்கிக் குண்டுகளின்

தாக்கங்கள் போன்ற நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் விடுதலைப் புலிகள் எதிர் தாக்குதல்களை நடத்தி வரத் தொடங்கினர். விடுதலைப் புலிகளின் தாக்குதல்களில் சிக்கி சின்னா பின்னமாகிப் போகும் இராணுவத்தினரும், கடற்படையினரும் தாங்கள் தோல்வியடையும் ஒவ்வொரு தருணங்களிலும் தமிழ் மக்கள் மீது பல துயர்களைத் திணிப்பதற்கு தயங்குவதும் இல்லை.

அதாவது, தமிழ் மக்களின் உயிர்களைப் பறித்தல்; தமிழ் மக்களின் உடைமைகளின் இழப்புகளை அதிகரித்தல்; கூலித்தொழிலாளிகளின் உழைப்பினைத் தடை செய்து குடும்ப பொருளாதாரத்தை நசுக்குதல்; மாணவர் கல்வி இழந்து போதலை வளர்த்தல்; தமிழ் மக்களை மன நோயாளிகளாக்குதல் போன்ற கைங்கரியங்களை மனதில் நிறுத்தி இலங்கை இராணுவத்தினர் இத்தனை விடயங்களையும் சீராய் செய்து வந்தனர். குறிப்பாக இதனால், சிறுதொழில் செய்தோர் அதிகமாகப் பாதிப்புக்குள்ளாகினர். அதாவது, விவசாயிகள்; மீனவர்கள்; கூலித் தொழிலாளிகள் எனப் பலரும் பாதிப்புக்கு உள்ளாகினர். இத்தகைய இறுக்க மான அந்த யாழ்ப்பாணச் சூழ்நிலையில் மக்களால் செய்யக்கூடிய தொழில் களில் விறகு வெட்டிக் கட்டி வந்து விற்பனை செய்தல் ஓரளவு கைகொடுப்ப தாக இருந்திருக்கிறது. அக்காலச் சூழலில் தமிழ் மக்களின் உயிர்களைத் தக்கவைத்துக் கொள்ள இத்தொழில் பெரிதும் உதவியிருக்கிறது.

போர்க்காலச் சூழலில் யாழ்ப்பாணச் சமூகத்தில் ஏற்பட்ட துயரங் கள் என்று, இப்படி நிறையவே சொல்லலாம். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல, யாழ்ப்பாணம் கொட்டடிக் கிராமத்துச் சின்னப்புவின் குடும்பத் துயர் என்பது ஒரு சின்ன உதாரணம் மட்டுமே!

**கொத்தியின் காதல்**


*1970*களில் யாழ்ப்பாண சமூகத்தில் இடம்பெற்ற சமூக ஊழல்களை எடுத்துக் கூறும் முக்கிய நாவலாகும். பேய்களின் உலகம் ஒன்றைப் படைத்து அதன் மூலமாக மனிதர்களுக்குச் சாட்டையடி போடும் நோக்கில் உருவகித்துச் சொல்லப்பட்டிருக்கும் ஒரு கதை ஆகும். நாவலின் கதைக்களங்களாக கொக்குவில் மயானம், கோம்பயன் மணல் மயானம், நவாலி வெளி மயானம் என்பன தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. நாவலில் வருகின்ற பாத்திரங்கள் சுடலை, மாடன், கொத்தி எருமைப் பல்லன், சோனிப்புட்டு, எறிமாடன், பெரியகொத்தி, ஊத்தைக்குடியன், முனிசுழியா, தரகர் ஆடுகால், பெட்டிசமாமுனி, நச்சுக் குறளன் ஆகியவை இடம்பெற்றிருக்கின்றன. வைத்தியசாலை சிற்றூழியர்கள் முதல் உயரதிகாரிகள் வரையானோர் செய்யும் சமூக ஊழல்களைப் புட்டுப்புட்டு வைக்கிறது, இந்த நாவல்.

ஒருநாள் சுடலை மாடன் எரிகாயம் பட்டு வைத்தியசாலை செல்கிறது. அங்கே நடைபெறுகின்ற ஊழல்கள் பின்வருமாறு வரிசைப்படுத்தப்படுகின்றன.

- அங்கே, தனக்கான சிகிச்சையில் முன்னுரிமை பெறுவதற்காக சிற்றூழியர் ஒருவருக்கு 7 ரூபாவினை இலஞ்சமாகக் கொடுக்கிறது.
- மருந்தும் கட்டும் இடத்தில், மருந்து கட்டும் ஊழியருக்கு 50 சதத்தினை அது கொடுக்கிறது.
- ஊசிப் போடப் போகும் போது மரக்கறி, முட்டை முதலியவற்றை இலஞ்சமாகக் கொடுக்கிறது.
- அரச வைத்தியசாலையில் இலவசமாக வழங்கப்பட வேண்டிய மருந்து வகைகள் அப்போதிக்கரின் மருமகனின் மருந்தகத்தில் விற்பனை செய்யப்படுகின்றன.

1970களின் முற்பகுதி இலங்கையின் அரசியல், பொருளாதார வரலாற்றின் முக்கியமான காலகட்டமாகும். சிறிமாவோ பண்டார நாயக்காவின் அரசு ஆட்சியில் இருந்த காலமது. உள்நாட்டு உற்பத்திகளை அதிகரிக்கும் நோக்கிலே உணவுப் பொருட்களின் மீது இறக்குமதிக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இந்நடவடிக்கை காரணமாக கூட்டுறவுச் சங்கங்களின் பங்கும், பணியும் அதிகரிக்கத் தொடங்கின. உணவுப் பொருட்கள் யாவும் பங்கீட்டு அட்டைக்கு வழங்கப்படவேண்டும் என்ற அவசியம் உருவானது.

வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்ந்த மக்களுக்கு இலவசமாகவும், மானிய விலையிலும் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. இப் பணியினை கூட்டுறவுச் சங்கங்களே நிறைவேற்றி வந்தன. இக்காலப்பகுதி யில் கூட்டுறவுச்சங்கக் கிளை முகாமையாளர்கள் சமூகத்திலே மதிப்பு வாய்ந்தவர்களாகக் கருதப் பட்டனர். சமூகத்தில் பெரிய மனிதர் என்ற போர்வையில் காணப்படும் ஊழல் முதலைகள் ஒருசிலர், இத்தகைய கிளை முகாமையாளர் களை நண்பர்களாக்கிக் கொள் வதில் ஆர்வம் காட்டி வந்தனர். இப்படித் தமக்குத் தேவையான பொருட்களைத் தவறான வழியில் பெற்றுக்கொண்டு அதற்கான பணத்தினைக் கிளை முகாமை யாளர்களுக்கு வழங்கி வந்தனர். இத்தகைய ஊழல் மோசடிக்காரர் களிடமிருந்து பணமாகவும், வேறு உதவியாகவும் பெற்றுக்கொண்ட கிளை முகாமையாளர்களுக்கு இது வொரு உயர்ந்த வருமானம் தரும் ஒரு செயற்பாடாகவே தெரிந்தது. எறிமாடன் பேயும், கருங்குழிப் பேயும் நல்ல நண்பர்களாவர். இவ்விருவரின தும் உரையாடல் மூலம் சங்கக் கடைக் கிளை முகாமையாளர்களின் போக்கிரித்தனத்தையும், ஊர் மோசடிக்காரர்களின் ஊழல்களை யும் துலாம்பாரமாக எடுத்துச்



சொல்லியிருக்கும் விதம் பாராட்டு தலுக்குரியதாகும்.

"சங்கக்கடை மனேச்சர் வேலை எண்டால் ஒரு வரியத்தில வீடு கட்டிடலாம்" என்று கருங்குழிப் பேய் எறிமாடன் பேய்க்குக் கூறுவது போல உரையாடல்கள் பல கொத்தியின் காதல் நாவலிலே கண்டு கொள்ளலாம்.

இப்படிக் கீழ்த்தரமான செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகள், தங்கள் குற்றங்களிலிருந்து தப்பும் நோக்கத்திற்காகப் பல உத்திச் செயற்பாடுகளைச் செய்து வந்தனர். அவை பின்வருமாறு.

- இப்படி நடைபெறும் ஊழல்களை மேலிடத்திலே சொல்லிவிட நினைப்பவர்களைக் கண்டுபிடித்து, அவர்களுக்கு விசேடமாக ஏதாவது வழங்கிச் சமாளிப்பது.
- மாத இறுதி, வருட இறுதி, விசேடம் போன்ற கணக்கெடுப்புக் காலங்களில் பொருட்கள் குறைந்து காணப்படும் சந்தர்ப்பங்கள் அல்லது கணக்கில் தவறுகள் காணப்படும் சந்தர்ப்பங்கள் அறியும்போது, கிளை முகாமையாளர், சங்கக்கடையின் கூரையினைப் பிய்த்துவிட்டு சங்கக் கடையில் களவு போய்விட்டது என்னும் தோற்றப்பாட்டினை மேலிடத்திற்குக் காட்டித் தப்பித்துக் கொள்வார்.
- பொருட்கள் கலப்படம் செய்து விற்பனை செய்தல். அதாவது, மிளகுடன் பப்பாசிக் கொட்டையினைக் கலப்படம் செய்தல், அரிசியில் கல் கலந்து விற்றல் போன்ற செயற்பாடுகளைச் சொல்லலாம்.
- வாகனச் சாரதிகளிடம் குற்றம் எதுவும் இல்லாத சந்தர்ப்பங்களிலும், அவர்கள் மீது பொய்க் குற்றம் சாட்டுதல். இது ஒரு அச்சுறுத்தலாகவும் இருக்கும். இத்தகைய சந்தர்ப்பங்களிலே அப்பாவிச் சாரதிகளிடமிருந்து இலஞ்சமாகப் பணம் கேட்பார்கள். சாரதிகளோ, கோடு, வழக்கு என்று அலைந்து திரியும் சிரமம் கருதி காவல் துறையினர் கேட்கும் பணத்தினைக் கொடுத்து அத்தகைய சிரமத்திலிருந்து தப்பித்துக் கொள்வர்.

இப்படிப் பல ஊழல்களை எறிமாடன், கருங்குழிப் பேய்களின் மூலமாகச் சொல்லியிருப்பது படிப்பதற்குச் சுவாரஸ்சியமாகவும் இருக்கிறது. அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள போலி மனிதர்களின் பகட்டு வாழ்க்கையின் மறுபக்க முகத்திரையினைக் கிழித்துக் காட்டிய கதைகளில் கொத்தியின் காதல் என்ற நாவல் மிக முக்கியமானதாகும்.

**சாதியினை வகை செய்து கூறும் கதைகள்**

பேராசிரியர் கா.சிவத்தம்பி சாதி முறைகளின் அடிப்படையில் ஈழத்தமிழர்களை

(i) மட்டக்களப்புச் சமூகம்,

(ii) யாழ்ப்பாணச் சமூகம்

என இரு குழுக்களாக வகைப்படுத்திக் கொள்கிறார்.

யாழ்ப்பாண சமூகத்தில் சாதியமைப்பு மிக இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளது. யாழ்ப்பாண சமூகத்தின் சாதியமைப்பினை உயர்த்தப்பட்ட சாதியினர், தாழ்த்தப்பட்ட சாதியினர் என இரண்டாக வகை செய்து நோக்குகிறார். பிராமணர், வேளாளர் முதலியோர் முதல்வகையினராகவும், கோவியர், பள்ளர், நளவர், சாண்டார், சிவியார், பறையர், அம்பட்டர், துரும்பர் முதலியோர் இரண்டாவது வகையினுள்ளும் அடக்கப்படுவர். யாழ்ப்பாணச் சமூக அமைப்பிலே வேளாளர் சமூகமே நிலவுடைமையாளராக மேலாண்மை பெற்றிருந்தனர். ஆனால், இவையெல்லாம் மாற்றப்பட்டு வேறோர் நிலைக்கு மாறிவிட்டதையும் காண முடிகின்றது.

அதாவது, தாழ்த்தப்பட்ட சாதிச் சமூகத்தினர் என்று அன்று வகைப்படுத்தப்பட்ட சாதி வகையினர் பலரும் கல்வி, பொருளாதாரம், பழக்க வழக்கங்கள் என்று எல்லா வகையிலும் முன்னேற்றம் கண்டுள்ளனர். அரச, தனியார் நிறுவனங்களில் உயர் பதவிகளில் அவர்களின் வகிபங்கு அதிகரித்துவிட்டன. பல முன்மாதரியான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த காலங்கள் போலல்லாமல் உயர்த்தப்பட்ட சமூகம் எனக் கருதுவோருக்குச் சவாலாக அதாவது சமனும் எதிருமான நியூட்டனின் மூன்றாம் விதித் தத்துவத்தைப் பிரயோகம் செய்து முன்னேறி விட்டனர்.

ஈழத்திலே அதிக நாவல்கள் எழுதியவர் என்ற பெருமை செங்கை ஆழியானுக்கு உண்டு. இவரது பல நாவல்களில் சாதியம் தொடர்பான விடயங்கள் காணப்படுகின்றன. ஆனாலும், சாதியத்தைக் கருப்பொருளாகக் கொண்டு எழுதப்பட்ட நாவல்களாக பிரளயம் (1975), அக்கினிக்குஞ்சு (1984), அக்கினி (1991) ஆகியவை நோக்கப்படுகின்றன.

**பிரளயம்**

யாழ்ப்பாணக் கிராமம் ஒன்றில் ஏற்பட்ட சாதிய மாற்றத்தை எடுத்துச் சொல்லும் நாவலாக இது பார்க்கப்படுகிறது. உயர்த்தப்பட்ட சாதியினருக்கு நீண்ட காலமாகக் குடிமைத்தொழில் செய்து வந்த சலவைத் தொழிலாளி குடும்பம் ஒன்று கல்வி நிலையில் முன்னேற்றம் காணுகிறது. கல்வி நிலை முன்னேற்றத்தினைத் தொடர்ந்து அவர்களின் பொருளாதாரமும் மேம்படுகிறது. இதனால், அக்குடும்பத்தின் பழக்கவழக்க நிலையில் பல மாறுதல்களும், முன்னேற்றங்களும் இடம்பெறத் தொடங்குகின்றன. இப்படி மாறுதல் கண்ட அக்குடும்பம் புதிய வாழ்க்கை முறைக்குள் அடியெடுத்து வைப்பதற்கு எடுக்கும் முயற்சிகள் சித்திரிக்கப்படுகின்றன. இந்த முயற்சிகளுக்கு இளைய தலைமுறை முனைந்து நிற்பதையும், முதிய பரம்பரை பாரம்பரியச் சிந்தனைகளிலிருந்து விடபட முடியாமல் திணறுவதையும் பிரளயம் நாவல் சுவையாக எடுத்தியம்பி நிற்கிறது.

இந்நாவலின் பிரதான கதாமாந்தர்களில் வேலுப்பிள்ளையும் ஒருவனாவான். இவனின் தொழில் உடுப்புகளைச் சலவை செய்வதாகும். மேலும், வேலுப்பிள்ளையின் மனைவி பொன்னு, மகன்களான இராசு, கனகசபை மற்றும் மகள்மார்களான ராணி, சுபத்திரா, கண்மணி போன்றோர் அடங்கிய ஒரு குடும்பமாகும். வேலுப்பிள்ளை வாழ்ந்த வீடு, அந்த நாளைய யாழ்ப்பாணத்து வீடொன்றினை அப்படியே படம்பிடித்துக் காட்டுகிறது. அதாவது, வேலுப்பிள்ளையின் வீடு கல்லால் கட்டப்பட்டு,

இரண்டு அறைகளையும், ஒரு விறாந்தையினையும் கொண்டிருந்தது. அந்த வீடு ஓலையால் வேயப்பட்டிருந்தது. மண்சுவர் எழுப்பப்பட்டு, சுவருக்குச் சுண்ணாம்பு அடிக்கப்பட்ட தூய்மையான ஒரு வீடாகும்.

அந்தநாளில் யாழ்ப்பாணத்து மக்களின் அனேக வீடுகள் ஓலைகளால் வேயப்பட்டும், வேலிகள் ஓலைகளால் அடைக்கப்பட்டும் இருந்துள்ளன. பனையோலைகள் தாராளமாகக் கிடைக்கும் ஒரு பிரதேசமாக யாழ்ப்பாணம் மிளிர்ந்திருக்கிறது. யாழ்ப்பாணத்துச் சாதியக் கட்டமைப்பிலே, வேளாளருக்கும் தாழ்த்தப்பட்ட சாதி மக்களுக்குமான உறவுநிலைகளில் சில வரையறைகள் இருந்திருக்கின்றன. கோவியர் எனும் சாதியினர் வேளாளர்களின் வீடுகளுக்குள்ளே சென்று சமையல் வேலை செய்தனர். அது மட்டுமன்றி வேளாளர்களில் யாராவது இறந்து போனால், அந்த உடலைச் சுடலைக்குக் காவிக்கொண்டு செல்பவர்களாக இக்கோவியர்களே இருந்திருக்கிறார்கள். வண்ணார், வெள்ளை கட்டும் நேரங்கள் தவிர ஏனைய நேரங்களில் வீட்டுக்கு வெளியிலேயே நிறுத்தப்பட்டிருக்கின்றனர். இவர்கள் போலவே வேறுசாதியினரும் வீட்டுக்கு வெளியே நிறுத்தப்பட்டிருந்தனர்.

நிலவுரிமையைப் பொறுத்தமட்டிலே அம்பட்டர், வண்ணார் சமூகத்தினருக்கு ஓரளவு நிலம் வழங்கப்பட்டிருந்தது. வேளாளர்களின் வீடுகளில் கோவியர்களுக்கு உரிமைகள் பல வழங்கப்பட்டிருந்தாலும் நிலவுரிமை அவர்களுக்கு மறுக்கப்பட்ட ஒன்றாகவே இருந்திருக்கிறது. இவ்வாறான ஒரு சூழலிலே சலவைத்தொழிலாளியான வேலுப்பிள்ளை தன் அடிப்படைத் தேவைகளை ஓரளவு பூர்த்தி செய்த நிலையிலே தன் குடும்பத்தோடு வாழ்ந்து வருகிறான். உயர் கல்வி பெறவேண்டும், தொழிலை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று வேலுப்பிள்ளையின் பிள்ளைகள் எண்ணுகின்றனர். பிள்ளைகளின் விருப்பங்களை அனுசரித்து அவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு நடக்கிறார், வேலுப்பிள்ளை. இம்மாற்றங்களை எதிர்ப்பவளாக வேலுப்பிள்ளையின் மனைவி பொன்னு விளங்குகிறாள்.

தாழ்த்தப்பட்ட சமூகத்தவர் கல்வி பெறும் வாய்ப்புக்கள் அதிகரித் திருந்தன. உயர்த்தப்பட்ட சாதியினரான கந்தையரின் மகள் மனோகரியும், சலவைத் தொழிலாளியான வேலுப்பிள்ளையின் மகள் ராணியும் ஒரே வகுப்பில் சம ஆசனங்களில், சமபோசனச் சூழலில் கல்வி பெறும் வாய்ப்பு ஏற்பட்டிருந்தது. தாழ்த்தப்பட்ட சமூகத்தவரும் பல்கலைக்கழகக் கல்வி பெறுவதற்காக ஏனையோருடன் போட்டியிடும் வாய்ப்பு இருந்தது. இது ஒரு வகையில், சாதியக் கட்டமைப்பின் சில அடிப்படை எண்ணங்களை உயர்த்தப்பட்ட சாதியினருக்கு எதி ராக முகிழ்தெழும் ஒரு செயற்பாடாகக் கருதிக்கொள்ளலாம்.

ஆலய வழிபாட்டு முறைமையிலே தாழ்த்தப்பட்ட சாதியினர் பலவிதமாக ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள். சிவன், உமை, பிள்ளையார், முருகன் போன்ற தெய்வங்களுக்குப் பெரியளவிலே ஆலயம் அமைத்து வழிபட்டு வரும் முறையினை உயர்த்தப்பட்ட சாதியினர் கொண்டிருக்க, வைரவர், காளி, ஐயனார், அண்ணமார், பெரிய தம்பிரான் ஆகிய தெய்வங்களை ஆலமரம், அரசமரம், பூவரசமரம் போன்ற பெரிய மரங்களின் அடியிலோ அல்லது ஓலைக்குடிசை யிலோ வைத்து தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் வழிபட்டு வந்தனர். உயர்த்தப்பட்ட சமூகத்தினரின் ஆலயங்களில் நடைபெறும் திரு விழா வைபவங்களில் தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்கு என ஒரு உபயம் ஒதுக்கப்பட்டிருக்கும். அந்தத் திருவிழாவிற்கான செலவுத்தொகையினை அந்த ஆலய நிர்வாகத்தினரிடம் வழங்கிவிட்டு ஆலயத்திற்கு வெளியே நின்று வழிபடும் உரிமை மாத்திரமே தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு வழங்கப்பட்டிருந்தது.

இத்தகைய அடக்கு முறைக்கு எதிராகவும், தமது ஏனைய உரிமைக்காகவும் தாழ்த்தப்பட்ட சாதியினர் போராட்டம் ஒன்றினை ஆரம்பித்தனர்.

- *சிறுபான்மைத் தமிழர் மகாசபை (1940)*
- இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி பிளவுபட்டபோது உருவான *சீனச்சார்புப் பொதுவுடைமைக் கட்சி (1960)*

இந்த நாவலில், கலட்டி அம்மன் கோயில் ஆறாந்திருவிழா வில் வேலுப்பிள்ளையின் மகன் இராசு தலைப்பாகை கட்டியபடி கோயிலுக்குள் தோரணம் கட்டு கிறான். இதனைக் கண்ட உயர்த்தப் பட்ட சாதியினர் கொதித்தெழு கின்றனர். கந்தையாவின் மகன் தங்க ராசு என்பவன் இராசுவுக்கு அடித்து விடுகிறான். சம்பவத்தை அறிந்த வண்ணார் சமூகத்தினர் திரண்டு வந்து நியாயம் கேட்கின்றனர். இச்சம்பவத்தைச் செங்கை ஆழி யான் பின்வருமாறு வர்ணிக்கிறார்.

"விதானையார் பக்கத்தில் பழையவர்களும் புதியவர்களும் கொதித்தபடி நின்றனர். வேலுப் பிள்ளையின் பக்கத்தில் புதியவர்கள் மட்டும் கொதித்தபடி நின்றனர்"

இந்த வர்ணனை மூலம் தாழ்த்தப்பட்ட சமூகத்தினரிடம் ஏற்பட்டிருந்த மனவெழுச்சியினை யும், உரிமைப்போராட்ட உணர் வினையும் உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. இருபகுதி யினருக்கும் இடையே நடந்த கடுமையான வாக்குவாதத்தின் ஒரு கட்டத்திலே "நடந்தது போகட்டும், சமாதானமாகப் போவோம், திரு விழாவிற்குச் சோடிக்க விடுங்கோ" என்று வேலுப்பிள்ளை சமாதானம் செய்ய முயல்கிறார்.

"இனி உங்களுக்குத் திரு விழாவோ? உது சரிவராது" என்று விதானையார் சொல்வதன் மூலமாய் சாதிய ஆதிக்கத்தை மீண்டும் நிலை நிறுத்த முயற்சிக்கிறார்.

இதற்கிடையில் சாதிப் பெயரை இழுத்துப் பேசிய தங்கராசு வைத் தாக்குவதற்குச் சின்னத்தம்பி வெகுண்டெழுந்தபோது விபரீத மாகப் போகக்கூடிய சூழ்நிலையை உணர்ந்து கொண்ட விதானையார் "இந்த வருசம் மட்டும் செய்யுங்கோ" என்று நிலைமையச் சமாளிக்க முயல்கிறார். இந்த இரண்டு சம்பவங் களும் இரண்டு விடயங்களை வாசகர்களுக்கு எடுத்துச் சொல் வதைக் காணலாம்.

- தீண்டாமைக்கு எதிராகப் போராடுவதிலே தாழ்த்தப்பட்ட மக்களின் மனவுறுதி.
- உயர்தப்பட்ட சாதி

யினரிடையே ஏற்பட்டிருந்த தளர்ச்சி. இவை யாழ்ப்பாணச் சமூகத்தில் சாதி பற்றிச் சொன்ன செய்திகளில் சில சம்பவங்களே.

**அக்கினி**

இது 1991 ஆம் ஆண்டு வெளிவந்தது. இந்த நாவலிலே இரண்டு விடயங்கள் முக்கியமான இடத்தைப் பெற்றிருந்தன.

- இன விடுதலைக்கான போராட்ட முனைப்புகள்.
- சாதியம் தொடர்பான நெகிழ்ச்சி.

இந்நாவலில் வரும் முக்கிய பாத்திரங்கள், மாணிக்கவாசகர் குடும்பம், பெரிய வீட்டுப் பொன்னம்மா குடும்பம், கந்தையா குடும்பம், வெளிநாட்டு வருமானத்தில் வசதியாக வாழும் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த சுப்பர் குடும்பம். தேநீர்கடை மூலம் கிடைக்கின்ற சிறு வருமானத்தில் வாழ்ந்து வருகிறது மாணிக்கவாசகர் குடும்பம். முப்பது வயதையும் தாண்டி திருமணம் இன்றி வாழும் மகள் கலாவதி, தரப்படுத்தலின் விளைவாகப் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பை இழந்த மகன் கந்தசாமி, இளைய மகள் கவிதா, நிரந்தர நோயாளியான மனைவி என ஐந்து நபர்களைக் கொண்டது கொண்டது மாணிக்க வாசகரது குடும்பம்.

கந்தசாமியின் நண்பன் கனகசபை தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவன். கனகசபை வெளிநாட்டில் நின்று கடுமையாக உழைத்து தன் குடும்பத்தை வசதியுள்ள குடும்பமாக மாற்றியவன். வெளிநாட்டு உழைப்பில் கல்வீடு கட்டி, ரீ.வி, டெக், மோட்டார் சைக்கிள் வாங்கி வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக்கொண்டான். தனது குடும்பம் பெற்ற பொருளாதார வளர்ச்சியின் மூலம் தம்மீது திணிக்கப்பட்ட சாதியத்தின் இழிநிலைப் போக்கு நீங்கிவிடும் என எண்ணுகின்றான். தாம் உயர்த்தப்பட்ட சாதியினருக்கு இணையான அந்தஸ்தினைப் பெற்றுவிட்டதாகக் கருதும், கனகசபை கடைசியில் ஏமாற்றமடைகிறான். அந்த ஊரின் சன சமூக நிலையக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய பொதுவுடைமைக் கட்சி வேட்பாளர் மற்றும் சின்னத்துரை, கந்தசாமி ஆகியோர் பொதுவுடைமை சார்ந்த கருத்துக்களைக் கொண்டிருந்தனர். கனகசபை இது தொடர்பான குழப்பங்களுக்குள்ளாகிப் பின்னர் தெளிவடைகிறான்.

"சாதி வேறுபாடு அழிந்துவிடவில்லை. அது நாறிக்கொண்டுதான் இருக்கிறது. சாதிப்பாசியை ஒரு வெயிலால் மட்டும் உலர்த்தி விட முடியாது. அடிமை, குடிமை ஒழிப்புகள் எல்லாம் சமூக அந்தஸ்த்தை ஏற்படுத்தப் போவதில்லை" என்று பேச்சாளர் பேசி முடித்தார். இதற்கான பதில் பேச்சாக கனகசபையின் பேச்சு பின்வருமாறு இருந்தது.

"அந்தஸ்த்து என்பது அவர்களாற் தரப்படுவதில்லை. பணத்தையும், படிப்பையும் தேடிக்கொண்டால் நீங்கள் குறிப்பிடுகின்ற அந்தஸ்த்துக் கிடைத்துவிடும். நான் எனக்குரிய அந்தஸ்த்தை இந்தச் சமூகத்தில் தேடிக்கொண்டிருக்கிறன். எங்களைச் சமூகத்தின் கீழ்மட்டத்தில் போட்டு நசுக்கிய வறுமையை, நான் பணத்தினைத் தேடியதன் மூலம் வெற்றி கண்டிருக்கிறன். என் தம்பி ஏ.எல். படிக்கிறான். நிச்சயமாக யூனிவெஸ்சிற்றிக்குப் போய் டொக்டராக வருவான். நீங்கள் சொல்கிற அந்தஸ்த்து அப்போது தானாக வந்துவிடும்" என்று கனகசபை பேசி முடித்தான்.

பின்னர் ஒருநாள், தனது தம்பி சிவபாலன் உயர்த்தப்பட்ட சாதிப் பெண்ணைக் காதலித்த காரணத்திற்காக, அந்தச் சமூகத்தவர்களால் சிவபாலன் கடுமையாகத் தாக்கப்படுகிறான். அப்போதுதான் சிவபாலன் ஒரு முடிவுக்கு வரத்தொடங்கினான். அதாவது, "யாழ்ப்பாணச் சமூகத்திலிருந்து சாதியத்தின் வேர்களைப் பிரித்தெடுக்க முடியாது" என்று.

ஒருமுறை, கனகசபை வெளிநாட்டிலிருந்து வந்து நின்றபோது அவனை இனங்கண்டு கொண்ட மாணிக்கவாசகர், "எட நம்மட சுப்பன்ர பொடி கனகுவே" என்று சொல்ல நினைத்துப் பின்னர், "தம்பி கனகசபையோ?" என வினாவுகிறார்.

"ஓம் ஐயா" என்று பதில் கூறும் கனகசபை, "ஓம் அண்ணை" என்று பதில் கூறுகிறான்.

மாணிக்கவாசகரின் வீட்டுக்கு கனசபை வந்தபோது அவனை மரியாதை செய்கின்றனர். வீட்டின் நடு மண்டபத்திலே கதிரையில் அமரச் செய்கின்றனர். எவர்சில்வர் பாத்திரத்தில் தேநீர் வழங்குகின்றனர். மாணிக்கவாசகர் குடும்பத்தினர் கனகசபையை தமது குடும்பத்திலுள்ள ஒருவனாகக் கருதி பழகுகின்றனர். ஒருமுறை கனகசபையிடம் மாணிக்கவாசகர், தனது மகன் கந்தசாமியை வெளிநாட்டிற்கு அனுப்புவதற்கு உதவி செய்யுமாறு கேட்கிறான். அடுத்த சில நாட்களில் மாணிக்கவாசகர் சிங்கள இராணுவத்தனரின் குண்டு பட்டு இறந்து போகிறான். மாணிக்கவாசகரின் சிரார்த்த தினத்தில் கனகசபையுடன் சமபந்தி உணவு உண்கிறான், கந்தசாமி.

தாழ்த்தப்பட்ட மக்கள் உயர்த்தப்பட்ட சாதியினரின் வீடுகளில் குடிமை வேலை செய்யும் நிலைமை மாறிவருகின்றது. அதாவது,

- உயர்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த கந்தையர், கனகசபை வீட்டில் கூலி வேலை செய்கிறார்.
- கனகசபை கொடுத்த அன்பளிப்புப் பொருட்களை கந்தையர் மனவிருப்புடன் வாங்கிக்கொள்கிறார்.
- கனகசபை வீட்டார் கொடுக்கின்ற தேநீரை வாங்கிக் குடிக்கிறார்.

பெரியவீட்டுப் பொன்னம்மா கனகசபை வீடு தேடி வந்து கடன் வாங்கிச் செல்கிறாள். பின்னர் கடன் பணத்திற்கான வட்டியை கனகசபையின் வீடு தேடி வந்து கொடுத்துச் செல்கிறாள். தந்தையை இழந்த கந்தசாமி குடும்பத்திற்கு உதவ கனகசபை முன்வருகிறான். வெளிநாடு செல்வதற்காக கந்தசாமி கொழும்பு சென்று கொண்டிருந்த போது, ஆனையிறவில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்படுகின்றான். அங்கிருந்து பூசா முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்ட கந்தசாமி பல சித்திரவதைக்கு உள்ளாகின்றான். கந்தசாமி விடுதலை பெற்று வருகின்றான். யாழ்ப்பாணம் விமானக்குண்டுகளால் குளித்துக் கொண்டிருந்தது. இதனால், மக்கள் பலர் இறக்கின்றார்கள். இந்நிலை

கண்டு கந்தசாமி இயக்கத்தில் தன்னை ஒரு விடுதலைப் போராளியாக இணைத்துக் கொள்கிறான். அவனைத் தொடர்ந்து கனகசபையும் இயக்கத்தில் இணைந்து கொள்கிறான்.

கலாவதிக்கும் சங்கக்கடை மனேச்சர் தில்லைநாதனுக்கும் கல்யாணம் நிச்சயமாகிறது. திருமணம் நடைபெறும் முன்பாகவே இருவரும் நெருங்கிப் பழகுகிறார்கள். கலாவதி கற்பமாகிறாள். தில்லைநாதன் விமானக்குண்டுத் தாக்குதலில் அகப்பட்டு இறக்கிறான். விதவையான கலாவதி தனது வயிற்றில் வளரும் கருவை விடுதலை வேள்விக்கான அக்கினி என வர்ணித்துச் சபதம் செய்கிறாள்.

யாழ்பாணத்தில் சாதிப்பாகுபாடுகளின் ஏற்றத்தாழ்வுகள், அது தொடர்பான கலவரங்கள், அதனால் ஏற்பட்ட மனித சாவுகள் நிறையவே நடந்தேறி இருக்கின்றன. இவை மட்டுமன்றி சிங்கள இராணுவத்தின் குண்டுகளால் யாழ்ப்பாணத்து மக்களும், மக்களின் வாழ்வியலும் பலவாறு சிதைக்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்நாவல் ஊடாகவும் பார்க்க முடிகிறது.

**அக்கினிக்குஞ்சு**

இக்கதையில் செல்வம் என்கிற இளைஞனுக்கும் சின்னராசு என்கிற ஓரளவு வயதானவருக்கும் இடையே இடம்பெற்ற உரையாடல்கள் சாதி சார்ந்த நிலை எந்தளவு வீச்சுப் பெற்றிருந்தது என்பதைக் காணலாம்

- "சிங்களவர் நம்மை அடக்குகிறார்கள் என்று கூக்குரலிடுகிறோம். ஆனால், அந்தச் சமூக அநீதி நம்மிடம் இல்லையா? சாதியின் பெயரால் நாம் எத்தனை மக்களை ஒதுக்கி வைத்திருக்கிறோம்? அவர்களைப் பாமரராய், விலங்குகளாய் நடத்தி வருகிறோம். அவர்களுக்குரிய சமூக உரிமைகள் மறுக்கப்பட்டிருக்கின்றனவே!" என்று சின்னராசு கூறுகிறான்.
- "சின்னராசு நீ நினைப்பது போன்று இன்று சாதிக்கொடுமை யில்லை. முப்பது, நாப்பது வருடங்களுக்கு முன்னர் இருந்த சமூக அமைப்பையும் இன்றுள்ள நிலைமையையும் புரியாமல் பேசுகிறாய்..." என்று செல்வம் பதில் கூறுகின்றான்.

சின்னராசுவுடன் தொடர்ந்தும் தங்கியிருந்தால் இராணுவத்தால் அல்லது பொலிசாரால் தனக்கு ஆபத்து வரக்கூடும் என செல்வம் அஞ்சுகிறான். இதனால், செல்வம் தன் ஊரை விட்டு இன்னுமொரு கிராமத்திற்குச் செல்கிறான். அங்கே மதிவாணன் என்னும் நண்பனின் வீட்டில் தங்குகிறான். அவன் ஆசிரியத் தொழில் செய்பவன். அங்கே சாதியம் தொடர்பாகச் சின்னராசு குறிப்பிட்ட நிலைமையினை காண்கிறான். அக்கிராமத்தில் ஆலயம் ஒன்றின் திருவிழா தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினையை மதிவாணன் எடுத்துக் கூறுகிறான். "இப்பவும் இப்படிச் சாதிப் பிரச்சினையா?" என்று செல்வம் ஆச்சரியப்படுகிறான். தன் கிராமத்தில் நிலவிய சாதி வேற்றுமையை மதிவாணன் பின்வருமாறு விளக்கிக் கூறுகிறான்.

- இப்படிப்பட்ட கிராமங்களில் அதன் விஷ்வரூபத்தைக் காணலாம். கோயில்களுக்குப் போவது..., தேநீர் கடைகளில் சமமான இடமின்மை..., பள்ளிக்கூடங்களில் அனுமதியின்மை..., கிடைத்தாலும் பிரிவினை காட்டுதல்..., கிணறுகளில் தண்ணீர் அள்ளத் தடை இப்படி எத்தனையோ அநியாயங்கள் இக்கிராமத்தில் நடக்கின்றன. ஒரு பகுதியினருக்குள்ள உரிமைகள் இன்னொரு பகுதியினருக்கு மறுக்கப்படுகின்றன."

ஒரு சமூகம் கல்வி, பொருளாதாரம், நிலவுடைமை, பழக்க வழக்கங்கள் இவற்றிலே சரியான வளர்ச்சி நிலையினை எட்டியிருந்தாலும்கூட சாதியத்தின் அடிப்படைகளில் மாற்றம் பெற்றுவிடாது என்பதற்கு இவை சில சான்றாதாரங்களாகும்.

**கிடுகுவேலி**

யாழ்ப்பாணத்து இளைய குடும்பத்தவரின் வாழ்வியல் பிரச்சினைகளைக் கூறும் நாவலாக இது இருக்கிறது. உள்நாட்டு யுத்த சூழலில், யாழ்ப்பாண பூமி யுத்த பூமியாக மாறியிருந்தது. வேலை வாய்ப்பு என்பது பாரிய பிரச்சினையான விடயமாக மாறியிருந்தது. இதனால், இளையவர்கள் குவைத், சவுதி, லிபியா போன்ற தேசங்களுக்கு வேலைவாய்ப்பினைத் தேடி ஓடுகிறார்கள். யாழ்ப்பாணத்து இளைஞர்கள், சகோதரிகளின் வாழ்வை நிர்ணயிப்பதில் அதிக அக்கறை உடையவர்களாக இருந்தார்கள். ஒருவனுக்கு மூன்று அல்லது நான்கு சகோதரிகள் இருந்துவிட்டால் அவனது வாழ்க்கை சுமைதாங்கியின் கதையாகவே மாறிவிடும். ஏனென்றால், ஒரு பெண்ணைக் கரை சேர்ப்பது என்றால் சீதனம் முட்டுக் கட்டையாக அமைந்துவிடுகிறது. இதற்காக அவ்விளைஞன் கடுமையாக உழைக்கவேண்டி இருக்கும். இப்படியான சூழ்நிலையில் பெற்றோர் பெரும்பாலானோர் தம் பெண் பிள்ளைகளின் திருமணத்திற்குரிய மூலதனமாக தமது ஆண்பிள்ளைகளை நம்பியிருந்தனர். தனது சகோதரிகளுக்குத் திருமணம் செய்து வைத்துத் தானும் இல்லற வாழ்வில் இணைவதாயின் ஓர் ஆண் தனது இளமை வாழ்வின் ஒரு பகுதியை இழந்து விடுகிறான். இப்படியான சம்பவங்கள் யாழ்ப்பாணத்தில் அதிகமாக நடந்திருக்கின்றன. நடந்து கொண்டுமிருக்கின்றன. அவற்றையெல்லாம் செங்கை ஆழியான் தனது நாவல்களில் காட்டியிருக்கிறார்.

இந்தமாதிரி ஒரு இறுக்கமான சூழலில் வாழ்ந்த யாழ்ப்பாணத்து இளைஞர்களுக்கு, இப்படியான பிரச்சினையிலிருந்து விடுபடுவதற்கு மூன்று வழிகள் இருந்துள்ளன.

- அதிக சம்பளம் தரக்கூடிய வேலைவாய்ப்புகளைத் தேடி மத்திய கிழக்கு நாடுகளுக்கோ, மேற்கு நாடுகளுக்கோ புலம்பெயர்ந்து செல்லுதல்.
- பெருமளவு சீதனம் பெற்றுத் திருமணம் செய்துகொள்ளுதல்.
- மேற்படி இரண்டையுமே செய்யக்கூடிய சம்பவங்கள்.

கிடுகுவேலி நாவலிலே வருகின்ற பிரதான பாத்திரமான சண்முகத்தின் வாழ்க்கையில் இவை இரண்டும் நிகழ்கின்றன.

சண்முகம் ஒரு இலட்சம் ரூபாவினைச் சீதனமாக வாங்கி நிர்மலாவைக் கல்யாணம் செய்து கொள்கிறான். சண்முகம் திருமணம் செய்து சில மாதங்களிலேயே தன் தங்கை ஒருத்திக்குத் திருமணம்

செய்து வைக்கின்றான். ஏனைய தங்கைமாருக்கும் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று நினைத்த சண்முகம், குவைத் நாட்டிற்கு வேலை வாய்ப்பினைத் தேடிச்செல்ல முனைகின்றான். நிர்மலா சண் முகத்தின் வெளிநாட்டுப் பயண எண்ணத்தை அறவே நிராகரிக் கின்றாள். அதையும் மீறி சண்முகம் குவைத் நாட்டிற்குப் பயணமா கின்றான். இந்நிகழ்வே சண்முகம் - நிர்மலா குடும்ப உறவில் விரிசலை ஏற்படுத்த அடித்தளமாக அமை கிறது. சண்முகம் சீதனம் பெற்றுக் கொண்டதற்கு அவனது குடும்பப் பொருளாதார வறுமை காரணமாக இருந்திருக்கிறது. நிர்மலாவின் குடும்பத்தைப் பொறுத்தமட்டில் சீதனம் என்பது அவர்களின் அந்தஸ்த்தைப் பேணும் ஒரு கருவி யாக இருந்திருக்கிறது. யாழ்ப் பாணத்துச் சமூகத்தைப் பொறுத்த மட்டில், பொருளாதார வசதி படைத்த பெற்றோர் பெரும்பாலா னோர், தமது பெண் பிள்ளை களுக்குத் திருமணம் செய்து வைக்கும் தருணங்களில் இரண்டு விடயங்களில் கருத்தாயிருந்தனர்.

- தமது பிள்ளைகளின் எதிர் காலப் பொருளாதாரத்தை உறுதிப் படுத்தல்.
- சமூக அந்தஸ்த்தை உயர்த்திக்கொள்வது.

இவ்விரு நோக்கங்களையும் மனதிலே நிறுத்திய பெற்றோர் தமது பிள்ளைகளுக்கான வரன்களைத் தேர்ந்தெடுக்கும்போது, அதிக சம்பளம் பெறக்கூடிய, உயர் உத்தி யோகம் பார்க்கும் ஆண்களையே தெரிவு செய்து திருமணம் முடித்து வைத்தனர். இத்தகைய தகைமை களோடு வறுமைநிலைக் குடும்பங் களிலிருந்து வரன்களைப் பெறுவது இவர்களுக்கு வசதியாகவும் இருந்தது. குவைத் நாட்டிற்குச் சென்ற சண்முகம் ஐந்து வருடங் களின் பின்னர் நாடு திரும்புகின்றான். நாடும் திரும்பும் தன் புருசனை வர வேற்க விமானநிலையம் செல்வதை நிர்மலா தவிர்க்கிறாள். யாழ்ப்பாணம் வந்திறங்கிய சண்முகம் நேரே தன் தாய்வீடு செல்கின்றான். இதனை அறிந்த நிர்மலா அங்கே செல்கின்றாள்.

தன் புருசனின் வீடு சென்ற அவள், "இனியாவது என் புருசனை என்னுடன் வாழவிடுங்கள்" என்று கூறுகிறாள். இதற்குப் பிறகு சண்முகம், நிர்மலாவின் வீடு வந்து சேர்கின்றான். சண்முகம் உடலின்ப வேட்கையுடன் தவித்தபடி இருந்தான். அப்படியொரு இன்பநிலை வரும் போதெல்லாம் நிர்மலாவுடன் அவன் அணுகினான். இப்படி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நிர்மலா பக்குவமாக விலகி நடந்தாள். ஆனாலும், ஒரு மனைவி என்ற நிலையில் ஒரு கணவனுக்குச் செய்யவேண்டிய கடைமைகள் எல்லாவற்றையும் அக்கறையுடன் செய்து வந்தாள். உடலின்பச் சுகம் என்பது ஆண், பெண் இருவருக்குமானது. ஆனாலும், தனது உள்ளத்து உணர்ச்சிகள் யாவற்றையும் அடக்கிக்கொண்டு தன் கணவனைப் பழிவாங்கினாள். இப்படியொரு பழிவாங்குதல் மூலமாக கணவனைத் தன் வழிக்குக் கொண்டு வரலாம் என்று நிர்மலா நினைத்தாள். அதை வெளிக்காட்டுபவ னாக சண்முகம் தெரிந்தான். உடலின்பத் தேவைக்காக அவளை அணுகும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் "சண்முகம் தனது தாய்வீட்டுக்குப் போவதில்லை" என்று சத்தியம் செய்து தரவேண்டும் என்று நிபந்தனை விதிக்கிறாள். அதற்கு சண்முகம் மறுக்கிறான்.

"நீங்கள் கல்யாணம் செய்திருக்கக்கூடாது. கடைசிவரை உங்கள் சகோதரிகளைக் கரை சேர்த்துவிட்டுக் கல்யாணம் செய்திருக்க வேண்டும்" என்று நிர்மலா கூறுகிறாள்.

சண்முகத்தின் தந்தையையும், தங்கை செல்வத்தையும் தவிர வேறெவருமே சண்முகம்-நிர்மலாவின் சந்தோசமான வாழ்க்கை பற்றிச் சிந்திக்கவே இல்லை. அவன் எங்கள் குடும்பத்திற்காக எவ்வளவோ உதவிகள் செய்திருக்கிறான். எங்கள் மீது இப்பொழுதும் அன்பாகவே இருக்கின்றான். கல்யாணம் செய்து போன அவனிடமிருந்து மீண்டும் மீண்டும் உதவிகள் பெறுதல் என்பது அறமாகாது, என்று யாருமே நினைக்க வில்லை. வீடு கட்டுவதிலும், வீட்டிற்குத் தேவையான ஆடம்பரப் பொருட்களைச் சேர்ப்பதிலுமே கண்ணாக இருந்திருக்கின்றனர். இன்னொரு குடும்பத்தவரின் உழைப்பைத் தாங்கள் பயன்படுத்துகிறோம் என்றோ, இன்னொரு பெண்ணினுடைய வாழ்க்கை அதனுள் கரைந்து கொண்டிருக்கிறோம் என்பதையோ நினைத்து அவர்கள் கவலைப்படவே இல்லை.

**வாடைக்காற்று**

யாழ்ப்பாணம் - நெடுந்தீவு மீனவ சமூகத்தின் வாழ்வியல் கூறுகளைத் துல்லியமாகவும், அற்புதமாகவும் படம் பிடித்துக்காட்டுகிறது, இந்த நாவல். இந்நாவலிலே,

- நெடுந்தீவில் மீன் பிடிக்க வரும் வெளியூர் சம்மட்டிகளுக்கும், நெடுந்தீவு மக்களுக்கும் இடையிலான உறவுகளையும் முரண்பாடுகளை யும் சித்திரிக்கிறது.
- மீன்பிடிப்பதிற் சம்மட்டிகளுக்கிடையே நிலவும் போட்டியும், அவர்கள் உள்ளூர்ப் பெண்களுடன் கொள்ளும் காதல் தொடர்புகளுமே இந்நாவலின் கதையம்சமாகும்.

சம்மாட்டிமார்களான சிமியோனும், மரியதாசும் முறையே உள்ளூர்ப் பெண்களான பிலோமினாவையும், நாகம்மாவையும் காதலிக் கின்றனர். முறைப்பெண்ணான நாகம்மாவை விரும்பிய உள்ளூர்க்காரரான விருத்தாசலம் தன் காதலைக் கைவிட்டு அவளை மரியதாசுடன் இணைத்து வைக்கிறான். பிலோமினா சுடலைச் சண்முகத்தால் கற்பழிக்கப்பட்டு இறக்கிறாள். இதையறிந்த விருத்தாசலம் சண்முகத்தைக் கொலை செய்கிறான். இயற்கை வருணனை, கருப்பொருள் வர்ணனை என்பவற்றுடன் காதற்சுவை கலந்து எழுதப்பட்ட இந்நாவிலின் சம்பவங்கள் இயற்கைப் பகைப்புலத்திற் பொருந்தவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டு இருந்து வருகிறது. எப்படியிருந்த போதும், மீனவர்கள் அன்றாடம் பயன் படுத்திக்கொள்ளும் சொற்களையும், மீன்பிடித்தொழில் நுணுக்கங் களையும் மிக உயர்ந்த கலை அழகோடு சித்திரித்துள்ள விதம் பாராட்டக் குரியதாகும்.

**நகைச்சுவை நாவல்கள்**

ஈழத்திலே முதல் நகைச்சுவை நாவலைப் படைத்த பெருமை செங்கை ஆழியானையே சேரும். அந்த வகையில் "ஆச்சி பயணம் போகிறாள்" என்கிற நாவலே முதலாவதாக வெளிவந்த நாவலாகும். மேலும், "முற்றத்து ஒற்றைப்பனை", "கொத்தியின் காதல்" ஆகியவை இவரின் ஏனைய நகைச்சுவை நாவல்களாகும். இவை எல்லாமே யாழ்ப்பாணத்து சூழலையும், அவர்களின் பழக்கவழக்கங்களையும் சொல்லும் சுவையான சம்பவப்பதிவுகளாகும்.

**ஆச்சி பயணம் போகிறாள்**

யாழ்ப்பாணக் கிராமம் ஒன்றிலே கிணற்றுத் தவளையாக வாழ்ந்த செல்லாச்சிக்கிழவி வெளியுலகம் காண விரும்பிப் பயணம் செய்கிறாள். இப்படிப் பயணம் செய்யும் போது ஆச்சி காணும் சம்பவங்களும், அச்சம்பவங்களால் ஆச்சியின் மனதிலே தோன்றும் உணர்வுகளையும் சொல்கிறது இந்த நாவல். ஆச்சியின் மகன் சிவராசா, அவனின் முறைப்பெண் செல்வி ஆகிய இருவரும் காதலிக்கின்றனர். இவர்கள் இருவரோடும் சேர்ந்து ஆச்சியும் கதிர்காமம் கோயில் பார்க்கப் புறப்படுகின்றாள். இப்பிரயாணம் கோண்டாவில் புகைவண்டி நிலையத்தில் ஆரம்பமாகிப் பொல்கவல, கண்டி ஊடாக நடைபெறுகிறது. சிவராசா, செல்வி ஆகிய இருவரின் காதல் குறும்புகளும், ஆச்சியின் ஒவ்வொரு செய்கையும் நகைச்சுவை விருந்தாகச் சொல்லப்படுகிறது. பிரயாணத்தின் போது ஆச்சியினுடைய முதிய தலைமுறை மனப்போக்குடன் அக்கால இளைய சமுதாயநிலை மனப்போக்கு அணுகப்படுகிறது. அப்போது அவர்களுக்கிடையே முரண்நிலை ஏற்படுகின்றது. இவ்வாறான முரண்நிலையினைகளுக்கிடையே நடைபெறும் உரையாடல்களை நகைச்சுவையாகக் கோர்த்து யார்த்தவிதம் அலாதியானது.

**முற்றத்து ஒற்றைப்பனை**

பனையில் விட்டம் போட்டு காற்றாடி விடுகின்ற யாழ்ப்பாணத்துப் பட்டம்விடும் பாரம்பரியம் இந்நாவலிலே அழகாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. இக்கதையின் கதாநாயகன் கொக்கர் மாரிமுத்து ஆவார். அவரது வீட்டு முற்றத்திலே உயரமான ஒற்றைப்பனை ஒன்று நிமிர்ந்து நிற்கிறது. அதிலே விட்டம் போட்டு தன் கொக்குப் பட்டத்தை பறக்க விடுகிறார், மாரிமுத்தர். இது அவருக்குள் பெரும் புழுகத்தை ஏற்படுத்தி நிற்கும் ஒரு செயற்பாடாகும். கொக்குப்பட்டம் கட்டுவதிலும், அதனைப் பறக்க விடுவதிலும் தன் திறமையினை நிரூபிப்பது மட்டுமல்லாமல், தான் ஒரு விண்ணன் என்பதையும், தனக்குள்ளே பெருமையாக நினைத்துக் கொள்வார். கொக்கர் மாரிமுத்து வீட்டில் உயர்ந்து நிற்கின்ற அந்த ஒற்றைப்பனை தனது வீட்டின் மேல் காற்றுக்கு முறிந்து விழுந்து விடுமோ என்று பயப்படுகின்றார் அலம்பல் காசிநாதர். இவர் மாரிமுத்துவின் மைத்துனராவார். அலம்பல் காசிநாதருக்கும், மாரிமுத்துவுக்கும் இடையே வளர்ந்து வரும் பகைமை உணர்வை வைத்துப் புனையப்பட்ட ஒரு நகைச்சுவை நாவலாக "முற்றத்து ஒற்றைப்பனை" எனும் நாவலை நோக்கலாம்.

உரையாடல்களின் போது யாழ்ப்பாணக் கிராமத்து நடை முறைச் சொற்களை பாத்திரங்களின் ஊடாக பட்டுத்தெறிக்க விடுகிறார்.


- "அம்மான் அயலுக்கை கொளுவக்கூடாது பாருங்கோ? காசிநாதர் இப்ப உங்களிட்டை என்ன கேட்கிறார். இந்தப் பனையைத் தறிக்கச் சொல்லித்தானே? தன்ரை வீட்டுக்கு மேலே விழுந்திடும் என்று பயப்படுகிறார்.."
- "அவற்றை வீடாமே? அது என்ரை மருமோளின்ரை சீதனவீடு. சீதனமாகக் கொடுத்த பிறகு உவருக்கென்ன உரிமை"
- அம்மான், கோவியாதையுங்கோ! காசிநாதர் மட்டுமல்ல... இன்னும் பலரும் பெட்டிசம் போட்டிருக்கினம்..! உங்கடை வீட்டிற்கும் ஆபத்துத்தானே அம்மான்..."

இப்படி இயல்பான, சுவார்சியமான உரையாடல்கள் மூலமாக யாழ்ப்பாணத்துப் பேச்சோசைப் பண்புகளைப் பயன்படுத்திய விதங்களையும் அதிகமாவே காணலாம்.

**முடிவுரை**


கதை நிகழும் களம் பற்றிய சித்திரிப்பு நாவல் இலக்கியத்தின் முக்கியமான ஓர் அம்சமாகும். அதுவே கதைப்பொருளுக்குத் தெளிவையும், வலுவையும், பொலிவையும் தந்துவிடுகிறது. செங்கை ஆழியான் தனது நாவல்களில் கதை நிகழ்வுகளைச் சித்திரிப்பதற்கு அக்களத்தினை மிக உன்னிப்பாகக் கையாண்ட சிறந்த படைப்பாளியாவார். இங்கே சொல்லப்பட்ட நாவல்கள் யாவும் யாழ்ப்பாணக் கதைக்களத்தை கொண்டவை. இந்நாவல்களில் வருகின்ற ஒவ்வொரு பாத்திரமும் அவற்றின் உரையாடல் மொழியும், அப்பாத்திரம் செயற்படும் சூழலும் மிக நுண்மையாக கையாளப்பட்டிருப்பதைக் காணலாம். மேலும், யாழ்ப்பாணப் பிரதேச வழக்குச் சொற்கள், மரபுத் தொடர்கள், பொருத்தமான உவமையணிகள், உருவக அணிகள், பாத்திரங்களின் குணவியல்புகள், பாத்திரங்களின் மனவுணர்வுகள் வெளிப்படுத்தும் உரையாடல்கள் மற்றும் வர்ணனைகள் யாவும் யாழ்ப்பாணத்துப் பழக்கவழங்கங்களோடு அப்படியே காட்டுவதையும் உணர்ந்துகொள்ளலாம்.

இவ்வாறு, செங்கை ஆழியான் தனது நாவல்களின் ஊடாக யாழ்ப்பாணத்துச் சமூக மரபுகளைப் படம் பிடித்துக் காட்டியுள்ள விதத்தால், எக்காலமானாலும், எத்தேசம் சென்றாலும் அவை அழியாது நினைவூட்டிக் கொண்டுதான் இருக்கப் போகின்றன. இலக்கியம் காலத்தின் கண்ணாடி என்ற அந்தக் கூற்றும் இங்கே உண்மையாகி வருகிறது. மக்களிடம் உள்ளதை மக்களிடம் இருந்து பெற்று மக்களுக்கு வழங்கிய முறையால் செங்கை ஆழியான் தான் எடுத்துக்கொண்ட இலக்கிய முயற்சிகளில் வெற்றி பெற்றிருக்கின்றார் என்பதற்கு இவை நல்ல உதாரணங்கள், ஆகும்.



# பெருவாரிப் பிரதியாளி செங்கை ஆழியானின் “ருத்திர தாண்டவம்”


இ.சு.முரளிதரன்




ஈழத்துப் புனைகதைப்புலத்தில் பெருபெருவாரிப் பிரதியாளியாக செங்கை ஆழியான் அடையாளப்படுத்தப்படுகின்றார். ஒற்றைத்தள வாசிப்புக்குரிய சாத்தியங்களைக் கொண்ட பைங்கிளி எழுத்து வகைமையினை திறம்பட வெளிப்படுத்தியவர். திரள் வாசகர் பண்பாட்டிற்கு வலிமை சேர்ப்பதாக அவரது புனைவுகள் அமைந்துள்ளன. வன்னி மாவட்டத்தில் நிர்வாகசேவை அதிகாரியாகப் பணியாற்றிய அனுபவங்கள், புவியியல் சார்ந்த புலமை, அரசியல் நிகழ்வுகளின் தகவல் சேகரம், பெருவாரிப் பிரதியாக்கப் பயிற்சி என்பன இணைந்து “ருத்திர தாண்டவம்” நாவலுக்கு உரம் சேர்த் துள்ளன. தமிழரின் போராட்ட நியாயங்களையும், இறுதிப் போரின் தோல்வியினையும், சமராளிகளின் வன்மங்களையும், தலைமை குறித்த விமர்சனத்தையும் கலந்து நாவலொன்றை எழுதிவிட வேண்டுமென்ற அவாவின் விளைச்சலே “ருத்திர தூண்டவம்” என்பதை பிரதியை வாசிக்கும் போது இலகுவாக இனங்காண முடிகிறது.

கொடூர யுத்த காலமொன்றில் கேட்டறிந்த நிகழ்வுகளையும், உறவுகளின் அனுபவங்களையும் ஆவணமென்ற தட்டையான கோணத்திலிருந்து விலத்தி நாவலாகக் கட்டமைத்ததில் செங்கை ஆழியானின் ஆளுமை பாராட்டுப் பெறுகிறது. புனைவின் அனுபவத்தை யதார்த்தத்திற்கு வெகுஅருகிலே கொண்டுசென்றுள்ளார். அதிகார அடுக்குகளை குலைத்துப் போடும் வகையிலே வினாக்களை எழுப்ப முயன்றுள்ளார். அகலப் படுத்திய அரசியல் தரிசனமின்மையால் நாவலில் பல இடங்களிலே இடர்பட்டுள்ளார். தனக்கே உரித்தான கதை சொல் முறைமையின் தேக்கத்தால் உரியகவனக் குவிப்பினை பெறாமலே போய் விட்டார். நாவலின் முகப்பிலே காணப்படும் “Master Piece” என்னும் விளம்பர அடையாளப்படுத்தல் வர்த்தக நோக்கம் கொண்ட்தென்பது வெளிப்படையானது.

தமிழ்த்தலைமை மீதான வெற்றிப்படிமம் நொருங்கிப் போனதில் செங்கை ஆழியானுக்கு மனவருத்தம் அதிகமுள்ளது. நாவலை நுட்பமாக வாசித்தால் இதனை இனங்காணலாம். கதாசிரியரின் ஆழ்புலத்தில் புதைந்துள்ள வன்மத்தின் மாற்று வடிமாகவே இக்கருத்தியலை புரிந்து கொள்ள வேண்டும். தமிழ் மக்கள் பலரிடம் இதே வகையான மனநிலை உண்டு என்பதும் மனங்கொள்ளத்தக்கது. விடுதலைப் புலிகளின் வன்முறைகளைப் பதிவு செய்யும் நோக்குடன் எழுதப்பட்ட பிரதியொன்றில் வன் முறை வழி யான வெற்றி கிடைக்காமற் போய் விட்டதே என்ற ஏக்கம் வெளிப்படுவது நாவலின் கருவினை “அபோசன்” செய்து விடுகிறது.



2009 ஆம் ஆண்டு முதற்பதிப்பாக வெளிவந்த "ருத்திர தாண்டவம்" முன் நிகழ்வு முதலாம் பாகம் (துர்க்கை) - இரண்டாம் பாகம் (கூத்தன்) - மூன்றாம் பாகம் (தாண்டவம்) என நான்கு பகுதிகளாக அமைந்துள்ளன. ஈழப்போராட்டத்தின் நச்சு நிரல் தன்மையினை விமர்சிக்கும் இந்நாவல் செங்கை ஆழியானின் உறவினர்களாகிய போராளிகளுக்கே காணிக்கையாக்கப்பட்டுள்ளது. கதைக்கட்டுமானத்திற்கு ஒவ்வாத பல சுவாரஸ்ய மற்ற விடயங்களையும் நாவலுக்குள் பதிவு செய்துள்ளார்.

"முன்நிகழ்வு" ஏறத்தாழ ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் நடைபெறுவதாக சித்திரிக்கப்பட்டுள்ளது. மாகனது படையெடுப்பில் சிங்கள மக்களுக்கு எதிராக நிகழும் வன்மங்களைப் பற்றி விபரிக்கின்றது. இறுதியில் "சமனான முரணான தாக்கங்களை" சுட்டிக்காட்டி முதலாம் பாகத்துள் நுழைய எத்தனிக்கிறார். "மரணங்கள் மலிந்த பூமி" நாவலில் கூட முஸ்லீம்களின் வெளியேற்றத்தினை இடம்பெயர்வோடு ஒப்பிட்டு நியூட்டனின் மூன்றாம் விதியை நோக்கியிருந்தார். அதே தகுநயத்தோடுதான் "ருத்திர தாண்டவத்தில்" முன் நிகழ்வு இடம்பெறுகிறது.

"சத்தியன்" என்ற போராளியின் கதை, விவசாயியான முருகேசரின் குடும்பத்திற்கு நேருகின்ற அவலங்கள், விடத்தல் தீவு மைக்கல், மணிசேகரன் என்போரின் கிளைக்கதைகள் என்பன சேர்ந்த இழைகளின் கலவையாக நாவல் அமைந்துள்ளது.

முதலாம் பாகத்திலே சத்தியன் என்ற நிக்கவரெட்டியாவைச் சேர்ந்த இளைஞன் தமிழீழ விடுதலைப்போராட்டத்திலே பலவந்தமாகச் சேர்க்கப்படுகிறான். இரண்டம் பாகத்திலே சண்டைக்களில் பங்கேற்கிறான். மூன்றாம் பாகத்திலே பொறுப்பாளனாகி, இறுதி யுத்தத்தில் சரணடைந்து முகாமிலிருந்து படையினரால் எங்கோ வாகனத்தில் ஏற்றிச் செல்லப் படக்கதை முடிவடைகிறது. இதேபோல வெள்ளாங்குள விவசாயியான முருகேசரின் மகன் தனசேகரன் இயக்கத்திலே சேர, பொம்மர் தாக்குதலில் முருகேசர் மரணமடைய மைதிலி சுமதி மலர் என்னும் முருகேசரின் பெண்பிள்ளைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் நாவலின் பிறிதொரு இழையாக நகர்கிறது. மொத்தத்திலே முப்பதாண்டுகளாக நடை பெற்று தோல்வியிலே முடிந்த ஆயுதப் போராட்டத்தின் மீதான விமர்சன மாகவே நாவலை எழுதியுள்ளார். தோல்வியின் காரணங்களை பலவேறு சந்தர்ப்பங்களில் அலசிச் செல்கிறார். தமிழ்ப்போராளிகளின் செயற்பாடுகள் மீதான அதிருப்தியையும் நாவல் எங்கும் விதைத்துச் சென்றுள்ளார். போராட்ட குழுமத்தின் உள் முரண்பாடுகளுக்கு அற்ப மான காரணங்களும் பின்புலமாக அமைந்திருந்தமையைச் சுட்டிக் காட்டியுள்ளார். தேசிய வீடுதலைப் போராட்டம் சாதியச் சிக்கலை நேர்செய்ததாக பெருமிதங் கொள்ளும் தருணத்தில், போராளியொருவன் "பறைப்பயலே!" என அழைப்பதனூடாக போலிப் பெருமிதமொன்றின் விம்பத்தினைக் கவிழ்ந்து விடுவது சிறப்பான நுண்பதிவாகவுள்ளது. தமிழ்நாடு இராம நாதபுரத்தைச் சேர்ந்த உதயச்சந்திரன் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இணைந்து உயிர் கொடுத்தமை போன்ற தகவல்கள் சிறப்பாக இருந்தாலும், மாலினிக்கும் அமரதாஸிற்கும் திருமணம் செய்து வைக்கும் சொப்பன காவிய முடிவினை வெளிப் படுத்தி உணர்வுகளை நமத்துப்போன தீக்குச்சியாக்கி விடுகிறார்.

தமிழ்ப் போராளிகள் வழங்கிய விநோதமான தண்டனைகள், "பங்கர்" பயமுறுத்தலின் உளவியலில் கப்பம் வசூலித்தல், இறுதிப்போரின் போது வெளிப்பட்ட மாற்றுமுகம், விவசாயிகள் சார்ந்த பிரச்சினைகள், தேநீர் கடைகளில் மதுபான விற்பனை போன்ற பல்வேறு

விடயங்களை செங்கை ஆழியான் அழகாகப் பதிவு செய்துள்ளார். புவியியல் சார்ந்த வருணனைகளும், உரையாடல்களும் நாவலுக் குக் கனதிசேர்த்துள்ளன. தேய்வியம்பலான சில விடயங் களும், ஆழமற்ற அரசியல் தரிசனமும் இந்நாவலுக்கு பலவீனத்தினை ஏற்படுத்தி யுள்ளன.



களத்தினுள் நின்று நேரடியாகவோ, தகவல் மூலமாகவோ பெறும் அனுபவத்தின் அடிப்படையில் எழும் நாவல் உயிர்த்துடிப்புடையதாக இருக்கும். செங்கை ஆழியான் தன் நாவலுக்கு அடிப்படையான களத்துடன் நேரடியாகத் தொடர்பு கொண்டவர். நிர்வாக சேவையில் சேர்ந்த காலம் தொடக்கம் வன்னிப் பிரதேசத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் பணி யாற்றினார். அப்பகுதி மக்களுடைய வாழ்வு, வரலாறு என்பன பற்றி யெல்லாம் நன்கு அறிந்து கொள்ளும் வாய்ப்பு அவருக் கிருந்தது. கிளிநொச்சி மாவட்டத்தில் பொருளாதார, சமூக வளர்ச்சில் புவியியற் காரணிகள் எவ்வாறு அம்மக் களுடைய வாழ்க்கையில் செல்வாக்கு செலுத்தின என்பது பறிறியும் நன்கு அறிந்து வைத்துள்ளார். இவருடைய "காட்டாறு" என்னும் நாவல் இத்தகைய வாழ்வினைப் பிரதிபலிக்க எழுந்த சிறந்த முதல் முயற்சி.

- பேராசிரியர் அ. சண்முகதாஸ் -

தட்டையான மொழி யின் வெளிப்பாடு ஒவ்வாமை யினை உண்டாக்குகிறது. "அவனை இழுத்து வானிற் குள் கணப்பொழுதில் போட்டமையும் இமைப் பொழுதில் நிகழ்ந்தது. இந்திய அமைதி இராணுவம் தெருவில் வரும் கோழியை அமுக்கு வது மாதிரி இருந்தது" என முதலாவது அத்தியாயத்தில் சத்தியனை போராளிகள் வலுக்கட்டாயமாகப் பிடிப்ப தனை பதிவு செய்கிறார். "குஞ்சுகளை பருந்திட மிருந்து பாதுகாக்கும் கோழி மாதிரி", "யானை உண்ட விளாம்பழம் போல" என்று மரபு ரீதியான உவமைகளையே எடுத்தாள்கின்றார். சுகந்தி, மாலதி, சுமதி, மைதிலி என அனைத்துப் பெண்களையும் விழியழகு, முகக் கவர்ச்சி கொண்ட போக நுகர்ச்சிப் பண்டமாகவே வருணித்துச் செல் கின்றார். மூன்றாம் பாகத்திலே தமிழனான சத்தியன், சிங்களவனான அமரதாஸ், இஸ்லாமியரான காசிம் என்போர் இணைந்து உரையாடும் தருணம் வலிந்து திணிக்கப்பட்டதாக உணரமுடிகிறது. "எங்களைத் துரத்தியவர், காரணமாக இருந்தவர். இன்று அரசாங்கத்தோடு இருக்கிறார்" என்று காசிம் சொல் கிறான். அந்த நபரின் பெயரைக்குறிப்பிட காசிமிற்கு எந்தவித மனத்தடையும் கிடையாது. ஆனால் செங்கை ஆழியானுக்கு வெளிப் படையாகப் பேச மனத்தடை உண்டு. அதுவே பாத்திரத்தின் உரையாடலில் பிரதி பலிக்கிறது. மேலும் "எல்.ரி.ரி.ஈ. ஐ கிழக்கில் மாவி லாற்றில் சனி பிடித்தது" என்று அமரதாஸ் கூறுகிறான். இறுதியுத்தத்தின் பின்னரே இத்தகைய பேச்சுகள் எழுந்தன. மணலாறுச் சண்டையில் சரணடைந்தவர் களிடம் இடம்பெறுதல் நெருடலாகவுள்ளது.

விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் கொடூர மானவை, தமிழ் சமூகத்தின் செயற்பாடுகள் கருணை மிகுந்தவை என்ற பார்வை ஏற்புடையதாகத் தெரிய வில்லை. தமிழ் சமூகத்தி லிருந்து விலகிச்சென்ற இளந் தலைமுறையினர் ஒன் றிணைந்த ஆயுதக் குழுமமே விடுதலைப்புலிகள் என்பதை மறந்து விடலாகாது. வன்மம் தமிழ் சமூகத்தின் அடிப்படைக் கூறுகளில் ஒன்றாகவே இருந்து வந்துள்ளதை வரலாறு அடை யாளப்படுத்துகிறது. சத்தி யனின் அம்மம்மா தங்கச் சங்கிலியை கழற்றி கொடுப்பது கருணைமிகு தமிழ்ச் சமூகத்தினை பிரதிநிதித்துவப் படுத்துவது போலத் தென்படு கிறது. இது யதார்த்தத்திற்கு முரணானது. சமகாலத்தில் இளைஞர்களின் வன்முறை கள், பாலியல் வன்புணர்வு, சிறுவர் துஷ்பிரயோகம் என்பன இடம்பெறும் போது "விடு தலைப் புலிகள் இருந்திருந் தால் இவை நிகழ்ந்திருக்காது" என்ற குரல்கள் எழுவதை அவதானிக்க முடிகிறது. இக் குரல்களின் பின்னேயுள்ள வன்மத்தை சரியாக அடை யாளங்கண்டால் தமிழ் சமூகத் தின் உளவியலை ஓரளவு புரிந்துகொள்ள முடியும்.

தமிழ்த்தலைமை மீதான வெற்றிப்படிமம் நொருங்கிப் போனதில் செங்கை ஆழியானுக்கு மனவருத்தம் அதிகமுள்ளது. நாவலை நுட்பமாக வாசித்தால் இதனை இனங்காணலாம். கதாசிரியரின் ஆழ்புலத்தில் புதைந்துள்ள வன்மத்தின் மாற்று வடிமாகவே இக்கருத்தியலை புரிந்து கொள்ள வேண்டும். தமிழ் மக்கள் பலரிடம் இதே வகையான மனநிலை உண்டு என்பதும் மனங்கொள்ளத்தக்கது. விடுதலைப் புலிகளின் வன்முறைகளைப் பதிவு செய்யும் நோக்குடன் எழுதப்பட்ட பிரதியொன்றில் வன் முறை வழி யான வெற்றி கிடைக்காமற் போய் விட்டதே என்ற ஏக்கம் வெளிப்படுவது நாவலின் கருவினை "அபோசன்" செய்து விடுகிறது. "போராடி இறந்திருக்கலாம் வீரனாக. கோழை போல தப்பு நீரில் சாக வேண்டுமா?" என்ற வரிகளின் பின்னால் மறைந்துள்ள உளவியலையும், "எங்கோ ஒரு பின்தங்கிய கிராமத்தில் பிறந்து மாபெரும் போராட்ட வீரனாக மாறிய தலைவரிடம் கொண்டிருந்த தமிழ் மக்களின் அபிலாசைகள் சிதைந்து போயின" என்ற முன்னுரை குறிப்பினையும் இனங்காணும் ஒவ்வொரு வரும் நாவலாசிரியர் குறித்த மாற்று முடிவொன்றிற்கே தள்ளப்படுவார்கள். எல்லாளன், சங்கிலியன் என குருதி வழி வெற்றிச் சரித்திரம் படைத்த பிரதிமைகளை வழிபட ஆற்றுப்படுத்தும் படைப்பாளிகள் வன்முறைக்கு எதிரான எழுத்தக்களை முன் வைக்கும் போது மிக மிக அவதானமாக இருக்க வேண்டும் என்பதையே "ருத்திர தாண்டவம்" நாவல் ஊடாகப் புரிந்து கொள்கிறோம். ●

# யொகாறா

■ செங்கை ஆழியான்


கண்டல் காடுகள் கருகித் தீய்ந்து போயிருந்தன. காலந் தப்பிய மழையின் வஞ்சத்தினால் உழுது விதைப் பதற்கு ஆயத்தமாகக் கிடந்த வயல்கள், புழுதியை வாரி இறைத்தன. உப்புச்சாம்பல் பூத்த கடற்களப்புகள் பாளம் பாளமாக வெடித்து வானத்தை நோக்கி இரங்கி இருந்தன.

உச்சி வெயிலின் கொடுரத்தி னிடையே கூப்பன் அரிசியைத் தலையில் சுமந்தபடி வயல் வரம்புகளைத் தாண்டி கடற்களப்பின் பாளவெடிப்புக்களிடையே யொகாறா வருகின்றாள். ஒவ்வொரு திங்கட்கிழமையும் கூப்பன் அரிசி எடுக்க மூன்று மைல்கள் நடுவெயிலில் அவள் நடந்தே ஆகவேண்டும்.

உப்பங்கழியின் அருகேதான் அவளது கால் ஏக்கர் மேட்டுக்காணி இருக்கின்றது அதுவும் வருடத்தில் நான்கு மாதங்கள் வெள்ளத்தினுள் அமிழ்ந்து போய்க் கிடக்கும். அந்த வெள்ளத்தினுள் அ வ ளு ம், அவளது ஐந்து ஜீவன்களும் வாழ்ந்தே தீரவேண்டும்.

பதைபதைக்க ஓட்டமும் நடையுமாக வந்துகொண்டிருந்த யொகாறாவின் உள்ளத்தில் ஒரேயொரு கேள் வியே தேங்கி நிற்கின்றது. மூத்தவள் இளைசுகளைக் கவனமாகப் பார்க்கி றாளோ? அல்லது எங்கையாவது கண்டல் காடுகளுக்க திரியுறாளோ உம்மா இரிக்கக் குள்ள இந்தக் கஷ்டம் இல்லை...”

யொகாறாவின் மூத்த மகள் வல்கிசுக்குப் பதினைந்து வயதுதான் ஆகிறது. வயதுக்கு மீறிய வளர்ச்சி, வறுமையின் கோரப்பிடியில் நாளாந்தம் அரைவயிறும் கால் வயிறுமாக உண்டும் இயற்கை அவளது வளர்ச்சியில் குறைவைக்கவில்லை



தாழைமரத்தைப்போல வேகமாக வளர்ந்து விட்டாள். தாயின் பழைய சேலையைக் கிழித் துத் தாவணியும் போடுகிறாள்.

“காடை கடைப்புலிகள் நிறைஞ்ச இந்தப் பாழும் உலகத்தில ஆண்டவன் எனக்கு இப்படியும் ஒரு கஷ் டத்தைத் தந்திட்டான்.”

யொகாறா வேகமாக நடக்கிறாள் வழக்கத்திலும் பார்க்க இன்று நேரமாகி விட்டது. கூப்பன் கடையில் அதிக சனம். “கியூ“ வில் நின்றுதான் இன்று அரிசி எடுக்க வேண்டியதாகிவிட்டது. கடை மனேச்சர் ஹமீட் வேறு இன்று ஏதோ தோபமாக இருந்தான். சங்கக் கடையில் ஏதோ குறையுதாம். “எடுக்கிறது ஓசி அரிசி கொஞ்சம் நிண்டால் என்ன? போங்க

போங்க..." என்று எரிந்து விழுந்தான். தன் வயலில் விளைத்த அரிசியை ஊராருக்கு அள்ளிக் கொடுப்பது போல அவனுக்கு நினைவு.

"இல்ல வாப்பா, நாங்க விடியச்சாமம் இருந்து இஞ்ச நிற்கிறம்" என்றாள், ஆசியா உம்மா. எட்டரை மணிக்குத் திறக்கவேண்டிய கூட்டுறவுச் சங்க கடையைப்பத்து மணிக்குத் திறந்தது மெய். ஹமீட் காக்காவிற்கு மலையில் கொஞ்சம் ஜோலி இருந்ததால் சிறிது சுணக்கம். அதை ஒசி அரிசி வாங்குகிற ஆசியா உம்மாக் கிழவி சுட்டிக்காட்டுவதா ?

"போடி அங்காலை..." என்று ஏசி விட்டான். அதனால், அவனாகக் கூப்பிடு மட்டும் ஒதுங்கி நின்றாள், யொகாறா.

கடைசியாக அவளுடைய கூப்பனை வாங்கிப் புள்ளிகளை வெட்டினான். வெட்டும்போது தனது காவியேறிய பற்கள் தெரியச் சிரித்தான். யொகாறா அவனைப் பார்க்காமல் கடையினுள் எதையோ, வெறிக்கப் பார்த்தாள்.

வேலி இல்லாத தோட்டம் அவள். ஒரு காலத்தில் தனது அழகால் அந்தக் கிராமத்தையே கலங்க அடித் தவள் தான். இப்போதும்தான் என்ன? யொகாறா விற்கு முப்பத்தொரு வயது. பதினாறு வயதில் அவள் நிக்காஹ் செய்து கொண்டாள். அவளாக விரும்பியே இஸ்மாயிலைக் கைப்பிடித்தாள். பதினொரு ஆண்டுகள் வரை தோட்டம் வேலியினுள் பாதுகாப்பாகவே இருந்தது.!

ஏதேதோவெல்லாம் நடந்து போய்விட்டன.

"ஏன் யொகாறா, எப்படி இரிக்கே?..." என்று ஹமீட் கேட்டான்.

"அரிசியைத் தாங்க, வீட்டில புள்ளயதனிய..." என்றாள் யொகாறா.

"டே, மஜித்து அரிசியைத் திலாசில கொட்டுடா..." என்று கடையினுள் ஹமீட் குரல் கொடுத்தான். அவனுடைய கண்கள் கிழிந்த அவளுடைய மார்ப்புச் சேலையினூடே பதிந்து தெறித்தன. யொகாறா சேலைத்தலைப்பை இழுத்து மூடியபடியே இறங்கினாள்.

வியர் வைத்துளிகள் உதட்டை நனைத்து உப்புக்கரித்தன. கண்டல் மரங்களின் கீழ் நின்றபடியே மாடுகள் இளைப்பாறிக் கொண்டிருந்தன. வெட்கம் கெட்ட நாம்பன் ஒன்று இந்தவெயிலிலும் பசு ஒன்றைத் துரத்தியது.

யொகாறா நடக்கின்றாள். தலையில் ஏறிய அரிசிச் சுமை அதிகமல்ல. நான்கு மாதங்களுக்கு முன் அவள் தலையில் இருந்த சுமை அதிகம்தான்: அன்று ஆறு கூப்பன் அரிசிச் சுமை.

இன்று-?

மூன்று கூப்பன் சுமைதான்.

அக்கூப்பன்களின் பயனை ஹாஜியார் அபுதாலிப் தான் அனுபவிக்கின்றார்.

யொகாறாவின் தாய்க்கிழவி, எங்கெங்கோ எல்லாம் திரிந்து அலைந்து விட்டுக் கடைசியில் மகளிடம் வந்து சேர்ந்தாள். வைக்கிற கஞ்சியில் கொஞ்சம் கிழவிக்குக் கிடைத்தது. குடிசைக்கு காவலாக வெளித் திண்ணையில் முடங்கிக் கிடந்த கிழவி இருந்தாற்போல மௌத்தாகி விட்டது. மையத்தை அடக்கம் செய்வதற்கு யொகாறா எங்கு போவாள்?

பைத்துன் கிழவிதான் அதற்கு வழி சொன்னாள்.

"ஹாஜியாரிட்டை கேட்டுப்பாரு கடனாகக் கேட்டுப்பாரு தருவாரு ஒங்கட கூப்பன் பொஸ்தகத்தையும் கொண்டுபோ... ஒரு கூப்பனுக்கு இருபது ரூபா தருவாரு... ஈடு வைச்சு இப்பத்தை கருமத்தைப் பாரு..."

இந்த உப்பங்கழி ஏழைகளிடம் அடைவு வைப்ப தற்கு இருக்கின்ற ஒரேயொரு பொருள் கூப்பன்தான். ஏழைகளிடம் இருந்து கறப்பதற்குப் பணக்காரன் எத்தனை வழிகளைக் கண்டுபிடித்திருக்கிறான்.

யொகாறாவிற்கு அன்று வேறு வழி ஏதும் தெரிய வில்லை. மூன்று கூப்பன்களை மடியில் கட்டிக்கொண்டு ஹாஜியார் வீட்டை நோக்கி ஓடினாள்.

ஹாஜியார் மிகவும் தாராளமானவர்.

" உனக்கு இப்ப காசி தேவையெண்டால் மத்தக் கூப்பன் பொஸ்தகங்களையும் கொண்டுவா, மகள். தாறன் அந்திரமாபத்துக்கு ஒதவாட்டில் என்ன மனுசன்"

ஒவ்வொரு மாதமும் வண்டிலில் ஹாஜியார் வீட்டுக்குக் கூப்பன் அரிசி மூடை மூடையாகப் போகிறது. இல்லாவிடில், ஹாஜியாருக்கு வயல்கள்... தோட்டங்கள் மில்கள்... வீடுகள் லொறிகள்... எங்கிருந்து வந்தன?

யொகாறாவிற்குக் கூப்பன் அரிசி போதுமானதல்ல. மூன்று இருத்தல் அரிசி ஏழு நாட்களுக்குப் போதுமா? கூப்பன் களை அடைவிலிருந்து மீட்டுவிட அவள் முயன்றாள். போனவாரம் வீட்டில் வளர்த்த கோழிகள் நான்கையும் திருகோணமலைக்கு விற்பதற்கு வாங்கிச் செல்லும் செயினம்புவிடம் இருபது ரூபாவுக்கு விற்றாள். அறவிலை தான். முட்டை இட்ட கோழிகள்.

இருபது ரூபாவை எடுத்துக்கொண்டு ஹாஜி யாரிடம் விரைந்து போனாள். ஒரு கூப்பனையாவது மீட்டு விட லாம் என்ற நம்பிக்கை.

என்ன மகள். மத்தக் கூப்பன்களையும் ஈடு வைக்கப் போறியா? இப்ப நான் இருபது குடுக்கிறதில்ல. ஏனெண்டா சரியான நஷ்டம். ஏதோ ஏழைகளுக்கு உதவுறத்துக்கு அல்லாஹ் படைச்சான் என்று ஹாஜியார் வரவேற்றார்.

"இல்ல வாப்பா... என்ரை கூப்பன்ல ஒண்டை மூளுறத்துக்கு வந்தன்... இருவது ரூபா இருக்கி..." என்று யொகாறா இழுத்தாள்.

ஹாஜியாரின் முகம் ஓடிக் கறுத்தது.

"நீ மகள் ஒண்டாத்தான் கூப்பன் அடைவு வெச்சாய்... தனித்தனிய குடுக்க ஏலாது. உனக்காக வேணு மின்னா, இந்த இருபதைத்தா ... இப்படி அறுபது ரூபாவும் வட்டியும் தந்து முடிஞ்சப்பொறவு கூப்பன்களைத் தாறன்..."

"வட்டியுமா...? கெழமைக்குக் கிழமை அரிசி எடுக்கிறியள் தானே, வாப்பா?" என்று விக்கித்து நின்றாள், யொகாறா ஹாஜியார் சிரித்தார்.

"இந்தப் பஞ்சகாலத்தில ஊர் ஒலகம் தெரியாமல் பேசாத , மகள் ஒனக்குத்தந்த காசி இருந்தால் எனக்கு ஒரு மாதச் சீவியம் போம்..."

கடைசியில் வென்றது ஹாஜியார் தான்.

தூரத்தில் யொகாறாவின் குடிசை தெரிகின்றது. தென்னைக்குக்கீழ் மகள் வல்கிசு நிற்கிறாள். யாரோ வாசல் படலையில் இருந்து நடந்து போகிறார்கள்.

"ஆரோரோட்டில போவுன மாக்கும் எண்டாலும் வயசுவந்த புள்ள, முத்தத்தில நிக்குதே...? நச்சுக்கண் பட்டிடும்.

2

குடிசைத் திண்ணையில் அமர்ந்து இருக்கிறாள் யொகாறா. வெயிலின் கீழ் நடந்து வந்ததால், கண்கள் திடீரெனச் சில கணப்பொழுதுகள் இருண்டன.

"தண்ணி கொண்டுவா, மகள்"

"தண்ணி அள்ளயிலை, உம்மா இதோ கொண்டு வாறன்" என்றபடி வல்கிசு மண் குடத்தையும், கிணற்று வாளியையும் தூக்கிக்கொண்டு கிணற்றடிக்கு ஓடினாள்.

"இவ்வளவு சாமமும் நீ என்னடி செஞ்சனி...? சும்மா திரிஞ்சியா ?"

வல்கிசு கிணற்றடிக்குச் சென்றுவிட்டாள். திண்ணைக் குந்தில் இருந்தபடியே குடிசைக்குள் பார்த்தாள். யொகாறா குழந்தைகள் மூன்றும் ஓலைப் பாயில் சிதறிக் கிடந்து தூங்கின. மூத்த பையன் கரை வலை மீன் பொறுக்கப் போயிருப்பான்.

புள்ளயளத் தூங்க வைச்சிட்டு இவள் என்னத்தைச் செய்தாளோ?

திண்ணையில் இருந்தபடி பார்வையை வெளியே யொகாறா மேயவிடுகிறாள் காட்டுத்தடிகளை ஊன்றி, கம்பியால் அடைக்கப்பட்ட வேலி. அவை எவ்வளவு இனிய நாட்கள்...?

இஸ்மாயில் உப்பாற்றில் தோணி ஓட்டி வந்தான். அவனுடைய தோணியில் வன்னியனர் (காரியாதிகாரி) அடிக்கடி போய்வருவார்.

"சேர் எனக்குக் குடியிருக்கக் காணித் துண்டில்ல" என்று ஒருநாள் அவரிடம் முறையிட்டான்.

அவர் அவனைக் கூடவே வண்டிலில் அழைத்து வந்து இந்தக் காணியை காட்டி, "இதைத் திருத்திக் குடியேறுடா பேமிட் தாறன்" என்றார்.

அன்று குடியேறிய குடும்பம். பதின்மூன்று ஆண்டுகளாகி விட்டன. இன்று இக்காணியில் காய்த்து நிற் கிற ஒவ்வொரு தென்னையும் இஸ்மாயில் தான் ஆசையோடு வைத்தான்.

"உர்" ரென்ற இரைச்சலோடு கண்டல் காற்று வீசுகின்றது. உப்பங்கழியின் பானம் வெடித்த மேனியிலிருந்து புளுதி வாரி இறைக்கப்படுகின்றது.

"யொகாறா என் ஆசை யொகாறா..."

கண்டல் காடே அதிரும்படி வீரிட்டு எழும் அக்குரல்...? அது குரலா...? அல்லது காற்றா...? நினைவா...?

"ஐயோ..." என விம்முகிறாள், யொகாறா.

உப்பங்கழித் தரையிலிருந்து புளுதிவாரி இறைக்கப்படுகின்றது. வாரி இறைக்கப்படும் புளுதியினூடே இரட்டைக் கரத்தை வண்டில் ஒன்று விரைந்து செல்கின்றது. "இந்தா... இந்தா... ஏய்..." என்ற வண்டி யோட்டியின் அதட்டலோடு ங்... ங்... ங்... என்று மாடுகளின் கழுத்து மணிகள் சப்திக்கின்றன.

ஒரு கணம் வண்டியையே வெறித்துப் பார்க்கிறாள்.

அவளது கண்கள் முன் இஸ்மாயிலின் கம்பீரமான உருவம் தெரிகின்றது. அவளது விழிகள் கலங்கித் தவிச் கின்றன. இதே போன்ற ஒரு நாளில்தான் அந்தச் சம்பவம் நடந்தது.

இஸ்மாயில் கலியாணம் செய்ததும் தோணி வலிப்பதை விட்டுவிட்டான். கையில் கொஞ்சம் பணம் இருந்ததால், ஒரு வண்டியும் ஜோடிச் செவலைச் காளை களும் வாங்கினன். செங்கட்டி, மணல், சீமெந்து, மீன் பெட்டி, மரம் என்று ஏற்றி இறக்கி, சலிக்காமல் உழைத்தான்.

தம்பலகாமத்துக் காளை மாடுகள். "ரேஸ்" குதிரைகள் போலக் கம்பீரமாக நடை பயில்வன. சலிக்காமல் நுரை தள்ளாமல் அரை நாள் நடக்கக்கூடியன.

பூவரசந்தீவு முழுவதும் அவனுடைய காளை மாடு களைப்பற்றியே பேச்சு அடிபட்டது, அந்த மாடுகளே நல்ல விலைக்கு வாங்கவும் பலர் முயன்றனர்.

யொகாறா பெருமூச்சு விடுகிறாள்.

இத்திண்ணையில் தான் அன்று இரவும் இஸ்மாயிலும் அவளும் படுத்திருந்தார்கள். குடிசையினுள் பிள்ளைகள் தூங்கின. அவள் தன் மடியில் கடைசி மகளை வளர்த்திப் பால் புகட்டிக் கொண்டிருந்தாள்.

"நல்ல நிலவு. கண்டல் காடு தண்ணொளியில் மூழ்கித் தவித்தது.

"யொகாறா... என் ஆசை யொகாறா..." என்று அவன் அழைத்தான். குறும்பும் செய்தான்.

"சத்து நேரம் சும்மா இரிங்க..." என்று அவள் சினுங்கினாள். வருஷத்துக்கு ஒன்றப் பெத்தும் உங்களுக்கு இன்னம் ஆசை போகவேயில்லை.

அவன் சிரித்தான் "ஒன்னோட எனக்கு இரிக்கிற ஆசை ஒருக்காலும் போகாதடி யொகாறா. புள்ளய உள்ளுக்கு கேடத்திட்டு சுறுக்கா வா..."

அவனுடைய அரவணைப்பிற்குள் அவள் மூழ்கிக் கிடந்தாள். கடைசி அணைப்பு.

"யொகாறா என் ஆசை யொகாறா"

"...ம்"

அன்று வெகு நேரம் அவர்கள் விழித்திருந்தார்கள். அவன் வெகு நேரம் பேசினான்.

இண்டைக்குக் ஹாஜியாருக்கு நாலு வாட்டி செங்கல் ஏத்திப்பறிச்சன். வழியில செய்யத்தைக் கண்டன்... அவன்தான் மாட்டிறைச்சி விக்கிற செய்யத்து... அவன்றை ஆசையைப்பாரு, யொகாறா... ஆயிரம் தாறானாம். ரெண்டு செவலையையும் தந்திடட்டாம்... மறுவா மறுவா கேட்டான் ஒரு மாதிரி வெருட்டியும் கேட்டான்... நான் ஏலாதெண்டிட்டன்"

"அவன் கூடாதவன்...? நம்ம மார்க்கத்திக்கு மாறா நடக்கிறவன். பள்ளிவாசலிலை, "ஹத்"தடி வாங்கியவன். அவனோட கொழுவினியளா?... என்று பதறினாள், யொகாறா.

"நீ ஏன்றி அவனுக்குப் பயப்படுகிறாய்?...இந்த இஸ்மாயிலை அவன் என்ன செய்திடுவான்..." என்ற அவன் சிரிக்கத் தொடங்கினான்.

“ஏன் சிரிக்கிறியள்...?“

மட்டையடி வாங்கிய காட்சியை நினைச்சுக் கொண்டன். கூப்பன்கடை ஹமீத்திர பொஞ்சாதியோட செய்யத்துக்குக் கள்ளத் தொடர்பு... ஊருக்குத் தெரிந்து போச்சுது கையும் களவுமாகப் பிடிச்சுப் போட்டான்கள். பள்ளிவாசல் மரைக்கார் விசாரிச்சாரு... குத்தத்த ரெண்டு பேரும்... .

“எனக்கு இதெல்லாம் தெரியும் தானே. மௌலவி மரைக்கார் இருவருக்கும் முப்பது முப்பது மட்டையடி கொடுக்கச் சொன்னாரு...”

பனம்மட்டை முதுகில படேக்க செய்யத்து கத்து கத்தெண்டு கத்தினான்”

“இப்ப என்ன அவங்க ரேண்டு பேரும் ஒண்டாத் தான் இரிக்கிறாங்க”

“ஆமா இனி செய்யப் போறியள் என்று மரைக்கார் கேட்டார். காவின் எழுதப் போறம் என்றான் செய்யத்து. சரி மூன்று மாசம் ஒருத்தரை ஒருத்தர் பாக்காம இருந்திட்டாக்கா செய்து கொள்ளுங்கள் என்றாரு...“

“பாவம் ஹமீட் காக்கா... மனிசியைப் பறி குடுத்திட்டாரு...” என்று யொகாறா சிரித்தாள்.

“பொட்டையன்...“

தூரத்தில் சாமக் கோழி ஒன்று கூவியது. அதன் பிறகு தான் அவர்களை உறக்கம் தழுவியது. விடிந்து வெகு நேரமாகியும் அவர்கள் எழும்பவில்லை. வல்கிசு தான் எழுப்பினாள்.

“வாப்பா... வாப்பா... தம்மடை வலக்கன் செவலை ஒண்டக் காணல்ல...“

பதறிப்போய் எழுந்தான் இஸ்மாயில்.

“எங்கயாவது அவுட்டுட்டு போயிரிக்கும்...” என்றாள் யொகாறா.

“ராத்திரி செரியா நாய் கொலைச்சுது...” என்றாள் வல்கிசு.

இஸ்மாயில் பதறிப் போனன். வெறி பிடித்தவன் போல வலக்கன் செவலையைத் தேடிக் காடெல்லாம் அலைந்தான்.

“செய்யத்துத் தான் மோசம் செய்துட்டானே?” என்று யொகாறா மனதுள் மறுகினாள்.

மத்தியானம் அளவில்தான் வலக்கன் செவலையைப் பற்றிய செய்தி வந்தது. ஆலங்கேணி விதானையார் தான் செய்தி கொண்டு வந்தார்.

“புளியந்துறைக் கண்டல் காட்டுக்கை செவலையை ஆரோ வெட்டிப் போட்டிருக்கிறான்கள்... இறைச்சிக்கு கால்தொடைகளை வெட்டி எடுத்துப் போட்டான்கள்...”

“அல்லாஹ...” என்று அலறினான் இஸ்மாயில்.

“நாயனே...” என்றாள் யொகாறா.

பொலிஸ் விசாரணை நடந்தது. செய்யத்துத் தான் செய்தான் என்பதற்கு என்ன அத்தாட்சி?

ஒரு வாரம் நடைப்பிணமாக உலாவிகுன் அவன் கொட்டிலில் கட்டிநின்ற இடக்கண் செவலையும் இருப்புக் கொள்ளாது தவித்தது. வண்டிலேயும் ஒற்றை மாட்டை யும் வெறித்து வெறித்துப் பாடீக்கிற கணவனின் மன நிலையை யொகாரு புரிந்து கொண்டாள்.

தன் கழுத்துச் சங்கிலியையும் மகளின் சங்கிலியையும் அவன் கைகளில் வைத்துவிட்டு சிரித்தாள்.

“போங்க செவலைக்கு ஒரு சோடி வாங்கி வாங்க... தம்பலகாமத்தில குப்பைத்தம்பி வீட்டில் ஒண்டுநிக்கு தாம். சலீக்கின் காக்கா சொன்னார்...”

மனைவியையே நீண் ட நேரம் கண் கொட்டாமல் பார்த்தான்.

யொகாறா... என் ஆசை யொகாறா...

*3*

“உர்“ ரென்ற இரைச்சலோடு காற்று புழுதியை வாரி இறைத்தபடி வீசுகின்றது.

“உம்மா...தண்ணி“ என்றபடி பேசினைத் தாயின் முன் வைக்கிறள் வல்கிசு.

பேசினைக் கையில் எடுக்கும்போது மகள் இன்னொரு செய்தியைக் கூறுகிறாள்.

“ உம்மா, இண்டைக்கு சலீக்கின் காக்காட மீன் வாடியில செரியான சனமாம், கரைவலையில நல்லாச் சூரை பட்டிக்காம், மூன்று நாலாயிரம் பெறுமாம்.

ஒனக்கு இதெல்லாம் ஆரு சொன்ன...?

யொகாறாவின் கண்களில் கலக்கம்,

“இமாம்தின் மாஸ்ரர் சொன்னார்.”

மகளை ஒருகணம் ஊடுருவி விடுவது போல யொகாறா பார்க்கிறாள்.

“மாஸ்ரர் இஞ்ச வந்தாரா...?”

“வந்தார் உம்மா. சலீக்கின் காக்கா ஒன்னட்ட குடுக்கச் சொல்லி சூரை மீன் ரெண்டு பெரிசு அனுப்பியிருக்காரு... இமாம்தீன் மாஸ்ரர் தான் கொண்டு வந்தார்.”

“நீ வாங்கினியா மகள்...”

“ஏம்மா...?”

தாயின் விழிகள் திடீரெனச் சிவப்பேறுவதை வல்கிசு கண்டாள். பற்களை நறநறவெனக் கடித்தபடி மகளின் தலைமயிரை ஒரு கையால் பற்றி இழுத்து பளார் பளார் என முதுகில் அறைகிறாள்.

“உம்மா...உம்மா...” வல்கிசின் வீரிட்ட குரல் கேட்டு குடிசையுள் பகல், தூக்கம் தூங்கிய குழந்தைகள் விழித்துக் கொள்கின்றன.

மகளை அறைந்த கையால் யொகாறா தன்னையும் அறைந்து கொண்டு அலறினாள்.

“சலீக்கின் கொடுத்தனுப்பிக் கறி ஆக்கிச் சாப்பிட எங்களை இப்படித் தவிக்க விட்டிட்டுப் போட்டியளே?”

ஆற்றாமை ஒருங்கே உடலை அமுக்கத் திண்ணையில் சாய்கிறாள் யொகாறா. வல்கிசு அரிசியை எடுத்துக் கொண்டு குடிசைக்குள் போகிறாள். சூரை மீன் குழம்பு வாசனை எழுகின்றது.

*4*

புளுதியை வாரி இறைத்தபடி வண்டில் ஒன்று கண் சில் காட்டிற்குள் புகுகின்றது.

“யொகாறா... என் ஆசை யொகாறா...”

விம்மி விம்மி அழுகிறாள்.



"உம்மா..." என்று அழைத்தபடி சிறு பெண் சர்மிளா தாயின் அருகே வருகின்றாள். அவளை அனைத்த படி யொகாறா அழுகின்றாள்.

அன்று...

உம்மா வாப்பா மாடு கொண்டு வாறார்... என்று கடப்பில் நின்று குரல் கொடுத்தாள். வல்கிசு யொகாறா குடிசைக்குள் நின்று ஓடி வந்தாள்.

வெள்ளை நிறக்காளை ஒன்றைப் பிணைத்த கயிற்றைச் கையில் பற்றியபடி இஸ்மாயில் வந்து கொண்டிருந்தான். வாசலில் அவள் நிற்பதைக் கண்ட அவன் குரல் கொடுத்தான் ஏய் யொகாறா...

யொகாறா குழந்தை போல அவனை நோக்கி ஓடினாள்.

இடக்கன் செவலைக்கு ஏற்று கம்பீரமான ஜோடி தான். வெள்ளை வேளர் என்ற நிறம். நீண்ட தூரம் நடந்து வந்த களைப்புகளை மாட்டில் தெரியவில்லை. அவனில் தெரிந்தது.

வெள்ளைக் காளையைக் கண்ட இடக்கன் காளை மூசியது. அதற்கு அதனைப் பிடிக்காது என்பது தெரிந்தது.

"டேய்... டேய்... சும்மா இரிடா , என்று நெற்றியில் தட்டிக் கொடுத்தான் இஸ்மாயில். என்றாலும் செவலை அடங்க மறுத்தது.

இஸ்மாயில் வெள்ளைக் காளையை வலக்கனா வண்டிலில் பூட்டினான். செவலையை அவிழ்த்து வந்து இடக் கனகப் பிணைக்க முயன்றான். செவலை முரண்டு பிடித்து இழுத்தது.

"ஏய்... ஏய்..." என்று முதுகில் தட்டினான். இஸ்மாயில். வெகு தூரம் நடந்து வந்த களைப்பு. இடக்கன் முரண்டுவது இஸ்மாயிலுக்கு கோபத்தை மூட்டியது. அடி கம்பை வாரி எடுத்து பளார் பளார் என ச் செவலைக்கு அடித்தான்.

"அடிக்காதீங்க.." என்று தடுத்தாள் யொகாறா இஸ்மாயில் அடித்த அடியில் ஒன்று செவலையின் மூக்கில் விண்ணென்று பட்டு இரத்தக் கண்டலை ஏற்படுத்தி விட்டது. அடிக்குப் பிறகுதான் செவலை அடங்கியது.

வண்டிலில் பூட்டினான் அவன். செவலை கோபத்தில் மூசியது.

வெளியே காற்று புழுதியை அள்ளி இறைத்தபடி வீசியது. வண்டிலில் ஏறி அமர்ந்து ஏய் ஏய்" என்று மூக்களுங்கயிற்றைக் கண்டினன், மாடுகள் இரண்டும் நடந்து கடப்பை விட்டு வெளியே உப்பங்கழியில் இறங்கின.

இருந்தாற் போல -
செவலைக்கு வெறிபிடித்து விட்டதா ?

செவலையின் வேகமான இழுப்பிற்கு ஈடுகொடுப்பது போல வலக்கன் செவலையும் பாய்ந்தது, அவனுக்கும் குஷி பிறந்து விட்டது. உய்யென்று மாடுகளை விரட்டினான்.

சில கணங்களின் பின் தான் இடக்கன் செவலை கோபத்தில் ஒடுவது அவனுக்குப் புலப்பட்டது. கயிறைச் சுண்டி இழுத்து வண்டிலை நிறுத்த முயன்றான். முடியவில்லை.

வேகம், அசுர வேகம்... புழுதி வானை முட்டி நிறைந்தது.

யொகாறா இவற்றைக் கண்டாள் வண்டில் ஒரு பக்கம் குடை சாய்ந்ததையும் கண்டாள். மறுகணம் -
"யொகாறா ஐயோ ... என் யொகாறா" என்ற இஸ்மாயிலின் ஓலம் எழுந்ததையும் கேட்டாள். குடை சாய்ந்த வண்டிலின் கீழ் அகப்பட்ட அவனையும் இழுத்துக் கொண்டு வெகுதூரம் ஓடிய பின்பே மாடுகள் நின்றன.

இஸ்மாயில் இரத்தக் களரியில் உடல் பி ய் ந் து கிடந்தான்.

"ஐயோ... ஆண்டவனே..."
பேய்க்காற்று வீசுகின்றது.

5

வேலியில்லாத் தோட்டத்தைத் துவம்சம் செய்ய எத்தனை மாடுகள்?

"யொகாறா, என்னடி பகல் நித்திர செய்யிறா?"

அவளைப் பைத்துன் கிழவி எழுப்பினாள். துடித்துப் பதைத்து எழும்புகிறாள் யொகாறா.

"ஏன்ரி அழுதியா?... இஸ்மாயில் பொயித்தான் எல்லாரும் தவிக்கிறிங்க... அவன் இருத்தாக்க எப்படி இருப்பியள்?"

"இரிங்க..." என்கிறாள்: யொகாறா. "கூப்பன் அரிசி எடுக்கப் போனன்... செரியா வெயில் சூடு..."

பைத்துன் கிழவி காவியேறிய பற்கள் தெரியச் சிரித்தாள். ஒருவிதமாக,

"இண்டைக்கு இவன் சலீக்கினுக்கு நல்லாச் சூரை பட்டுது ... ஒரு வளைப்பிலேயே ஏழெட்டு ஆயிரம் கரைவலையை இழுத்துப் போட்டிருந்தான். நானும் நிண்டன் சாய் ஒரு மீன் தருவான் என்று பார்த்தன்... ஊகும். கடைசியா நானாகக் கேட்டுப் பார்த்தன் ஏசித் தொரத்திப் போட்டான். சும்மா குடுக்க இஞ்ச என்ன வெளையுது ஒடுடீ எண்டிற்றான். ஆரும் குலுக்கி மினுக்கித் திரிஞ்சால் தலுக்கா இருந்தாக்கா அவைங் மீனை வீட்டிற்கும் கொண்டாருவாங்..."

யொகாறாவின் இதயத்தில் சுருக்கென்று முள் ஒன்று தைக்கின்றது. குடிசையிலிருந்து எழுகின்ற மீன் வாசனை அருவருப்பை தருகின்றது. பைத்துன் கிழவி தன்பாட்டிற்குத் தொண தொணக்கிறாள். "இனிமேல் இப்ப புழக்கத்தில இரிக்கிற நூறு ஐம்பது ரூபா செல்லாதாம்"

"அரசாங்கம் சட்டம் போட்டிருக்கா... நூறு ரூபா ஐம்பது ரூபா தாள் வெச்சிருக்காங்கள் அதை வேங்கிலே குடுத்து புதிசா மாத்தணுமாம்... உவன் சலீக்கீன்"

யொகாறா குறுக்கிட்டாள். "ஏன் இப்ப வந்தீங்க...?"

"எனக்கு அரிசி தேவை. முந்தநாள் வாங்கின மூண்டு சுண்டு அரிசியைத் தாறியா? ஒரு சொட்டு அரிசியும் இல்ல"

தாறேனே என்று யொகாறா, மகளைக் கூப்பிடுகிறாள் "வல்கி..."

மூன்று கூப்பன் அரிசி ஒன்பது சுண்டு. இன்று மூன்று சுண்டு சமைத்திருப்பாள். கடன் அரிசி மூன்று சுண்டு போனால், மிகுதி இன்னும் ஆறு நாளுக்குப் போதுமா?

"என்ன உம்மா?..."

வல்கிசை நிமிர்த்து பார்க்க யொகாறாவால் முடியவில்லை. சிறு பெண்ணை மிருகம் போலச் சற்றுமுன் அறைந்தாளே?

"ஆக்கிறறியா...?"

"ஓம் உம்மா... கூப்பன் அரிசியிலை ஒரு சுண்டு குறையுது... ஆக எட்டுச் சுண்டுதான் இரிக்கி... அளந்து பார்த்தன்"

யொகாறாவால் சில கணம் எதுவும் பேச முடியவில்லை. விக்கித்துப் போய் இருந்தாள்.

"கூப்பன் கடையில வெட்டிப் போட்டாங்கள் இப்படி எங்கட வயித்தில் அடிச்சுத்தானே வீடு கட்டிறான்கள்... நல்லா இருப்பான்களா?..." என்று பைத்துன் கிழவி திட்டினாள்.

ஒன்பது சுண்டு அரிசியில் ஒரு சுண்டு இல்லை?

"ஏழையோளுற வவுத்தில் அடிக்கிறவங்கள் நல்லா இரிப்பாங்களா? புழுத்துத்தான் சாவன்கள்..." என்று யொகாறா குமுறினாள்.

கூப்பன் கடை ஹமீட்டின் நச்சுச் சிரிப்பும் இச்சைப் பார்வையும் நினைவு வருகின்றது. ஊரான் பெண் டாட்டியை ஆள நினைக்கிற வஞ்சகன். வயிற்றிலும் அடித்து விட்டான். ஒவ்வொரு வீட்டுக் கூப்பனிலும் கால் கொத்து வீதம் குறைத்து அளந்தால், அறுநூறு எழுநூறு வீட்டுக் கூப்பனிலும் கிடைப்பது எவ்வளவு?

"பாவி... பாவி..."

பைத்துன் கிழவி அரிசியை வாங்கிக் கொண்டு போய் விட்டான்.

"உம்மா..." என்றாள், வல்கிசு "ஈடுவைச்ச கூப்பன் பொஸ்தகங்களை எடுத்தால் நல்லது உம்மா..."

அதுக்கு வழியில்லயே மகள். நாற்பது ரூபாவிற்கும் வட்டிக்கும் எங்கை போவன்.?"

"டியாரிட்ட முறையட்டால் வாங்கித் தருவாராமே?" என்ற மகளை வியப்போடு யொகாறா பார்க்கிறாள்.

"ஒனக்கு இதை யார் சொன்னங்க...?"

ஒருகணம் மகள் உதட்டைக் கடித்துக் கொண்டாள். யொகாறா தாய்.

"ஆர் ஒனக்கு இதைச் சொன்னங்க..." தாயின் குரலில் தெறித்த கண்டிப்பை வல்கிசு உணர்ந்து கொண்டாள்.

"இமாம்தீன் மாஸ்ரர் சொன்னாரு..."

"எப்ப?"

"இண்டைக்கி... சலிக்கீன் காக்காட மீன் கொண்டு வரக்குள்ள..."

"நீ கேட்டியா?"

"அவராத்தான் சொன்னாரு" என்று மென்று விழுங்கினாள் வல்கிசு.


யொகாறா மகளை ஊடுருவிப் பார்த்தாள். கன்னிப் பெண்ணுடன் இமாம்தீன் இதை எல்லாம் பேசியிருக்கிறான். மோசம் வந்து விட்டதோ?

இமாம்தீன் மட்டக்களப்பைச் சேர்ந்த பையன். உப்பங்கழியில் ஆசிரியராகக் கடமையாற்றுகிறான், வீட்டிற்கு முன் வழியால் அவன் அடிக்கடி போய்வருவதைக் கண்டிருக்கிறாள். ஒரு போதும் அவன் யொகாறாவின் வீட்டிற்கு வந்தது கிடையாது. ஒரே ஒரு தடவை அவள் இமாம்தீன் மாஸ்ரரை அலுவலாக நாடிப் போயிருக்கிறாள்.

அரசாங்க அதிபருக்குத் தனது உதவியின்மையை விபரித்து மாதாந்த உதவிப்பணம் கேட்டு முறைப்பாடு ஒன்றை எழுதப் போயிருக்கிறாள். இமாம்தீன் மறுக்காமல் எழுதிக் கொடுத்திருக்கிறான். அதன் பலனாக அவளுக்கும் பிள்ளைகளுக்கும் மாதா மாதம் அரசாங்கப் பிச்சைச் சம்பளமாகப் பதினைந்து ரூபா கிடைக்கிறது.

அரசாங்கம் தருகின்ற இலவச அரிசியும், இலவச மருந்தும் பிச்சைச் சம்பளமும் இல்லாவிட்டால் யொகாறாவின் குடும்பம் இருந்த இடத்தில் என்றோ புல் முளைத்திருக்கும்.

அவன் எழுதித் தந்ததால்தான் தனக்குப் பிச்சைச்



சம்பளம் கிடைக்கின்றது, என்ற நன்றியால் அவனைக் காணநேரும் வேளைகளில் யொகாறா நன்றிப் புன்னகை புரிவாள்.

அவன் வல்கிசோடு இன்று பேசியிருக்கிறான், கூப்பன் விஷயமும் பேசிக்கொள்வதென்றால், நீண்ட நேரம் அவன் இங்கு தரித்து நின்றிருக்க வேண்டும்.

நான் கூப்பன் அரிசியோடு வரும்போது நா ன் கண்டது இமாம்தீன் மாஸ்ரர் பொடியன் தான? என்னைக் கண்டு விட்டுத்தான் போனானே!

யொகாறாவின் இதயம் கனத்தது.

வல்கிசப் பெண் ஏமாந்து போனாளோ?

"உர்" றென்று புளுதிக் காற்று வீசுகின்றது. தூரத்தில் யாரோ சைக்கிளில் வருவது தெரிகின்றது. கிட்ட நெருங்கியபோது அது சலீக்கின் எனத் தெரிகின்றது.

சலீக்கீன் கம்பி வேலியோடு சைக்கிளைச் சாத்திவிட்டு உள்ளே வருகின்றார்.

சலீக்கின் காக்கா, அவர் பணத்தால் தலைமையும் செல்வாக்கும் பெற்றவர். அவரையும் அவருடைய நடத்தைகளைப்பற்றியும் ஊர் நன்கறியும்.

நாற்பத்தைந்து வயது மதிக்கலாம்.

பள்ளிவாசல் "ஹத்தடி" வாங்கவில்லை என்பதைக் கொண்டு சலீக்கின் காக்கா ஒழுக்க சீலர் என்று அர்த்தமாகாது.

காட்டுக்குள் கட்டை பொறுக்கப்போன வேளைகளில் சலீக்கின் காக்காவை யொகாறா சந்தித்திருக்கிறாள். ஒரு நாள் அவர் அவளோடு நடந்து கொண்ட முறை நேர்மையானது அல்ல.

"யொகாறா... நீ ஏன் தனிய இரிக்கிறாய்? நீ ஓம் எண்டு சொல்லு ஒன்னை நான் வைச்சுக்கொள்ளுறன். உன்ரை குடும்பத்தையும் பார்க்கிறன்"

அவளை க்காணும் வேளைகளிலெல்லாம் சலீக்கின் இவ்வாறு கூறுவார். பைத்துன் கிழவியும் இதையே கூறுவாள். "உவர் சலீக்கினுக்கு ஒன்னில ஒரு கண்... பணக்காரன் நீயும் இந்தச்சின்ன வயசில தனிய இருக்கப் போறியா...?"

அந்தவேளைகளில் எல்லாம் இவள் எரிந்து விழுவாள்.

"யொகாறா... என் ஆசை யொகாறா..." என்ற அந்த இனிய வாத்சல்ய வார்த்தைகளின் முன் அவளுக்கு எவரும் எதுவும் தூசுதான்.

வேலியில்லாத தோட்டத்தை துவம்சம் செய்ய எத்தனை மாடுகள்?

"உவன் ஏன் வருகின்றான்"

"எப்படி இரிக்கே யொகாறா? சூரை நல்லா இரிந்திதா?"

"இரிங்க..." என்றாள் யொகாறா. "மீன் ஏன் அனுப்பினீங்க காக்கா... பார்க்கிறவங்க தப்பா நினைச்சுக் கொள்வாங்க நான் அனாதையத்தவள்... புருசனத் திண்டவள்... மருவாதியோட என்ர புள்ளக் குஞ்சுகளை வளக்க விடுங்க.. காக்கா, நீங்க இந்த ஊருக்குப் பெரிய மனிசன் இரக்கத்தோடு கையெடுத்துக் கும்பிடும் யொகாறாவை, சலீக்கின் நிமிர்ந்து பார்த்தார்.

"இப்ப என்ன நடந்தது . நீ கடைசி வரை தனிய இரிக்கப் போறாய். எனக்குத் தெரியும் யொகாறா. நான் பழையதை மறந்து போனன். எங்க வல்கிசு? அப்ப நான் மீன் கொண்டு வரக்குள்ள நீ இல்ல. கூப்பன் கடைக்குப் போயிருந்தியாம் . வல்கிசு மட்டும் தான் இரிந்தாள்..."

யொகாறாவின் மேல் பெரிய நச்சு மாமரம் ஒன்று சரிந்தது.

"நீங்களா மீன் கொண்டு வந்தீங்க...?"

“நான் தான்“ என்ற சலீக்கின் காக்காவின் பார்வை குடிசை வாசலில் படிவதைக் கண்ட யொகாறா சட்டெனத் திரும்பிப் பார்த்தாள். வல்கிசு சைகையால் ஏதோ சலீக்கினுக்குக் கூற முயல்வதைக் கண்டு துணுக்குறுகிறாள்.

வல்கிசு பொய் சொன்னாளா? இந்தச் சிறு பொட்ட ஏன் என்னட்ட பொய் சொன்னாள்?

சலீக்கின் நம்பக்கூடியவர் அல்லர்.

யொகறாவின் தலையே சிதறிவிடுவது போல விண்ணென்று தெறிக்கின்றது. அப்படியே அயர்ந்து போகிறாள்.

சற்று நேரத்தின் பின் சலீக்கின் விடை பெற்றுச் செல்கிறார், யொகாறா விரைந்து எழுந்து குடிசைக்குள் புகுந்தாள்.

“உம்மா! என்னை அடிக்காத... சலீக்கின் காக்காதான் வந்தார்” என்று வல்கிசு அலறுகிறாள்.

6

நான்காம் நாள் அதிகாலை, ஹாஜியார் அபுதாலிப் யொகாறாவை அவசரமாக ஆள் அனுப்பி அழைத்திருந்தார். கூப்பன்களைத் தரப் போகிறாரோ? என்ற ஆவலில் யொகாறா விரைந்து சென்றாள்.

“வா மகள்... இப்பிடி இரு என்று குழைவோடு அபுதாலிப் வரவேற்றார்“

“வரச் சொன்னீங்களாமே?“

“ஓமோம் இதோ பார் மகள். காசில்லாமல் இரிக்கிறதும் கஷ்டம். காசி இரிக்கிறதும் கஷ்டம். இவங்கள் நூறு ரூபாத்தாள் செல்லாது, புதிசா வேங்கில மத்திக் கொள்ளுங்க என்று சட்டம் போட்டிட்டாங்க என்ன செய்கிறது? எல்லாத் தாளேயும் நானே கொண்டு போய் மாத்த முடியுமா? ஒருவர் மூன்று தாள் தான் மாத்தலாமாம்? நீ ஒரு மூன்று நோட்டு வேங்கிக்குப் போய் மாத்தி வரனும்...“

“நானா எனக்கு எங்கால காசி என்று கேட்பாங்க“ என்று மறுக்கிறாள் யொகாறா.

“ அப்படிக் கேட்க மாட்டாங்க, மூன்று தாள் மாத்தித் தந்தா உனக்குப் பத்து ரூபா தாறன்... ஒரு கூப் பனும் தாறன், மகள். செய்யிறியா? இதில் என்ன கஷ்டம் இரிக்கி?”

“பத்து ரூபாய், ஒரு கூப்பன்” ஏழை மனம் பேதலித்தது. பைத்துன் கிழவியை வீட்டில் காவலிருத்தி விட்டு, யொகறா திருகோணமலைக்குப் போனாள். பதை பதைக்கும் வெயில். மாலை நான்கு மணி வரை கியூ வில் நின்று மூன்று நூறு ரூபாய் நோட்டுக்களை புதிய நோட்டுக்களாக மாற்றிக் கொண்டு போய் ஹாஜியாரிடம் கொடுத்து விட்டு வீட்டிற்குத் திரும்பினாள்.

திரும்பும் வழியில் தற்செயலாக ஹமீட்டைக் கண்டாள். அவனைக் கவனிக்காததைப் போல விலகிப் போய்விட முயன்றாள். ஆனால், அவன் சைக்கிளை குறுக்கே விட்டு மறித்தான்.

“யொகாறா...” என்று ஹமீட் அழைத்து, காசி மாத்தவா போனாய்? நீ பேப்பர் பாத்தாத் தானே...? என்கிறான்.

“ஏன்?”

“பிச்சைச் சம்பளம் எடுக்கிறவங்கள் பலர் பணக்காரருக்காக வங்குவலை மாத்தி தாறான்களாம். அதனால காசி மாத்தினவங்கள் பிச்சைச் சம்பளம் எடுக்கிறவங்களா இருந்தா அதுக்குப் பொறவு சம்பளம் கிடைக்காதாம்... நீ அபுதாலிப் பணக்காரன்ர கதயில ஏமாந்திட்டியே?“ என்று சிரிக்கிறான் ஹமீட்.

“அல்லாஹ”... அதுக்குத்தான் காசி மாத்தக்குள்ள பேர் விலாசம் எல்லாம் கேட்டு எழுதினாங்களா? நான் என்ன செய்வேன்!“ என்று கலங்கினாள், யொகாறா.

“ஏமாந்திட்டனே...”

“பிச்சைச் சம்பளம் போனக்க உனக்கு என்ன யொகாறா... புதுச் சம்பந்தம் இரிக்கே. ஒனக்கு இந்த ஹமீட்டைத் தான் பிடிக்காது. மீன்காரன் சலீக்கினை நல்லாப் பிடிக்கும்.”

“து” என்று காறி உமிழ்ந்தாள் யொகாறா. “வீண் பழி சொல்லாதை நாக்கு அழுகிப் போகும்.”

எனக்கா? அடி யொகாறா, ஒவ்வொரு நா இராத்திரியும் சலீக்கின் ஒன்ரை வீட்டுக்கு வந்து போறது ஊருக்குத் தெரியும்டி. அவனுக்கும் ஒரு குட்டிபோட்டுக் கொடுப்பே. முந்த நாள் ராத்திரி நான் என் கண்ணுல கண்டன்... வேலிக்கடப்பைத் தாண்டி அவன் போறதை”

“பாவி, விடுடா வழியை“ என்று அலறுகிறாள், யொகாறா.

“போ... நீ இப்ப போ... ஒன்னையும் அவனையும் கையும் மெய்யுமாகப் பிடிச்சு பள்ளிவாசல்ல நிப்பாட்டி ஊராக்களுக்கு முன்னாலை ஹத்தடி வாங்க வைக்கல்ல. நான் ஹமீட் இல்ல“

“ஒன்னால அது முடியாதுடா... அண்டைக்கும் இண்டைக்கும் எண்டைக்கும் நான் துறைக்கார இஸ்மாயிலு பொண்டாட்டிடா, மானத்துக்காக வாழுவன் அப்படி இல்ல நச்சு மாங்காய் திண்டு சீவனை விடுவன்...”

சோர்ந்து தள்ளாடி வீட்டிற்குத் திரும்பி வந்தாள், யொகாறா. வீட்டுப் படலை அருகில் இமாம்தீன் மாஸ்ரரும் மரைக்கார் காசீமும் நிற்பது தெரிகின்றது.

7

மரைக்கார் காசீம் ஹாஜியார் கௌரவமான மனிதர். அவரைப்பற்றி கை மடிக்க இயலாத தூயவர். அவர் ஒரு வீட்டிற்கு வருவதென்றால் அதை விடப் பெருமை வேறில்லை.

மரைக்கார் காசீம் ஹாஜியார் உண்மையான ஒரு முஸ்லீமாக வாழ்பவர். கலிமா, தொழுகை, நோன்பு, ஜகாத், ஹஜ் ஆகிய முஸ்லீம்களின் ஐந்து கடமைகளையும் உயிராக மதித்து நிறைவு செய்பவர். புண்ணியமான நல்ல காரியங்களுக்கும், அல்லாஹ்வை பணிவதற்கும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இருந்து கொள்ளுங்கள். பாபத்திற்கும், அக்கிரமத்திற்கும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இராதீர்கள் என்ற அல்குர்ஆன் திருவாக்கை வாழ்க்கையில் கைக்கொள்ளும் முஸ்லிம்.

அவரைக் கண்ணுற்ற யொகாறா ஓடிவருகிறாள்.

"வாங்க வாப்பா... வாங்க... இந்த அனாதையத்தவளிட்ட."

"எல்லாரும் அனாதைதான் மகள்... வா உள்ள போவம்... உன்னிடம் ஒரு முக்கிய விஷயம் கதைக்க வேணும்."

ஓலைப்பாயைத் திண்ணையில் விரித்து மரைக்காரை இருக்கச் செய்துவிட்டு அவருக்கு முன்னே யொகாறா நிற்கிறாள். சற்று தூரத்தில் முற்றத்துத் தென்னையை ஒரு கையால் பற்றியவாறு இமாம்தீன் நிற்கிறான்.

"இரி மகள்"

"சொல்லுங்க, வாப்பா..."

"சுற்றிப் பேச எனக்கு வராது மகள் இந்த ஊரைப் பார்க்கேக்க எனக்கு கவலையாக இரிக்கி. தொழிலில்ல, படிப்பில்ல கலியாணம் கட்டிக்கிறாங்கள். ரெண்டு கிழமையில காதிக் கோட்டில் பிரிஞ்சு கொள்ளுறாங்க. இளம் சந்ததி சோம்பிப் போச்சுது. கூப்பன வித்துச் சாப்பிடுறாங்கள். கள்ள மார்க்கட் கூடிப் போய்த்துது. இதெல்லாம் எங்க போய் முடியப்போகுதோ? நம்மட சமூகத்தில பெரிய மாற்றம் வர வேணும். போகட்டும் மகள்... நான் வந்ததைக் கூறுகிறன். உன் மகள் வல்கிசுவை இமாம்தீன் தம்பி நிக்காஹ் செய்ய விரும்புகிறான்."

"வாப்பா"

"இந்தக் கிழவன் ஒருபோதும் பிழையான விஷயத்தில தலையிட மாட்டான், மகள்! உம்மா, வாப்பா இல்லாத பொடியன்... ஒழுக்கமானவன். நீ ஒமென்றால் எல்லாம் செரியா நடக்கும்."

வல்கிசுக்கு இவ்வளவு பெரிய அதிர்ஷ்டமா?

"இப்ப என்னட்ட காசி இல்ல வாப்பா..."

"அது எனக்குத் தெரியாதா, மகள்? உனக்குச் சம்மதம் தானே...?"

"நீங்கதான் ஆண்டவன் என்று விம்மினாள் யொகாறா.

"அல்லாஹ் நித்தம் சோதிக்க மாட்டான். மகள் ஒன்ரை நல்ல மனசுக்கு ஒனக்கு ஒரு கொறையும் வராது."

எல்லாக் கவலைகளையும் மறந்து யொகாறா சிரிக்கிறாள்.

8

அன்று இரவு நெடு நேரம் தூக்கம் வராமல் யொகாறா தவித்தாள். அவளுக்குப் பக்கத்தில் குழந்தைகள் தூங்கின. சற்று விலகி வாசலோடு வல்கிசு படுத்திருந்தாள்.

யொகாறா, என் ஆசை யொகாறா என்ற இனிய வார்த்தைகள் அடிக்கடி அவள் காதுகளில் ரீங்காரமிடு கின்றன. "உன் மேல எனக்கு இரிக்கிற ஆசை ஒருக் காலும் போகாதடி..."

அப்படியே அயர்ந்து தூங்கிப் போனாள் யொகாறா. இனிய கனவுகள். இஸ்மாயில் அவளை அணைத்து முத்தமிடுகிறான். செவலை மாடுகள் பூட்டிய வண்டிலில் அவர்கள் இருக்கிறார்கள். வலக்கன் செவலைக்கு இருந் தாற் போல வெறி. புளுதி கிளம்புகின்றது. வண்டில் அசுர வேகத்தில் பாய்கிறது. இதோ... இதோ

"ஐயோ" என்று அலறியபடி திடுக்கிட்டு விழிக்கிறாள் யொகாறா. வெளியே ஏதோ இரைச்சல் கேட்கின்றது. யாரோ அவளை அழைத்தது போன்ற பிரமை.

பிரமையா? இதென்ன குடிசைக் கதவு திறந்திருக்கிறதே? வல்கிசு எங்கே?

பதறி எழுந்து வெளியே ஓடி வருகிறாள். முற்றத்தில் பலர் நிற்பது தெரிகின்றது. "லாந்தர்" வெளிச்சத்தை ஒருவன் தூக்கிப் பிடிக்கிறான் யொகாறாவின் முகத்தில் ஒளி பாய்கின்றது.

சலீக்கினை இருவர் பிடித்திருக்கின்றனர். சலீக்கின் திமிற முயல்கிறான்.

நடந்து போனதை உணர யொகாறாவிற்கு வெகு நேரமாகவில்லை. ஹமீட் கூறியபடி செய்து விட்டான். அப்படியாயின் சலீக்கின் இந்த நேரத்தில் ஏன் இங்கு வந்தான்?

யொகாறா விரைந்து குடிசைக்குள் ஓடுகிறாள். வல்கிசைக் காணவில்லை. வல்கிசு எங்கோ வளவிற்குள் நிற்கிறாள்.

"அடி பாவிப் பெண்ணே! என் தலையில மண்ணைப்போட்டு விட்டாயே... இமாம்தீனுக்கு நான் என்ன பதிலைக் கூறுவேன் ?"

வெளியே இருந்து கனத்த குரல் ஒன்று எழுகின்றது

"யொகாறா, வெளியே வா... இக்குரல் மரைகாயருடையது தான்."

"வாடி... ஒழுக்கம் கெட்ட நாயே... இக்குரல் ஹமீட்."

குடிசைச் செத்தை சரசரக்கின்றது. குடிசைக்குப் பின்னால் யாரோ நிற்கின்றார்கள்.

"என்னை மன்னிச்சுக்க. என்னைக் காட்டிக் கொடுத்திடாத" - வல்கிசுதான்.

"ஆண்டவனே" என்று வாய்விட்டு அலறுகிறாள், யொகாறா.

வெளியே கூட்டம் கூடுகின்றது.

"யொகாறா, வாடி நாயே"- அவள் எச்சிலை மென்று விழுங்கினாள்.

ஒரு முடிவுடன் குடிசையை விட்டு வெளியே வருகிறாள்.

"து" என்று காறி உமிழ்கிறான் ஹமீட்.

சலீக்கின் தலைகுனிந்து நிற்கிறான். அவளை ஒரு முறை நிமிர்ந்து பார்க்கின்றான். அவளது நீர் படர்ந்த விழிகள் அவனிடம் எதையோ யாசித்தன.

நாளை -

பள்ளிவாசல் முன்றலில் பலரின் முன்னிலையில், அவள் செய்யாத குற்றத்திற்கும், சலீக்கின் செய்த குற்றத்திற்கும் ஹத்தடி நடக்கப் போகின்றது.


யொகாறாவின் மேல் விழுகின்ற ஒவ்வொரு மட்டை அடியும் -

"யொகாறா... என் ஆசை யொகாறா..."

(நன்றி வீரகேசரி– 1973)

# நேர்காணல்

திருமதி கமலாம்பிகை குணராசா அவர்கள் ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். இவர் பல பயிற்சி நூல்களை எழுதியவர். செங்கை ஆழியானின் பதிப்பு முயற்சிகள் பலவற்றில் இவரின் பங்களிப்பே அதிகம். தற்போது "சாதனையாளன் செங்கை ஆழியான்" என்னும் நூலைத் தொகுத்து வருகின்றார். இந்நேர்காணல் செங்கை ஆழியானின் மறைவுக்கு பின்னர் மேற்கொள்ளப்பட்டது. செங்கை ஆழியான் பற்றிய பல அரிய தகவல்கள் ஜீவநதி வாசகர்களுக்கு கிடைக்க வேண்டும் என்னும் நோக்கோடு இந்நேர்காணல் மேற்கொள்ளப்பட்டது.



பரணீ

**அமரர் சாகித்திய ரத்னா செங்கைஆழியான் அவர்களின் மறைவு குறித்து, தனது அழ்ந்த அனுதாபத்தை மீண்டும் ஒரு முறை ஜீவநதி இங்கு பதிவு செய்து கொள்கிறது. செங்கை ஆழியான் அவர்கள் உடல்நலக்குறைவாக இருந்தார் என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆனால் திடீரென்று அவர் அமரத்துவம் அடைந்ததை நீங்கள் எப்படித்தாங்கிக் கொண்டீர்கள்?**

கமலாம்பிகை குணராசா

தங்களுக்குத்தெரியும் வெள்ளிக்கிழமை தங்களுடன் உரையாடிக் கொண்டிருக்கும்போது தேநீர் தயாரிக்கும் படி தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்தார். எனது கணவரால் தானாக எழுந்து நடக்க முடியாது தொடர்ந்து பேச முடியாது, இவை இரண்டுமே அவருடைய வருத்தம். அவருக்கு வேறு எந்த நோயும் இருக்கவில்லை. கம்பீரமான உடலமைப்பும் சுறுசுறுப்பும், கல்வி, தொழில் என்பனவற்றில் ஆளுமை மிக்கவராக வலம் வந்தவருக்கு சடுதியாக ஏற்பட்ட பின்னடைவை மனதளவில் ஏற்றுக் கொள்ள முடியாது வேதனைப்பட்டார். அவரது உடநலப் பாதிக்கப்பட்டதற் கான காரணம் டாக்டர்களாலும் தெளிவுபடுத்த முடிய வில்லை. அதனால் மனதளவில் மிகவும் வேதனைப் பட்டவர். ஆனால் நான் பல வழிகளிலும் அவரை திருப்திப்படுத்திக் கொண்டே இருந்தேன். நான் அடிக்கடி அவரிடம் கூறுவேன்: "அளவிற்கதிகமாக ஓய்வின்றி உடலை வருத்திவிட்டீர்கள் அதனால் உடல் தானாக ஓய்வை விரும்புகிறது" என்று கூறி அவரது வேலைகள் அனைத்தையும் புத்தக விநியோகம், நூல்கள் பதிப்பித்தல் அனைத்தையும் எவ்வித குறையுமின்றி செய்து வந்தேன். காலையில் தலையில் குளித்து தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தவர் மதிய உணவு உண்டு தண்ணீர் குடிக்குமுன் கண் செருகி இறந்தார் என்பதை என் வாழ்நாளில் மறக்க முடியாது.

**பரணீ**

**உங்கள் கணவரின் மறைவின் பின்னர் உங்கள் கணவர் பற்றிய மறக்க முடியாத சம்பவம் எதனையாவது ஜீவநதி வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறீர்களா?**

**கமலாம்பிகை குணராசா**

எங்கள் வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவங்கள் பல. அவர் எதிர்நீச்சலடித்துத்தான் வாழ்க்கையில் முன்னேறியவர். அப்போது பல சம்பவங்களை மறக்க முடியாதவை; மன்னிக்க முடியாதவை அவற்றை எவருடனும் பகிர்ந்து கொள்வதில் எவ்வித பயனுமில்லை.

**பரணீ**

**உங்களிடம் உங்கள் கணவரின் எழுத்துக்கள் பற்றிய மதிப்பீடு யாது?**

**கமலாம்பிகை குணராசா**

அவருடைய எழுத்துக்களை மதிப்பிடும் தகுதி எனக்குக் கிடையாது. ஆனால் ஒன்றை மட்டும் கூறுகிறேன் இவரது நாவல்கள் யாவற்றிலும் இழையோடி நிற்கும் பண்பு சமூகப் பார்வையாகும். சமகாலப் பிரச்சினைகளுக்கு வடிவம் கொடுத்து ஆவணப்படுத்தி எதிர்காலச் சந்ததியினரும் ஈழத்தமிழர்களது சமூக கலாசார விழுமியங்களை அறி வேண்டுமென்பதில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். இவரது மொழிநடையும் விவரண சித்திரிப்பும் சிறப்பம்சமாகும். இவரது நாவல்கள் மூலம் சமூகக் குறைபாடுகள் பலவற்றை நாசூக்காக எடுத்துக் கூறியுள்ளார். யாழ்ப்பாணத்து பேச்சு வழக்கு மொழியை ஆங்காங்கே எழுதியமையும் சிறப்பம்சமாக நான் நினைக்கிறேன். முடிவாக அவர் எழுதுவதற்கென்றே பிறந்தவர் என்பது எனது கருத்தாகும்.

**பரணீ**

**செங்கை ஆழியான் அவர்கள் எழுத்துலகில் மேலும் சாதிக்க வேண்டும் என நினைத்தவை பற்றி ஏதும் நீங்கள் அறிவீர்களா?**

**கமலாம்பிகை குணராசா**

அவர் சாதிக்க வேண்டிய அத்தனையையும் தன் எழுத்து மூலம் சாதித்து விட்டார். ஒரு நாவலை பிரசுரித்தால் அடுத்த நாவலை எந்த எழுத்தாளனும் இலங்கையில் பிரசுரிக்க முன் வர மாட்டார்கள். அந்த வகையில் ஒரே நாவலை பல பதிப்புக்களைப் பதிப்பித்து வெளியிட்டவர். பாடநூல்கள், பாடத்திட்டம் மாறும் போது பல இலட்சம் நஷ்டம் ஏற்படும்; அதைக் கண்டு பயப்படுவதில்லை. 2012 ஆம் ஆண்டு 9 இலட்சம் ரூபா பெறுமதியான நூல்கள் திருப்பியனுப்பப்பட்ட போதும் தொடர்ந்து நூல்களை பதிப்பிக்கின்ற சாதனையாளன். இனி அவர் சாதிப்பதற்கு எந்தவொரு துறையுமில்லை. ஆயுதப் போராட்டம் எழுச்சியும் வீழ்ச்சியும் என்ற நூலை வெளியிட மிக விருப்பமாக இருந்தார். ஆனால் நான் தடுத்து விட்டேன். அது தான் அவரது நிறைவேறாத விருப்பம்.

**பரணீ**

**செங்கை ஆழியான் அவர்களின் நூல்கள் பல கமலம் பதிப்பக வெளியீடுகளாகவே வெளிவந்தன. இந்த வெளியீடுகள் தொடர்பாக உங்கள் அனுசரணை எவ்வளவு தூரம் இருந்தது?**

**கமலாம்பிகை குணராசா**

கமலம் பதிப்பகம் என்ற பெயர் எனது பெயரை அடிப்படையாகக் கொண்டது. நான் அவிட்ட நட்சத்திரம். பொருள் குவியுமென்ற நம்பிக்கையில் ஆரம்பிக்கப்பட்டது. அவர் எழுதும் சிறுகதையென்றாலும் நாவல் என்றாலும் அரம்பத்தில் திருமணத்தின் பின் தட்டச்சில் ஒரே தடவையில் பொறிப்பார். அதன் எழுத்துப் பிழைகள் அத்தனையையும் திருத்த வேண்டியது எனது பொறுப்பு. அதன் போது வாசகியாக எனது அபிப்பிராயங்களைக் கூறுவதுண்டு. பெரும்பாலும் ஏற்றுக் கொள்ளமாட்டார், சிலவேளை ஏற்றுக் கொள்வார். 1999 இன் பின் கணணியில் ஒரே தடவையில் எழுதுவதை பழக்கமாகக் கொண்டவர். மனஓட்டத்திற்கேற்ப அவரது கைவேலை செய்யும். கமலம் பதிப்பகத்தினால் வெளியிடப்பட்ட பாடநூல்கள் பலவற்றில் எனது பங்களிப்பு உண்டு. குடியியல், பொருளாதாரம், அரசியல் ஐரோப்பிய வரலாறு, இந்திய வரலாறு, இலங்கை வரலாறு கற்றிருந்தமையாலும் ஆசிரியையாக இருந்தமையாலும் எனக்குரிய பகுதிகளைக் கட்டாயம் எழுதிக் கொடுக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தி எழுத வைத்தவர். நான் ஓய்வு பெற்ற பின்னர் கமலம் பதிப்பக வேலைகள் யாவும் என பெறுப்பில் விடப்பட்டது. அவரது சம்பளப்பணமும் எனக்கு எவ்வளவு என்று தெரியாது. புத்தக வருமானமும் எவ்வளவு என்று தெரியாது. அண்மைக்காலத்தில் தான் அவை பற்றி நான் அறிந்தேன்.

**பரணீ**

**செங்கை ஆழியான் நாவல்களில் உங்களுக்கு மிகவும் விருப்பமான நாவலைக் குறிப்பிட்டு, அதற்கான காரணத்தையும் கூறுவீர்களா?**

**கமலாம்பிகை குணராசா**

விருப்பமான நாவல்கள் பல உள்ளன. அவற்றில் "காட்டாறு" முதலிடம் பெற்றது எனலாம். இந்நாலின் களத்தில் சுமார் 3 1/2 வருடங்கள் கணவருடன் வாழ்ந்தவள் நான். குறிப்பாக சொல்வதாக இருந்தால் சட்டத்திற்கு கட்டுப்படாத பிரதேசம் என்று கூறலாம். அப்பிரதேசத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட பெரும்பாடுபட்டவர். செங்கைஆழியான். சில தடவை தன்னுயிரைப் பயணம் வைத்து இரவு வேளை காடுகளுக்குள் சென்றிருக்கிறார். யாழ்ப்பாணத்தில் பிறந்து வளர்ந்தவருக்கு அங்கு நடைபெற்ற ஒவ்வொரு விடயமும் வியப்பாக இருந்தது. எதிர்ப்புக்



களின் மத்தியில் சேவையாற்றியமையாலும் இன இரத்தம் கொதித்து எழுந்தமையாலும் உருவானதே "காட்டாறு" நாவல். ஒவ்வொரு இடமும்(காடு) இவர் நேரில் பெற்ற அனுபவங்களாகும்.

**பரணீ**

**உங்கள் கணவரின் எழுத்துக்களில் வரலாற்றுப் பார்வை எவ்வாறு உள்ளதாக நீங்கள் எண்ணுகிறீர்கள்?**

**கமலாம்பிகை குணராசா**

வரலாற்று நூல்கள் ஒவ்வொன்றும் காத்திரமான நூல்கள் மறைக்கப்பட்ட விடயங்களை எழுத்தில் வடிக்க வேண்டும் அதனை சிறியவர்களும், பெரியவர்களும் மாணவர்களும் வாசித்தறிய வேண்டுமென்ற நோக்கிலும் ஆவணப்படுத்தப்பட வேண்டுமென்ற நோக்கிலும் சமூகத்தில் அதற்கான தேவை உண்டு என்ற நோக்கிலும் எழுதப்பட்டவை. அதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது. வரலாற்று நாவல்களைப் பொறுத்தவரை கதையின் கரு உண்மை வரலாறு வாசகனை ஈர்த்துச் செல்வதற்காக சில கற்பனைக் கதைகள் மிகைப்படுத்திக் கூறப்பட்டுள்ளது என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

**பரணீ**

**செங்கை ஆழியானின் புவியியல் பாடநூல்களுக்கு பல்கலைக் கழக மட்டத்தில் எவ்வளவு தூரம் வரவேற்பிருந்தது?**

**கமலாம்பிகை குணராசா**

வெளிப்படையாகச் சொல்வதாயின் பல்கலைக்கழக மாணவர்கள் ஆசிரியர்கள் பலராலும் இவரது நூல்கள் பயன்படுத்தப்பட்டது. சிலர் நேரடியாகச் சொல்வார்கள்: "சேர் உங்களுடைய நூல்களைப் படித்து பட்டம் பெற்றோம், அவற்றை அடியொற்றி இன்று கற்பிக்கிறோம்" என்பது. சிலர் தமக்குள்ளே நூல்களைப் பயன்படுத்துவர். மாணவர்களின் கட்டுரைகளில் அடிக்குறிப்பு, உசாத்துணை நூல்கள் என்ற வரிசையில் குணராசா என்ற பெயர் எழுதப்பட்டிருந்தால் ஒரே வெட்டு அத்துடன் நூல்களைப் பயன்படுத்தக்கூடாது என்ற கட்டுப்பாடும் விதிக்கப்படும். இதை மாணவர்கள் பலர் நேரடியாக எம்மிடம் கூறியிருந்தார்கள். சற்று சிந்தித்துப் பாருங்கள், பல புவியியல் நூல்களை எழுதியவர், பல பட்டங்களைப் பெற்ற ஒருவருக்கு பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர் பதவி மறுக்கப்பட்டது. பட்டிதொட்டியெல்லாம் தேடித்தேடி கௌரவப்பட்டம் வழங்கிய பல்கலைக்கழகம் ஒரு சாதனையாளனுக்கு ஏதாவது கௌரவப்பட்டம் வழங்கியதா? யாழ். பல்கலைக் கழகத்தில் சாதாரண ஆசிரியர் பதவி வகித்தவர்கள் செனெற் சபையில் அங்கம் வகித்தார்கள். ஒரு செங்கை ஆழியான் பதவி வகித்தாரா? முடிவாகச் சொல்வதாயின் நான் எனது கணவரை சமாதானப்படுத்தும் வார்த்தை "உங்களுக்குப்பட்டம் பதவி தர இவர்களுக்கு அருகதையில்லை" என்பதாகும். டொமினிக் ஜீவா அவர்கள் தனக்கு வழங்கிய கௌரவத்தை மறுத்த போது ஒரு கூட்டத்தில் பகிரங்கமாக "செங்கை ஆழியானுக்கு ஏன் இந்தப் பல்கலைக்கழகம் பட்டம் வழங்கவில்லை"யெனக் கூறியது எனக்கு இச்சந்தர்ப்பத்தில் ஞாபகம் வருகிறது.

**பரணீ**

**அவரை ஒரு புவியியல் நூலாசிரியராகவா, சிறுகதை எழுத்தாளராகவா, நாவலாசிரியராகவா, வரலாற்று நாவலாசிரியராகவா கொள்வது மிகப் பொருத்தமானது?**

**கமலாம்பிகை குணராசா**

அவரை ஒரு துறை சார்ந்தவராகக் கொள்ள முடியாது. அவர் சார்ந்த துறைகள் யாவற்றிலும் தனக்கென சிறப்பான இடத்தைப்பிடித்துக் கொண்டவர். எனவே எனது கருத்து பல்துறை விற்பன்னர் என்பதாகும்.

**பரணீ**

**போராட்டம் குறித்த தமது கருத்துக்களைப் பூடகமாகத் தனது படைப்புக்களில் தெரிவித்து வந்தபோது எழுந்த எதிர்ப்பலைகள் பற்றி ஏதும் அறிவீர்களா?**

**கமலாம்பிகை குணராசா**

போராட்டம் குறித்த கருத்துக்களை நாவல்களில் சிறுகதைகளில் பூடகமாகக் கூறியதன் நோக்கம் ஒவ்வொரு காலகட்டத்திலும் மக்கள் பட்ட துன்பங்கள், அவல வாழ்க்கை, சமூக மாற்றம், சமூக கலாசார விழுமியங்களின் சீரழிவு என்பவற்றை ஆவணப்படுத்தும் நோக்கிலும், மனதில் தோன்றிவற்றை எழுதும் நோக்கிலும் அவ்வாறு எழுதியுள்ளார். போராட்டத்தை எந்தவொரு கட்டத்திலும் கொச்சைப்படுத்த விரும்பவில்லை. அழிவுகளைக் கண்டு வேதனைப்பட்டதன் விளைவாக

எழுதப்பட்டவை. எதிர்ப்பலைகள் வெண்டுமென்றே விமர்சிக்கப்பட்டன. ஆனால் இயக்கங்கள் ஒவ் வொன்றும் இவரை நன்கு புரிந்திருந்தனர் என்பது தான் உண்மை.

**பரணீ**

**செங்கை ஆழியான் அவர்கள் மிகவும் மதித்துப் போற்றிய எழுத்தாளர்கள் யாவர்?**

**கமலாம்பிகை குணராசா**

அமரர்களான கனகசெந்திநாதன், சம்பந்தன், நந்தி, வரதர், எஸ்.பொ., டானியல், வாழ்ந்து கொண்டிருக்கும் டொமினிக் ஜீவா, பத்மா சோமகாந்தன் போன்ற மூத்த எழுத்தாளர் பலரிடமும் மதிப்புடனும் பண்புடனும் பழகியவர். அவர்களை நேசித்தவர். தன் வயது ஒத்தவர்களிடம் மிகந்த அன்பு கொண்டவர். இதன் பிரதிபலிப்பே மறுமலர்ச்சிக் கதைகள், முன்னோடிச் சிறுகதைகள் போன்ற தொகுப்புக்களை தனது நேரத்தை அர்ப்பணித்து தேடி எடுத்து தொகுத்து வெளியிட்டமை. இதை இலக்கிய உலகு நன்கறியும். மறைந்த எழுத்தாளர்களுடைய படைப்புக்களை தனது சொந்தச்செலவில் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். முடிவாகக் கூறுவதாயின் இவர் எல்லா எழுத்தாளர் களையும் மதித்தார். அவர்களை இலக்கிய உலகு நினைவுகூர வழிவகுத்துள்ளார். இது பிறர் பிள்ளை தலை தடவ தன் பிள்ளை தானே வளரும் என்ற நிலை என்று கூட நினைக்கத் தோன்றுகிறது. முதலில் மதிப் பளித்த எழுத்தாளர் அவர் தமையன் புதுமைலோலன் (கந்தசாமி) அடுத்து வரதர் மிக முக்கியமானவர். இவர் சுடச்சுட எழுதிய நூல்களை(24 மணிநேரம்) போன்றவை உடனுக்குடன் வெளியிட்டு உதவிக் கரம் நீட்டியவர்.

**பரணீ**

**தமது படைப்புக்களுக்கும் அப்பால், பெறுமதி வாய்ந்த நூல் களை செங்கை ஆழியான் தொகுத்தும் தந்துள்ளார். இத்தொகுப்பு வேலைகளின் போது அவரின் உழைப்புப் பற்றி ஏதும் தெரிவிக்க விரும்புகிறீர்களா?**

**கமலாம்பிகை குணராசா**

இத்தொகுப்புக்கள் பெறுமதி வாய்ந்தவை என்பதை யாவரும் ஒப்புக்கொள்கிறார்கள் சற்று நேரம் சிந்தித்துப் பாருங்கள் ஒவ்வொரு தொகுப்பிற்குப் பல மணி நேரத்தை செலவிடவில்லை வருடக்கணக்கில் செல விட்டம். உதாரணமாக, பழைய பத்திரிகைகள், சஞ்சிகைகளைத் தேடிப் பெற்று அதனைப் பிரதி எடுத்து அவற்றில் சிறந்ததை தெரிவு செய்து பின்னர் பதிப்பித்தல், பதிப்பு செலவு, அதனை விற்பனை செய்தல், களஞ்சியப்படுத்தல் அப்படிப் பல இடர்களைக் கூறலாம். குடும்பத்தில் பிள்ளைகள் ஏன் நான் கூடக் கூறியுள்ளேன் இதற்கு செலவிக்கும் நேரத்தில் பல நாவல்கள் எழுதியிருக்கலாம் செல விடும் பணத்தை உங்களின் பல நாவல்களை மீளவும் பதிப்பிக்கலாமென கூறியுள்ளோம். அவர் கூறும் வார்த்தை "இதை யாரும் செய்யவில்லை ஈழத்தமிழரின் இலக்கிய வளர்ச்சியை ஆவணப்படுத்தினால் தான் ஏனைய நாட்டவரும் எமது வருங்காலச் சந்ததியும் அறியும். அதை என்னைத் தவிர எவரும் செய்ய மாட்டார்கள் என்னை என் வழியில் விடுங்கள்" என்பார். நாங்களும் சமாதானமடைந்தோம். எஸ்.பொ. அவர் களின் வேண்டுகோளுக்கிணங்க, இலங்கை எழுத்தாளர் களின் 40 சிறந்த நாவல்களை தேர்ந்தெடுத்து சிலரிடமிருந்து இத்துப்போன நாவல்களைப் பெற்று பிரதி எடுத்து அவற்றைப்பெற பலரது வீடுகளுக்கு நேரடியாகச் சென்று பெற்றுள்ளார். நானும் உடன் சென்றிருக்கிறேன். இதற்கு செலவழித்த காலம் 2 வருடங்கள். இதில் எந்தவித மிகைப்படுத்தலும் கிடையாது. முற்றிலும் உண்மை. நானும் எனது கணவரும் இந்தியா சென்று எஸ்.பொ. விடம் கொடுத்தோம். நான் அதற்கு சாட்சி. மாதம் ஒரு நாவலாக வெளிவரும் என வாக்களித்தவர். எதையும் நடைமுறையில் செய்யவில்லை. கடிதம் பல எழுதியும் பதில் இல்லை. முடிவில் அவரும் இறையடி சேர்ந்து விட்டார். நாவல்களுக்கு என்ன நடந்தது என்பது எமக்குத் தெரியாது. நாவலைத்தந்தவர்கள் பலர் இது பற்றி என் கணவரிடம் கேட்டார்கள். இவரால் பதில் கூறமுடியவில்லை. தான் பெருந்தவறு செய்து விட்டேன் நாவலைத் தந்தவர்களது ஏமாற்றம் மிகவும் வேதனை யாகவுள்ளது என அடிக்கடி கூறினார். இது அவரது உழைப்பிற்கு கிடைத்த தோல்வி.

**பரணீ**

**தனக்குப் பின் தொடரப்படவேண்டும் என்று செங்கை ஆழியான்**



அவர்கள் ஏதாவது எதிர்காலத் திட்டங்கள் பற்றிக் குறிப்பிடுங்கள்?

**கமலாம்பிகை குணராசா**

அவரிடம் எந்தவித எதிர் காலத் திட்டமும் இருக்கவில்லை. தனது இரண்டாவது மகள் திருமதி பிரியா பாலேந்திராவை புவியியல் பட்டதாரி யாக்கினார். அவரை தனது நூல்களை பாடத்திட்ட மாற்றங்களுக்கேற்ப திருத்தி எழுதி வெளியிட ஊக்கப்படுத்தி புவியியல் நூல்களை எழுத வேண்டுமென கூறியுள்ளார். என்னிடம் நாவல்களை தொடர்ந்து பதிப்பித்து வெளியிட வேண்டும் ஆனால் பிரதிகளை குறைத்து பதிப்பிக்கவும் என சில தடவை கூறுவார். சிலவேளை என்னோடு இவையெல்லாம் முடிந்துவிடும் என்றும் கூறுவார். யாதும் இறைவன் செயல்.



**பரணீ**

செங்கை ஆழியானை நினைவுகூர அவரின் படைப்புகளே போதுமானவை. எனினும், அவரை நினைவு கூரும் முகமாக நீங்கள் ஏதும் செய்ய நினைத்திருக்கிறீர்களா?

**கமலாம்பிகை குணராசா**

நீங்கள் கூறுவது சரியானது. ஆனால் நான் 2015 ஆம் ஆண்டு தொடங்கிய வேலை இன்னமும் முடியவில்லை. அது என்னவென்றால் அவரது சாதனைகளை தொகுத்து ஆவணப்படுத்துவதாகும். எனக்கு நேரம் கிடைப்பதில்லை. இதை இரவில் 10.30 மணிக்குப் பிறகுதான் செய்வேன். அப்போ இவர் பல நாட்களில் தடுத்துள்ளார். "இதற்கு இப்ப என்ன அவசரம் பகலில் வேலை இரவில் கண் விழிக்க வேண்டாம் லைற்றை அணைத்து விட்டு படும்" என கட்டாயப்படுத்தி நிறுத்தி விடுவார். ஆனாலும் இலக்கியம் வரை நான் தொகுத்ததை அவர் பார்த்து திருப்திப்பட்டு அப்படியே தொடரும் எனக் கூறியுள்ளார். எனவே அதனை எழுதி முடித்து பதிப்பித்து ஆவணப் படுத்துவதே அவருக்கு செய்யும் சேவையெனக் கருதுகிறேன்.



**பரணீ**

இங்கு சொல்லப்பட்டவற்றை விட, செங்கை ஆழியான் குறித்த ஏதாவது தவறவிடப்பட்ட முக்கியமான அம்சங்கள் எவற்றையும் கூற விரும்புகிறீர்களா?

**கமலாம்பிகை குணராசா**


இதுவரை கூறியவற்றை விட சமூகத்திற்கு பல சேவைகள் ஆற்றியுள்ளார். எத்தனையோ அரச ஊழியர்களை உருவாக்கியுள்ளார். தவறிழைத்த அரச ஊழியர்களைக் காப்பாற்றியுள்ளார். வறிய மாணவர்களின் கல்விக்கு பண உதவியளித்து உதவிக்கரம் நீட்டியுள்ளார். நடக்க முடியாதவர்களுக்கு 25 முச்சக்கர வண்டி சகோதரன் செல்வராஜா(கனடா) வின் உதவியுடன் வழங்கியுள்ளார்.


மகாவலி புரத்திற்கு நேரடியாகச் சென்று அங்கிருந்து குளிர்த்தி அம்மனை தன்னுடைய பணத்தை(3 லட்சத்து பதினாறாயிரம்) செலவழித்து தனது குலதெய்வம் கலட்டி மகாமாரியம்மன் கோயிலில் கோயிலாக கட்டி எழுந்தருளச் செய்துள்ளார்.

இவரது பேரன் தயாரின் தந்தை ஆறுமுகம் (வில்லிபுத்தூரில் சமாதியானவர்) என்பவரது யாழ்ப்பாணத்து ஆறுமுகசுவாமி கோயிலை 3 இலட்சம் இலங்கைப்பணத்தை செலவழித்து புணருத்தாரணம் செய்துள்ளார். இவற்றினை தனது சொந்த முயற்சியால் செய்துள்ளார்.

எனவே இவர் தான் வாழ்ந்த காலத்தை பிறருக்காகவே செலவழித்தார். தனக்காகவும் தன் குடும்பத்திற்காகவும் செல வழித்தது மிகச் சொற்பம். ஆனால் குடும்பத்தை சிறந்த நிலையில் வாழச் செய்த பெருமைக்குரியவர். இவரது பிறவி சேவைக்கென எடுத்த பிறவி தானும் தன்னோடு சேர்ந்த அனைவரையும் வாழ வைத்த அற்புதமான ஒரு பிறவி யாகும்.

இவற்றை சாதிக்க ஒரு அசுரவேகம் இவரிடம் இருந்ததை யாரும் மறுக்க முடியாது.






# "விடியலைத் தேடி" ஊடாக செங்கை ஆழியானை நினைவுகூர்தல்

■ க. நவம்

"போரில் நீ வென்றால், அதை நீ விபரிக்க வேண்டியதில்லை; தோற்றால், அதை விபரிக்க நீ அங்கிருக்கக்கூடாது!" இரண்டாம் உலகப் போருக்குத் தீ மூட்டியவரும், ஜேர்மன் சர்வாதிகாரியுமான அடொல்ஃப் ஹிற்லர்தான் இதைச் சொன்னவர். "2009 மே 18இல் முடிவுக்கு வந்த தமிழீழப் போரில் விடுதலைப் புலிகள் எப்படித் தோற்றுப் போயினர்?" என்ற வினாவுக்கு விடையளிக்கக்கூடாது என்பதற்காகவே அவ்வமைப்பின் மூலவர்கள் பலரும் கூட்டாக உயிரிழந்தார்களோ என இக்கூற்று எண்ணத் தூண்டுகின்றதல்லவா? இதேவேளை, விடுதலைப் புலிகளின் தோல்வி குறித்து, போரியல் வல்லுனர்களும், அரசியல் ஆய்வாளர்களும் புதிய புதிய எடுகோள்களையும் அனுமானங்களையும் ஊகங்களையும் முன்வைப்பதில் ஆளுக்காள் இதுவரைக்கும் சளைக்கவுமில்லை; இன்னமும் களைக்கவுமில்லை. எது எவ்வாறாயினும், நந்திக்கடலில் நடந்துமுடிந்த அவலத்தின் காரணங்களை ஒரு சாமானியனின் நோக்கில், நறுக்கென்று சொல்லிவிடும் சாமர்த்தியம், நான்கே நான்கெழுத்து வார்த்தை ஒன்றிடம் உண்டு. அதுதான் "துரோகம்!"

துரோகத்தின் ஒட்டுமொத்த விளைச்சலான முள்ளிவாய்க்காலில் முற்றுப்பெற்ற ஈழப்போரினால், ஈழத்தில் வாழ்ந்து வரும் தமிழ்பேசும் மக்களுக்கு இன்னல்களைத் தவிர இலாபமேதும் கிட்டியதில்லை. ஆயினும் இப்போரின் மூலமாக ஒருசில நல்ல இலக்கியங்களாவது வந்து கிடைத்திருக்கின்றனவே என எண்ணி ஓரளவு மனதைச் சமாதானப் படுத்திக்கொள்ள முடிகிறது. குறிப்பிட்ட காலம்வரை இருபக்கச் சமச்சீர்க் கொடுக்குப் பிடிகளுக் கிடையிலிருந்து இலக்கியம் படைக்கவேண்டிய இக்கட்டான சூழ்நிலை ஈழத்தமிழ்ப் படைப்பாளிகள் பலருக்கும் இருந்து வந்தது. ஒருபக்கக் கெடுபிடிகள் ஓய்ந்து தளர்ந்துள்ள போதிலும், மறுபக்க அச்சுறுத்தல்கள் முற்றாக மறைந்தமைக்கான அறிகுறிகள்

> கல்கி, சாண்டில்யன், அகிலன், நா. பார்த்த சாரதி போன்ற தமிழக எழுத்தாளர்கள் எவ்வாறு மெல்லுணர்வுகளைத் தீண்டி, இலட்சிய வேட்கைகளை விதைத்து, ஒரு புதிய தலைமுறை வாசகர்களைத் தம்வசப்படுத்தினார்களோ, அவ்வாறே ஈழத்தில் ஒரு வாசகர் பரம்பரையைச் செங்கை ஆழியான் தமதாக்கி வைத்திருந்தார். காட்டாறு, வாடைக்காற்று, கிடுகுவேலி, இரவின் முடிவு போன்ற அவரது நாவல்கள் பல பரந்துபட்ட வாசகர்களிடையே வரவேற்பைப் பெற்றிருந்தமைக்கு இதுவும் ஒரு பிரதான காரணம்.

ஏதுமில்லை. இவ்வாறான நெருக்கடிகளுக்கு மத்தியில் தான், தமிழிலக்கிய வரலாற்றில் மிக நீண்ட காலத்தின் பின்னர், போரிலக்கியத்திற்குப் புதியதொரு பரிமாணம் ஈழப்போரினால் கொண்டுவந்து சேர்க்கப்பட்டிருக் கின்றது என்ற உண்மையைத் தமிழிலக்கியத் துறைசார் விற்பன்னர்கள், விமர்சகர்கள் பலரும் ஒப்புக்கொள்ளத் துவங்கியுள்ளனர்.

இத்தகையதொரு பின்னணியிலேயே சமகால ஈழத் தமிழிலக்கிய முன்னோடிகளுள் ஒருவராக மதிக்கப்படும் அமரர் செங்கை ஆழியான் அவர்களது போர்க்காலப் படைப்பான "விடியலைத் தேடி" எனும் நாவலை அணுக விழைகிறேன். 2011இல் எழுதப்பட்ட, 67 பக்கங்களைக் கொண்ட இந்நாவல் குறித்து " "விடியலைத் தேடி" என்ற இச்சிறு நாவல் தமிழரின் சமகாலத்தைச் சித்தரிக்கும் ஓர் அரசியல் கதையாகும்" என்று தமது முன்னுரையை செங்கை ஆழியான் ஆரம்பிக்கிறார். அதனைத் தொடர்ந்து, சுதந்திரத்தின் பின்னரான பொன் இராமநாதன், பொன் அருணாசலம் போன்றோரது இணக்க அரசியலும், ஜி.ஜி. பொன்னம் பலம், சி. சுந்தரலிங்கம் போன்றோரது இணக்கமும் பிணக்கமும் இணைந்து-பிணைந்த அரசியலும், எஸ்.ஜே.வி. செல்வநாயகம், அமிர்தலிங்கம் ஆகியோரது அஹிம்சை அரசியலும், ஆயுதம் ஏந்திய பிரபாகரன் குழுவினரின் ஆயுதப் போராட்ட அரசியலும் பேரினவாதத்திற்கெதிராகப் போராடிப் பூஜ்யமான கதையைச் சொல்லிச் செல்லும் அவர், "இன்று மீண்டும் அன்றைய ஆரம்ப கட்டத்திற்கு வந்துள்ளோம். இவற்றை இந்த நாவல் பேசுகின்றது" என்றும், "நம்பி ஏமாந்த தமிழினத்தின் சோக வரலாற்றை இந்த நாவல் ஆவணப்படுத்துகின்றது" என்றும் அந்த முன்னுரையில் குறிப்பிடுகிறார்.

மன்னார் மாவட்ட மாந்தைப் பட்டினத்தின் முண்டைப்பிட்டிக்கும் வெள்ளாங்குளத்துக்கும் இடைப்பட்ட பிரதேசத்திலுள்ள பாலியாற்றங்கரையில் அமைந்திருக்கும் சுங்கன்குழி கிராமத்திலிருந்தே இந்நாவல் சூல்கொள்ள ஆரம்பிக்கிறது. அமைதியும் அழகும் நிறைந்த சிறியதொரு கிராமம், அது. மொத்தம் சுமார் 56 பேரைக் கொண்ட, எட்டே எட்டுக் குடும்பங்கள்தான் அங்கு வசிக்கின்றன. கிராமத்தின் தலைமகனான அம்பலவாணரின் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளைக் கொண்ட நாலு குடும்பங்கள்; மிகுதி நான்கும் அவரது உறவினர்களது குடும்பங்கள். தந்தைவழிச் சமூகத்தின் அச்சொட்டான உதாரண மாகத் திகழும் சுங்கன்குழியில் அம்பலவாணர் வைத்ததுதான் சட்டம். அவரது சம்மதமின்றி அயலி லுள்ள ஒரு சின்ன ஆட்டுக் குட்டியும் அங்கு சத்தமிட முடியாது!

இராணுவத்தின் ஆக்குரோஷம் மிக்க பன்முனைத் தாக்குதல்களுக்கு முகம்கொடுக்க முடி யாமல் விடுதலைப்புலிகள் பின்வாங்க ஆரம்பித்த போது, "பொடியள் செப்பமாக அடிச்சு விரட்டி விடுவான்கள்" என்ற அம்பலவாணரின் உறுதியான நம்பிக்கை சிதைந்துபோகிறது. முழுச் சுங்கன்குழி கிராமமும் அவரது முன்நடத்தலுடன் பூநகரியை நோக்கி இடம்பெயர்கிறது. பின்னர் முரசுமோட்டைக்கும் அங்கிருந்து புதுக்குடியிருப்புக்கும், ஈற்றில் நந்திக்கடல் பகுதியின் கெப்பப்புலவுக்கும் போய்ச் சேர்ந்தபோது, அம்பலவாணர் தமது உறவினர்களில் 22 பேரைப் போருக்குப் பறிகொடுத்திருந்தார். பொடியளின் சாகசம் பொய்யாய்க் கனவாய்ப் போன தருணம், அவரது குடும்பத்தவர் 56 பேரில் 20 பேர் மட்டுமே எஞ்சி யிருந்தனர். இடையில் நடந்து முடிந்த மனிதப் பேர வலத்தை, ஆறாத கவலையுடனும் தீராத வெஞ்சினத் துடனும் இந்த நாவல் விபரிக்கிறது! போரில் ,பொங்கிப் பெருகிய குருதியாற்றின் பாய்ச்சலுடன் கலந்திணைந்து, அம்பாலவாணரின் குடும்பக் கதையொன்றையும் நாவல் கூட்டியள்ளிச் செல்கிறது!

அம்பலவாணரின் பேரன் சசிதரன், விடுதலைப் புலிகளுடன் இணைந்து, கோண்டாவில் முகாமில் பத்திரிகை வெளியீட்டுப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம் சந்தித்த மரகதத்திடம் மனதைப் பறிகொடுக்கிறான். யாழ் குடாநாட்டின் மீதான ஆக்கிர மிப்பை இலங்கை இராணுவம் தீவிரப்படுத்தவே, வலிகாமம் முழுவதும் வன்னியை நோக்கி இடம்பெயர ஆரம்பிக்கிறது. மரகதமும் குடும்பத்தவர்களும் மூட்டை முடிச்சுக்களுடன், நாவற்குழிப் பாலம் கடந்து, கிளாலி ஊடாகக் கிளிநொச்சி சென்று, அங்கிருந்து திருவை யாறு போய்ச்சேரும் அச்சம் மலிந்த பயணத்தைக் கிளைக் கதையாக இந்நாவல் கூறிச் செல்கிறது.

இயக்கத்தினரால் பலவந்தமாகக் கடத்திச் செல்லப்பட்ட மரகதம், ஒரு கட்டத்தில் இன விடுதலைக் காகத் தன்னைப் பூரணமாக அர்ப்பணிக்க முடிவெடுத்த தன் மூலம், சசிதரனின் சபலத்துக்கு முற்றுப் புள்ளி இடுகிறாள். கலா என்ற மாற்றுப் பெயருடன் இயக்கத்தில் உயர்பதவி பெறுகிறாள். "இன்றைக்கு நாங்கள் எல்லாத்திலும் இருக்கிறம். எதுவும் செய்யமுடியும். பெண்களின் மகத்தான சக்தியை நீங்க அறியவில்லை. எங்களால ஆக்கவும் அழிக்கவும் முடியும்... இலேசாக எண்ணிவிடாதையுங்கோ.." (பக். 17) எனும் வார்த்தைகள் மூலம் புதிய தலைமுறைப் பெண்களின் துணிச்சலையும் பரந்துபட்ட பார்வையையும் அவள் துல்லியமாக வெளிப்படுத்துகிறாள். சசிதரனை அவனது மாமி மகள் வசந்தியுடன் இணைத்து வைப்பதற்கென அதிரடி நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டு உதவிய கலா, யுத்தத்தில் மடிந்து போகிறாள். ஓங்கி முழங்கிய விடுதலை யுத்தம், தற்காப்பு யுத்தமாகிப் பின்னர் உக்கிரமிழந்து ஒருபக்க இனவழிப்பாக உருவெடுக்கிறது. சரணாகதி வேண்டி வெள்ளைக் கொடியேந்தி வந்த விடுதலைப்புலி வீரர்களோடு சசிதரனும் சுட்டு வீழ்த்தப் படுகிறான். வரலாறு காணாத துன்பங்களையும் துரோகங்களையும் அழியாத கறைகளாகக் கொண்ட அத்தியாயம் ஒன்று, வன்னி மண்ணில் வரையப்படு கிறது. எஞ்சியிருந்த குடும்பத்தவர், உறவினருடன் மெனிக் ஃபார்ம் இடைத் தங்கல் முகாமில் சிலகாலம்

தங்கியிருந்து, கடைசியில் மீண்டும் சுங்கன்குழி போய்ச் சேரும் அம்பலவாணரின் குடும்பத்துக்கு, அங்கொரு அதிர்ச்சி காத்துக்கிடப்பதாகக் கூறி, "விடியலை நோக்கி" என்ற இந்த நாவல் முடிவுக்கு வருகிறது!

செங்கை ஆழியான் ஒரு புவியியலாளர். மேலும், அவர் ஓர் அரச நிர்வாகத் துறை அலுவலர். அந்த வகையில் வட இலங்கையின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்தவர். அவ்வப்பிரதேசங்களில் வதியும் மக்களது கிராமிய மொழி வழக்குகளும், வாழ்க்கை முறைகளும், உற்பத்தி உறவு முறைகளும், உணவு-உடை உள்ளடங்கலான பண்பாட்டு அம்சங்களும், புவியியல் சார்ந்த விபரணைகளும் அவரது நாவல்களில் மிக எளிமையாகவும் நுணுக்கமாகவும் அழகாகவும் சித்திரிக்கப்படுவதற்கு இவை பிரதான காரணங்கள். அம்பலவாணரது மூன்றாவது மகள் பாக்கியலட்சுமியின் கணவன் மருதநாயகம், சுங்கன்குழி கிராமத்திற்குப் பின்னாலுள்ள பாலியாற்றங்கரையை அண்டியிருக்கும் அடர்ந்த காட்டுக்குள் வேட்டை நாயுடன் உடும்பு வேட்டைக்குச் செல்கின்ற காட்சி - வன்னிக் காட்டுப்புற ஆன்மாவைக் கையோடு காவிச் செல்கின்ற காட்சி - செங்கை ஆழியானுக்கே வாலாயமான நேரடி அனுபவ வார்ப்பு! இதுபோன்ற அனுகூலங்களுடன் கூடிய, அவரது ஆற்றலின் பலாபலன்களை வாசகர்கள் இந்நாவலின் பல இடங்களில் அனுபவிக்கலாம்.

சுமார் 50 நாவல்களை ஈழத்தமிழ் வாசகர்களுக்குத் தந்த பெருமைக்குரிய எழுத்தாளரான செங்கை ஆழியான், அன்றாட வாழ்வில் தாம் கண்டவற்றை உடனடியாகக் கதையாக்கும் வல்லபம் கொண்டவர். இது எல்லா எழுத்தாளர்களுக்கும் கைவராத கலை. ஆனால் இந்த வலிமை இவரை மேலோட்டமான மெல்லுணர்வுகளுக்கும் இலட்சியங்களுக்கும் முன்னுரிமை கொடுக்கும் ஒரு படைப்பாளி என்ற வகைக்குள் மட்டுப்படுத்தி வைத்திருந்தது. பங்காளராக இல்லாமல் பார்வையாளராக இருந்து இலக்கியம் படைக்கும் அவரது பல ஆக்கங்களில் சமூக முக்கியத்துவம் சமரசம் செய்யப்பட்டிருப்பதான ஒரு அபிப்பிராயம் பல விமர்சகர்கள் மத்தியில் நிலவி வந்துள்ளது.




செங்கை ஆழியானை நான் வினைத்திறன் மிக்க கதைஞனாகவே கணிக்கிறேன். அவருடைய ஆக்கங்களை முன்னர் நான் படித்த போது அவரைப்பற்றிய ஒரு படிமம் என் மனதில் படிந்தது. வாசகா்களைக் கவரவல்ல கதை சொல்லும்பாணி தங்குதடையின்றிச் சரளமாக ஓடும் மொழி நடை போன்ற அம்சங்கள் - ஆங்கிலத்தில் இத்தன்மையை Redability என்பார்கள். இதுவே அவருக்குக் கணிசமான வாசகா் வட்டத்தை உருவாக்கிக் கொடுத்திருக்கின்றன.

- ஏ.ஜே. கனகரத்தினா -

மேலும், செங்கை ஆழியான் தமது பல்கலைக்கழக நாட்களில் பேராசிரியர் கைலாசபதியிடம் கல்வி கற்றதன் பயனாக, தமது எழுத்தூழியத்தின் ஆரம்ப காலத்தில் இடதுசாரிச் சிந்தனையால் கவரப்பட்டிருந்தார். ஆயினும், கடந்த நூற்றாண்டின் அறுபதுகளுக்குப் பின்னரான சுமார் 3 தசாப்த காலமாக ஈழத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த முற்போக்கு அணியுடன் அவர் தம்மை இணைத்துக் கொண்டவரல்ல. அதே வேளை அவர் ஒரு தீவிரத் தமிழ்த் தேசியவாதியுமல்ல. பதிலாக, தமது சகோதரர் புதுமைலோலனின் பாதிப்புகள் காரணமாக, ஒரு மிதவாதத் தமிழ்த் தேசியவாதியாகவும் தமிழ்ப் பற்றாளனாகவும் தம்மை இனங்காட்டிக் கொண்ட அவர், பெரும்பாலும் யாழ் இலக்கிய வட்டத்தினருடனேயே தமது ஊடாட்டங்களை வைத்திருந்தார்.

இவ்வகையில் ஒரு சித்தாந்தச் சார்புநிலைப்பட்ட படைப்பாளியாக அவர் தம்மை மாற்றிக்கொள்ளாத போதிலும், தாம் வாழ்ந்த சமூகத்தில் கண்டவற்றை - கேட்டவற்றை உணர்ந்தவற்றை யதார்த்தப் பண்புடன் கூடிய படைப்புக்களாக உருவாக்கினார். மிக நீண்ட காலமாகக் கதை சொல்லும் மரபாக இருந்துவரும் யதார்த்தவாத அடிப்படையிலேயே தமது இலக்கியப் பயணத்தைத் தொடர்ந்து மேற்கொண்டார். யதார்த்தவாதத்தின் தொடர்ச்சியாக மேற்கிளம்பிய இயல்புவாத அல்லது நவீனத்துவ அல்லது, பின்நவீனத்துவப் பண்புகள் எவற்றையும் தமது படைப்புகளில் அவர் ஒருபோதும் பரீட்சித்துப் பார்த்தவரல்ல.


கல்கி, சாண்டில்யன், அகிலன், நா. பார்த்தசாரதி போன்ற தமிழக எழுத்தாளர்கள் எவ்வாறு மெல்லுணர்வுகளைத் தீண்டி, இலட்சிய வேட்கைகளை விதைத்து, ஒரு புதிய தலைமுறை வாசகர்களைத் தம்வசப்படுத்தினார்களோ, அவ்வாறே ஈழத்தில் ஒரு வாசகர் பரம்பரையைச் செங்கை ஆழியான் தமதாக்கி வைத்திருந்தார். காட்டாறு, வாடைக்காற்று, கிடுகுவேலி, இரவின் முடிவு போன்ற அவரது நாவல்கள் பல பரந்துபட்ட வாசகர்களிடையே வரவேற்பைப் பெற்றிருந்தமைக்கு இதுவும் ஒரு பிரதான காரணம். அந்தவகையில், போர்க்கால வரலாற்றைப்




பின்புலமாகக் கொண்டு, அக்கால வாழ்க்கையை யதார்த்தப் பண்புகளுடன்கூடிய ஒரு படைப்பாக்கும் பணியினை "விடியலைத் தேடி" நாவலூடாக அவர் வெற்றிகரமாகச் செய்து முடித்திருக்கிறார்.

தான் வாழும் சமூகத்து மக்களுக்குத் தேவை என்று ஒரு படைப்பாளி கருதும் செய்தியைத் தனது படைப்பில் சொல்வதற்கு, அப்படைப்பாளிக்குப் பூரண சுதந்திரமும் உரிமையும் உண்டு. ஆயினும் இந்த உரிமையும் சுதந்திரமும் ஈழத்தமிழ் எழுத்தாளர் களுக்கு 2009 மே 18 வரை கிடைக்கவில்லை. அதன் பின்னர் கிடைத்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்ட படைப்பாளிகளுள் செங்கை ஆழியானும் ஒருவராவார். விடுதலைப் புலிகளின் தோல்வியை வரவேற்று "ருத்திரதாண்டவம்" என்னும் நாவலை 2012இல் அவர் எழுதியிருக்கின்றார். அதற்கு முன்னதாக 2011இல் விடுதலைப் புலிகளை மிகக் கடுமையாக விமர்சித்து எழுதப்பட்டதுதான் "விடியலைத் தேடி." எனும் இந்த நாவல். பேரின வாதத்திற்கு எதிராக மேற்கொண்ட போராட்டங்கள் யாவும் பூச்சியமாயின என்றும், அதற்கான முழுப் பொறுப்பும் விடுதலைப் புலிகளையே சாரும் என்றும் கூறும் செங்கை ஆழியான், தமது கண்டனங்களையும் அவற்றிற்கான காரணங்களையும் இந்நாவலில் அடுக்கிக்கொண்டே போகிறார். "எத்தனை சந்தர்ப் பங்கள் கிடைத்தன. அத்தனை பேச்சுவார்த்தைச் சந்தர்ப்பங்களையும் பிரபாகரனின் பிடிவாதம் வீணாக்கியது" (பக். 56) என்று வெளிப்படையாகக் கூறும் செங்கை ஆழியான், ஈழத்தில் தமிழ் பேசும் மக்களது ஒரு குறிப்பிட்டகால வாழ்வினை உண்மைத் தன்மையுடனும் நம்பகத் தன்மையுடனும் நாவலாக்கித் தரவேண்டும் என்ற வேட்கையுடன் இந்த நாவலை எழுதியிருப்பதாகத் தெரிகிறது.

Novellus என்ற இலத்தீன் சொல்லே ஆங்கிலத்தில் Novel ஆகியது. அதனைத் தமிழில் நாம் நாவல் என அழைக்கிறோம். Novellus என்பது இலத்தீன் மொழியில் "இளமையும் புதுமையும்" எனப் பொருள்படும் ஒரு சொற்பதமாகும். செங்கை ஆழியானின் "விடியலைத் தேடி" எனும் நாவலில் இப்பொருண்மை பெரிதும் எய்தப்பட்டதாகச் சொல்லமுடியாது. புதுமை யான உருவகங்களோ படிமங்களோ இன்றி, ஒற்றைப் பரிமாணம் கொண்டதாக நேர"கோட்டுத் தன்மை கொண்டதாக இந்நாவல் படைக்கப்பட்டுள்ளது. ஆயினும் தமிழ் இலக்கிய உலகில் இடம்பெறும் மிகச் சிறிய நாவல்களுள் ஒன்றான "விடியலைத் தேடி" சுங்கன்குழி கிராம மக்களது வாழ்வில் வீசிய காலச் சூறாவளியைச் சுருக்கமாகவும் உருக்கமாகவும் சொல்லும் ஒரு புனைவு. இலங்கைவாழ் தமிழினத்தின் ஒரு குறிப்பிட்ட கால அரசியல் வரலாற்றில் இடம்பெற்ற உண்மைச் சம்பவங்களின் முக்கியமான ஒரு பதிவு. தமிழர்தம் உரிமைகளை வென்றெடுக்கவென மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள் பலவும் கைகூடாத நிலையில், ஆயுதப் பலத்தினைப் பிரயோகித்து அவ்வுரிமைகளைப் பறித்தெடுக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சியும் படுதோல்வியில் முடிந்தமைக்கான காரண காரியங்களைச் சொல்லும் கதை. அவ்வகையில், ஈழத் தமிழர்மீது திணிக்கப்பட்டுவந்த வாழ்வின் குரூரங்களை எதிர்த்துக் குரலெழுப்புவதற்குத் தேவையான ஆத்ம பலத்தையும் எழுத்தாற்றலையும் கொண்ட அமரர் செங்கை ஆழியானின் "விடிவைத் தேடி" நாவலுக் கென்று, ஒரு வரலாற்றுப் பெறுமதியும் முக்கியத்துவமும் உண்டு என்பதையும், அவரது படைப்பிலக்கிய முயற்சியில் இந்நாவல் ஒரு முன்னோக்கிய பாய்ச்சல் என்பதையும் வாசகர்களால் எளிதில் இனங்கண்டு கொள்ள முடியும்! ●





# செங்கை ஆழியான் பிரளயத்தின் வாடைக்காற்றில் பிரயாணம் செய்யும் காட்டாறு

▪ கிண்ணியா சபருள்ளா ▪

இன்னும் எனக்கு நினைவிருக்கின்றது வாசிப்பின் மிது தீராக்காதல் கொண்டு புத்தகங்களோடு சதாவும் அலைந்து திரிந்து கொண்டிருந்த போது 1985களுக்குப் பின்னர் வெறித்தனமாக வாசிப்பின் மீது புலி வேட்டை நடாத்திக் கொண்டிருந்தேன். அப்போது கிண்ணியாவின் அப்போதைய் பிரதேச சபை பொது நூலகம் புத்தகக்காடாகவும் அதில் நான் ஒரு கை தேர்ந்த வாசிப்பின் வேட்டைக்காரனாகவும் கைகளில் புத்தகங்களை சுமந்தவாறு என்னையே இரையாக்கிக் கொண்டிருந்த காலமது. தமிழக மற்றும் இலங்கை எழுத்தாளர்களது நாவல்களை தேடித் தேடி எவ்வளவு முடியுமோ அந்தளவுக்கு உண்ணும் மற்றும் உறங்கும் நேரம் தவிர மற்றெல்லா நேரங்களிலும் அவர்களால் எழுதப்பட்ட நாவல்களுக்குள் மீணடெழா தவத்தில் மூழ்கிப் போயிருந்தேன்.

தமிழக நாவலாசியர்களைவிட ஏனோ தெரியவில்லை இலங்கையின் தமிழ்ப்பரப்பில் அப்போதைக்கு எழுதிக் கொண்டிருந்த எல்லா எழுத்தாளர்களும் அவர்களது புத்தகங் களும் எனக்கு ரொம்ப பிடித்துப் போயிற்று. வாழ்வில் கண்களால் கண்டிராத விழிகளால் சுவாசித்தறியாத இடங்களையும் தளங்களை யும் பகைப்புலமாக வைத்து தமிழக எழுத்தாளர்களால் எழுதப்பட்ட நாவல்கள் ஏனோ அந்தளவுக்கு வாசிப்பின் ரசனையில் மசாலா மணம் போட தவறி விட்டன. ஆனால் ஈழத்தின் அன்றைய காலத்து அதிலும் குறிப்பாக எழுபதுகளுக்குப் பின் எழுதப்பட்ட கிளாசிக் வரிசை நாவல்கள் மனசுக்குள் அனுக்குண்டின் வெப்பத்தை ஆயிரத்துக்கு மேற்பட்ட டிகிரியில் கொட்டி விட்டுப் போய் விட்டன என்றால் அது ஒன்றும் என்னைப் பொறுத்த வரை மிகைப்படுத்தலல்ல. கண்களால் பார்த்து மனசுக்குள செல்ஃபி செய்த இடங்களையும், மனசால் உய்த்துணர்ந்து பச்சை வண்ணங்களையும் புழுதிக்காடு களையும் மகரந்தச் சேர்க்கை புரிந்த இடங் களையும், அங்கு வாழும் விளிம்பு நிலை மக்களையும், உழைப்புக்காக வேண்டி மட்டும் முழு ஆயுளையும் ஆயத்துக்கு கொடுத்த வியர்வை மாந்தர்களையும் தளங்களாகவும் பாத்திரங்களாகவும் மாற்றி பெரு வீச்சோடு எழுதப்பட்ட ஈழத்தின் பல நாவல்களில் புதைந்து போன என்னால் அதிலிருந்து இன்றும் கூட வெளி வர முடியாத நிலையில் இருக்கின்றேன்.

இப்படித்தான் எண்பத்தைந்து எண்பத்தாறுகளில் வெறித்தனமாக ஈழத்து நாவல்களை தேடித் தேடி வாசித்துக் கொண்டிருந்த போது கிண்ணியா பொது நூலகத்தின் புத்தக ராக்கைகள் ஏகப்பட்ட எழுத்தாளர்களை என் வீட்டுக்கு பிரதம விருந்தினர்களாக அழைத்து வந்திருந்தது. ஏ. பாலமனோகரனின் குமாரபுரம், நிலக்கிளி, மணிவாணனின் யுகசந்தி, முல்லை

மணியின் பண்டார வன்னியண், கோகிலம் சுப்பையா வின் தூரத்துப் பச்சை, வை அஹமதின் தலை முறைகள், ஞான ரதனின் ஊமை உள்ளங்கள், கே. டானியலின் பஞ்சமர், உலகங்கள் வெல்லப்படு கின்றன, தண்ணீர் மற்றும் போராளிகள் காத்திருக் கின்றனர், கே. ஆர்.டேவிடின் வரலாறு அவளைத் தோற்று விட்டது, வ.அ. ராசரத்தினத்தின் கிரௌஞ்சப் பறவைகள், புரட்சிபாலனின் உமையாள் புரத்து உமா, பொ. பத்மனாதனின் யாத்திரை, கே. விஜயனின் விடிவு கால நட்சத்திரம், எஸ். சிறீ ஜோன்ராஜனின் போடியார் மாப்பிள்ளை, தெளிவத்தை ஜோசப்பின் காலங்கள் சாவதில்லை, ஞான ரதனின் ஊமை உள்ளங்கள், தாபி சுப்பிரமணியத்தின் இதயங்கள் அழுகின்றன, இரசிகமணி கனக செந்திநாதனின் விதியின் கை, உதயணனின் அந்தரங்க கீதம், கே.வி.எஸ் வாசின் நெஞ்சக் கனல், க.அருள் சுப்பிரமணியத்தின் நான் கெடமாட்டேன், ந. பாலேஸ்வரியின் பூஜைக்கு வந்த மலர், இளங்கீரன் சுபைரின் நீதியே நீ கேள், சே. கணேசலிங்கத்தின் காணி நிலம் வேண்டும் உட்பட அவரது பல நாவல்கள், ஞான சேகரனின் குருதி மலை, நந்தியின் தங்கச்சியம்மா, தெணியானின் நாவல், அ.ஸ. அப்துஸ் ஸமதின் நாவல், எஸ். அகஸ்தியரின் படைப்புகள் என ஈழத்தின் மிக முக்கியமான நாவலா சியர்களின் நாவல்களை திடீரென உடைப்பெடுத்த பெருங்குளமென பொங்கிப் பிரவகித்து வாசித்துக் கொண்டிருக்கும் போதுதான் "காட்டாறு" என்ற பொக்கிஷத்தை ஒரு பூனை போல மெதுவாக என்னிடம் வந்து காட்டித்தந்தது கிண்ணியா பொது நூலகம். அப்போதுதான் செங்கை ஆழியான் என்கின்ற அற்புதமானதொரு படைப்பாளி எனக்கு அறிமுகமானார். 1977களில் ஈழத்தில் மா பெரும் பணப்பரிசினை வென்றெடுத்து வீரகேசரியின் பொன் விழா நாவலாக வெளியான காட்டாறு எனக்குள் ஏற்படுத்திய மின்னதிர்வுகளை இன்றைக்கும் எனது நரம்பு மண்டலத்தில் நாட்குறிப்புகளாக காணக் கிடைக்கின்றது.

செங்கை ஆழியான் இலக்கியத்தின் எல்லாத் திசைகளிலும் தனது சிறகுகளை விரித்து வானம் செய்த வல்லூறு என்றாலும் நாவல்த் துறையில் அவரது வீச்சம் ரேடியக்கதிர்களை விடவும் அக்டிவ் ஆகக் கூடிய எக்செலன்ஸி. ஈழத்தின் நாவல்துறையில் செங்கை ஆழியானை ஓரம் கட்டி விட்டு அது பற்றி பேசுவது அப்சேர்டிட்டியின் உச்சம். இலங்கையின் டொப் ஃபைவ் நாவலாசியர்களுள் அவருக்குரிய இடம் என்றென்றைக்கும் இருந்து கொண்டிருக்கும். அபூர்வமான படைப்பாளி அவர்.

பாலமனோகரனின் நிலக்கிளியைப் போல, டேனியலின் பஞ்சமர், போராளிகள் காத்திருக் கின்றார்கள், தண்ணீர் போல காட்டாறு நாவலையும் மழை நாட்களின் போது நான்கைந்து தடவை வாசித்து எனக்குள் நானே வெயிலில் நனைந்து மழையில் காய்ந்த அனுபவங்கள் மனசுக்குள் இன்றைக்கும் அடிக்கோடிட்ட இடங்கள். காட்டாறை வாசித்து முடித்த கனத்திலிருந்து செங்கை ஆழியானது படைப்புகளை தேடித் தேடி வாசித்தேன். அவரது முதல் நாவலான நந்திக்கடல் ஒரு நவீனம் என்றால், சித்திரா பௌர்ணமி, மற்றும் நாக நாட்டு நாட்டு இளவரசி ஆகிய இரண்டும் கற்பனைகளின் ஒப்பனைகளில் அழகு கூட்டப்பட்ட சரித்திர நாவல்கள்.

சமூகத்தின் சீரியஸான பிரச்சினைகளை நகைச்சுவை கலந்து சொல்லுகின்ற போது லேசாக வாசகனை சென்றடையும் என்ற இலகுவான சூத்திரத்தை விளங்கிக் கொண்டு செங்கை ஆழியான் எழுதிய ஆச்சி பயணம் போகின்றாள், முற்றத்து ஒற்றைப் பனை, கொத்தியின காதல் ஆகிய நாவல்கள் கொமடி கலந்த சமூகத்தின் குமுறல்கள். கொமடியாயிருந்தாலும் அந்த நாவல்களில் கோமாளித்தனங்கள் வந்து சேர்ந்து விடக் கூடாதென்ற சிவப்பு அலாரத்தை விரல்களில் வைத்துக் கொண்டு செங்கை ஆழியான் இந்த நாவல்களை சிருஷ்டித்திருக்கின்றார் என்பதனை இந்த நாவல்களை வாசிக்கும் போது விளங்கிக் கொள்ளலாம்.

சதாவும் உள்ளங்கைக்குள் பணயக் கைதியாக் கப்பட்டு சின்னதொரு வட்டத்துள் தனது உலகத்தினை சிருஷ்டித்துக் கொண்ட ஸ்மார்ட் ஃபோனைப் போல தனது எல்லைக்கப்பால் எதுவும் தெரியாமலே வாழ்ந்து வருகின்ற வயசான பாட்டி நாகரீக மோகத்துக்கு தம்மை விலை பேசி விற்று விட்ட மகனோடும் மரு மகளோடும் தனது கிராமத்துக்கு வெளியே வந்து வாழ்கின்ற போது அந்தப்பாட்டி இன்னோர் உலகை எப்படி ஜீரணித்துக் கொள்கின்றாள் என்பதனை ஹாஷ்யத்தோடு சொல்லு கின்ற ஆச்சி பயணம் போகின்றாள் நாவலிலும் சரி, சமூகத்தின் பொய்யான வேஷங்களை தோலுரித்துக் காட்டுகின்ற கொத்தியின் காதலிலும் சரி, யாழ்ப்பாணத் தில் அழிந்து வருகின்ற கலையொன்றினை காப்பாற்றியே ஆக வேண்டுமென்ற வைராக்கியத்தோடு வாழுகின்ற கிழவரைப் பற்றி துயரம் கலந்த நகைச் சுவையோடு சொல்லுகின்ற முற்றத்து ஒற்றைப் பனையிலும் சரி செங்கை ஆழியான் சீரியஸ் வரிசை நகைச்சுவை சொல்லி சிரிக்கு முன்னமே மனசுக்குள் பாறையினை ஏற்றி விடுகின்றார். நாவல் எழுதுகின்ற எல்லோருக்குமே வாய்த்து விடாத அற்புதமான கலையிது. பெரும்பாலான சீரியஸ் தரத்து பேனாவின் கூர் முனையில் அவித்த முட்டையில் எதனையோ தேடி ஆராய்ச்சி செய்கின்ற ரிசேர்வ்ட் டைப் எழுத்தாள பெரு மக்களுக்கு நகைச்சுவையை மிக்ஸ் பண்ணி கதை சொல்லுவதென்பது ஒட்டாத சங்கதியாகவே இருந்து வருகின்றது. ஆனால் மேற் சொன்ன நாவல்கள் மூலம் தனது ஆரம்ப கால எழுத்துகளிலேயே கொமடி வகையறாக்களை புகுத்தி பெரும் ட்ரஜடி பண்ணி யிருக்கின்றார். ஆச்சி பயணம் போகின்றாள் மற்றும் முற்றத்து ஒற்றைப் பனையினை வாசித்து முடித்த போது சிரித்துக் கொண்டு அங்குமிங்கும் அசைந்து கொண்டிருந்த எனது உதடுகள் சீரியஸாகி விட்டன.

இந்த நாவல்களை எழுதிய பின்னர் செங்கை

ஆழியான் எழுதிய அடுத்தடுத்த நாவல்கள் வெகு தீவிரமாக சமூகத்தையும், அதில் புரையோடிப் போயுள்ள கண்ணுக்குத் தெரிந்தும் என்றைக்கும் அழிக்கவே முடியாமற் போன வைரசுகளையும், பக்டீரியாக்களையும் பங்கசுகளையும், அடித்தட்டு மக்களின் ஆழ் மனதில் எவருக்கும் சொல்லாமற் கொள்ளாமற் ஒரு எரிமலைக் குழம்பு போல கனன்று கொண்டிருக்கும் கண்ணீரையும், விளிம்பு நிலை மக்களின் விலாசமே இல்லாமற் போன வாழ்வின் உரை கற்களையும், சமூகத்தில் வாழ்கின்ற இல்லாத மக்களின் பலவீனத்தை சூறையாடி குதூகலம் கொண்டாடுகின்ற முதலாளி வர்க்கத்தின் சிதைவுற்ற மனோ நிலையினையும், நிலப்பிரபுத்துவ முறைக்குள் சிக்குண்டு வெளியே வரவே முடியாதளவுக்கு நுண்ணிய முடிச்சுகளில் சிக்குண்டு மாள்கின்ற அபலை மாந்தரின் வரலாறுகளையும் தீவிரமாக ஆராய்ந்து நுணுக்கமான கதையாடல்களை செய்கின்றன.

அந்த வகையில் 1976ம் ஆண்டு நாவலிலக் கியத்துக்கான சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற பிரளயம், அதன் பின்னர் வாடைக்காற்று மற்றும் 1977ம் ஆண்டு வீரகேசரியின் ஐம்பதாவது பிரசுரமாக வெளி வந்த காட்டாறு ஆகிய மூன்று நாவல்களையும் என்றென்றைக்கும் ஈழத்து நாவல் இலக்கியத்தி லிருந்து பிரித்துப்பார்க்கவே முடியாது. செங்கை ஆழியான எழுதிய நாவல்களில் இந்த மூன்றும் கோல்டன் பிரீமியம். அவரது ஒட்டு மொத்த நாவல் களின் அப்சலியூட் ஹை லைட். ஈழத்து இலக்கியப் பரப்பில் வாசகர் மத்தியில் பரவலான அலைகளை எழுப்பி சீரியஸாக யோசிக்க வைத்த சமூகச்சித்திரம். தலித்துகளின் துயரங்களை வெகு நுணுக்கமாக பதிவு செய்த ஈழத்தின் முதல் நாவலான கே. டானியலின் பஞ்சமரை ஒதுக்கி வைத்து விட்டு எப்படி சமூக நாவல்கள் பற்றி சமர் செய்ய முடியாதோ அது போலத் தான் செங்கை ஆழியானின் இந்த மூன்று நவீனங்களும்.

1976ம் ஆண்டு நாவல் இலக்கியத்துக்கான சாகித்ய விருது பெற்ற பிரளயம் மிக மிக நுட்பமாகவும் ரொம்பத் தீவிரமாகவும் அன்றைய யாழ்ப்பாணச் சூழலில் மிக மோசமாக சூர சம்ஹாரம் பண்ணிக் கொண்டிருந்த சாதிப்பிரச்சினையை வெகு தைரியமாக பேசுகின்றது. வேளாளத்தான் என்று சொல்லிக் கொண்டு சலவைத் தொழிலாளர்கள் மீது பிரயோகிக் கப்படுகின்ற வன்முறையின் கோரப்பற்களை மேடை போட்டுப் பேசிய நாவலிது. கே. டேனியலின் பஞ்ச மருக்கும், செங்கை ஆழியானின் பிரளயத்துக்கு மிடையில் ஒத்துப் பொகின்ற விடயங்கள் நிறைய. இந்த இரு நாவலகளினதும் கதைக்களமும் கதை சொல்லும் பாங்கும் கதை மாந்தர்களும் வெவ்வேறாயினும் அவை இரண்டும் பயணம் செய்கின்ற ஒழுங்கும் திசையும் ஒன்றுபடுகின்ற பல இடங்களை நான் காண்கின்றேன்.

வாடைக்காற்று நாவல் வெளியான கால கட்டத்தில் அன்றைய வாசகர்களின் ஜனரஞ்சகப் பட்டியலில் முதலிடத்தில் இருந்தது அது. அதற்கு வாசகர்களும் விமர்சகர்களும் நேராகவும் எதிராகவும் கொடுத்த விளம்பரம் வியப்பின் எல்லைக் கோடுகளை கோட்டோவியங்களாய் வரைந்து கொண்டிருந்தன. வாடைக்காற்று காலத்தில் வாடைக்காற்று வீசுகின்ற பிரதேசங்களுக்கு இடம் பெயர்ந்து போய் மீன் பிடியில் ஈடுபடுகின்ற மீனவ சமூகத்தின் வாழ்வியலை அபாரமாக பதிவு செய்த நாவலிது. மீனவர்களின் வாழ்வியல் ஒழுங்கு, அவர்களது காதல், அவர்களது சுக துக்கங் கள், எதிர் கொள்ளுகின்ற துயரங்கள், வயிற்றுப்பாட்டுக் காக வாழ பழக்கப்பட்டு வேறெந்தத் தேவைகளையும் கற்றுக் கொள்ளாத கவிச்சுக்காரர்களின் வரலாற்றை இந்த நாவலில் பதிவு செய்திருக்கின்றார் செங்கை ஆழியான். நெய்தல் நிலத்தை பகைப்புலமாகக் கொண்டு எழுதப்பட்ட இந்த நாவலை வாசிக்கும் போதெல்லாம் தோப்பில் முகம்மது மீரானின் கடற்கரை யோரத்தை தளமாகக் கொண்டு எழுதப்பட்ட ஒரு கடலோரக்கிராமத்தின் கதை ஞாபகத்துக்கு வரு கின்றது.

ஏனோ தெரியிவவில் லைதாழ்த்தப்பட்ட ஹரிஜனங்களை தலித்துகளை சாதியத்தை வைத்து கட்டவிழ்த்து விடுகின்ற கொடுமைகளைப் பற்றி பேசுகின்ற பிரளயம் நாவல், மீனவ சமூகத்தின் நீண்டு நெடி துயர்ந்த அவலங்களைப் பற்றி விரிவுரை நடாத்து கின்ற வாடைக்காற்று நாவல்... இந்த இரண்டையும் விட ரொம்ப கனதியாகவும் செங்கை ஆழியானின் லைஃப் டைம் மாஸ்டர் பீஸாகவும் இன்றைக்கும் மனசுக்குள் யாகம் நடத்திக் கொண்டிருப்பது என்னவோ காட்டாறு தான் என்பது என் தனிப்பட்ட கருத்து. வாடைக்காற்றில் நெய்தலை நெசவு செய்கின்ற செங்கை ஆழியான் காட்டாறில் மருதத்தையும், முல்லையையும் ஒரு சேரக் கலந்து காட்சிப்படுத்தியிருக்கின்றார். காடும் காடு சார்ந்த இடமும் வயலும் வயல் சார்ந்த இடமும் மார்புகள் விரிந்து திரண்டு நிற்கின்ற கோடைகாலத்து பாலை மரம் போல விரிந்து கிடக்கின்ற கிராமத்தையும், அதன் அடிமைப்படுத்தப்பட்ட கூட்டத்தையும் கதையின் பகைப் புலமாகவும், கதை மாந்தர்களாகவும் படைத்திருக் கின்றார் செங்கை ஆழியான். கொம்மியுனிஸ மற்றும் மார்க்ஸிய சித்தாந்த்தினை அடிப்படையாகக் கொண்டு கதையை அதி அற்புதமாக நகர்த்தியிருக்கிறார். இலங்கை நிர்வாக சேவையில் ஒரு பணியாளனாக நியமிக்கப்பட்ட பின்னர் நேரடியாகவே கதையில் வரு கின்ற கடலாஞ்சிக் கிராமத்தை தரிசித்த அனுபவத் தினை கதையில் செங்கை ஆழியான் பதிந்திருப்ப தாகவே எனக்குப் படுகின்றது. காட்டாறுக்கு முன்னர் இவரால் எழுதப்பட்ட நாவல்களில் செங்கை ஆழியான் மூன்றாம் நபராக ஒதுங்கி நின்று மௌனம் அனுஷ்டிக்கும் அதே நேரம் காட்டாறில் தானும் ஒரு பாத்திரமாக மாறி விடுகின்ற புள்ளியில் கதையின் கனம் பாறைகளை பள்ளத்தில் தள்ளி விட்டு தமக்குரிய கனதியை சுய பிரகடனம் செய்து கொள்ளுகின்றது.

வட இலங்கையின் யாழ்ப்பாணத்தின் ஏதோ ஒரு மூலையில் காடுகளாலும் கழனிகளாலும் சதாவும் வாசிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் கடலாஞ்சி எனும் வெயில் தத்தெடுத்த பூமியின் நிலச்சுவாந்தர வரலாற்றை செங்கை ஆழியான் சொல்லுகின்ற பாணி அவரது அதற்கு முந்தைய நாவல்களிலிருந்து அப்பட்டமாக மாறுபட்டு விரிகின்றது. 1970களின் அடிமைச் சமூகத்தையும், அந்த சமூகத்தை தமது சுய லாபங்களுக்காக எல்லா விதத்திலும் சூறையாடிக் கொண்டிருந்த ஆதிக்க சக்திகளையும் மிக நுணுக்க மாக வீடியோ பிடித்துக்காட்டும் கலையில் காட்டாறு அவரது எல்லா நாவல்களையும் ஓவர் டேக் பண்ணி விடுகின்றது.

காடு வெட்டி கழனியாக்கி அன்றாட சோத்துக் காக வேண்டியாவது தமக்கென்று சொந்தமாக ஆகக் குறைந்தது ஒரு ஏக்கர் பரப்பிளான வயல், அந்த வயலில் கதிர்களோடு தலை குனிந்து பூமியை சுகம் விசாரித்துக் கொண்டிருக்கும் நெற்கதிர்கள் என்று தமது வாழ்வாதாரத்தின் ஆகக் குறைந்த ஆசை களோடு பெரும் கனவுகள் கண்டு பாடு பட்டு காடு வெட்டி அதனை வயலாக்குகின்ற அப்பாவிக் கூட்டத்தின் அறியாமையையும் அப்பாவித்தனத்தை யும் தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு அவர்கள் கஷ்டப்பட்ட கழனியாக்கிய வயல்களை அடாத்தாக பறித்துக் கொண்டு, அவர்களுக்கென்று எதுவுமற்றவர்களாக, பரதேசிகளாக மாற்றி அடிமைச் சாசனத்தை எழுதி நீட்டி அவர்களது இரத்தத்தை உசிரோடு உறிஞ்சி குடிக்கின்ற அதிகார வர்க்கமும், அதற்கு உடந்தையாக கடை நிலை அரச உத்தியோகத்தர்களும் செய்கின்ற கொடுமைகளை காட்டாறு துணிகரமாக கதையாடல் செய்கின்றது.

இந்த நாவலின் தொடக்கத்திலேயே செங்கை ஆழியான் தாமரைக்கண்டுக்கிழவரும் கணபதியும் அடர்ந்த காட்டுக்கு வேட்டைக்கு வருகின்ற போது வேட்டை பற்றி விபரிக்கின்ற அந்த காட்சிப்படுத்தலில் வாசகனும் அவர்களோடு காட்டுக்குச் சென்று மானையோ அல்லது மரையையோ வெடி வைத்து வேட்டையாடும் இன்னோர் உலகுக்கு இழுத்துச் செல்லப்படுகின்றான். நேரடியாக இந்தக் களத்தை தரிசித்திருந்தாலன்றி கேட்டறிந்ததையோ அல்லது எங்கேனும் வாசித்ததையோ இவ்வாறு காடசிப் படுத்தல் அசாத்தியமாகி விடுகின்றது. வேட்டை நிலத்தை விபரிக்கின்ற போதும் சரி, ஏன் தாமரைக் கண்டுக் கிழவரும் கணபதியும் அத்தனை கஷ்டங் களுக்கு மத்தியிலும் வேட்டைக்கு வந்து காட்டு மிருங்கங்களிடம் தமது உசிரை பணயம் வைத்து போராட்டம் நடாத்த வேண்டுமென்று அந்தப்பாத்திரங் களின் உரையாடலூடாக செங்கை ஆழியான் விபரிக்கின்ற போது ஒரு துயரக்கடலுக்குள் நாம் பயணிக்கும் தோணி இதோ கவிழ்ந்து விடப் போகின்றது என்ற சிகப்புச் செய்தி பிரேக்கிங் நிவ்ஸாக வந்து நிற்கின்றது.

எழுத்தாளர் சுஜாதா சொல்லுவார் "அமிஞ்சிக் கரையிலிருந்து கொண்டு அமெரிக்காவைப் பற்றி எழுதுக் கூடாது. தேரியாத அமெரிக்காவைப் பற்றி எழுது கின்ற போது அந்த எழுத்து தோல்வியிலேயே முடியும்". எப்பேர்ப்பட்ட உண்மையும் யதார்த்தமும். செங்கை ஆழியானின் எல்லா நாவல்களுமே இந்த வகையறாக் கள்தான். அதனால்தான் அவரால் குழப்பங்களேது மின்றி, நகம் கொரித்தவாறு பேனையை மேசையில் போட்டு விட்டு மணிக்கணக்கில் எப்படி கதையை நகர்த்துவது என்ற யோசனையில்லாமல் மிக இயல்பாக கதை சொல்ல முடிகின்றது. தான் பார்த்த, தான் தரிசித்த, தான் அனுபவித்த, தான் பழகிய, தான் உறவாடிய இடங்களையும் மனிதர்களையும் பற்றி, அவர்களுக்குள் சுழன்று கொண்டிருக்கின்ற சூறாவளி பற்றி, அவர்களுக்குள் வெளியில் சொல்ல தைரிய மில்லாமல் சதாவும் வீசிக் கொண்டிருக்கின்ற பாலை வனப் புயல் பற்றி எல்லாம் தெரிந்தவன் என்ற உச்ச நிலையிலிருந்து கதைக்குள்ளே அவரால் ஊடாட முடிகின்றது.

இயல்பாக அவர் கதையை நகர்த்துகின்ற சாலையில் கரடு முரடற்ற தன்மையை கண்டு கொள்ளு கின்ற ஒவ்வொரு வாசகனும் அவர் உருவாக்குகின்ற கடலாயினும் சரி, காடாயினும் சரி, வயல்வெளி களாயினும் சரி, குளங்களாயினும் சரி அந்தந்த இடங் களில் முரண்பாடற்ற அதன் இயல்பான உருவாக்கம் மயக்கமற்ற வெளியில் நமைத் தள்ளி விட்டு கதையின் சூழலுக்குள் எம்மை கட்டியணைத்துச் செல்லுகின்றது. செங்கை ஆழியான் தனக்கு நன்கு பழக்கமான கதைக்களங்களையும், தனக்கு வெகு நெருக்கமான மாந்தர்களையுமே தனது நாவல்களில் உலாவ விட்டிருக்கின்றார் என்பதனை மறுக்க மாட்டார்கள் அவரை நுணுக்கமாக வாசிப்பவர்கள்.

கணபதி, தாமரைக்கண்டுக் கிழவன், சந்தனம், சியாமன் மாரசிங்கம், கன்ட்ராக்டர் கந்தசாமி, கிராமத்து டிஸ்பென்சரி அப்போதிக்கரி, செவ்வந்தி, தினசகாயம வாத்தியார், டீஒ கமலராசா, சிறி வரதசுந்தரன், மாயழகு, சங்குப் பொடியன், புவனேஸ்வரி என்று காட்டாறில் வரும் ஒவ்வொரு பாத்திரங்களையும் பார்த்துப்பார்த்து செதுக்கியிருக்கின்றார் செங்கை ஆழியான். இந்த நாவலின் இன்னொரு விஷேசம் நாவலில் ஹீரோயி ஸத்தைச் சுற்றி நகராத கதை. எல்லாப்பாத்திரங் களுக்கும், எல்லாக் கதை மாந்தர்களுக்கும் அழுத்த மான பாத்திரப்படைப்பினை கொடுத்து கதையை நகர்த்துவதாகும்.

கடலாஞ்சிக்கிரமாத்தில் பரம்பரை பரம்பரை யாக வாழ்ந்து வரும் தாமரைக்கண்டுக்கிழவன் காடு வெட்டி கழனியாக்கிய வயல் நிலத்துக்கு அவனது முன்னையோர் இந்த நாட்டுக்கு பஞ்சம் பிழைக்க வந்தவர்கள் என்ற ஒரே காரணத்துக்காக அவன் வெட்டி ஆளாக்கிய வயல் நிலத்துக்கு பேர்மிட் பத்திரம் கொடுக்கப்படாமலிருக்கும் போது அவன் விரக்தியோடு "அங்காலயுமில்லாம இங்கயுமில்லாம" என்று

விரக்தியின் உச்சக்கட்டத்தில் பெரு மூச்சு விடுகின்ற போது பிரஜா உரிமை இல்லாமல் ஒரு காலத்தில் பிழைக்க வந்த மக்கள் பட்ட கஷ்டங்களையும் அவலங் களையும் கண்களுக்குள் கொட்டி விட்டு கருமணி களை குத்தி விட்டுப் போகின்றது வரலாற்றின் ஆறா வடுக்கள்.

ஊர் விதானையிலிருந்து நீர்ப்பாசன அதிகாரி வரை கடலாஞ்சிக்கிராமத்தில் பணி புரிகின்ற எல்லா அரச கூத்தாடிகளும் அதிகார வர்க்கத்தோடு சேர்ந்து கொண்டு வயிற்றுக்காகப் போராடும் உழைக்கும் வர்க்கத்தை சூறையாடுகின்ற இடங்களை செங்கை ஆழியான் மிக நுட்பமாக குறிப்பிடுகினறார். இன்றைய டிஜிட்டல் நெட்வேர்க்குகளில் மெஜிக்கல் லைஃப் என்று நாம் பெருமையாக டவீட் அடிக்கின்ற போதும் ஒரு பிசாசைப் போல ஆளாகி நிற்கின்ற லஞ்சத்தையும் ஊழலையும் ஆயிரம் சட்டங்களை பாராளுமன்றத்தில் கொண்டு வந்தாலும் அழிக்கவே முடியாத படி இரும்பு அத்திவாரத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இன்று லஞ்சமும் ஊழலும் நவீன வடிவங்களோடு மெட்ரோ சிட்டி மினரல் வோட்டராய் அட்ரா சக்கை செய்து கொண்டிருக்கினறது. இதே லஞ்சமும் ஊழலும் 1970களில் விவசாயக் கிரமாங்களில் அரச அதிகாரிகளின் சகதி நிறைந்த கைகளில் என்ன வடிவங்களில் இருந்தது என்பதனை புழுதி மண்ணின் வாசைனையோடு புதினம் செய்திருக்கிறார் செங்கை ஆழியான். வடிவங்கள் மாறியிருக்கின்றனவே மற்றும் படி லஞ்சமும் ஊழலும் இன்னும் வளர்ந்த் படிதான் இருக்கின்றது. செங்கை ஆழியான் அரச அதிகாரி களின் லஞ்சத்திலும் வஞ்சத்திலும் சிக்கித் திணறும் பாட்டாளி வரக்க்த்தின் தலை விதியை சொல்கின்ற ஒவ்வொரு இடத்திலும் ரஷ்யாவின் உழைப்பாளர் பூமி கண் முன்னே விரிகின்றது.

கிராமப் புறங்களின் அபிவிருத்திக்காக நல்ல மனதுடன் ஒதுக்கப்படுகின்ற கிராமா மக்களுக்கான செல்வம், ஐஸ் கட்டி கை மாறுவதனைப் போல கை மாறி ஒரு துளியாகி நிலைப்பதனையும் கண்டேன" என்று செங்கை ஆழியான் சொல்வது போல காட்டாறில் கிராம அபிவிருத்திக்காக அரசால் ஒதுக்கப்படுகின்ற நிதி ஐஸ் கட்டியாக கை மாறி ஒரு துளி கூட இல்லாமற் போகின்ற கர்ம விதி இப்போதும் கூட காலா காலத்துக்குமானது.

வெயிலில் காய்ந்து மழையில் நனைந்து பசிப்புரட்சி செய்கின்ற வயிற்றை ஒரு மாடு போல பட்டியிலிட்டு அடைத்து காடாய் கிடந்த இடத்தை கழனியாக்கி அந்தக் கழனிக்கு அது இது என்று போக்குக்காட்டி பேர்மிட் இல்லாமலாக்கி தாமே அதனை மிக லாவகமாக சுருட்டிக் கொள்கின்ற போதும் சரி, அல்லது பயிர் செய்ய வட்டிக்குக் கொடுத்த கொஞ்ச காசை திருப்பிக் கொடுக்காத பட்சத்தில் கந்து வட்டி மீட்டர் வட்டி என்று அந்த வயலையே தனதாக்கி ஒட்டு மொத்த சனங்கயையும் அடிமையாக்குகின்ற நிலப்பிரபுத்துவ சர்வாதிகாரத்தை நாவல் நெடுகிலும் அழுது கொண்டே சொல்லிக் கொண்டு போகின்றார் செங்கை அழியான். "ஏழைகள் வெட்டி கமம் செய்கின்ற காணி எல்லாம் அரா விலைக்கு வாங்கி தனதாக்கிக் கொண்டு வட்டிக்குப் பணம் கொடுத்து கிராம மக்கள் எல்லோரையும் கடனாளியாக்கி இந்த வாத்தி ஒருத்தனே போதும் எங்க கிராமத்த கெடுக்க" என்று கதையின் பிரதான பாததிரமான சந்தனம் வெடிக்கின்ற போது துண்டங்களாகி சிதைகின்றது மனசு.

தனது முன்னைய நாவல்களில் பிரச்சினை களைப் பற்றி மட்டுமே பேசி விட்டு தீர்வுகளைத் தராது ஓரமாக ஒதுங்கிப் போன செங்கை ஆழியான் காட்டாறில் நிலச்சுவாந்தர கொடுமையின் சமூகத்தில் காலா காலத்துக்குமான அடிமைத்தளைகளிலிருந்து மீட்சி பெறுவதற்கான வழி வகைகளை தனது புரட்சிகரமான பாத்திரப் படைப்பினூடாக ஓரளவுக்கு முன் வைக் கின்றார். முழுதாக இல்லையென்றாலும் தீர்வுகளை ஓரளவேனும் முன் வைப்பதில் செங்கை ஆழியான் தனது முந்தைய நாவல்களிலிருந்த வேறு படுகின்றார். நாவல்களை நோக்கிய தனது பயணத்தில் மெச் சூரிட்டியை அடைந்து கொள்கின்ற புள்ளியில் நின்று கொண்டு காட்டாறை இவர் உருவாக்கியிருக்கின்றார் என்பதில் சந்தேகமேயில்லை.


மொத்தமாக முப்பத்தி ஒன்பது நாவல்களை (குறு நாவல்கள் உள்ளடங்க்லாக) படைத்துள்ள செங்கை ஆழியானின் நாவல் உலகம் மிக்வும் விசால மானது. எழுபதுகளுக்குப் பின்னர் அவரால் எழுதப்பட்ட பல நாவல்களில் உதிரிப்பூக்கள் மகேந்திரனையும், பாரதிராஜாவையும், காண முடியும். செங்கை ஆழியானின் கிளாஸிக் வரிசை நாவல்கள் ஈழத்தின் நாவல் வரலாற்றில் நிச்சயமாக ஜுராஸிக்.

ஈழத்தின் நாவல்களின் பொற்காலம் காலாவதி யாகி கன நாளாகி விட்டது. நான் ஏலவே குறிப்பிட்ட கிளாஸிக் வரிசை நாவல்கள் தொடராக வெளி வந்து கொண்டிருந்த காலப்பகுதி தொலைந்து போய் வெகு நாளாகி விட்டது. போஸ்ட் மொடர்னிசம் என்று சொல்லிக் கொண்டோ அல்லது ஏதாவது ஒரு இஸத்தை தோளில் தூக்கி வைத்துக் கொண்டோ புதிதாக நாவல் படைக்கின்றோம் என்று கட்டுகளை உடைக்க கிளம்பி விட்ட இலக்கியக் கிளர்ச்சிக்காரர்களும் சரி அல்லது புதிய கோணங்களில் நாவல்கள் படைக்கின்ற எண்ணங்களோடு புறப்பட்டு வருகின்றவர்களாயினும் சரி அவர்கள் தமது நாவல்களைப் படைக்க முன்னர் ஈழத்தின் பல நாவல்களை வாசித்த அனுபவத்தினை உணர வேண்டும். ஈழத்தின் நாவல் வரிசை தெரியாத நவீன இலக்கியத்தின் புரட்சிகர ஷேகுவராக்களால் புரட்சி என்ற நாவல் வரிசையில் புரட்சியின் முடியைக் கூடப் புடுங்க முடியாது. ஈழத்தின் நாவல் இலக்கியத்தில் செங்கை ஆழியான் போன்ற லெஜன்ட்ரி எழுத்தாளர் களின் மேற் சொன்ன நாவல்கள் புதிய இலக்கியத் தலைமுறைக்கு பாடம் சொல்லித் தருகின்ற சிலபஸ் என்றால் என்னை நோக்கி ஏதாவதொன்றை கோபத் தோடு எறிந்து துரத்துவீர்களா என்ன?



# வரலாறு பேசும் செங்கை ஆழியான்

■ யோகேஸ்வரி சிவப்பிரகாசம் ■



தமிழ் இலக்கிய வரலாற்றைப் பேசப் புகும் எவரும்" செங்கை ஆழியான்" என்னும் புனைபெயர் கொண்ட கலாநிதி. க.குணராசா அவர்களைப் பற்றி குறைந்தது ஓரிரு அத்தியாயங்களளவேனும் கூறாது விட்டுவிட முடியாது. அவர் எழுதாத துறைகளென எதுவுமில்லை. இதன் காரணமாக அவர் இலக்கிய வரலாற்றில் தனியிடத்தைக் கைப்பற்றி சிம்மாசனமிட்டு அமர்ந்துவிடார்.

செங்கை ஆழியான்,தமிழிலக்கிய வரலாற்றில், குறிப்பாக ஈழத்தமிழிலக்கிய வரலாற்றில் பல முக்கிய விடயங்களைப் பதிவு செய்தவர் அந்த விடயங்கள் பற்றி அதன் பின்னர் எழுதியவர்கள் குணராசா அவர்களின் கூற்றுக்களைத் தமது ஆக்கங்களில் எடுத்துக் காட்டி இலக்கிய வரலாற்றை எழுதியதால் இலக்கிய வரலாற்றில் இந்த வகையிலும் குறிப்பிடப்படும் ஒருவராய் விளங்குபவர். ஈழத்தின் நாவல் வரலாறு, ஈழத்தின் புனைகதைப் படைப்பாளிகள், ஈழத்துப் பெண் எழுத்தாளர்கள் முதலான அவர் எழுதிய பல கட்டுரைகளை அத்தகையன.வாக எடுத்துக் காட்டலாம் ஈழத்தின் ஆரம்ப காலச் சிறுகதைகளைப் பற்றி மட்டுமே நீண்ட காலமாக எல்லோரும் பேசி வந்தார்கள். அடுத்த கட்டத்திற்கு நகர்வதற்கே தயங்கிக் கொண்டிருந்தார்கள். சிறுகதை ஒரு பெரும் பரப்பளவைக் கொண்டது. அதனை அளக்கத் தொடங்கினால் எங்கோ ஒரு மூலையில் ஏதோ ஓரிடத்தை விட்டுவிட்டதாகக் குறை காண யாரோ ஒருவர் வருவார் என்பது திண்ணம். அதனாலேயே தயக்கம் அனை வருக்கும் தடை போட்டது. ஆனால் அது குறித்து அலட்டிக்கொள்ளாமல் அந்தப் பெரும் பரப்பைப் பற்றி "ஈழத்துச் சிறுகதை வரலாறு" எனும் நூலையே எழுதிச் சாதித்தவர் செங்கை ஆழியான். .இப்போது சிறுகதை பற்றி எதைக் கூற முற்படுபவரும் அந்த நூலை எடுத்துக் காட்டாது விடுவதில்லை. ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் சிறுகதை எழுத்தாளன் என்றும் சிறுகதையின் வரலாறு எழுதியவர் என்றும் இருவேறு பரிமாணங்களைப்பெறுகிறார்.

இலக்கியவரலாற்றிற்கு அத்தியாவசியமான சான்றாதாரங்களாகத் திகழும் பல எழத்தாவணங்கள் காலப்போக்கில் மறைந்துவிடுகின்றன. ஓவ்வொரு சஞ்சிகையினதும் .பத்திரிகையினதும் பெயர் கூறி, அவை வளர்த்தெடுத்த இலக்கியம் குறித்து எழுத முற்படுவோர் அவற்றை எங்கு தேடியும் காணக்கிடைக்காது கேள்விஞானத்தை மட்டும் பதிவு செய்யும் நிலை ஏற்படுகிறது.. அவற்றைத் தேடியெடுத்து மீள்பதிவு செய்யும்போது






அவையே தம் வரலாறு கூறும் பதிவுகளாக நின்று நிலைத்துவிடுகின்றன.அவ்வாறு மீள் பதிவு அல்லது மீள்பதிப்பு செய்வது தமிழிலக்கிய வரலாற்றிற்குச் செய்யும்மாபெரும் சேவையாகும். .பெருமுயற்சி செய்து பழைய சஞ்சிகைகளையும் பத்திரிகைகளை யும் தேடி எடுத்து,மீள்பதிவு தொகுப்புகளை வெளி யிட்டு அச்சேவையை ஆற்றினார் செங்கை ஆழியான். மறுமலர்ச்சிச் சிறுகதைகள், சுதந்திரன் சிறுகதைகள், ஈழநாடு சிறுகதைகள், ஈழகேசரிச்சிறுகதைகள், முதலியவை போன்றே வெவ்வேறு எழுத்தாளர்களின் ஆக்கங்களையும் தொகுத்து வெளியிட்டுள்ளார். சும்பந்தன் சிறுகதைகள்,முனியப்பதாசன் சிறுகதை கள், புதுமைலோலன் சிறுகதைகள் முதலிய தொகுப்புகள் இத்தகையன. திரு. குணராசா அவர்கள் புவியியலை சிறப்புப் பாடமாகக் கொண்டு பட்டம் பெற்றவர். புவியியல் நூல்கள் பல எழுதியவர். அதேவேளையில் இலங்கையின் வரலாற்றை சிறப்பாக யாழ்ப்பாண வரலாற்றை ஆராய்ந்து எழுதுவதிலும் அவர் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். நல்லைநகர் நூல். ஈழத்தவர் வரலாறு. யாழ்ப்பாணக்கோட்டை வரலாறு, யாழ்ப்பாண அரச பரம்பரை, மகாவம்சம் கூறும் இலங்கைச்சரித்திரம் என்பன அவரது சரித்திர ஆய்வு நூல்கள். இருபத்துநான்கு மணி நேரம், பன்னிரண்டு மணிநேரம், மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது, சுனாமி முதலானவை தற்கால வரலாற்று பதிவு நூல்களாக அமைந்திருக்கின்றன. அதேவேளை யில் சரித்திர சம்பவங்களைக் கதைகளாக்கி சிறுகதை களாகவும் நாவல்களாகவும் படைத்திருக்கிறார் செங்கை ஆழியான்.கடற்கோட்டை, நந்திக்கடல். நாகநாட்டு இளவரசி, பீலிவளை, கந்தவேள் கோட்டம், சித்திராபௌர்ணமி, குவேனி, ஈழராஜா 'எல்லாளன் முதலியன பழைய சரித்திரம் பகரும ஆக்கங்களாகும். சம காலத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற வருங்காலத்தில் வரலாறாகப் பதிவாகப்போகின்ற வற்றையும் கருவாகக்கொண்டு கதைகளையும் நாவல்களையும அவர் உருவாக்கியுள்ளார். நாளை சரித்திரம் எழுதச் சான்றுகள் தேடி அலைவோர் இவற்றிலிருந்து வரலாற்றை ஊகித்துக் கொள்ளலாம். ஆகவே இவையும் ஒரு வகையில் வரலாறு கூறுபவையே. அதுவும் ஒரு போர் நிகழ்ந்த காலகட்ட சரித்திரப் பதிவுகள் என்பது கவனிப்பிற்குரிய தாகும்.

புல்வேறு சந்தரப்பங்களில் செங்கை ஆழி யானே தான் இவ்வாறு பதிவு செய்துள்ளதை எழுதியும் கூறியுமுள்ளார். உதாரணமாக "விடியலைத் தேடி" நாவலின் முன்னுரையைக் கூறலாம்."நம்பி ஏமாந்த தமிழினத்தின் சோக வரலாற்றை இந்த நாவல் ஆவணப் படுத்துகிறது" என அந்த முன்னுரை முடிகிறது.

திரு.குணராசா வெவ்வேறு துறைகளில் நிர்வாகசேவையில் அதிகாரியாகக் கடமையாற்றியவர். அவ்வாறு பெற்ற அநுபவங்களைச் சேர்த்திழைத்துத் தன் படைப்புகளை ஆக்கியவர். இவைகூட வரலாற்றுக்கு வேண்டியவையே.

இலக்கிய வரலாறு பேசும் இலக்கியகர்த்தா வாகிய செங்கை ஆழியான் இலக்கிய வரலாற்றையும் இலங்கை வரலாற்றையும் பலவாறு பேசியுள்ளார். இதுபெரும் ஆய்வுக்குரிய விடயமாகும் இக்கட்டுரையில் மேலெழுந்தவாரியாகவே தொட்டுக் காட்டப் பட்டுள்ளது. •






# செங்கை ஆழியானின் காட்டாறு

■ தருமராசா அஜந்தகுமார்

வன்னியில் இடம்பெற்ற குடியேற்றத்தையும் காடுவெட்டி காணியாக்கி கழனியாக்கி வாழமுற்பட்ட மக்கள் கூட்டத்தினரின் வாழ்வியலையும், போராட்டத்தையும் அங்கு அம்மக்களைச் சுரண்டியே வாழும் பணமுதலைகளின் ஆட்டத்தையும் அதற்கு விலைபோகும் அரசாங்க அதிகாரிகளின் ஊழல் உலகத்தையும் அவையெல்லாவற்றையும் தாண்டி உணர்வெழுச்சி கொள்ளும் விவசாய சமூகத்தின் கதைதான் இந்தநாவல்.

இலங்கைத் தமிழ் நாவல் உலகில் செங்கை ஆழியான் என்ற பெயர் தவிர்க்கப்பட முடியாத ஒரு பெயர். சாதாரணமாக எந்த வாசகரையும் கவரக்கூடிய எழுத்துவன்மை, தேடிப்படிக்கும் ஓர் எழுத்தாளராக அவரை ஆக்கியிருந்தது. "செங்கை ஆழியான் நாவல் இலக்கியத்தை வளர்த்ததிலும் நாவலாக்கம் செங்கை ஆழியானை வளர்த்திருக்கிறது"என்று செங்கை ஆழியான் தன்னையே பெருமிதப்படுத்திக்கொள்ளும் அளவுக்கு நந்திக் கடல் நாவல் முதல் நந்திக்கடலில் நிறைவுபெற்ற "ருத்திர தாண்டவம்" வரை தொடர்ந்து நாவல் உலகில் இயங்கியவராக விளங்கினார்

செங்கை ஆழியானின் நாவல்கள் பலபொருண்மை களில் பலகாலங்களில் தொடர்ந்து இயங்கியமையினால் பல கால, சமூக, பண்பாட்டு, அரசியல் வரலாற்றோடும் பின்னிப் பிணைந்து பயணிப்பவையாகும்.நாவல் ஒன்று தனியே கதைகூறுவதை மட்டும் நோக்கமாகக் கொண்டதல்ல. காலம், சமூகம், பண்பாடு, அரசியல் என்பவற்றோடு சேர்ந்து உருத் திரள்வது. சமூகவியல், மானிடவியல் ஆகிய அறிவுப்புலங்களோடு கைகோர்க்கும் ஒன்றாகவும் நாவல் விளங்கும். இங்கு இனவரை வியல் என்ற ஒன்று மிக நெருக்கமானதாக அமைகின்றது.

ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தை அல்லது அவர்களின் பண்பாட்டை விவரிக்கும் கலை இனவரைவியல் ஆகும். ஒரு தனிப்பட்ட சமூகத்தின் பண்பாட்டை முழுமையாகப் புரிந்து கொண்டு அவற்றை முறையாகத் தொகுத்து வழங்குதல் இன வரைவியலின் நோக்கமாதலால் இது அடிப்படையில் வருணனைத் தன்மை கொண்டதாகவே அமையும் என்று பக்தவத்சல பாரதி குறிப்பிடுகின்றார்.

ஏனைய இலக்கியவகைகளை விட இனவரைவியலை முழுமையாகப் பிரதிபலிக்கக் கூடியது நாவலே ஆகும். இதனை ஆ.சிவசுப்பிரமணியன்,

"ஒரு குறிப்பிட்ட சமூக அமைப்பில் வாழும் மனிதர்களின் வாழ்வியல் பிரச்சினைகளையும், உளவியல் பிரச்சினைகளையும் மையமாகக் கொண்டெழும் நாவலானது அம்மனிதர்களினதும் சமூகத்தினதும் பண்பாடு, பழக்கவழக்கங்கள், சமயவாழ்வு மற்றும் வாழ்வியல் அம்சங்களை முழுமையாகப் பிரதிபலிப்பது அவசியமாகும். அப்பொழுதுதான் அந்நாவலைப்படிக்கும் வாசகன் அதில் இடம்பெறும் சமூகச் சூழலோடு ஒன்றிவிட முடியும். அத்துடன் அந்நாவலில் இடம்பெறும் பாத்திரங்கள், அவை சித்திரிக்கப்படும் காலச் சூழலோடு பொருந்திநிற்கும்."

என்று குறிப்பிடுகின்றார்.

வரலாற்று நாவலில் தொடங்கி (1963) தமிழர் வரலாற்றின் சோகம் (2009) வரை நாற்பத்தாறு ஆண்டுகள் நாவல் உலகில் இயங்கிய செங்கை ஆழியானின் பல நாவல்கள் இனவரைவியல் ரீதியிலும் மிக முக்கியமானவை. நெடுந்தீவு மீனவர் வாழ்வைப் பின்னணியாகக் கொண்ட வாடைக்காற்று, சலவைத்தொழிலாளர் வாழ்வு பேசும் பிரளயம், காற்றாடி விடும் பண்பாடு பற்றிய முற்றத்து ஒற்றைப் பனை, விவசாயிகளின் வாழ்வியல் பேசும் காட்டாறு என்று விரித்துரைக்கலாம்.

ஈழத்து நாவல்கள் பிரதேசத்தை நோக்கி 1970 களில் திரும்பியதன் பிற்பாடே அவை இனவரைவியல் ஆவணங்களாகும் தகுதியை உடையனவாகவும் மாறத் தொடங்கின. அந்தவகையில் விவசாயிகளின் இனவரைவியலை வெளிப்படுத்திய நாவல் களாக 1973 இல் வெளிவந்த அ.பாலமனோகரனின் நிலக்கிளி நாவலைத் தொடர்ந்து 1977 இல் வன்னிப் பிரதேசத்தைக் களமாகக்கொண்டு செங்கை ஆழியான் எழுதிய காட்டாறு முக்கியமான ஒரு நாவல் ஆகும்.

வன்னியில் இடம்பெற்ற குடியேற்றத்தையும் காடுவெட்டி காணியாக்கி கழனியாக்கி வாழமுற்பட்ட மக்கள் கூட்டத்தினரின் வாழ்வியலையும், போராட்டத்தையும் அங்கு அம்மக்களைச் சுரண்டியே வாழும் பணமுதலைகளின் ஆட்டத்தையும் அதற்கு விலைபோகும் அரசாங்க அதிகாரிகளின் ஊழல் உலகத்தையும் அவையெல்லாவற்றையும் தாண்டி உணர்வெழுச்சி கொள்ளும் விவசாய சமூகத்தின் கதைதான் இந்தநாவல்.

"விவசாயத் தொழிலாள மக்கள் கூட்டம் காடு களை வெட்டிக்கொளுத்தி கழனிகளாக்கி இயற்கைக்கும் மிருகங்களுக்கும் இடையில் நிரந்தரப் போராட்ட வாழ்வு வாழ்கின்ற வேளையில், இடையில் இன்னொரு வர்க்கம் சுரண்டிப் பிழைப்பதைக் கண்டேன். நிலந்தேடிய பின் இறுதியில் அதையும் இழந்து சீரழிவதைக் காணமுடிந்தது. அழகிய விவசாயக்கிராமங்களை பெரிய மனிதர் என்ற போர்வையில் உலாவும் முதலாளித்துவக் கூட்டமும், உத்தியோக வர்க்கமும் எவ்வாறு சீரழித்து சுரண்டு கின்றனர் என்பதை நான் என் கண்களால் காண நேர்ந்தது. மண்ணையும் பொன்னையும் மட்டுமா அவர் கள் சுரண்டினார்கள்? பெண்களை விட்டார்களா? சுரண்டலின் வகைகள் என்னைப் பதறவைத்தன. கிராமாந்தர வாழ்க்கையில் எதுவுமறியாத அப்பாவி ஏழை விவசாயிகளைப் பரம்பரை நிலப்பிரபுத்துவ முதலாளி களும், விவசாயத்தின் வெற்றியில் அண்மையில் பணந் தேடிக்கொண்ட புது முதலாளி களும் கருவறுத்தார்கள். கிராமப்புறங்களின் அபிவிருத் திக்காக நல்ல மனத்துடன் ஒதுக்கப்படுகின்ற கிராம மக்களுக்கான செல்வம், ஐஸ்கட்டி கைமாறுவதைப் போலக் கைமாறி ஒரு துளியாய் நிலைப்பதையும் கண்டேன். இக்கிராமங்களில் ஒரு சிலரால் கல்விச் சுரண்ட்ல் எவ்வாறு திட்டமிட்டு நடத்தப்படுகிறது என்பதை யும் காண நேர்ந்தது. பல முனைகளிலும் தாங்கள் சுரண்டப்படுவதை அறியாது, அறிய வகையற்றுத் தேங்கிய குட்டையாக கிராமமக்கள் வாழ்ந்து வருவதை யும், அதிகாரத்துக்கும் சண்டித்தனங் களுக்கும் பயந்து ஒதுங்கியிருப்பதையும், ஆங்காங்கு சிறு தீப்பொறியாக இளைஞர் சிலர் விழிப்புக்குரல் எழுப்புவதையும் நான் கண்டேன். என் மனதில் இவை யாவும் ஆழப்பதிந்து வெளிவர துடியாய்த் துடித்தன. இச்சின்னத்தனங்களை - தேசியத்துரோகிகளை - மக்கள் விரோதிகளை மக்கள் முன் காட்டிக்கொடுக்க வேண்டும் என்ற சத்திய ஆவேசத்தின் விளைவாக உருவானதுதான் காட்டாறு."

விவசாயிகளின் வாழ்க்கையை இதற்கு முன்னர் பதிவுசெய்தது என்ற வகையில் செ.கணேசலிங்கனின் மண்ணும் மக்களும், அ.பாலமனோகரனின் நிலக்கிளி ஆகியன குறிப்பிடத்தக்கன. மண்ணும் மக்களும் விவசாயிகளின் நிலவுடைமையாளர்களுக்கு எதிரான போராட்டத்தைச் சித்திரிப்பது. நிலக்கிளி, தண்ணி முறிப்பு என்ற வன்னிக்கிராமத்தின் பிரதேச மணம்கமழ அவர் களின் வாழ்க்கைமுறையைப் பின்னணியாகக் கொண்டு ஆக்கப்பட்டது. பிரதேசத்தையும் வாழ்க்கை யையும் பிரச்சினைகளையும் போராட்டத்தையும் ஒரு சேரத் திரட்டி அழகியலுடனும் விறுவிறுப்புடனும் நகர்த்தும் நாவலாக காட்டாறு விளங்குகின்றது என்பது முக்கியமானது.

இனவரைவியலை ஒரு நாவலாசிரியன் சுய அனுபவம், கள ஆய்வு, நூலறிவு ஆகிய மூன்று வழி முறைகளில் அறிந்துகொண்டு படைப்பாக்கத்தில் ஈடு படுகிறான் என்று ஆ.சிவசுப்பிரமணியன் குறிப்பிடு கின்றார். இங்கு உதவி அரசாங்க அதிபராக இருந்த சுய அனுபவம், இடையறாத கள ஆய்வு, அப்பிரதேசத்தைச் சாராத செங்கை ஆழியானிடமிருந்து அரிய ஒரு நாவலாக காட்டாறைத் தந்திருப்பதைக் காணலாம்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வன்னியின் கடலாஞ்சியில் குடியேறி காணியும் பணமும் சேர்த்தே ஊருக்குத் திரும்புவேன் என்ற இலட்சியத்துடன் வந்த சந்தனம், மலையகத்திலிருந்து வந்து குடியேறி தங்கு வேட்டையிலும் நிலங்களைப் படிப்பதிலும் ஆழ்ந்து விளங்கிய தாமரைக்கண்டு, புங்குடுதீவில் இருந்து குடி யேறி வாழ்வோடும் வயலோடும் சிலவேளை காட்டோடும் போராடும் கணபதி - இவர்களைப் போன்ற

ஏழைகளை எல்லாம் சுரண்டிச்சுவைத்து வாழ்வதையே நோக்கமாகக் கொண்ட சியாமன் மாரசிங்கம், கொன்ராக்ரர் கந்தசாமி, விதானையார் ஸ்ரீ வரதசுந்தரர், ரீ.ஓ கமலராசன், ஆசிரியர் தினசகாயம் என பணமுதலைகள் அரசாங்க அதிகாரிகள் ஆகிய பாத்திரங்களின் கதை யோட்டத்தில் வர்க்கபேதம், சாதிபேதம், பிரதேச பேதம் என்பவற்றையும் சந்தனம் - செவ்வந்தி, புவனேஸ்வரி - சந்தனம், மாயழகு - மகேஸ்வரி போன்றோரின் மெல்லிய காதல் மன உணர்வுகளையும் கலந்து இயல்பும் சுவையும் குன்றாமல் அந்தக்காலத்தோடும் காட்டோடும் இணைப்பயணிகளாய் இந்த நாவலோடு நாமும் இணைப்பயணிகளாகின்றோம்.

முல்லைநிலத்தில் மருதத்தை உண்டாக்கும் வாழ்வியல் போராட்டமாய் அதற்கு எதிரே வரும் மனிதப்பிரச்சினைகளின் போராட்டமாய் இந்நாவல் விரிகின்றது. சங்க கால அகப்பொருளில் கருப்பொருள் என்பது முக்கியமானது. இயற்கையில் உள்ள பொருட்களைக் கொண்டு மனிதர்களின் உணர்வுகளை வெளிப்படுத்த இது பயன்பட்டது. வேட்டைக்குச் சென்ற தாமரைக்கண்டுவும் சங்குப்பொடியனும் காட்டாறு பெருக்கெடுத்ததைக் கண்டு திரும்பி விடுகின்றார்கள். சந்தனம், சுரண்டப்பட்டுக் கொண்டிருந்த கணபதி, சண்முகம் என்போர் சந்தனத்தின் தூண்டுதலால் விழித்துக்கொள்கின்றார்கள். சந்தனத்தின் விழிப்புணர்வில் எழுந்த போராட்டம் காட்டாறாகப் பெருகுவதைக் கண்டு சுரண்டல்கள் வேட்டையில் ஈடுபட்டவர்கள் ஒடுங்குவதையும் பழிக்குப் பழி வாங்குவதையும் சந்தனம் திருமணம் செய்யவிருந்த நேரத்தில் செவ்வந்தி சிதைக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதால் "சந்தனம் எழுந்து நின்றான்" என்பதோடு நாவல் முடிகின்றது. அவன் காட்டாறாகி துவம்சம் செய்திருப்பான் என்பதையும் காட்டெருமைத் தாக்குதல் போல் என்னவெல்லாம் செய்திருப்பான் என்பதையும் ஆசிரியர் நம் ஊகத்துக்கு விட்டு விடுகின்றார். இயற்கையுடன் இணைந்த இயல்புப் போராட்டத்தை "காட்டாறு" என்ற நாவல் தலைப்பு மூலம் உணர்த்திவிடுகின்றர். இத்தலைப்பு இவரது நாவல் கலையம்சத்தின் ஒரு தருணமாக வெளிப்பட்டு நிற்கின்றது.

உணர்வுகளின் கைகோர்ப்பாகவும் உணர்ச்சிகளின் போராட்டமாகவும் அறிவும் சேர்ந்து இயங்கிச் செல்லும் ஒன்றாகவும் இந்நாவல் எம்மை அழைத்துச் செல்கின்றது. யதார்த்தம் என்றபோதும் சுரண்டல்கள் பற்றிய ஏராளமான பதிவுகள் வேண்டுமென்றே வலிந்து புகுத்தப்படுவதான எண்ணம் சிறு பிசிறு என்றும் தோன்றுகின்றது.

இந்தநாவலைப் படிக்கும் போது வேட்டையாடப்படும் முறைகள், விலங்குகளின் நடத்தைகள், பறவைகளின் இயல்புகள். அவற்றோடு சேர்ந்தியங்கும் உலகம் எம்முன் அழகாக விரிகின்றது.

"பெரிய குரங்கு மட்டும் தண்ணீர் அருந்தச் செல்லவில்லை. தனது கூட்டத்தினர் நீர் குடிப்பதைப் பார்ப்பதும் சுற்றுமுற்றும் பார்ப்பதுமாக இருந்தது. ஆற்று மந்திகள் நீர் குடித்துக்கொண்டிருந்த இடத்துக்குச் சற்று அப்பால் காணப்பட்ட பற்றையில் சிறிது சலசலப்பு ஏற்பட்டது. உடனேயே பெரிய குரங்கு உறும, மின்னல் வேகத்தில் எல்லாக்குரங்குகளும் மரத்தில் ஏறித் தாவிக்கொண்டன. மணலில் துள்ளி விளையாடிய குட்டிகள் தாய்களின் வயிற்றைத் தாவிப் பற்றிய வேகத்தைத் தாமரைக் கண்டுக் கிழவன் வியப்புடன் பார்த்தான்"

வேட்டையாடிய பன்றியை வாட்டும் விதத்தினை ஆசிரியர் சித்திரித்துள்ளார். வேட்டைப்பரண் அமைத்து வேட்டைக்காகக் காவல் இருக்கின்ற நிலை இயல்புடனும் அழகுடனும் காட்டப்படுகின்றது.

"நிலத்திலிருந்து ஏறத்தாள முப்பது அடிகள் உயரத்தில் பரண் கட்டப்பட்டிருந்தது. ஐந்தடி சதுரத்தில் காட்டுத் தடிகளின் பின்னலில் அப்பரண் அமைந்திருந்தது. காட்டு இலைகுழைகளைப் பரப்பி அவற்றின் மேல் சாக்கு இரண்டை விரித்திருந்தான். பரணிற்கு நேர் கீழே நீள் வட்ட வடிவிலான நீர் நிறைந்த குட்டை ஒன்று காணப்பட்டது. இக்குட்டையைச் சுற்றி உயர் மரங்கள் வளர்ந்து அடர்ந்திருந்தன. நீர்க்குட்டையின் சேற்றுக் கரைகளில் மிருகங்கள் வந்து நின்று நீர் அருந்தியமைக்கு அடையாளமாக காற்குளம்புகள் பதிந்திருந்தன. காற்குளம்புகளின் வடிவில் இருந்து மான்களும் மரைகளும் இக்குட்டையில் தண்ணீர் குடிக்க வருகின்றன என தாமரைக்கண்டுக் கிழவன் உணர்ந்து கொண்டான்"

கடலாஞ்சிக்கு குடியேறிய விவசாயிகளின் வாழ்க்கையை அவர்களின் கனவுகளை அவர்கள் மீதான சுரண்டல்களை மெல்ல மெல்ல விழித்துக் கொள்ளும் புரட்சிக்குணங்களை இந்நாவல் அதிக அழுத்தத்துடன் பேசுகின்றது. புதிய குளங்களையும் நிலங்களையும் கண்டறியும் பயணத்தையும், மண்ணின் வளத்தை, பார்த்தவுடனேயே கூறக்கூடிய நுண்ணறிவையும், காடுவெட்டிக் காணியாக்க போராடும் வாழ்வை, அதையெல்லாம் மிகச்சுலபமாகச் சுவைக்கக் காத்திருக்கும் முதலாளிகளின் குரூரத்தை, அவர்களுக்குத் துணைபோகும் அரசாங்க அதிகாரிகளை, நீருக்கான பிரச்சினைகளை போராட்டங்களை, பண்டைய முறைகளைக் கைவிட்ட விவசாய வாழ்வை - வீழ்ச்சியை, விவசாயிகளின் பொறுப்பின்மையை இவை எல்லாவற்றையும் தாண்டிய நம்பிக்கையையும் போராட்டத்தையும் இந்நாவல் கதையாடுகின்றது.


"சோக்கான நிலம் தாமரைக்கண்டு. இப்படி ஒரு குளமும் காடும் இருப்பது எப்படி ஒருத்தருக்கும் தெரியாமல் போச்சுது? அதிசயமாகத்தான் இருக்குது! இந்தக்குளத்திற்குக் கீழ நான் ஒரு பத்தேக்கராவது வெட்டத்தான் வேணும்"

என்று கணபதி கூறுகின்றான்.

விவசாயம் ஏழைகளுக்கு எட்டாக்கனியாக கசந்து வரும் அவலத்தையும் சூதாட்டத்தின் இயல்புடையதாய் அது மாறிவருவதையும் இந்நாவல் பதிவுசெய்துள்ளது.

" ஒரு பருவத்தில் அவன் பயிர்கள் நீரின்றி வரட்சியால்

அழிந்தன. இன்னொரு பருவத்தில் நீர் கூடி வெள்ளத் தால் அழிந்தன. இரண்டும் சமனாக வரும் பருவத்தில் காட்டுவிலங்கு களால் ஒரு பகுதி அழிந்தது. றக்ரர் கூலி ஏற்றம், பசளைகளின் விலை ஏற்றம், கிருமி நாசினிகளின் பற்றாக்குறையும் பலனின்மையும், விலை அதிகரிப்பும், நீர் விநியோகச் சீர்கேடுகளும் இன்று ஏழை விவசாயியை வதக்கி வேளாண்மை என்பது பணக்காரர்களுக்குரிய ஒரு தொழில் என்ற நிலைக்கு வர வைத் துள்ளன. "



அடாத்தாக பணக்காரர்கள்தான் வயல் விதைக்கலாம் ஏழை விவசாயிகள், அரசாங்க அதிகாரிகளின் கருணைப் பார்வைக்கு இலக்கில்லாத காரணத்தால் விதைக்க முடியாது விதைத்தால் அது அழிக்கப்பட்டு அவர்களால் கபளீகரம் செய்யப்பட்டது.

நிலங்களின் இயல்பு களைத் தன் அனுபவ அறி வினால் தாமரைக்கண்டு இனங்காணும் ஆற்றல் மெச்சத்தகுந்தது.

" தென்னை வளரத் தான் உந்த மண் சரி... நாவல் மரமிருந்தால் அது கமத்துக்கு உதவாது. தண்ணி நிலத்தில தங்கிநிற்காத நிலமிது"

"உது தோட்டம் செய்யச் சரியான காணியில்ல... மீன்பிடிக்கத்தான் சரியான காணி"

இது இருவாட்டி மண் .. பரவாயில்ல.. ஆனா.. இதில.. பார் சந்தனம் ...இந்த மண்ணில தாமரை விதை இருக்குது.."

"இருந்தா என்ன..?

இருந்தா என்னவோ? இது குளம் நிக்கிற பகுதி என்று அர்த்தம். குளப்பகுதி இது... மழை பெய்தால் இதில ஒரு குளம் இருக்கும்....புரியுதே?.."

இவ்வாறே காட்டை எப்போது வெட்ட வேண்டும், விதைப்பை எவ்வாறு விதைக்கவேண்டும் என்றெல்லாம் விவரிக்கப்பட்டுள்ளது. இவையெல்லாம் இனவரைவியல் ஆவணமாகும் தகுதியை இந்த நாவலுக்கு அளித்து நிற்கின்றன.


விவசாயிகள் வீழ்ச்சியடைந்ததற்கு நீரைச் சரியாகப் பயன்படுத்தாத, நிலத்தை விதைத்தநாள் முதல், நாளும் பராமரியாத அவர்களின் பொறுப்பற்ற தன்மை,உழவுமாடுகளை விற்றுவிட்டு றக்ரர்களை எதிர்பார்க்கும் தன்மை, நீரினைக் கொடுப்பதில் பாரபட்சம் காட்டும் அதிகாரி களின் போக்கு என்பன விவசாயி களின் வாழ்வில் வறுமையை சூழவைத்து விடுவதை ஆசிரியர் காட்டுகின்றார். அவர்களின் வறுமையைச் சாட்டி வட்டிக்குக் கடன் கொடுத்தும் குறைந்த குத்த கைக்கு நிலத்தை வாங்கியும், நெல்லைக் குறைந்த விலைக்கு வாங்கியும் அவர் களை ஏமாற்றுவதிலும் சுரண்டுவதிலும் முதலாளி கள் சுவை கண்டார்கள். அவர்களுடைய பெண்களை, பெண் பிள்ளைகளை ருசிப்பதிலும் சிதைப்பதிலும் அதீத நாட்டம் கொண்டிருந்தார்கள்.


இந்நிலையில் சந் தனத்தின் விழிப்புணர் வூட்டல், அவர்களின் சூழலும் சேர்ந்து கொள்ளும் போது புரட்சி மனப் பான்மை அவர்களிடம் இயல்பாகவே வந்து சேர்ந்து விடுகின்றது.

" சியாமன் நீர் ஒரு பெரிய மனிசன் எண்டு நான் பொறுத்துப் பாத்தன்... இனியும் பொறுக்க ஏலாது. என்ரை பயிர் தண்ணி இல்லாமல் அழிஞ்சுது எண்டால் அதுக்குப் பதில் நீர் சொல்லித்தான் ஆக வேணும்" என்று கணபதி பொங்குகின்றான். மேலும் தினசகாயம் என்று சுரண்டிப் பிழைத்த ஆசிரியருக்கு யாரோ ஒருவன் துணிந்து அடித்து விடுகின்றான். இயல்பான சமூக மாற்றமாக இதைச் செங்கை ஆழியான் நுட்பமாக வெளிப்படுத்து கின்றார்.

இந்நாவலில் உள்ள பாத்திரங்கள் மனதை விட்டகலாத சித்திரங்களாக படைக்கப்பட்டுள்ளன. பாத்திரவார்ப்பில் செங்கை ஆழியான் அதீத அக்கறை காட்டியுள்ளார். திட்டமிட்ட பாத்திரங்களாக இவை ஆக்கப் பட்டுள்ளன. கதைப்பின்னல் இன்னும் இக்கதைக்கு அழகைக்கொடுத்துள்ளது. இயற்கைக் காட்சிகளின் ஊடாக மனித நடத்தைகளுக்கும் இந்நாவல் குறியீட்டு ரீதியில் வடிம் கொடுத்துள்ளதையும் நோக்கமுடி கின்றது. கடினமான களஆய்வு இந்நாவலுக் காகத் தேவைப்பட்டிருக்கின்றது என்பது சமூக அறிவியல் தளத்தில் இயங்கியுள்ளது என்பதைக்காட்டி நிற்கின்றது. வன்னியில் குடியேறிய மக்களின், அவர்களின் வாழ்க்கை யின் இனரைவியல் சித்திரமாகவும் இந்தநாவல் சிறப்புப் பெறுகின்றது. அதிகம் எழுதினால் அவர் சோடை போன எழுத்தாளர் என்று கூறிவிட முடியாது. இந்தநாவலுக்கு கடினமான உழைப்புத் தேவைப்பட்டிருப்பதையும் கலையம்சத்திலும் குறையாமல், விறுவிறுப்பான பொருத்தமான மொழியில் நகர்த்தப்பட்டிருப்பதையும் காண்கிறோம். இந்தநாவல் இலங்கையில் வெளிவந்த நாவல்களில் கலையம்சத்திலும் சமூகவியல், மானிட வியல் என்ற அறிவுத்தளங் களிலும் கவனிக்கத்தக்க சிறந்தநாவல் என்ற கருத்தை இலகுவில் யாராலும் கடந்துவிட முடியாது.

செங்கை ஆழியானும் இலக்கிய உலகில் காட்டாறுக் கலைஞனாகவே இருந்திருக்கின்றார். அவரது எழுத்தும் , தேடலும் எந்தவிமர்சனங்களுக்கும் அப்பாலும் மதிக்கப்படவேண்டியவையே.



# செங்கை ஆழியான் படைத்த "கிடுகுவேலி"

■ கானா பிரபா

கிடுகுவேலி நாவல் 1980 களின் காலகட்டத்து யாழ்ப்பாணத்து வாழ்வியல் அமைப்போடு பின்னப்பட்டிருக்கிறது.

ஈழத்தில் இருந்து ஆரம்பகாலத்தில், அதாவது அறுபதுகளுக்குப் பிந்திய காலம் முதல் பொருளாதார வலுவை ஏற்படுத்திக் கொள்வதற்காகப் பலர் தமது வீடு, காணி போன்றவற்றை ஈடுவைத்து வெளிநாடுகளுக்குப் போக ஆரம்பித்தார்கள். தமது பெற்றோர் இறக்கிவைத்த பாரங்களாக எஞ்சி நிற்கும் நாலைந்து சகோதரிகளோடு பிறந்த ஒருவன் இவர்களுக்குச் சீதனம், சீர் செய்ய உள்ளூர் உழைப்பை நம்பியிருக்கமுடியாது. ஆயிரத்துக்கும் குறைவான சம்பளம் வாங்கிக்கொண்டு நாளாந்த சீவியத்தை நடத்துவதே பெரிய காரியம். இதனால் தான் கௌரவமான உத்தியோகத்தில் இருந்தவர்கள் கூடத் தம் பதிவையை உதறிவிட்டு மத்திய கிழக்கு நாடுகளுக்கும், ஐரோப்பிய நாடுகளுக்கும் பயணித்தார்கள். அதாவது தாயகம் கொடுக்கும் சின்னச் சின்னச் சந்தோஷங்களையும் அடவு வைத்துத் தம் குடும்பத்துக்காக உழைத்து உழைத்து நரை தட்டி, வழுக்கை விழுந்து அரைக்கிழவனாகி, கல்யாண வயது தாண்டி கல்யாணமே கட்டாமல் வாழும் பலரை நான் பார்த்திருக்கின்றேன், அறிந்திருக்கின்றேன்.

இப்போது அகதியாக ஓடும் தலைமுறைக்கு முந்திய காலம் அப்படியிருந்தது. அதன்பின் எல்லாமும் கலந்த ஒரு இடப்பெயர்வாகிவிட்டது.

"கிடுகு வேலி" நாயகன் சண்முகம் கூட அன்றைய யாழ்ப்பாணத்துச் சராசரி இளைஞன். அதாவது கிராமத்தின் மதகு, ஆலமரத்தடி வாசிகசாலை, மருதனாமடச் சந்தி என்று சுற்றும் இருக்க, சைக்கிளில் ஏறி மண் ஒழுங்கையில் ஓடி, மதகில் ஏறி உட்கார்ந்து, நண்பர்களுடன் அரட்டை அடித்து, கீரிமலைக்குச் சென்று கூவில் கள் குடித்து.... என்று தன் எல்லாச் சந்தோஷங்களையும் அடகுவைத்து விட்டு குவைத்துக்குப் போய் ஊருக்குத் திரும்பாமல் ஐந்து வருடங்கள் மாடாய் உழைத்து தன் குடும்பம் கரைசேர நினைத்தான்.

புதிதாகக் கல்யாணமாகி மூன்றே மாதங்களில் மனைவி நிர்மலாவையும் பிரிந்து மூன்று தங்கைகளையும், ஒரு தம்பியையும் கரை சேர்க்கவேண்டும் என்ற முனைப்பில் நாடு விட்டு ஓடும் சண்முகம் தன்னுடைய உழைப்பின் பலாபலன்கள் எப்படி இருக்கின்றன என்பதைக் காணும்போது அவனுக்குக் கொடுக்கும் ஏமாற்றங்கள் தான் இக்கதையின் களன்.

கிடுகுவேலி என்பது யாழ்ப்பாணத்தின் ஒரு குறியீட்டுப் பெயர், அந்தக் கிடுகுவேலியின் நேர்த்தியில் தான் யாழ்ப்பாணத்துப் பண்பாட்டுப் பாரம்பரியங்கள் இருக்கின்றன. ஆனால் திடீர் வெளிநாட்டுப் பணமும், அதீத நாகரீக மோகமும் எப்படியெல்லாமோ இந்தக் கிடுகுவேலிக் கலாச்சாரத்தைச் சிதைத்துவிடுகின்றன. வெளிநாட்டில் அரைவயிறு கால் வயிறு நிரம்ப, இரண்டொரு மணி நேரத் தூக்கத்தோடு இரண்டு மூன்று வேலை செய்து ஒருவன் தன் வாழ்வை இழந்து கொண்டு போகின்றான். மறுபுறத்தில் அவன் உடன்பிறப்புக்கள் இரண்டு மடங்கு உச்சபட்ச வாழ்வுக்குள் போகின்றார்கள். இப்படியான சண்முகங்களின் குடும்பங்கள் பல இன்னும் நம் நாட்டில்.

இந்த நாவலுக்கு முன்னுரை அளித்த பேராசிரியர் சிவலிங்கராஜா சொல்லுவது போல்

"பணம் வந்ததும் குணம் மாறித் தனது மைத்துனனை இழக்கும் கிளியும், மற்றவனையும் ஒரு மாதிரி வெளியே அனுப்பி மற்ற மகளுக்கும் மாப்பிளை வேட்டையாட நினைக்கும் சண்முகத்தின் தாயும் இன்றைய சமூகத்தின் வகைமாதிரியான பாத்திரங்களாகும். இவை மாறலாம், மாற வேண்டும். ஆனால் இப்படியானதொரு சூழ்நிலை யாழ்ப்பாணத் திலேயே நிலவுகிறது என்பதைப் படம் பிடிக்கக் கிடுகுவேலி போன்ற நாவல்கள் தேவைப்படுகின்றன".

வெளிநாடு போன சண்முகத்தின் கோணத் தில் நாவலை நகர்த்தி வாசகனை, சண்முகத்தின் பார்வையில் நாவலோட்டத்தை அனுபவிக்க வைக்கின்றார் நாவலாசிரியர். தன் குடும்பம் தானே, நான் தானே காப்பாற்றவேண்டும் என்ற அவனின் மனோபாவம், தொடர்ந்து அவன் சந்திக்கும் நிகழ்வு களால் தவறாகிப் போகின்றது. அதுபோல் ஆரம்பத் தில் திமிர்பிடித்தவள் போலச் சித்திரிக்கப்படும் சண்முகத்தின் மனைவி நிர்மலா, திருமணமான மூன்றாம் மாதமே தன்னைத் தவிக்கவிட்டும், ஐந்து வருடங்களாக பிள்ளையின் முகத்தைப் பார்க்காத தந்தையாக சண்முகம் இருப்பதையும், தன்னையும் பழைய காதலன் பகீரதனையும் இணைத்து ஊரார் பேசும் குசுகுசுப்புக்களையும் தாங்கி வாழவேண்டி யவள் என்று காட்டும் போது அனுதாபத்துக்குரிய பாத்திரமாக மாறுகின்றாள். எனவே ஒரு கதா பாத்திரத்தின் பார்வையில் கதையை நகர்த்தாமல், காட்சிகளும் சம்பவங்களும் ஒரு பொதுவான தளத்தில் இருந்து பார்க்கும் வண்ணம் நாவலை எடுத்துச் சென்றிருக்கின்றார் செங்கை ஆழியான்.

ஐந்து வருடங்கள் கழித்து ஊருக்கு வரும் சண் முகத்தின் பார்வையில் கிடுகுவேலிகள் தொலைந்த மதில்களும், கல்வீடுகளும், வீடுகள் தோறும் முளைத் திருக்கும் ரீவி அன்ரெனாக்களும் என்று வெளிநாட்டுப் பணத்தின் சித்துவிளையாட்டுக்கள் பேசப்படுகின்றன.

தன் வீட்டுக்காரர்கள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள், கஷ்டப்பட்டுச் சேர்த்த பணத்தைச் சேமித்து வைத்திருப்பார்கள் என்ற நினைப்பில் இருக்கும் சண்முகம் காணும் நாகரீக மாற்றங்கள் அவனை அதிர்ச்சிக்குள்ளாக்குகின்றன. எந்த நோக்கத்துக் காகத் தன்னையே அவன் இழந்தானோ அவனின் கனவுகள் எல்லாம் பொடிப் பொடியா கின்றன.

மச்சாள் பவளம், மற்றும் நிர்மலா போன்ற பாத்திரங்கள் இந்தச் சமூக அமைப்புக்குள் இருந்து வெளியே வரமுடியாதவர்களாக தாம் விரும்பிய வனையே திருமணம் செய்துகொள்ள முடியாத அபலைகளாக காட்டப்படுகின்றார்கள்.

அதுபோல் அத்தான் சீராளனையே மனதில் வரிந்துகொண்டிருக்கும் சண்முகத்தின் தங்கை கிளி, திடீர் வெளிநாட்டுப் பணம் கொடுக்கும் மாயையில் அவனை ஒதுக்குவதும் கூட கசப்பான நிஜவாழ்வின் குறியீடுகளே.

குவைத்தில் தன்னோடு வேலைபார்க்கும் சுப்பிரமணியம் வருடத்தில் பதினைந்து நாளாவது ஊருக்குப் போய் தன் குடும்பத்துடன் விடுமுறையைக் கழித்து வருவதும் சண்முகத்துக்கு ஏளனமாகப்படுகின்றது.


"எப்படித்தான் வாழ்ந்தாலும் மனைவியுடன் வாழ்வது போல் எதுவுமில்லை. உணர்வுகளையெல்லாம் ஒடுக்கி அடக்கி எனக்காகக் காத்திருக்கும் அவளுடன் வருடத்தில் ஒரு சில நாட்களாவது வாழாவிட்டால் பிறகெதுக்கடா சண்முகம் பணம்?..."

சுப்பிரமணியத்தின் அந்த வார்த்தைகள் ஊருக்குத் திரும்பியபின் தான். சண்முகத்தைச் சுடும் நிஜங்களாகின்றன. திருமணம் முடித்து மூன்றே மாதங்களில் மனைவியைப் பிரிந்து, அவளின் அபிலாஷைகளை ஒதுக்கித் தன் குடும்பத்தைக் கரை சேர்க்க ஓடியதை நினைத்து வருந்துகின்றான்.

கிரைண்டர், ரேப் ரெக்கோடர், ரீ, ரெக் என்று பட்டியல் போடும் தங்கைகள், தன் உழைப்பைச் சேமிக்காமல் ஆடம்பரமான வீட்டைக் கட்டிய அம்மா, "தம்பி எப்ப வந்தது? இனி எப்ப போறது?" (பக்கத்து வீட்டு செல்லப்பர்), "ஊரெல்லாம் மாப்பிளை இருக்குது தம்பி, ஆனா அவங்களை வாங்க முடியாது, ஒவ்வொருத் தனின்ர றேற்றும் வானத்தை எட்டுது" (வேலுப்பிள்ளை அம்மான்), இவர்கள் எல்லாம் நம் சமூகத்தில் வாழும் குறியீடுகள். சேமித்த காசெல்லாம் கரைந்து போய் இன்னொரு வெளிநாட்டுப் பயணம் தான் தன்னுடைய இன்னொரு தங்கையைக் கரைசேர்க்கும் என்ற நிலையில் இருக்கும் சண்முகத்துக்கு ஆறுதலாக, சீதனமில்லா மாப்பிளையாக வரும் முருகானந்தம் போலவும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

1983 இல் திருநெல்வேலியில் நடந்த இராணுவ டிறக் மீதான தாக்குதலோடு கதைக்கான இறுதி முடிவு நகர்வதும், செங்கை ஆழியான் கதைகளில் பெரும்பா லான முடிவாக இருக்கும் அவலச் சுவையும் இந்த நாவலின் திருப்பத்துக்கும், முடிவுக்கும் கைகொடுத் திருக்கின்றனவே ஒழிய மற்றப்படி இவை செயற்கையான உள்ளீடுகளாகவே இருக்கின்றன. யாழ்ப்பாணத்தின் பல்வேறு பிரதேசத்தில் வாழும் மக்கள் வாழும் மக்களின் பேச்சுவழக்கில் நுணுக்கமான வித்தியாசம் இருக்கும். ஆனால் அதீத இலக்கணத் தமிழ் இருக்காது. ஆனால் செங்கை ஆழியான் நாவல்களில் இந்த பேச்சு வழக்கை பாத்திரங்கள் வாயிலாகச் சொல்லும் போது இலக்கணத் தமிழை விடுத்து முழுமையான பேச்சு வழக்கிலேயே நகர்த்தியிருந்தால் இன்னும் சிறப்பாக இருக்கும். அதைத் தான் கிடுகு வேலிக்கும் சொல்லிக் கொள்ள வேண்டும்.

1984 ஆம் ஆண்டு ஜூனில் முதற்பதிப்பாக ரஜனி பதிப்பகம் வெளியிட்ட இந்த நாவல் நான்காம் பதிப்பாக ஏப்ரல் 2003 இல் கமலம் பதிப்பகம் வெளியிட்டிருக் கின்றது. 1983-1985 ஆண்டுகளில் இலங்கையில் வெளி யாகிய குறுநாவல்களுள் சிறந்ததாகக் "கிடுகுவேலி" யைத் தேர்ந்தெடுத்து தமிழ்க் கலைஞர் வட்டம் (தகவம்) பரிசும் சான்றிதழும் வழங்கியது குறிப்பிடத்தக்கது. ●



# சூழலியல் தத்துவம் உணர்த்தும் நாவல் : செங்கை ஆழியானின் "ஓ... அந்த அழகிய பழைய உலகம்" நாவல் குறித்த சில மனப்பதிவுகள்




■ த.கலாமணி

ஈழத்து நாவலாசிரியர்களுள் முன்னணியில் திகழ்ந்தவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். அவர்களுள் பெரும் எண்ணிக்கையான நாவல்களை வெவ்வேறு களங்களை ஆதாரமாகக் கொண்டு எழுதி வந்தவர் செங்கை ஆழியான் அவர்கள். கிராமங்களின் ஆத்மாவைத் தரிசனம் பெறச் செய்யும் வகையில், அவற்றின் சமூக, பொருளாதார வளர்ச்சிப் பின்னணியில் பல நாவல்களை எழுதி வெற்றி கண்டவர் அவர். குறிப்பாக, வன்னிப்பிரதேசத்தைக் களமாகக் கொண்ட அவரின் "காட்டாறு", "யானை" போன்ற நாவல்கள் பெரிதும் விதந்துரைக்கப்படுவன. அவ்வரிசையில் "ஓ... அந்த அழகிய பழைய உலகம்" என்ற நாவலும் காட்டுப்பிரதேசக் கிராமமொன்றின் பின்னணியிலேயே எழுதப்பட்டுள்ளது. ஆனால், ஏனைய நாவல்களிலிருந்து வேறுபட்ட கருப்பொருளை உடையதாய், உள்ளார்த்தமான செய்திகளைப் பூடகமாகத் தெரிவிக்கும் நாவலாகவும் இது திகழ்கிறது.

"ஒரு காட்டுக் கிராமத்தின் அமைதியும் அழகும் நவீனத்துவங்களின் வருகையால் எவ்வாறு சீரழியத் தொடங்குகின்றன என்பதை இந்நாவல் பேசுகிறது" என இந்நாவலின் கருப்பொருள் இதுதான் என்பதாக செங்கை ஆழியானே இந்நூலின் "என்னுரை"யின் கீழ் குறிப்பிடுகிறார். இக்கருப்பொருளை உணர்த்தும் வகையிலேயே இந்நாவலின் தலைப்பும் அமைந்துள்ளது. ஆனாலும், எவற்றையும் மனந்திறந்து பேசமுடியாத ஒரு காலச்சூழலில், சூழலின் யதார்த்தத்தை விளங்கிக் கொண்டு, முக்கிய செய்தியொன்றை இந்நாவலை ஆழப் படிக்கும் வாசகர்களிடத்துத் தொற்ற வைப்பதே நூலாசிரியரின் நோக்கமாக இருந்திருக்க வேண்டும்.

இந்நாவலின் கதை மிகவும் எளிமையானதாகவும் அழகாகவும் சொல்லப்பட்டிருக்கின்றது. ஓய்வு பெற்ற இஞ்சினியரான கனகவடிவேலர். நகர வாழ்வின் அமைதியின்மையையும் அலங்கோலங்களையும் வெறுத்து, தாம் முன்பு பணியாற்றிய அறுகுவெளிக் கிராமத்தின் அழகையும் அமைதியையும் விரும்பி அக்கிராமத்திற்கு வருகிறார். அக்கிராமத்தின் பெரிய கமக்காரரான மயில்வாகனத்தாரின் உதவியுடன் குடில் ஒன்றில் தமது புதிய வாழ்க்கையை கனகவடிவேலர் ஆரம்பிக்கின்றார். அக்காட்டுப் பிரதேசத்தின் இயற்கையும் அக்கிராம மக்கள் வாழும் அமைதியான வாழ்க்கையும் அவருக்கு நம்பிக்கையைத் தருகின்றன. ஆனால், படிப்படியாக, நவீன தொழில்நுட்பத்தின் வருகையோடு, அக்கிராமத்தின் அமைதியும் குலைவதை உணர்ந்து கொண்ட கனவடிவேலர் அக்கிராமத்தை விட்டுப்புறப்படுகின்றார். இதுதான் இந்நாவலின் கதை.

ஒரு நாவலில் விபரண ரீதியான சித்திரிப்பும் பாத்திரவார்ப்பும் முக்கியமானவை என சொல்லப்படுவதுண்டு. இந்நாவலிலும் காட்டுக் கிராமத்தின் அழகையும் அங்கு காணும் காட்சிகளையும் எடுத்துக் கூறுகின்ற விபரணங்கள் மிகவும் எளிமையான வார்த்தைகளில், ஆற்றொழுக்குப் போன்ற எழுத்துநடையில் சொல்லப்படுகின்றன. இவை அவ்வாறு சித்திரிக்கப்படும் சுற்றுச்சூழலுக்கு வாசகரை இழுத்துச் சென்று, நேரடித் தரிசனத்தைப் பெற்றுக் கொள்கின்ற உணர்வைத் தருகின்றன. இதுவே செங்கை ஆழியானின் நாவல்களின் சிறப்பாகும்.

வழமையாக, ஒரு நாவலில் அதிக எண்ணிக்கையான பாத்திரங்கள் வருவதுண்டு. ஆனால் இந்நாவலில் குறைந்தளவு எண்ணிக்கையிலான பாத்திரங்களே வருகின்றன. அவையும்கூட, இந்நாவலின் "தலைச்சன்" பாத்திரமான கனகவடிவேலருடன் தொடர்புபட்ட வகையிலேயே முக்கியத்துவம் பெறுகின்றன. பெரிய விதானையார் சுப்பிரமணியத்தார், பெரிய கமக்காரார் மயில்வாகனத்தார், முத்தையா, புதுவிதானை செல்வச்சந்திரன், மயிலம்மை ஆகியோருடனான உரையாடல்கள் கதையையும் கருப்பொருளையும் எடுத்துரைப்பதற்கான உபாயங்களாகின்றன. இதனால் இச்சந்தர்ப்பங்களிலெல்லாம் கதை சொல்லியின் தலையீட்டைத் தவிர்த்துக் கொள்ள முடிகிறது.

இந்நாவல் விரித்துச் சொல்லக்கூடிய கதை

யம்சத்தைக் கொண்டுள்ளதாயினும், எழுபத்தாறு பக்கங்களிலேயே கதை நிறைவடைகிறது. பக்கம் பக்கமாக விரித்துச் சொல்லப்படக்கூடிய கிளைக் கதைகள் எடுத்துரைப்பு முறையினதும் உரையாடல் களினதும் இறுக்கமான கட்டமைப்புக்களால் உணர்த்த வேண்டியவற்றை "செட்டாக" உணர்த்திச் செல்கின்றன. உதாரணமாக, கால் வழங்காத மாரியப்பனின் மனைவியான மயிலம்மை மீது, பெரிய கமக்காரர் கொண்ட தகாத ஆசையை, கனக வடிவேலருக்கு மயிலம்மை தெரிவிப்பதான உரை யாடலை எடுத்துக்காட்டலாம். கனகவடிவேலருக்கு சமையலுக்கு உதவி செய்யும் மயிலம்மையின் கணவன் மாரியப்பன் இறந்து போன பின்பு ஒரு நாள் மயிலம்மைக்கும் கனகவடிவேலருக்கும் இடையில் பின்வரும் உரையாடல் இடம்பெறுகிறது:

"அது சரி மயிலம்மை, நேற்று உன்னைப் பெரிய கமக்காரர் கூப்பிட்டனுப்பினாரே...?"

" அவர் அங்கு வந்து இருக்கட்டாம்"

"போகப் போகிறாயா....?"

"இல்லை எனக்கு அங்குபோய் அவர் வீட்டில இருக்க விருப்பமில்லை. அவருடன் ஒரேயிடத்தில் நிம்மதியாக இருக்க அவர் சரியில்லை..."

இந்நாவலின் கதையின் பகைப்புலத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும் முக்கியமான விடயம் அறுகு வெளிக்கிராமத்திலும் அதன் அயலிலும் ஆயுதம் ஏந்திய இளைஞர்களின் ஊடுருவல் பற்றியதாகும். அவ்வா றான இரு இளைஞர்களைச் சந்தித்த பின்பு, கனக வடிவேலர் இவர்களைப் பற்றிக் கூறும் போது "இரண்டு விசித்திரமான பறவைகளைப் பார்த்தன்" என்று குறிப்பிடுகிறார். பின்னர் தனது கடைசி மகனான சீராளன் அந்த இளைஞர் குழுவில் ஒருவனாக அக்கிராமத்திலேயே கரந்து வாழ்கிறான் என்பதையும் பழைய விதானையாரின் மகள் லக்சுமிக்கும் சீராளனுக்கும் இடையில் காதல் மலர்ந்துள்ளது என்பதையும் அறிந்து கொள்கின்றபோது, கனக வடிவேலரின் கவலையையும்கூட கவனமாகத் தெரிந் தெடுத்த வார்த்தைகளாலேயே செங்கை ஆழியான் தெரிவிக்கிறார்:

"இருவருக்காகவும் அவர் இதயம் கலங்கி அழுதது. பாவம் அந்தப் பெண். சீராளன் யார் என்பதைப் புரிந்துதான் காதலிக்கிறாளா? சீராளா, நீ விரும்பிய பெண்ணை உனக்குக் கட்டி வைத்து நீ மகிழ்ச்சியாக வாழ்வதைக்காண நான் கொடுத்து வைக்கவில்லை."

இந்நாவல் பற்றிய பார்வையில் "நவீன அபிவிருத்தியினதும் கருவியினதும் ஆக்கத்தையும் அழிவையும் கிராம மக்களும் தெரிந்து கொள்ளத்தான் வேண்டும். அது மறுக்கமுடியாத காலநியதி. இவ்விடயங்களை செங்கை ஆழியான் தனது நாவலில் வற்புறுத்தியிருக்கலாம்" என ஒரு சாரார் குறிப்பிடுவ துண்டு. ஆனால், நகர வாழ்வு கிட்டவில்லையே என்ற கிராம மக்களின் ஏக்கங்களையும் கூட இந்நாவலில் அவர் சித்திரித்திருக்கிறார். அதேவேளை தொலைக் காட்சி, வானொலி, ஒலிபரப்பி முதலான நவீன கருவிகள் இயற்கை வாழ்வு வாழும் கிராம மக்களின் வாழ்க்கைக் கோலத்தை சீரழித்துவிடும் என்பதை செங்கை ஆழியான் உரத்துச் சொல்கிறார். "பஸ்" இன் வருகையைக் கூட, பழமை மாறாத கிராமத்தின் நிம்மதியைக் குலைத்து விடும் நவீனத்தின் வருகை என்றே அவர் கருதுகிறார். இதற்குப் பின்வருமாறு நியாயம் கற்பிக்கிறார்:

"இனி அடிக்கடி இக்கிராம மக்கள் பஸ்சில் பட்டணம் போவார்கள்... புதிய தேவைகளைப் பழகிக் கொள்ளுவார்கள். தேவைகள் கூடக்கூடப் பணமும் தேவைப்படும். பற்றாக்குறையினால் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவியலாத ஆற்றாமையினால் குடும்பங்களில் பிரச்சினைகள் தலைதூக்கும். தனிமனித நிம்மதி குலைய கிராமத்தின் அமைதியும் அழியும்"

இவ்வாறு, இயற்கையின் சமநிலைக் குலைவை செங்கை ஆழியான் விரும்பாமைக்குக் காரணமுண்டு. செங்கை ஆழியான் எனும் படைப்பாளி புவியியலைத் துறைபோகக் கற்றவர்; புவியியலில் கலாநிதிப்பட்டம் பெற்றவர். பல புவியியல் நூல்களை எழுதியவர். அவரின் பாடத்துறையைப் பொறுத்தவரை, கந்தையா குணராசா என்ற அவரின் இயற்பெயரிலேயே அறியப்படுபவர். சூழலியலின் தத்துவங்களைப் புரிந்து கொண்டு, அத்தத்துவங்களை விசாரம் செய்ய முனைந்தபோதே "ஓ... அந்த அழகிய பழைய உலகம்" என்ற இந்நாவல் பிறந்துள்ளது. இத்தத்துவ விசாரங்களை இந்நாவலில் பல இடங்களில் காண முடியும்.

பாலைமரக் கிளையில் அமர்ந்திருந்த ஆண் மயில் ஒன்று திடீரென நிலத்தை நோக்கித் தாழ்ந்து, சிறியதொரு பாம்பை கால்விரல்களால் பற்றிச் செல் வதைக்கண்டு, "ஐயோ, பாவம்" என்று பரிதாபப்பட்ட முத்தையாவிடம் சூழலியலின் தத்துவம் பற்றி கனகவடிவேலர் அழகாக எடுத்துரைக்கிறார்:

"இது பாவமல்ல முத்தையா! இது நிகழா விட்டால் இயற்கையின் சிருஷ்டி ரகசியம் பொய்த்து விடும். பரிணாமத்தின் தத்துவம்... உலகில் வலிமை யற்றது அழிவதும் வலிமையானது எஞ்சுவதும் தவிர்க்க முடியாதவை. இயங்கைச் சமன்பாடு என்றும் நிகழ்கிறது! அதனால் ஏனைய உயிரினங்கள் அளவோடு இருக் கின்றன. மனிதர்கள் தான் அளவுக்கு அதிகமாக அதிகரித்துவிட்டார்கள். அறிவியல் வளர்ச்சி, மருத்துவ விருத்தி... மனிதர்களை இயற்கையாக அழிய விடாது தடுத்து வருகின்றன. அறிவுக்கும் இயற்கைக்கும் போர் நடக்கிறது. இப்போது... செல்லப்போவது இயற்கைதான்..."

செங்கை ஆழியான் தான் ஒரு சூழலியலாளர் என்பதை இந்நாவல் மூலம் நிறுவியிருக்கிறார். இந்நாவலின் பின்புலத்தையும் கருப்பொருளையும் இங்கு சித்திரிக்கப்பட்ட சூழலியற் தத்துவங்களையும் எடுத்து நோக்கும்போது இந்நாவலின் "தலைச்சன்" பாத்திரமான கனகவடிவேலர் எவருமல்லர், செங்கை ஆழியானே என்று எண்ணத் தோன்றுகின்றது.

எது எவ்வாறிருப்பினும், "ஓ... அந்த அழகிய பழைய உலகம்" என்ற இந்நாவல் மூலம் செங்கை ஆழியான் தான் ஒரு சிறந்த நாவலாசிரியர் என்ற முத்திரையைப் பதித்திருக்கின்றார் என்பதை எவ்வித சந்தேகமுமின்றிக் கூறமுடியும். செங்கை ஆழியான் மறைந்து விட்டாலும் அவரின் படைப்புகள் ஈழத்து இலக்கிய வரலாற்றில் அவரை நீண்ட காலம் வாழ்விக்கும். ●



# செங்கை ஆழியானின் குந்தியிருக்க ஒரு குடிநிலம் – வாசகநிலை நோக்கு

■ அ.பௌநந்தி




இலங்கைத் தமிழிலக்கிய வரலாற்றில் செங்கை ஆழியான் என்ற புனைபெயரால் அறியப்படும் அமரர் திரு கே.குணராசா அவர்களுக்கு அறிமுகம் அவசியமற்றது. அவர் சிறந்த கல்விமான், நிர்வாகி, எழுத்தாளர், விமர்சகர். புனைகதை இலக்கியத் துறையில் அதிகளவான நாவல்களையும் சிறுகதை களையும் எழுதியுள்ளார். அவற்றோடு மட்டுமின்றி புவியியல் சார்ந்த பல பாடநூல்களையும் பயிற்சிப் புத்தகங்களையும் இலங்கை கல்வி நிர்வாக சேவை மற்றும் இலங்கை நிர்வாக சேவைக்குரிய வழிகாட்டல் நூல்களையும் எழுதியுள்ளார். வாசகர்கள் மட்டுமின்றி எழுத்தாளர்கள்கூட, செங்கை ஆழியானுக்கு இவ்வளவையும் எழுத எப்படி நேரம் கிடைக்கின்றது என்று பிரமிக்குமளவிற்கு அவர் எழுதிக்குவித்த விடயங்கள் பலதுறை சார்ந்துள்ளன.

எழுத்துத் துறையில் அவருக்கெனத் தனியான இடத்தைப் பெற்றுக் கொடுத்ததில் அவரது நாவல்களும் சிறுகதைகளும் முக்கியமானவை. 'ஈழத்தில் நாவல்களே தோன்றவில்லை' என்ற சில விமர்சகர்களது அளவுகோலையும் தாண்டி அவரது நாவல் களும் சிறுகதைகளும் ஏதோவொரு வகையில் வாசகர்களை வசப்படுத்தியிருக்கின்றன என்பது மறுப்பதற்கில்லை.

> எழுத்துத் துறையில் அவருக்கெனத் தனியான இடத்தைப் பெற்றுக் கொடுத்ததில் அவரது நாவல்களும் சிறுகதைகளும் முக்கியமானவை. "ஈழத்தில் நாவல்களே தோன்றவில்லை" என்ற சில விமர்சகர்களது அளவுகோலையும் தாண்டி அவரது நாவல் களும் சிறுகதைகளும் ஏதோவொரு வகையில் வாசகர்களை வசப்படுத்தியிருக்கின்றன என்பது மறுப்பதற்கில்லை.

"குந்தியிருக்க ஒரு குடிநிலம்" என்பது செங்கை ஆழி யானின் ஐந்தாவது சிறுகதைத் தொகுதி. 2007 இல் வெளிவந்தது. 15 சிறுகதைகளின் தொகுதியாக அமைந்துள்ளது. 1976 – 2006 காலப்பகுதியில் எழுதப்பட்ட சிறுகதைகளின் தொகுப்பாக அமைந்துள்ளது. இவற்றில் எண்ணிக்கையில் அதிகமானவை 2005 காலப்பகுதியில் வெளிவந்தவை. இதைப்பற்றி ஏன் இங்கு குறிப்பிட வேண்டும் என்று சிந்திக்கலாம். அவரது சிறுகதைகள் எழுதப்பட்ட காலத்துக்கும் அவற்றின் கதைக்கருவுக்குமிடையில் தொடர்புண்டு. இத்தொகுதியில் உள்ள அவரது சிறுகதை களை நான்கு தளங்களில் நோக்க முடியும். அத்தொகுதிக்கு அவர் எழுதிய முன்னுரையிலிருந்தும் அதனை உறுதிப்படுத்திக்கொள்ள முடிகின்றது.

- யாழ்ப்பாணத்தின் ஒரு காலகட்டத்து பண் பாட்டுக் கோலங்களையும் உறவுப் பிணைப்புகளையும் வெளிப்படுத்துவன.
- தமிழ் மக்கள் போர்க்கால நிலைமைகளையும் தவிப்புக்களையும் ஏக்கங்களையும் பதிவுசெய்வன.
- அறிவியல் வளர்ச்சிப் போக்கின் அபத்தம் எதிர்காலத்தில் ஏற்படுத்தப்போகும் எதிர்வினைகளை எதிர்வுகூறுவன.
- நகைச்சுவை சார்ந்தன.

யாழ்ப்பாணத்தின் பண்பாடும் வாழ்க்கையும் முறையும் உடலுழைப்பையும் உறவுப் பிணைப்பையும் வலுவாகக் கொண்டிருந்தன. பரம்பரைப் பெருமை பேசுவதும் பரம்பரைச்

சொத்துக்களைப் பாதுகாத்து வைப்பதும் தமது பெருமையையும் சிறப்பையும் எடுத்துக்காட்டும் வகையில் அவைபற்றி பேசுவதும் அவற்றை அடுத்த தலைமுறைக்குக் கடத்துவதும் யாழ்ப்பாணச் சமூகத்தில் நெடுங்காலமாக நிகழ்ந்திருக் கின்றது. பிற்காலத்தில் படித்த மத்தியதர வர்க்கம் தோன்றி ஓரளவு அனைவரும் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய சூழல் எழுந்த போது இந்நிலைமைகளில் மாற்றம் நிகழத் தொடங்கியது. தலை முறை இடைவெளியும் புலப்பெயர்வைத் தொடர்ந்து ஏற்பட்ட சிந்தனை மாற்றங்களும் பொருளாதார எண்ணங்களும் பழைய தலைமுறை யின் இவ்வாறான மனப்போக்கினை முழுமையாக ஏற்பதாக இல்லை. எனினும், அதன் எச்சசொச்சங்கள் அவ்வப்போது வெளிப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது.

ஆடுகால் துலா, ஆவுரோஞ்சிக்கல் ஆகிய இரண்டு சிறுகதைகளும் தலைமுறை இடைவெளியின் போக்கினால் ஏற்பட்ட வாழ்வியல் சித்தாந்தத்தைச் சித்திரிக்கின்றன. ஆடுகால் துலா, ஆவுரோஞ்சிக்கல் ஆகிய இரண்டும் யாழ்ப்பாணச் சமூகத்தின் ஒரு கால கட்டத்து வாழ்வியலின் அடையாளங்களாக உள்ளன. தண்ணீர் இறைக்கும் இயந்திரம் வருவதற்கு முன்னர், தோட்டங்களிலும் வீடுகளிலும் ஆடுகால் நட்டு துலா மிதித்து நீர் இறைக்கும் வழக்கம் இருந்தது. இன்றைய தலைமுறை அவற்றை அறியவே வாய்பிருக்காது. தொழில்நுட்பம் ஆட்சிசெய்யும் இச்சூழலில் அவை காலவதியானமை தவிர்க்க முடியாதது. அதேபோல, மேய்ச்சல் நிலங்களை அண்டிய பிரதேசங்களில் கால் நடைகள் நீர் அருந்துவதற்காக கேணி, துரவு அமைப்பு தும் அவற்றின் அருகில் கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலங்களில் புல்லின் "சுணை"யினால் ஏற்படுகின்ற கடியையும் உண்ணிபோன்றவற்றால் ஏற்படும் கடியையும் போக்க "ஆவுரோஞ்சிக்கல்" என்பதை அமைப்பதும் வழக்கம். இன்று ஆவுரோஞ்சிக் கல் அரும்பொருளாகி விட்டது. இவற்றின் அந்திமத்தை செங்கை ஆழியான் நன்குணர்திருந்ததோடு அதனைச் சிறுகதையிலும் பதிவுசெய்துள்ளமை சிறப்பானதாக அமைந்துள்ளது.

ஆடுகால் துலா என்ற கதையில் வரும் அருளம்பலத்தார் என்ற கிழவன் தனது பிள்ளைகளிடம் கனடா நாட்டுக்குச் சென்று வருகின்றார். இலங்கையில் அவர் வாழ்ந்த வீட்டில் இருந்த மகன் அருளம்பலத் தாரின் தந்தை நாட்டிவைத்த ஆடுகாலையும் துலாவை யும் அகற்றி அந்த இடத்தில் தண்ணீர் தொட்டி அமைத்து விடுகின்றார். கனடாவால் வந்த அருளம்பலத் தார் தனது தந்தை தேடியவற்றை மகன் அகற்றியதால் ஆடிப்போய்விடுகின்றார். துலா விலைபேசப்பட்டு விற்பதற்கு தயாராக இருக்கின்றது என்ற செய்தி அவரை மேலும் பாதிக்கின்றது. அந்தத் துலாவைத் தனது தந்தையாகவே பார்க்கின்றார். துலா வெறுந்தரையில் வைக்கப்பட்டிருந்தது தனது தந்தையை வளர்த்தியிருப்ப தாக அவருக்குப் படுகின்றது. அவர் துலாவை கல்லில் தூக்கி வைத்துப் பத்திரப்படுத்த எத்தணிக்கின்றார். அவரது உணர்வைப் புரிந்துகொண்ட அவரது மகன் தானே அதைப் பத்திரப்படுத்தி தந்தையின் மனதில் ஆறுதலை ஏற்படுத்து கின்றான். தந்தைக்கும் மகனுக்கும் இடையிலான பாசப்பிணைப்பினையும் அதேவேளை தவிர்க்க முடியாதவாறு ஏற்படும் கால இடைவெளியை யும் செங்கை ஆழியான் இக்கதையில் சிறப்பாகப் பதிவு செய்துள்ளார். துலா செய்தல், ஆடுகால் அமைத்தல் ஆகிய வேலை நுணுக்கங்களையும் சிறப்புறப் பதிவு செய்துள்ளமை வாசகர்களைக் கவர்வதாக அமைகின்றது.

இதையொத்த மற்றொரு கதை "ஆவுரோஞ்சிக் கல்". அக்கதையில் முக்கிய பாத்திரமாக அமைபவர் தம்பையாக்கிழவன். அவருடைய பிள்ளைகள் வெளிநாடு சென்றுவிட்டனர். பெண்பிள்ளைகள் மட்டும் திருமண மாகி ஊரில் வாழ்கின்றனர். அவர் தொண்ணூறு வயதிலும் தனித்துவாழும் தைரியம் பெற்றிருந்தார். பெண்பிள்ளைகள் அவரிடமுள்ள எஞ்சியவற்றைப் பிடுங்குவதில் குறியாக உள்ளனர். அவரது கொள்ளுப் பேரன் அமைத்த கேணியும், ஆவுரோஞ்சிக் கல்லும் அந்த ஊரில் உள்ளன. அவற்றைத் தனது பரம்பரை முதுசமாக அவர் கருதி வருகின்றார். அவரே அவற்றைப் பராமரித்தும் வருகின்றார். கேணியில் ஒரு வெடிப்பு ஏற்பட்டு விடுகின்றது. அதைத் திருத்துவதற்கு வெளிநாட்டிலுள்ள பிள்ளைகளிடம் பணம் கேட்டு எதுவும் நடக்கவில்லை. அவர் தன்னிடம் எஞ்சியிருந்த ஒரே சொத்தான பத்துப் பரப்புக் காணியை விற்று அதனைத் திருத்த முயல்கின்றார். அவை பயனற்றவை என்று எண்ணும் பிள்ளைகளினதும் தம்பையாக் கிழவனினதும் தலைமுறை இடைவெளி இங்கு சிறப்பாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இவை இரண்டு கதைகளும் கதைசொல்லும் முறையாலும் கையாளும் மொழியாலும் பாத்திரப் படைப்பாலும் பெரியளவில் வேறுபட்டிருக்க வில்லை என்பதையும் நாம் அவதானிக்க வேண்டும். அருளம்பலத்தார், தம்பையாக்கிழவன் ஆகிய இருவரும் வாசகர்களின் உள்ளத்தில் மரபுசார்ந்த சிந்தனை யோட்டமுள்ள பாத்திரங்களாக உலாவருகின்றனர்.

குட்டுக்காய் என்ற சிறுகதை யாழ்ப்பாணத்தின் மற்றொரு குறியீடாக யாழ்ப்பாணத்தின் புதிய கச்சேரியில் மட்டும் உள்ள குட்டுக்காயைக் குறியீடாகக் கொண்டு வரலாற்று விடயமொன்றைப் பதிவுசெய்வதாக அமைந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் அரசாங்க எசென்டராக இருந்த துவைனம் துரையை சில மணியகாரர் எப்படி ஏய்த்துப்பிழைத்தனர் என்பதையும் ஆறுமுக நாவலர் அவர்களை எப்படி எதிர்த்தார் என்பதையும் அவரது எதிர்பை துவைனம் துரை எப்படி ஏற்றுக்கொண்டார் என்பதையும் இக்கதையில் பதிவு செய்துள்ளார். ஆறுமுகநாவலர் *1878*, கார்த்திகை 21ஆம் திகதி காலமானபோது துவைனம் துரை அன்றைய தினத்தை விடுமுறை அறிவித்ததோடு தான் அவரைத் தவறாகப் புரிந்துகொண்டேன் என்று குட்டுக்காயால் தன் தலையில் அடித்துக்கொள்கின்றார். அதிலிருந்து அவரது அவர் செய்த தவறும் ஆறுமுகநாவலரின் சரியான போக்கும் உறுதிப்படுத்தப்படுகின்றன.

செங்கை ஆழியானின் வேலிப்பொட்டு என்ற சிறுகதை தீவகத்தைக் களமாகக் கொண்டது. யாழ்ப் பாணத்தில் தற்போது மதில்கள் அதிகரித்து வேலிகள் அமைவுகண்டு வருவதை நாம் காணலாம். ஆனால், ஒரு காலத்தில் யாழ்ப்பாணச் சமுதாயத்தில் வேலிப்பொட்டுக் கள் காணப்பட்டன. வீதிகள் காணப்படு கின்றபோதிலும் ஒவ்வொரு வீட்டின் வேலிகளிலும் பொட்டுக்கள், கண்டாயங்கள் விடப்பட்டிருக்கும். பொட்டுக்கால் குனிந்து போகலாம். கண்டாயத்தால் கடந்துபோகலாம். போகும்போது வீட்டுக்காரரிடம் அனுமதி பெற்றுத்தான் போக வேண்டும் என்பதில்லை. பொட்டுக்களும்

கண்டாயங்களும் போய்வருவதற்கான பாதைகளாக மட்டுமின்றி உறவுப் பிணைப்பின் வலிமையையும் வெளிப்படுத்தும் அடையாளங்களாக, குறியீடுகளாகக் காணப்பட்டிருந்தன. ஏதோவொரு காரணத்துக்காக வேலிப்பொட்டு அடைக்கப்பட்டால் அது உறவைத் துண்டிப் தன் அடையாளமாகக் கொள்ளப் படுமளவிற்கு அதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக் கிறது. அயல் வீடுகளில் சகோதரங்களும் நெருக்கமான உறவுகளும் வாழ்ந்த யாழ்ப்பாணச் சூழலில் இது சாத்திய மாயிற்று. ஆனால், இன்று அந்நிலைமை மாறியிருக் கின்றது. இந்நிலையில் ஒரு காலகட்டத்து யாழ்ப்பாண வாழ்வியலின் மற்றொரு குறியீடாக அமைந்த வேலிப் பொட்டைப் பற்றியதாக இக்கதை அமைந்துள்ளது.

அவரது சிறுகதைகளில் மனிதம், குந்தியிருக்க ஒரு குடிநிலம் ஆகிய இரண்டும் வேறொரு தளத்தில் நின்று எழுதப்பட்டுள்ளது. குந்தியிருக்க ஒரு குடிநிலம் என்பது, வலிகாமம் பிரதேச மக்கள் நீண்டகாலமாகத் தமது சொந்த நிலங்களிலிருந்து விரட்டப்பட்டு மீள் குடியேற முடியாது பிறருடை நிலத்தில் கொட்டில் அமைத்து வாழ்வதும் அதனால் ஏற்படும் துன்பங் களையும் பதிவுசெய்கின்றது. சமாதான காலத்தில்கூட அவர்கள் தமது நிலத்துக்குச் செல்வதற்கு அனுமதிக்கப் படாத சோகத்தைப் பற்றிப் பேசுகின்றது. எழுத்தாளர் இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்தவ ராக இருந்த காரணத்தால் இது அவருடைய சொந்த அனுவத்தின் பதிவாக அமைந்துள்ளது. மாவிட்ட புரத்தில் செல்வச் செழிப்போடு வாழ்ந்த இராசதுரை யினது குடும்பம் இடம் பெயர்ந்து பட்ட இன்னல்களைத் துன்பியலாகப் பதிவு செய்கின்றார் ஆசிரியர். அரசாங்கமும் அரசசார்பற்ற நிறுவனங்களும் அவர்களை எவ்வளவு தூரம் ஏமாற்றி யிருக்கிறது என்பதை இராசதுரையின் மனக்கொதிப்பும் அவன் பிரதேச செயலரிடம் கேட்கும் நியாயமான கேள்வி களும் வெளிப்படுத்தி நிற்கின்றன. போராட்ட காலத்தில் மக்கள் எவ்வாற பாதிக்கப்பட்டார்கள் என்பதை அது இரத்தமும் சதையுமாகப் பதிவு செய்கின்றது.

மனிதம் என்ற சிறுகதை, போராட்ட காலத்தின் மற்றொரு பரிமாணத்தைப் பற்றிப் பேசுகின்றது. மனிதம் என்பது பற்றிப் பலரும் பேசும் விடயம் என்ன? அதை நாம் எப்படிப் பின்பற்றுகின்றோம்? என்கின்ற விடயங்களை சுயவிமர்சனம் செய்வதாக அமைந்துள்ளது. முக மாலைப் பகுதியில் தாமதமாக வந்துசேருகின்ற பிரதேச செயலர்களை இராணுவமும் புலிகளும் கதைத்துப் பேசி பாதையைத் திறந்து அனுப்புகின்றார்கள். அப்போது சகோதரியின் செத்த வீட்டுக்காகச் செல்லவுள்ள மூன்று பேர்கொண்ட குடும்பத்தையும் அழைத்துப் போகும்படி புலிகள் அனுமதிக்கின்றனர். அந்தச் செய்தியை இராணுவத்துக்கும் தெரிவித்திருந்தனர். ஆனால், பிரதேச செயலர்கள் அவர்களை அழைத்துச் செல்ல வில்லை. இராணுவத்தினரும் பயணிகளான செத்த வீட்டுக்குச் செல்லும் மூவரும் வரவில்லையா? என்ற கேட்கின்போது பிரதேச செயலர்களின் மனிதம் குற்றத்தை உணர்கின்றது. ஒருவரை ஒருவர் எதிரியாகப் பார்க்கும் இராணுவமும் புலி களும் அனுமதித்தும் தாம் அந்த விடயத்தில் அசமந்தமாக இருந்துவிட்டோம் என்ற குற்ற உணர்வால் அவர்கள் வெட்கித்துப் போவதாக அந்தக் கதை அமைந்துள்ளது.

நகைச்சுவை சார்ந்த விடயங்களையும் அறிவியல் சார்ந்த விடயங்களையும் சிறுகதையாக்கும் முயற்சியிலும் செங்கை ஆழியான் ஈடுபட்டுள்ளார்.

ஊர்பார்க்க வந்த யானைகள், கிராமத்துள் புகுந்த மாய மனிதன் ஆகிய இரண்டும் நகைச்சுவைக் கதைகளாக உள்ளன. வன்னிக் காட்டிலிருந்து கேரதீவு சங்குப் பிட்டி யூடாக தாய் யானை ஒன்றும் குட்டி யானை ஒன்றும் ஊர் பார்க்க மறவன்புலவுப் பிரதேசத்திற்கு வந்து சேருகின்றன. அவை ஊரைப் பார்த்து என்ன பேசிக் கொள்கின்றன என்பதும் அவற்றைப் பார்த்து ஊர் மக்கள் எவ்வாறு கிலி கொள்கின்றனர் என்பதும் இங்கு கூறப்படுகின்றது.

கிராமத்துள் புகுந்த மாய மனிதன் என்ற கதையில், கிராமத்துக்குள் ஒரு மாயமனிதன் புகுந்து விட்டதாகவும் அவன் இரவில் வந்து பெண்களுக்கு அருகில் படுத்து சேட்டை புரிவதாகவும் பிடிக்க முற்படும்போது வழுக்கி ஓடுவதாகவும் ஒருவர் கட்டுக்கதை ஒன்றை விடுகின்றார். அதனால் மக்கள் அடையும் பதற்றமும் பயமும் நகைச் சுவையும் பயமும் கலந்தவகையில் நகர்த்தப்பட்டுள்ளது. அண்மையல் பேசப்பட்ட "கிறீஸ் மனிதனை" ஒத்ததாக மாய மனிதன் காட்டப்படுவது சுவாரஸ்யமாக உள்ளது.

இத்தொகுதியில் அறிவியல் சார்ந்த கதை களே அதிகம் உள்ளன. அவ்வகையில் ஏழு கதைகள் உள்ளன. தமிழில் அறிவியல் சார்ந்த கதைகளில் எழுதி தனியிடம் பெற்றவர்களுள் எழுத்தாளர் சுஜாதா முக்கியமானவர். அவ்வாறான முயற்சியில் செங்கை ஆழியானும் ஈடுபட்டி ருக்கின்றார் என்றே கூறமுடி கின்றது. புவிவெப்பமடைதல், நிலத்தடி நீர்வற்றிப்போதல், பறக்கும் தட்டுக்கள், தொடர் பாடல் சாதனங்களில் பரிமாண வளர்ச்சி, வேற்றுக் கிரகத் தில் குடியேறுதல், மிகையொலியால் ஏற்படப்போகும் பாதிப்புக்கள் ஆகிய விடங்களைப் பற்றியதாக இவை அமைந்துள்ளன. பேசப்படுகின்ற விடயம் சார்ந்தும் எடுத்துரைப்பு முறை சார்ந்தும் அவை பெரியளவில் முக்கியத்துவம் பெறவில்லை. செங்கை ஆழியானின் ஏனைய சிறுகதைகளில் காணப்படுகின்ற சிறப்புக்கள் அறிவியல் சார்த சிறுகதைகளில் அதிகம் வெளிப்பட வில்லை. அவர் புவியியல் துறை சார்ந்த கலாநிதிப் பட்டத்தைப் பெற்றவர் என்ற காரணத்தாலும் இம்முயற்சி யில் ஈடுபட்டிருக்கலாம். இவ்வகைச் சிறுகதைகள் அவரது பரீட்சார்த்த முயற்சியாகவே தெரிகின்றன.

நிறைவாக நோக்கும்போது, செங்கை ஆழி யானின் குந்தியிருக்க ஒரு குடி நிலம் சிறுகதைத் தொகுதி அவரது பல்வகைச் சிறுகதைகளைத் கொண்ட தொகுதியாக அமைந்துள்ளது. பல்வேறு காலகட்டத்தில் எழுதப்பட்ட கதைகளின் தொகுப்பாக அமைந்துள்ளது. இக்கதைகள் அடிப்படையில் நான்கு வகைக்குள் அடக்கப் படக்கூடியன. சமூகம் சார்ந்து அவர் எழுதிய சிறுகதைகள், யாழ்ப்பாணத்தின் ஒரு காலகட்டத்து வாழ்க்கைப் பதிவாக வும் போராட்ட காலத்து உணர்வு வெளிப்பாடுகளாகவும் அமைந் துள்ளன. அவை, உருவத்தாலும் கதைசெல்லும் முறையாலும் மொழிநடையிலும் பாத்திர வார்ப்பாலும் வாசகர்களைக் கவர்வனவாக அமைந்துள்ளன. ஆனால், அறிவியல் சார்ந்தும், நகைச்சுவை சார்ந்தும் அவர் இத்தொகுதியில் எழுதியுள்ள சிறுகதைகள் வாசகர்களின் மனதைத் தொடுவதில் அவருடைய ஏனைய கதைகளைப் போல அமையவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். எனினும், ஈழத்தில் அறிவியல் சார்ந்த கதைகளை தமிழில் முதன்முதலில் எழுதி முயற்சி செய்தவர் என்ற வகையில் அவரது அறிவியல் கதைகளும் முதன்மை பெறுகின்றன. ●




இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.